யந்திரோத்தாரணத்தைச்சொல்லுகிறேன் குருசிரேஷ்டரே கேழ்பாயாக. யந்திரம் பிராணனைப்போலும் பிம்பம் சரீரம்போலும் (க) மந்திரஞ்சீவனைப்போலும் கூறப்படும். இது பிரதிஷ்டைக்கு உத்தமமானகார்யம். யந்திரம்போடாதுபிரதிஷ்டைசெய்வது பயனற்றனவாகும் (உ) கோயில்ஸன்னதியில் அல்லது ஆச்சார்யாகிரஹம் அல்லது சுத்தபிரதேசத்திலாவது யந்திரம் போடுதல்வேண்டும் (ந) யந்த ஆலயத்திற்கு யந்திரம்போடவேண்டுமோ அந்தக்கிராமத்திலேயே யந்திரம் போடவேண்டும். அந்ய கிராமத்தில் ஒருக்காலுஞ்செய்யக்கூடாது (ச) மோஹத்தால் செய்வனுகில் கர்த்தா போக்தா அதாவது செய்விப்பவன் செய்கிறவன் இவ்விருவர்களும் நாசத்தையடைவன். யந்திரத்திற்கு தங்கம் உத்தமம். வெள்ளி மத்யமம் (ரு) தாம்பிரம் அதமம். இய்யம் முதலியவைகளில் யந்திரம்போடுதல்கூடாது யந்திரத்தின் கனம் அதாவது பெருமன் நாலுயவைப் பிரமாணம் உத்தமம் (சு) மூன்றுயவை மத்யமம் இரண்டுயவை அதமம். ஒருயவப்பிரமாணம் அதமாதமமுமாகும். கர்த்தாவின்பொருளிற்குத்தக்கவாறு அனுஸரித்துச்செய்தல் வேண்டும் (எ) இதுவரை கனத்தைச் சொன்னேம். இனி அகலநீளம் சொல்லுகிறேன் கேட்பாயாக. இருபத்துநாலுஅங்குலநீளம் உத்தமம் (அ) பன்னிரண்டுஅங்குலம்மத்யமம். எட்டங்குலமதமம் நாலங்குலமதமாதமம். இதற்குகுறைத்து செய்யவேகூடாது (கூ) விமானம் கோபுரம் பேளிமண்டபம் ஆத்யேஷ்டிகை அந்தியேஷ்டிகை இவைகளெல்லாவற்றிற்கும் யந்திரஸ்தாபனம் கிடையாது (க0) பிம்பத்திற்குக்கீழ் யந்திரஸ்தாபனஞ் செய்தல்வேண்டும். முன் ரத்னந்யாஸஞ்செய்து அதற்குமேல் யந்திரஸ்தாபனஞ்செய்தல்வேண்டும் (கக) இந்த யந்திரஸ்தாபனம் ஆதிசைவபிராம்மணர்களாலேயே செய்தல்வேண்டும். இவர்க்கு வேராயுள்ளவர்களால் செய்தல்கூடாது. மோஹத்தால்செய்வாருகில்இராஜராஷ்டரங்கள் நாசத்தையடையும் (கஉ) யந்திரம் இரண்டுபேதம். இவை ரக்ஷாயந்திரம் ஸ்தாபனயந்திரமென பேதமிரண்டாம். பூதபைசாச்சக்ஷுத்திரகிரஹவிநாசத்தின்பொருட்டுச் செய்வது (கந) ரக்ஷாயந்திரம் இதை ஸ்தாபனத்தில் நீக்குதல்வேண்டும். ஸ்தாபனத்தில்

ஸ்தாபனயந்திரம்போடுவது சுபத்தைத்தரும் (கச) ரக்ஷாயந்திரத்தைபிரதிஷ்டையில் ஒருக்காலும் போடக்கூடாது. மோஹத்தால் போடுவானாயின் ராஜ்யக்ஷோபமுண்டாகும் ஸம்சயமில்லை (கரு) கோணங்களோடும் சதுரசிராதிபேதங்களோடும் ரக்ஷாயந்திரங்கற்பித்தல்வேண்டும், பிந்துவிருத்தம் பத்மாகிருதியாய் (ககூ) ஸ்தாபனயந்திரஞ்சொல்லப்படுகிறது. அந்தந்தபேதங்களில்செய்துகொள்ளுதல்வேண்டும். ஸ்வயம்புலிங்கத்திற்கு யந்திரஸ்தாபனங்கூடாது (கஎ) அன்யமான ஆறுலிங்கங்களுக்கும் யந்திரஸ்தாபனஞ்செய்தல்வேண்டும். நீளம் எவ்வளவோ அவ்வளவுஅகலம் ஸமமாயிருத்தல்வேண்டும் (கஅ) குறைவாயிருந்தால் வியாதியையுண்டாக்கும். வெடித்திருந்தால் கர்த்தா நாசத்தையடைய்வன். மலினமாயிருந்தால் காரியஹானியுண்டாகும். பொத்தலாயிருந்தால் மரணமுண்டாகும்(ககூ)இதினால்தோஷமற்றதாய் யந்திரத்தைச்செய்தல்வேண்டும். ஆலயத்திற்கு ஈசானபாகத்தில் பன்னிரண்டுகூத்திரவிதானத்தினால் (உ0) யாகசாலை கற்பித்து ஐந்துகுண்டமாதல் அல்லது ஒருகுண்டமாவது போட்டு (உக) வேதிகையின்மேல்நெல்லரிசிகளைப்பரத்தி பத்மமண்டலஞ்செய்துயந்திரோத்தாரணஞ்செய்தல்வேண்டும் (உஉ) யாகசாலைக்கு ஈசானதிக்கில் பலகையின்மேல் பட்டுமுதலியவைகளை விரித்து (உ௩) தர்ப்பை புஷ்பங்களைபரத்தி அதின்மேல்வைத்து யந்திரோத்தாரணஞ்செய்தல்வேண்டும்: சில்பியினால் யந்திரம் மந்திரமன்றியில்செய்தல்வேண்டும் (உச) சில்பி மந்திரத்தை உச்சரிப்பானாயின் இராஜராஷ்டிரம் நாசத்தையடையும். ஆதிசைவர்களாலேமந்திரபூர்வக்கிரியைகளெல்லாவற்றையும் செய்தல்வேண்டும் (உரு) தங்கத்தால்டங்கங்குடாரங்களைச்செய்து தெளரயைபோட்டுக்கொண்டு யந்திரோத்தாரணஞ்செய்தல்வேண்டும் (உகூ) ரேகை இரண்டுபிரிவினதாகும். பாதாளரேகையெனவும் ஆகாசரேகையெனவுமிரண்டுபிரகாரங்களாகும். கீழே பள்ளமாகத்தோண்டுவது பாதாளரேகையெனவும் மேலேயே மேடாய் ரேகைதெரியும்படி செய்வது ஆகாசரேகைஎனவுங்கூறப்படும் (உஎ) பாதாளரேகையை நோக்க ஆகாசரேகை மிக்மேலானது. மூடியாதபக்ஷத்தில் பாதாளரேகயும் செய்யலாம். ஸாங்கம் உபாங்கம் பிரத்யங்கமென யந்திரத்தினங்கம் மூன்றுபிரிவினதாகும் (உஅ) ஸாங்கம் பிந்துவிருத்தம் உபாங்கம் பாஹ்யவிருத்தனம். பிரத்ய

ங்கமிரண்டுபூபுரங்கள் (௨௯) இவற்றுள் பிந்துசிரசும் உள்விருத்தம் ஹிருதயமும், வெளிவிருத்தம் நாபியும், தளம்பாதமுமாகும், (௨0) யந்திரத்தின் விஸ்தாரமெவ்வளவோ அதை எட்டாக பங்கிட்டு ஒருபாகத்தால் இரண்டுபூபூரமும்· மற்றொருபாகத்தின் கடைசியில் வெளிவிருத்தம்போட்டு (௩௧) இந்தஅளவில்உள்ளேதள்ளி உள்ளிலும் ஒருவிருத்தம்போட்டு இதற்குமத்தியில் இதிற்பாதி அளவினதாய் பிந்துவை கர்ப்பித்து (௩௨) தளத்தின்உயரம் பாதி அளவினதாய் வெளிவிருத்தத்தில்போடுக. எல்லாதேவர்களுக்கும் பத்மாகாரமானயந்திரம்ஸ்தாபனயந்திரமாகும் (௩௩) தளம் எட்டு போடுதல்வேண்டும்இதற்குமேல்கூடாது.பிரணவம்ஹம்காரம்ஸசிவ (௩௪) என பிந்துமத்யயில்எழுதுதல்வேண்டும் வெளிவிருத்தம் உள்விருத்தின்நடுவில் சுற்றிலும் சூக்குமபஞ்சாக்கரமந்திரத்தை எழுதல்வேண்டும் (௩௫) ஊர்த்துவத்தில்சிகாரமும் வடக்கில்வகாரமும், ஈசானதிக்கில் யகாரமும், கீழக்கில் நகாரமும் (௩௬) தெற்கில் மகாரமும் போடுவது சூக்குமபஞ்சாக்கரமாகும். ய ர ல வ ச ஷ ஸ ஹ இந்த எட்டு அக்ஷரங்களும் தளாக்ஷரங்களாகும் (௩௭) ஓம் ஹேம் ஹோம் ஹூம் ஹௌம் ஹ: என்னும் இந்த ஐந்து மந்திரங்களும் பிரும்மாங்கபீஜங்களாகும். சூக்குமபஞ்சாக்ஷரத்தினிடையில் இதை எழுதுதல்வேண்டும் (௩௮) அம் ஆமென்னும் பீஜத்தைத்தளத்தி னுனியிலும் இவ்விரண்டும் சிரோபீஜம் முக பீஜங்களாகும் (௩௯) இம் ஈம் என்பது நேத்திரபீஜம். தளபார்சுவத்தில் போடுதல்வேண்டும் உம் ஊம் கர்ணபீஜம் நேத்திரத்தின் பக்கத்தில் போடுதல்வேண்டும் (௪0) ரிம் ரீம் கண்டபீஜம். இதற்குக்கீழ் தளமிரண்டுபக்கங்களில் போடுதல் வேண்டும் ளு ளூ ம். நாஸிகாபீஜம். தளபார்சுவத்தில்போடவேண்டும் (௪௧) எம் ஓம் மேலுதடு கீழுதடு தளபார்சுவத்தில்போடுதல்வேண்டும். யம் ஹிருதயம். பிந்துவிற்கும் அந்தர்விருத்தத்திற்கும் மத்தியில் போடுதல்வேண்டும் (௪௨) நாபிபீஜம் பகாரம். கீழிடைவெளியில் போடுதல்வேண்டும்.ஹம்பீஜம்பாதம் (௪௩) கீழ்தளாக்கிரத்தில் போடுதல்வேண்டும். பூபுரத்தைச்சுற்றிலும் கிழக்குமுதல் ஈசானமிறுதியாக இம் ஈம் உம் நம் வம் (௪௪) தம் கம் சம் இந்த அக்ஷரங்களை போடுதல்வேண்டும். இது எட்டுதிக்கு பாலபீஜங்களாகும் (௪௫) யந்திரத்திரங்கம்மூன்றுபிராகாரங்களாகும் இஃஇருபத்தாறு. இரு

பது பத்து என்னும்பேதங்களோடுகூடியது. அந்தந்த பேதங்க ளைக்கேட்பாயாக (சகூ) சிரம் முகம் கண் மூக்கு காது உதடு பல் வாய் கழுத்து கை முழங்கை மணிக்கட்டு (சஎ) உள்ளங்கை விரல் னுணிதொடை முழந்தாள் ஜங்கை பாதம் (சஅ) பார்சுவம் பின்பு ரம் நாபி வயர் ஹிருதயம் கைப்பட்டைமுதலிய இருபத்தாரங்கங்க ளாகும் (சகூ) வர்ணநியாஸத்தின் கிரமத்தால் அக்ஷரங்களை கிரம மாய் எழுதுதல்வேண்டும். இந்தப்பிரகாரம் இருபத்தாரங்கங்கூற ப்பட்டது. இனி இருபதங்கத்தைக்கேட்பாயாக (ரு0) மூர்த்தாமு தல்பாதபர்யந்தம் இருபதங்கங்களாகும். மூர்த்தா முகம் ஹிருத யம் நாபி பாதம் (ருக) கழுத்து ஹஸ்தம். கூர்ப்பரம் ஊருமுழந்தா ள் முதலிய பத்தும் தசாங்கங்களாகும். இவற்றுள் இருபத்தாரங் கம்மத்யமம் (ருஉ) பத்தங்கம் அதமம். ஐந்து அதமாத மமுமாகும் சிரம், முகம், ஹிருதயம். நாபி பாதம் இவைகள் (ருங) பஞ்சாங்க ங்களாகும். எல்லாஎந்திரங்களிலும் அங்கபீஜங்களை எழுதுதல் வேண்டும். (ருச) அங்கஹீநமாயுள்ள யந்திரங்கள் ஸான்னித்யமு ண்டாகா, இந்தப்பிரகாரம் சிவயந்திரம் சொல்லப்பட்டது. (ருரு) முன்போல் பத்மபோட்டுபிந்து ஒம் ரீம். சிவய (ருகூ) எனவிதிவ த்தாய் எழுதிஉள்விருத்தம் வெளிவிருத்தமத்யமையில் ஐம் கிலீம் ஸளம் (ருஎ) ஸளம் கிலீம் ஐம் என கிரமமாயெழுதுதல்வேண்டும். யகாரம்முதல் ஹகாரமிறுதியாக எட்டக்ஷரங்கள் தளாக்ஷரங்களா கும், (ருஅ) லோகபாலபீஜங்களை பூபுரத்தைச்சுற்றிலும் எழுதி அ ங்கபீஜங்களையும் எழுதுதல்வேண்டும், (ருகூ) பம், அம், இம், கம், ஞம், இவ்வைந்து அக்ஷரங்களும் பராசக்தி ஆதிசக்தி இச் சாசக்தி கிரியாசக்தி ஞானசக்திமுதலிய பீஜங்களாகும் (கூ0) பிந் துவிற்கும் உள்விருத்தத்திற்கும் இடையில் மேர்க்காட்டிய ஐந்த க்ஷரங்களையும் எழுதுவது சக்தியந்திரம்மாகும் (கூக) இனியொரு பிரகாரம் சக்தியந்திரங்கூறுகிறேன் கேட்பாயாக முன்போல் பிந் துவிருத்தங்கல்பித்து பதனாறுதளம் போட்டு (கூஉ) மற்றபாகங்க ள் முன்போல்செய்து பிந்துமத்தியத்தில் ஓம் ஹம் ஸம் சிவ, என எழுதி (கூங) விருத்தத்தின் இடைவெளிகளின் நாலுபக்கத்திலும், அஸகஹளரீம், ஸகஹளரீம் (கூச) கயஹளரீம் என்னும் சக்தியின் ஷோடசாக்ஷரீமந்திரங்களை எழுதிதளங்களில் பதினாறு உயிரெழு த்துக்களை எழுதி (கூரு) மற்றவைகள் முன்போலெழுதுவதும் சக்

திரயந்திரமாகும் முன்போல் அஷ்டதளபத்மம் பூபுரங்கள்போட்டு (௬௬) பிந்துமத்தியத்தில் பிரணவம் ஹும்ஸம் கம்மென எழுதிவி ருத்தத்தின் நடுவில் (௬௭) கணேசாயவௌஷட் எனசுற்றிலுமெ ழுதியகாராதி ஹகாரமிறுதியாக எட்டுதளங்களிலெழுதி (௬௮) லோகபாலபீஜங்களை பூபுரத்தின் எட்டுதிக்கிலும், எழுதி அங்கபீ ஜங்களை எழுதுவது விக்னேசுவரயந்திரமாகும், (௬௯) பிந்து உ ள்விருத்தம் வெளிவிருத்தம், எட்டுதளம், பூபுரமிரண்டு இவ்வாறு சுப்பிரமணியயந்திரத்தைக் கற்பித்து (௭0) ஓம் ஸௌம் ஹும் ஸம் எனபிந்துமத்யத்திலெழுதி விருத்தமத்யத்தில் (௭௧) சரவணபவ, என்னும் அக்ஷரங்களை (௭௨) மேல் முதல் பிரதக்ஷிணமாய் எழு துதல்வேண்டும், யகாரம் முதல் ஹகாரமிறுதியாக தளங்களில்லெ ழுதி (௭௩) அங்கபீஜமெல்லாவற்றையும் லோகபாலபீஜத்தைப் போல் எழுதுதல்வேண்டும் (௭௪) இப்படி குஹயந்திரோத்தா ரணத்தைச் செய்தல்வேண்டும், பிந்து இரண்டு விருத்தம், வெளி விருத்தத்தில் பதினாறுதளம் (௭௫) பூபுரமிரண்டைகற்பித்து பிந் துமத்யத்தில் ஓம் ஹும் ஸம் தம் என எழுதி உள்விருத்தம் வெளிவிருத்தத்திற்கு நடுவே (௭௬) சுற்றிலும் தக்ஷிணாமூர்த்த யேவௌஷட் எனஎழுதி தளங்களில் பதினாறு ஸ்வரங்களை எழு தி (௭௭) பூபுரத்தைச்சுற்றிலும் லோகபாலபீஜங்களை எழுதி அங் கபீஜங்களையுமெழுதுவது தக்ஷிணாமூர்த்தியந்திரமாகும் (௭௮) பி ந்து இரண்டுவிருத்தம், எட்டுதளம், இரண்டுபூபுரம் இவைகளைப் போட்டு பிந்துமத்தியத்தி ஓம் நம், (௭௯) ஹும் ஸம் எனஎழுதிவி ருத்தாந்தராளத்தில் நந்திநெவௌஷட் எனஎழுதி (௮0) யகாரம் முதல் ஹகாரமிறுதியாக தளங்களிலெழுதி லோகபாலபீஜங்களை யுமெழுதி (௮௧) அங்காக்ஷரங்களை எழுதுவது நந்திகேசயந்திரமா கும், இரண்டுபூபுரம், எட்டு தளபத்மம் உள் (௮௨) வெளிவிருத்த ம், நடுவில் பிந்து, ஓம் சம், ஹும் ஸம், (௮௩) எனபிந்துமத்யத்தி ல் எழுதி (௮௪) விருத்தத்தினுள்ளே நாலுபக்கத்திலும் சண்டி கேசாய வௌஷட் எனஎழுதி (௮௫) யகாராதி ஹகாரம்வரை த ளங்களிலெழுதி அங்கபீஜங்களை எழுதி பூபுரத்தில் லோகபாலபீ ஜங்களை எழு (௮௬) துவது சண்டிகேசயந்திரமாகும், பிந்தும த்யத்தில் ஓம் ஸம், (௮௭) எனஎழுதி விருத்தாந்தராளத்தில் பை ரவாயவௌஷட் எனஎழுதி (௮௮) யகாராதி ஹகாரம்வரை தள

ங்களிலெழுதி பூபுரத்தில் லோகபாலபீஜங்களை எழுதி (அகூ) அ ங்கபீஜங்களையுமெழுதுவது பைரவயந்திரமாம், பிந்து இரண்டுவி ருத்தம், பதினாறு தளம் (கூ0) இரண்டு பூபுரம், இவைகள்போட் டு பிந்துமத்யத்தில் ஓம் ஔம் ஹ்ரம் ஸம், எனஎழுதி விருத் தாந்தரத்தில் (கூக) சுற்றிலும் ஸூர்யாயவௌஷட் எனஎழுதி த ளங்களில் பதினாறுவாணங்களெழுதி (கூஉ) லோகபாலாபீஜங்களை பூபுரங்களிலெழுதி அங்காக்ஷரங்களை எழுதுவது சூர்யயந்திரமா கும் (கூங) முன்போல் எட்டிதழ்பத்மகல் பித்து நடுவில் பிந்து வெழுதி பிந்துவில் ஓம் ஔம் ஹ்ரம் ஸம் எனஎழுதி (கூச) வி ருத்தாந்தராளத்தில் சந்திராயவௌஷட் எனவும், தளங்களில ய காராதி ஹகாராந்தமாயுமெழுதி (கூரு) லோகபாலபீஜத்தை பூபு ரத்தைச்சுற்றிலுமெழுதி அங்கபீஜங்களை எழுதுவது சந்திரன் ய ந்திரமாகும் (கூசு) பிந்து இரண்டு விருத்தம் எண் தளம்பூபுரமிர ண்டு பிந்து மத்யத்தில் ஓம் சும் (கூஎ) ஹ்ரம் ஸம் எனஎழுதி விரு த்தாந்தராளத்தில் சுக்ராயவௌஷட் எனவும் (கூஅ) யகாரம் முத ல் ஹகாரமிறுதியாக தளங்களிலும் பூபுரத்தில் லோகபாலபீஜத் தையும் (கூகூ) அங்கபீஜத்தையுமெழுதுவது சுக்கிரயந்திரமாகும் இனி குருயந்திரத்தை கேட்பாயாக (க00) பிந்து இரண்டு விருத் தம் பதினாறுதளம், இரண்டு பூபுரம் இவைகளைக்கற்பித்து மத்யத் தில் ஓம், ஹ்ரம் ஸம் கும், எனவும் (க0க) குருவேவௌஷட் என விருத்தாந்தராளத்திலும் பதினாறு ஸ்வரங்களை பதினாறு தளங்க ளிலும் (க0உ) பூபுரத்தைச்சுற்றிலும் லோகபாலபீஜத்தையும் அ ங்காக்ஷரங்களையும் எழுதுவது குருசக்ரமென்பதாம் (க0ங) பிந் து இரண்டு விருத்தம், பாஹ்யவிருத்தம்எட்டுதளம்இரண்டுபூபுரம் முதலியவைகளை கற்பித்து பிந்து மத்யத்தில் (க0ச) ஓம் சம் ஹ்ரம் ஸம் எனவும் விருத்தாந்தராளத்தில் சநீசுவராயஹூம் பட்டென வும் (க0ரு) யகாரம் முதலிய எட்டக்ஷரங்களை தளங்களிலும் லோ கபாலபீஜம் அங்கபீஜங்களை விதிப்படி எழுதுவது (க0சு) சனீசு வரயந்திரமென்பதாம் முன்போல் பத்மம் எழுதி பிந்துமத்தியி ல் ஓம் சும் ஹ்ரம் ஸம் எனவும் அங்காரகாயஹூம் படென விருத் தாந்தராளத்தில் கிரமமாய எழுதி (க0எ) யகாரம் முதல் ஹகாரம் வரைதளங்களில் எழுதி லோகபாலபீஜத்தையும் அங்கபீஜங்களை யும் விதிப்படி எழுதுவது (க0அ) அங்காரகயந்திரமாகும், முன்

போல் பத்மம் எழுதி பின்மத்தியத்தில் ஓம் ரம் ஹம் ஸம் எனவு
ம் (க௦கூ) ராகவேமௌஷ்ட்டு என விருத்தாந்தராளத்திலும்
யகாரதி ஹகாரந்தம் தளங்களிலும் (கOO) லோகபாலபீஜங்களை பூ
புரத்திலும் அங்கபீஜங்களை மேல் சொன்னபடி எழுதுவது (ககக)
ராகுஇந்தரமாகும், முன்போல் பத்மம்போட்டு ஓம் கம் ஹம் ஸம்
(ககஉ) என விருத்தாந்தராளத்திலும் கேதவேஹம்படுஎன த
ளாந்தரத்திலும் முன்போல் தளாக்ஷரங்களை எழுதி (க௦ங) அங்க
பீஜங்களை முன்போல் எழுதுவது கேதுவின்யந்திரமாகும், பிந்து
இரண்டு விருத்தம் வெளியில் பதினாறுதளம் (க௦ச) இரண்டு பூபுர
ம் இவைகளைகற்பித்து பிந்துமத்யத்தில் ஓம் வம் ஹம் ஸம் பம்
என எழுதி (க௦ரு) விருத்தாந்தராளத்தில் புதாயவௌஷடு என
வும் பதினாறு ஸ்வரங்களை பதினாறு தளங்களிலும் (க௦சு) பூபுரத்
தைச்சுற்றிலும் லோகபாலபீஜங்களையும் எழுதுவது புதயந்திரமா
கும் (க௦எ) பிந்துவிக்கு எதிர்முகமாக அக்ஷரங்கள் எழுதுதல் உ
த்தமமாகும், அப்படிக்கில்லாவிடில் அக்ஷரங்களின் முகமாகவே
எழுதுவது சாமான்யமாகும் (க௦அ) எல்லாதேவதைகளுக்கும் அ
தினதிதன் முதல்அக்ஷரம பீஜமாகும், பீஜம் பிரணவம ஹம் ஸம்
(ககக்கூ) இவைகளை எழுதி அந்தந்ததேவதைகளின் பேரைவௌ
ஷடந்தமாய் எழுதி தளாக்ஷரங்களை எழுதி பூபுரத்தில் லோகபால
பீஜங்களை எழுதி (கஉ௦); அங்கபீஜங்களை எழுதி இவ்வாறு எல்
லாயந்திரங்களையும் போடுதல்வேண்டும், புண்யாகபஞ்சகவ்வியங்க
ளினாலே யந்திரத்தைசுத்திசெய்து (கஉக) முன்சொன்ன யாகசா
லையில் வேதிக்குமேலும் ள்ளபத்மமண்டலத்தில் யந்திரத்தைவைத்
து நிரீக்ஷணதிஜந்துசுதிகளால் (சஉஉ) செவ்வையாகசோதித்து
அஸ்தரமந்திரந்தால் அர்க்கிய ஜலத்தினாலே யந்திரத்தை புரோக்ஷி
த்து உபயாசனம்வரை பூஜித்து (கஉங) அந்தந்ததேவதை
யின் ஆஸனமூர்த்தி மூலத்தால் பூஜித்து யந்திரத்தைஸ்னபன
விதானப்படி (கஉ-ச) அபிஷேகித்து அந்தந்ததேவர்களை அந்தந்
தத்யானத்தோடு ஆவாகித்து சந்தனாக்ஷதவஸ்த்ரபுஷ்பாபரணங்க
ளினாலே (கஉ-அ) அலங்கரித்து பசுவின் நெய்யால் தீபம் போ
டுதல்வேண்டும், இதற்கு அந்நியமான்னதைலம் தீபத்திற்குகூடாது
அகப்படாவிடில் விதியில்கூறியவாறு (கஉசு) அதமாதமபர்யந்தம்
சொல்லியுள்ளதைலங்களினால் தீபப்போடுதல்வேண்டும், பைசாச
தீபங்களை ஒருக்காலும் போடுதல் கூடாது (கஉஎ) மோகத்தால்

திபம்போலவாருகில் சாந்நித்யம்உண்டாகாது, ஆசார்யன்பஞ்சாங்கி பூஷிதனாய் பீதாம்பராலங்கிருதனாய் (௧௨௮) கடககுண்டலசர்வாலங்காபூஷிதனாய் கூர்மாஸனத்திலேனும் அல்லது சுகாஸனமாகவாவது (௧௨௯) வடக்குமுகமாய் உட்கார்ந்து சகளீகரணஞ்செய்து யந்திரத்தில் பஞ்சாவரணபூஜைகள்செய்து (௧௩௦) பராக்னிவரைஸம் ஸ்காரஞ்செய்து இந்த அக்னிஹிருதயத்திலே அந்தந்ததேவரை ஆவாகித்துஅக்னிக்குஆவரணபூஜைசெய்து(௧௩௧) நைவேத்யதூபதீப உபசாரங்களைச்செய்து ஆசார்யருத்விஜரோடு கூடஅந்தந்தமூலமந்தரங்களைகிரமமாய்ஜெபித்தல்வேண்டும், ௧௩௨ ருத்விஜர் இல்லாவிடில் ஆசார்யரேஜெபித்தல்வேண்டு, யாகசாலைக்கு வெளியேசுற்றிலும் ஆதிசைவர்கள் (௧௩௩) வேதாத்யானம் செய்தல்வேண்டும், மஹாசைவர்கள் இதற்கு பின் இருந்து வேதாத்யானஞ்செய்தல்வேண்டும், தீக்ஷையல்லாதபிராம்மணர்கள் இதற்கு பின் இருந்து (௧௩௪) வேதாத்யயனம்செய்தல்வேண்டும், ஆசார்யர் மூலமந்திரத்தை கோடிஆவர்த்திஜபிப்பது உத்தமமாகும், (௧௩௫) அரைக்கோடிஜபிப்பதுமத்யமும்கால்கோடிஜபிப்பது அதமமும், இப்படிக்கு இல்லாவிடில் லக்ஷம் ஆவர்த்தியாவது ஜெபித்தல்வேண்டும், இதற்குகுறைந்து ஜெபஞ்செய்தல்கூடாது (௧௩௬) இதில் நாலிலொன்றுஹோமமும் ஹோமத்தில் நாலிலொன்றுதர்ப்பணமும் தர்ப்பணத்தில்(௧௩௭) நாலிலொன்று உத்தமபிராம்மணபோஜனமும் செய்தல்வேண்டும், சாத்விகபிராம்மணர் (௧௩௮) உத்தமபிராம்மணர் ராஜஸப்பிராம்மணர் மத்யமம் தாமசப்பிராம்மணர் அதமம் என பிராம்மனருள் மூன்றுபேதங்களாகும் (௧௩௯) சிவசிருஷ்டியில் உண்டானவர்சாத்விகரும் விராட்ரூபத்தில் உண்டானவர்ராஜஸரும் கேவலம்பிரும்மமுகத்தில் (௧௪௦)உண்டானவர் தாமசருமாய் மூன்று பேதம் கூறியுள்ளது. பிரதிஷ்டையாகத்துக்கு முன்யந்திரஜெபத்தை (௧௪௧) முடித்தல்வேண்டும் த்ரவியபாகத்திற்குப்பின் மூலபேரத்தினுடைய பீடத்தில் வைத்து பூஜித்தல்வேண்டும், யாகாரம்பதினத்தில் கும்பத்திற்கு அடியில் (௧௪௨) யந்திரத்தைவைத்து விதிவந்தாய் பூஜித்தல்வேண்டும், அஷ்டபந்தனகாலத்தில் பீடத்திற்கு அடியில் (௧௪௩) ரத்னந்யாஸம் கிரமமாய்ச்செய்துயந்திரத்தை இதற்குமேல் வைத்தல்வேண்டும், கோரோசனை கஸ்தூரி குங்குமப்பூ (௧௪௪) புனுகு இவைகளை சேர்த்து அரைத்து யந்திரத்தில் பூசிமுன்போல் பூஜைசெய்தல்

வேண்டும், (கசரு) நைவேத்யதூபதீபங்களைவிதிவத்தாய்ச்செய்து பிம்பத்தை இதற்குமேல் வைத்து அஷ்டபந்தனம்செய்தல்வே ண்டும், (கசசு) இந்தப்பிரகாரமாய் யந்திரஸ்தாபனஞ் செய்தல் வேண்டும், இபபடிக்கு காமிகாகமம் பிரதிஷ்டாதந்திரம் யந்தி ரோத்தாரணவிதியென்னும் மூன்றாவதுபடலம்முற்றிகைபெற்றது.

ஆக சுலோகம். (சுஉ.உ)

ஆச்சார்ய லக்ஷணபடலம்:—

இதற்குப்பின் ஆச்சாரியருடையலக்ஷணத்தைச் சொல்லுகிறேன். சைவாச்சாரத்தோடுகூடியவராயும் அந்நியாசாரத்தில் பரான்முகரா யும் (க) இதைஆசரிக்கின்ற ஹேதுவினால் ஆச்சார்யரெனக் கூறப் படுகின்றது, மனோரம்யமான கைலாஸத்தில்பரமேசுவரருடைய அ ர்ச்சனையின் பொருட்டு (உ) அகஸ்தியர், கௌதமர், பரத்வாஜர், காச்யபர், கௌசிகர், இந்த ஐந்துரிஷிகளும் பரமேசுவரருடைய ஐ ந்து முகங்களிலேநின்று உண்டாய் தீக்ஷிக்கப்பெற்றார்கள் (ந) இ ந்த ரிஷிகளுடையவம் சங்களில் உண்டானவர்கள் சிவத்விஜர்களா வார்கள்,கைலாஸத்திலுள்ளசிவனிடத்திலேயிருந்து சந்தானங்கள் உண்டாயின (ச) மஹாமேருவினுடைய பார்சுவத்தில் விசேஷமா ய் ஸந்தாநத்தினுடைய மடங்கள் கிரமமாய் உள்ளன, இதில் நடு விலுள்ளமடம் மந்தானகாளீசமெனவும், கிழக்கில் ஆமர்த்தகியெ னவும் (ரு) தெற்கில் புஷ்பகிரியெனவும், வடக்கில் கோளகியெ னவும், மேற்கில் ரணபத்திரமெனவும் கூறியுள்ளது, இதிலுள்ள மடாதிபதிகளை கேட்பாயாக (சு) தூர்வாஸர், ருருரு, ததீசிசுவே தர், உபமந்யூ இவ்வைந்து பேர்களும், இவ்வைந்துமடங்களுக்கும் அதிபர்களாகசொல்லப்படுகிறது, (எ) காச்யபர், ஊர்த்துவமுகத் தால் தீக்ஷிக்கப்பட்டவர் இவர் கோசரம் சிவகோசரமாகும், தத்பு ருஷமுகத்தினால் கௌசிகர் தீக்ஷிக்கப்பட்டவர். சிகாதோசரமெ ன இவருக்குசொல்லப்படும் (அ) அகோரத்தினால் பரத்வாஜர் தீ க்ஷிக்கப்பட்டவர், இவருக்குஜோதி கோசரமென்பதாம் வாமதே வமுகத்தால் கௌதகர் தீக்ஷிக்கப்பட்டவர் இவருக்கு சாவித்ரி கோசரமெனசொல்லப்படும் (கூ) சத்யோஜாத முகத்தால்அகஸ்தி யர் தீக்ஷிக்கப்பட்டவர் இவருக்கு வியோமகோசரமெனச்சொல்ல ப்படும், இந்த ஐந்து கோத்திரத்திலும் உண்டானவர்கள் ஆதிசை வர்கள் என்று கூறப்படுவார்கள், (கO) பரமேசுவரருடைய மூர்த்தா விலிருந்து ஆசார்யர் உண்டானார், முகத்திலிருந்து அர்ச்சகருண்

டானார், இருதயத்திலிருந்து ஸ்தானீகருண்டானார் குஹ்யத்தினின்று பாசகர் உண்டானார் (௧௧) பாதத்தினின்று பரிசாரகர் உண்டானார், நித்தியம் (அதாவது) நித்யபூஜைமுதலியவைகள், நைமித்யகம் (அதாவது) உத்ஸவம், பிரதிஷ்டை; காமியம் (அதாவது) பிராயச்சித்தங்கள் இவைகளை ஆசாரியர் செய்யவேண்டும் (௧௨) நித்யபூஜைமாத்திரம் அர்ச்சருக்கு சொல்லப்பட்டிருக்கிறது, பிராயச்சித்தம், உத்ஸவம் பிரதிஷ்டைமுதலியவைகளை அர்ச்சகர்செய்யக்கூடாது, (௧௩) ஸ்தானீகர் உத்ஸவபேரங்களுக்கு அலங்காரங்களை செய்யலாம், சிவாக்நியினால் சமயல்முதலியவைகளை பாசகர்செய்யலாம், (௧௪) அபிஷேகதீர்த்தம், பூஜோபகரணங்களை சேகரித்தல் பரிசாரகர்கள் காரியமாம், இதற்கன்னியமான காரியங்களை இவர்கள் செய்யக்கூடாது, (௧௫) ஆசார்யனுக்கு ஸம்ஸ்காரம் எழுவகையாகும் அஃது, ஸமயம், விசேஷம், நிர்வாணம், அஸ்திராபிஷேகம், (௧௬) ஆசார்யாபிஷேகம், சிகாச்சேதனம், ஏழுவிஷயங்களின் சோதனம் இவ்வாருள்ள ஸம்ஸ்காரம் ஏழாகும், (௧௭) இவர்க்கு மகாகாரணமஞ்சாக்ஷரம் உபதேசிக்கக்கூறுகிறது இவர் நித்யநைமித்தியக காமியம் முதலியபூஜைகளுக்கு அர்ஹராவார் (௧௮) அர்ச்சகனுக்கு ஸம்ஸ்காரம் ஆறுபேதமென சொல்லப்படும், ஸமயம் விசேஷம், நிர்வாணம், அஸ்திராபிசேஷகம் (௧௯) ஆச்சார்யாபிசேஷகம் சிகாச்சேதமென ஸம்ஸ்காரங்கள் ஆறும், இவருக்கு காரணபஞ்சாட்சரம் உபதேசிக்கத்தக்கது, (௨0) நித்தியபூஜைமாத்திரம் இவர் செய்யத்தக்கது காமியம், நைமித்திகம், இவ்விரண்டு செய்யக்கூடாது (௨௧) விபூதிகொடுப்பதில் அச்சாரியர் பிரதானமவார், ஆசார்யரில்லாவிடத்தில் அர்ச்சகரும், கொடுக்கலாம் (௨௨) குடீச்சகர், பகூச்சகர், ஹம்சர், பரமஹம்சர் இவர்கள் முதலியஎல்லாசந்நியாஸிகளுக்கும் விபூதி கொடுக்கும்விதியை கேட்பாயாக (௨௩) ஆசார்யருடைய கையினாலாவது அர்ச்சகருடைய கையினாலாவது விபூதி கொடுத்தல் புக்திமுக்திகளை உண்டாக்கும் (௨௪) ஆலயத்தில் தனதுகையால் ஒருக்காலும் விபூதி கிரஹித்தல்கூடாது, மோகத்தால் கிரஹிப்பானாயில் பிராணிநாசம் முண்டாகும் (௨௫) பிராமணர்முதலிய நான்குவர்ணிகளுக்கும் விபூதிகொடுப்பது ஆசார்யராவது அர்ச்சகராவது கொடுத்தல்வேண்டும் (௨௬) இந்தப்பிரகாரமுள்ள அர்ச்சகஸம்ஸ்காரத்தை சொன்னோம், இதன்பின் ஸ்தானீகஸம்ஸ்காரத்தை கேட்பாயாக சமயம் முதல் ஆசார்

யாபிஷேகமிறுதியாக (உஎ) ஸம்ஸ்காரம் ஐந்துபேதம், அதிசூக்ஷம் பஞ்சாக்ஷரம் இவருக்கு உபதேசித்தல் வேண்டும், (உஅ) இவர் உத்ஸவபேரங்களுக்கு அலங்காரமாத்திரம் செய்த்தக்கவர், இவர் மூலலிங்கத்தைதீண்டல்க்கூடாது தீண்டுவரேல் தோஷமுண்டாகும் (உகூ) இந்தப்பிரகாரம் ஸ்தானீகஸம்ஸ்காரத்தைச்சொன்னேம் பாசகஸம்காரத்தை கேட்பாயாக சமயம், விசேஷம், நிர்வாணம், அஸ்திராபிஷேகம் (௩௦) முதலியநான்கு ஸம்ஸ்காரம் சொல்லப்படுகிறது சூக்கும பஞ்சாக்ஷரம் இவருக்கு உபதேசிக்கத்தக்கது(௩௧)சமயம், விசேஷம், நிர்வாணம் இப்மூன்றும் பரிசாரகருக்குச்செய்யத்தக்கது, ஸ்தூலபஞ்சாக்ஷரம் உபதேசிக்கத்தக்கது (௩௨) சிவஸந்தாநத்தினின்று முதலில் போதாயனரிஷி உண்டானார், கேவலம் பிரம்மசிருஷ்டியினால் பின் ஒரு போதாயனர் உண்டானார், (௩௩) போதாயநர் இருவர் எனவும் இவற்றுள் சிவசிருஷ்டி விசேஷமெனவும் ஆசாரியர்முதல் பரிசாரகரிறுதியாக (௩௪) சூத்திரம் போதயனமே கொள்ளத்தக்கதெனவும் அன்னியசூத்திரம், கொள்ளத்தகாதுதெனவும், ஸம்ஸ்காரம் பாமபரமென இரண்டுபேதமாகுமெனவும் (௩௫) சூத்திரத்தில் கூறியபடிசெய்வது அபரமும சிவாகமத்தில் கூறியபடிசெய்தல் பரமெனவும் சூத்திரத்திற்கும் சிவாகமத்திற்கும் விரோதம்வரின் சிவாகமமே பலியஸ்னவும் (௩௬) போதாயன சூத்திரத்திற்கு அந்நியமான சூத்திரங்களில் ஜனித்தவர்கள் சாமான்யவிப்ரரெனவும் இவருக்கு சிவதீக்ஷைசெய்யவேண்டுமானல் பூரவசூத்திரத்தைநீக்கி (௩௭) போதாயன சூத்திரத்தை கிரஹித்து இதைஆசரிக்கச்செய்து தீக்ஷைபுரிதல்வேண்டுமெனவும் இதைப்போலவே பஞ்சார்ஷேயரிஷிகளுடைய கோத்திரத்தை லிங்காகாரமண்டலத்தினல் கிரஹித்து(௩௮) சிவாச்சாரியார், சிவம், தேவர், கணம், என்னும் நான்குபெயர். தீக்ஷித்தபிறகு இந்த நாமங்களை இடுதல்வேண்டும், (௩௯) பிராமணர்முதலிய நான்குவர்ணிகளும் ஆதிசைவரால் தீக்ஷிக்கப்பட்டால் பிராமணர் மஹாசைவரெனவும், க்ஷத்திரியவைசியர்கள் அனுசைவரெனவும் சத்சூத்திரி அந்தியசைவரெனவும் கூறப்படும்(௪௦) ஆதிசைவரால் தீக்ஷிக்கப்பெறுதவராயின் சைவத்வசித்தி இல்லாதவரென்பது கூறப்படும் சிவத்வம் பிராமணத்துவமாய் இருத்தலால் இது இல்லாதவர் அப்பிராமணரென்பது கூறப்படும் (௪௧) ஆதிசைவர்கள் நான்கு வேதத்திற்கும் அதிகாரியாவார்கள் அப்படிப

ல்லாவிடில் யஜுர்வேதமாவது அத்தியயனம் செய்தல்வேண்டும் (சஉ) வேதம் வேதார்த்தமென பேதம்இரண்டுகூறப்படும் இரிக், யஜுஸ்ஸு, சாமம், அதர்வணமென்னும் வேதங்களை வேதமெனக்கூறப்படும் (சந) காமிகம்முதலியசிவஞானமயமாம் சிவாகமங்களை வேதார்த்தமெனச் சொல்லப்படும் வேதம் வேதார்த்தம் இவ்விரண்டையும் ஆதிசைவர்கள் அத்தியயனம் செய்தல்வேண்டும் (சச) இருபத்தெட்டு சிவாகமங்களையும் உபாகமங்களையும் ஆதிசைவர்கள் அறிதல்விசேஷம், முடியாவிடில் இதில் பாதியாவது அறிதல்வேண்டும் (சரு) அப்படிக்கில்லாவிடில் ஒரு ஆகமமாவது நான்கு பாதங்களோடு அறிதல்வேண்டும், இதுவுமல்லாவிடில் கிரியா பாதமாவது கிரமமாய் அறிதல்வேண்டும், (சசு) இப்படி அறிந்திராதபக்ஷத்தில் ஒருக்காலும்கர்ம்மாக்களைசெய்யக்கூடாது ஆதிசைவர்ளுக்கு இதறமானவிப்ரர்கள் அவரவருக்குசொன்ன சாகாபேதங்களை (சஎ) அத்தியயனம் செய்தல்வேண்டும், சதுர்வேதத்தில் இவர்களுக்கு அதிகாரமில்லை, மோகத்தால் செய்வாராயில் ராஷ்டிரக்ஷோபமுண்டாகும், சமிசயமில்லை, (சஅ) நாலுவேதங்களிலும் எஜுர்வேதம் சிரஸ்தானமாகச் சொல்லப்படும் எல்லாவேதங்களுக்குள் சிரசேமுதன்மை, (சகூ) பூஜைமுதலியகிரியாகாலத்திலும் உத்ஸவகாலங்களிலும் விசேஷமாய் முதலில் எஜுர்வேதமும் இதன்பின் இரிக் வேதம் (ருo) இதன்பின் சாமவேதமும் இதற்குபபின் அதர்வணவேதமும் இந்தப்பிரகாரத்தால் வேதாத்தியயனம் செய்தல்வேண்டும் (ருக) இதற்கன்னியமாய்வேதாத்தியயனம் செய்வாராகில் ராஷ்டிரக்ஷோபமுண்டாகும் இதில்சமிசயமில்லை வேதாத்தியயனங்களில் சிவபிராமணர்மேலானவர் (ருஉ) இதனால்முதலில் ஆதிசைவரும் இதன் பின் மஹாசைவரும் தீக்ஷைபெற்ற மஹாசைவர் இல்லாதபக்ஷத்தில் தீக்ஷையில்லாத பிராமணர்கள் ஆதிசைவர்களுக்குப் பின்னேபோகலாம் (ருந) தீக்ஷைபெற்ற பிராமணர்களிருந்தால் தீக்ஷையல்லாத பிராமணர்கள் தீக்ஷைபெற்றமஹாசைவனுக்குப் பின் (ருச) இருந்து அத்தியயனம் செய்தல்வேண்டும். இந்த நியமத்திற்கு விரோதமாய் செய்வாராயின் கிராமநாசமுண்டாகும் சூலபுண்டரி, ஊர்த்வ புண்டரி, அச்வத்தபர்ணபுண்டரி (ருரு) சங்கு, சக்கிறம், கதை, பாசம், இதுகளினால் தப்தாங்கிதம் செய்து கொண்டவர்களும், நிர்மூலதந்திரர், மாயாவாதி, பிரச்சன்னபௌத்தர் (ருசு) பௌத்தர், ஆர்ஹதர், ஜைமினர், பாஷ

ண்டர், இவர்களே வேதாத்தியயனத்தில் நிவர்த்தித்தல் வேண்டும் (௫எ) க்ஷத்திரியர், வைசியர். இவர்கள் உத்ஸவங்களில் வேதாத்தியயனம் ஒருக்காலும் செய்யக்கூடாது(௫அ) அந்நியசைவராகிய ஸத் சூத்திரி, சிவதீக்ஷை பெற்றவனுகிலும் வேதாத்தியயனம் சொல்லக்கூடாது, போதாயனர் சொன்னபடி விருதங்களை அந்தந்தகாலத்தில் கிரஹித்துக்கொள்வது விசேஷமாகும் வித்தை, பரமபரமென இரண்டுபேதங்களாகும்(௫௯)வேதம்நான்கு, வேதாங்கம்ஆறும்அபரமெனச்சொல்லப்படும்;பரம்சைவாகமமெனக்கூறப்படும், அபரம் கர்ம்மவாதிகளுக்கும்(௬0)பரம் மூக்தியைவிரும்புவர்களுக்கும் கூறப்பட்டுள்ளது, கர்மம் ஞானத்தால்சித்திக்கப்பெருமாதலின்ஸத்சூத்திரிக்கு ஞானமே பிரதானமானதுகர்மம்பிரதானமன்றும்(௬௧)ஆசார்யர்முதல்பரிசாரகரிருதியாகஅவரவர்ஸம்ஸ்காரானுகுண்யமாய்பஞ்சாசாரியரெனகூறப்படும்(௬௨)ஸமயி,புத்ரகன், ஸாதகனென மூன்றுபேதங்களாகும், ஸ்தானிககுலத்திலுண்டானவருக்கு ஸமயீனனப்பேராம்,(௬௩)பாசககுலத்திலுண்டானவருக்கு ஸாதகனெனவும் பரிசாரககுலத்தில் ஜனித்தவருக்கு புத்ரகனெனவும் பேர்கூறப்பட்டுள்ளது (௬௪) ஆசார்யர் மூன்றுபேதம் சர்வஸாதகனெனவும் போதகனெனவும் ஆசார்யனெனவும் அவரவர் கர்ம்மானுகுண்யமாய் மூன்றுபேதம் கூறப்பட்டுள்ளது (௬௫) எல்லாதத்வார்த்தங்களிலும் பாண்டியத்தியமுள்ளவராயும் மந்திரம் கிரியை பாவனை, முதலிய எல்லாகர்மங்களையும் செவ்வையாய் அறிந்திருப்பவர் சர்வசாதகனெனக்கூறப்படுவர், மந்திரம், கிரியை, பாவனை இவைகளை போதகம்செய்பவர் போதகனெனக்கூறப்படுவர், எல்லாகர்மங்களையும் ஆசரிப்பவர் ஆசார்யனெனக்கூறப்படும் (௬௬) ஆசார்யருக்கு போதகர் மேலானவர் போதகருக்கு சர்வசாதகர் மேலானவர் (௬எ) இந்த மூன்றுபேர்களுக்கும் சகாயத்தின் பொருட்டு கேவலம் தனியேஸாதகனொருவனைவைத்து எல்லாகர்மங்களையும் செய்தல்வேண்டும், (௬அ) ஆத்மார்த்தபரார்த்தங்களை ஆசார்யரா லேயே செய்தல்வேண்டும், பரார்த்தமென்பது இரண்டு பிரகாரங்களாம், ஒன்று யாவர்களுக்கும் அனுக்கிரஹகாரணமாயும் (௬௯) ஆலயத்தில் யாவர்களுக்கும் முக்திஹேதுவாயும் இருப்பது பரார்த்தமென்பதின் பொருள் பரம்மோக்ஷத்தைக் கொடுப்பதெனவும் இப்படிக்குள்ள பூஜையாதொன்றுண்டோ இது பரார்த்தபூஜை

என்பது பொருளாம் (எ0) இதற்கன்னியமான பரார்த்தபூஜை ஞன்றுளது, இது அந்நியர்களைஉத்தேசித்து அவரவர் கிருஹத்தில் சாவகாசமல்லாது (எக) அவர்கிருஹத்தில் சிவலிங்காதிகளைவைத்து அவர்களிடத்தில் சம்பளம்வாங்கி இந்தசிவபூஜை அந்நியர்களை உத்தேசித்து (எஉ) செய்கிறேனென சங்கல்பித்து பூஜிக்கும் பூஜைபரார்த்தமென்பதாம் இப்படி மூன்றுவகையும் செய்வாராகில் தேவலகத்வதோஷத்தையடைவார்கள் (எங) இந்த தோஷத்தோடுகூடியவர்களை எல்லாகர்மங்களிலும் தள்ளுதல்வேண்டும் இதிலும்தன்னுடைய பூஜையை செய்யாமல் பிரத்தியாரிடம் கொடுத்து சம்பளமிந்து பூஜிப்பவர்களுக்கும் இந்த தோஷமுண்டாகும் எச) ஆசார்யனுலேயே ஆத்மார்த்த பரார்த்தங்களை பூஜித்தல்வேண்டும், கர்ஷணுதிகர்மங்களை ஆதிசைவர்களுக்கு இதரமானவர் செய்வாராகில் (எரு) ராஜராஷ்டிரம் நாசத்தைஅடைவதோடும் அந்தகர்மும் பிரயோஜனமற்றதாகும் சிவபெருமானிடத்தினின்று சைவம உண்டாயின, சைவத்தினின்று சதாசிவர் உண்டாயினர், (எசு) சிவனுலேயும் சைவத்தாலேயும் சுத்தாத்மாவாயுள்ளவர் சிவப்பிராமணரென சொல்லப்படுகிறது, தேசிகர், சுத்தசைவர், குருக்கள், தேவகர்மர் (எஎ) ஆசார்யர், போதகர், சர்வசாதகர், மூர்த்திபர், சாந்திபர், ஆதிசைவர், சிவத்விஜர், (எஅ) லோகத்திற்கு ஹிதத்தின் பொருட்டு ஜீவகோடிகளுக்கு முக்தி ஹேதுவான சிவானுக்ரஹகர்த்தாவாயும் சைவசித்தாந்த பாரகருயும் (எகூ) இதுகளோடே கூடியிருப்பதால் லோககுருவெனவும், நிர்மலாத்மா தேவதாஸ்தாபனம் செய்வதால் ஸ்தாபகர் எனவும் (அ0) உத்தமபிராமணரெனவும், சாத்விகபிராமணரெனவும், குருக்களென்னும் பேருக்குபரியாயநாமாக்களாம் (அக) இவர்களுக்கு பிராமணத்வம் ஜன்மாவினுலேயே உண்டாயிருக்கின்றது, பிராமணதேவதை சிவபெருமானும் விஷ்ணுக்ஷத்திரியதேவதையும் (அஉ) பிரம்மா வைசியதேவதையும் இந்திரன் சூத்திரதேவதையுமாக சொல்லப்படுகிறது, பிராமணதேவதையாகிய பரமேசுவரர் முகத்தினின்று ஆதிசைவர்கள் வந்தார்கள், (அங) இதனல் ஜன்மாவினுலேயே இவர்கள் பிராமணர்களெனக்கூறப்படும், இந்த ஆதிசைவர்கள் கர்மத்தால் நாசாகிதமான சிவமாவர் (அச) இவ்வாறு அடைதலால் [illegible]த்விஜத்வம் இவர்களுக்குக்கூறப்படுகின்றது இவர்

களுக்கு அந்நியமான எல்லார்க்கும் ஜன்மத்தால் சூத்திரத்வமும் (அ௫) கர்மத்தால் த்விஜத்வமும் கூறுகின்றபடியால் ஆதிசைவர் உயர்ந்தோரெனகொள்ளப்படும் விப்ரரைவிட ஆறு கர்மம்உயர்ந்த கர்மங்களை ஆதிசைவர்களுக்கு சொல்லப்படுகிறது (அசு) பராபர மென்னும் சிவாகமம் வேதமாகியஇரண்டு சுருதிகளை சொல்லி வைப்பதும் அத்தியயனம் செய்வதும் அல்லதுவேதார்த்தமாகிய சிவாகமங்களைச்சொல்லிவைப்பதும் அத்தியயனம் செய்வதும் சிவயாகத்தை செய்விப்பதும் செய்வதும் (அஅ) சிவதீக்ஷிதரிடத் தில் வாங்குவதும் சிவார்பணம் செய்த தானத்தை கொடுப்ப தும் சிவார்ப்பணமானதானத்தை வாங்குவதும் இவ்வாருள்ள ஆ றுகர்மாக்களைஉடைய விசேஷர்களாவார்கள் (அகூ) விப்ரரைக்கா ட்டிலும் மேலானவர் வேதாகமங்களைப் போதிப்பதும் தீக்ஷாஆ சார்யாபிஷேகம் முதலியவைகளால் சுத்தாத்மாவாய் செய்பவரும் எல்லாமந்திரங்களையும் உபதேசிப்பவரும் (கூ0) எல்லாஜீவர்களி டத்திலும் தயையோடுகூடியவரும் எல்லாதந்திரங்களிலும் அதி காரம் பெற்றவரும் ஜிதேந்திரியரும் சிவஞானமுடையவரும் சுப த்தைத்தரத்தக்க பிராஸாதமந்திர சாமர்த்தியமுடையவரும் (கூக) சித்தாந்தமான சிவதத்வத்தைஅறிந்தவரும் ஆகமார்த்தத்தைஅ றிந்தவரும், வேதம், ஸ்மிருதி, புராணம, தர்மசாஸ்திரம் சூத்தி ரம் (கூஉ) தைய்வத்தைஅறிந்தவரும் கணிதம் ஸ்தோத்திரம், யந் திரம், மந்திரம், முதலியவைகளில் பிரஸித்திபெற்றவரும் சப்தசா ஸ்திரம் சித்திரம் சில்பசாஸ்திரம் பரதார்த்தம் (கூ௩) கானம, ம ஹாநாட்யம், சுவரம், தாளம்முதலிய எல்லாசாஸ்திரங்களிலும் பாண்டியத்தமுடையவருமாயிருத்தல் வேண்டும், அல்லாவிடில், சி வாகமத்தைஅறிந்திருத்தல் வேண்டும் (கூச) எல்லாசுருதிகளிலு ம் மேலானது சிவாகமம், மந்திரம், கிரியை, பாவனை முதலியகிரி யைகளை போதிக்கத்தக்க (கூ௫) கிரஹஸ்தரானவர் எல்லாவர்ணி களுக்கும் பூஜ்யகுருவாவரென சொல்லப்படுகிறது, சந்நியாஸிகளு க்கு குருத்வம் ஒருக்காலும் கூடாது, (கூசு) இப்படிக்கே பிரம்ம சாரியும் குருத்வத்தில் நீக்குதல்வேண்டும், வானஸ்பிரஸ்தனையும் குருத்வத்தில் நீக்குதல்வேண்டும் (கூஎ) இதற்குவிரோதமாய் மோ கத்தால் செய்வாராகில் கர்த்தா, கர்மா இவ்விரண்டும் நாசத்தைய டையும் ஸந்நியாஸி, பிரம்மசாரி இவ்விருவர்களிடத்தில் ஞானகுரு

ஸ்திரம் சொல்லிக்கொள்ளுதல் வேண்டும் (௯௮) தீக்ஷைமந்திரோபதேசம் குருத்வம் இவைகள்கூடாது ஆசார்யலக்ஷண ஹீனத்தைச் சொல்லுகிறேன் கேட்ப்பாயாக (௯௯) கூனையுடையவர் பூனையின்கண்போலுள்ளவர் டம்பத்தையுடையவர் மிகக்குட்டையாயிருப்பவர் சூடுபட்டவர் சபலசித்தமுடையவர் தீனர் அன்யர்தாரத்தை புணர்ச்சிக்குவிருப்புபவர் (௧௦௦) புண்யமில்லாதவர் கடினசித்தமுடையவர், நபும்சகர் விரதத்தை கைவிட்டவர், வக்ரநகத்தோடு கூடியவர், இளப்பாயுள்ளவர், விசனத்தோடு கூடியவர், தயை யில்லாதவர், (௧௦௧) சிவசாஸ்திரம் பாராதவர், சந்நியாஸி, தர்கம்படித்தவர், ஸ்திரிகளைபிறரிடம் ரமிக்கச்செய்து உபஜீவிப்பவர், செய்நன்றிமறந்தவர், தெய்வமேயில்லையென்பவர், பாபரூபமுடையவர் (௧௦௨) குரு, தேவர் ,ஆத்மா, இவைகளைநிந்திப்பவர், தந்தரோகமுடையவர், வைத்தியர், வக்ரதந்தமுடையவர், சிவபெருமானையும், விஷ்ணுவையும் சமமெனகூறுபவர். மஹாபாதகத்தை செய்தவர், புஷ்ப்நேத்திரமுடையவர் (௧௦௩) சர்ம்மவியாதி அல்லது தலையில்மயிர்முளையாதவர், கைகால்களில் விரல்கள் அதிகரித்துள்ளவர், அதிகஉயரமுடையவர், கோழிச்சொல்பவர், அங்கஹீனமுடையவர், ஆசாரமில்லாதவர், பல்லில்லாதவர் (௧௦௪) செவிடர், நீண்டமோவாக்கட்டையையுடையவர், பிறரைதூஷிப்பவர், கரையாயுள்ளவர், மிகப்பெருத்துள்ளவர், செம்பட்டைமயிறையுடையவர், சூதாடுகிறவர் அல்லது வஞ்சனையால் மோசம்செய்கிறவர், (௧௦௫) நிர்த்தனம் செய்பவர், பாடுகிறவர், நொண்டி, நிர்வாணி, பைத்தியம்பிடித்தவர், சப்பாணி, துராசாரமுடைபவர், தள்ளுப்பட்டவர், பாபத்தால் ஜீவிப்பவர், (௧௦௬) ஜடையையுடையவர், தலையைமொட்டையடித்து இருப்பவர், நெடுநாள் ரோகியாகவேஇருப்பவர், ரோகத்தால் அதிகஅன்னத்தைபுஜிப்பவர் இதுமுதலான லக்ஷணத்தோடுகூடியிருப்பவரை ஆசாரியாகவைத்தல் கூடாது (௧௦௭) மூர்த்திபாளாகவும்வைத்தல் கூடாது, சர்வஸாதகம், போதகம், ஸாதகம், இவர்கள் சொல்லியலக்ஷணமில்லாது இருந்தால் (௧௦௮) தோஷமில்லை யெனச்சொல்லப்படுகிறது இவர்கள் மந்திரம் தந்திரம் கிரியைமுதலியது தெரிந்தஉத்தமாத்மாக்களென்பதாம் இதில்சொல்லிய எல்லாலக்ஷணங்களோடும் கூடியும் எல்லா அவயவங்களும் சுந்திரமாய் (௧௦௯) அமைந்திருந்த ஆசார்யர் மந்திரம்தெறியாதவராயிருப்பின் எல்லாகர்மங்களிலும் நீக்குதல்

வேண்டும் ஆசார்யாபிஷேகம் பெற்றவர் மந்திரஹீனராயிருப்பின்
(௧௧௦) ஸர்வஸாதாரலேயும், போதகனுலேயும் எல்லாகர்மங்களே
யும் ஆசார்யருக்கறிவித்து செய்யவேண்டும் இதனுல்தோஷமில்
லே (௧௧௧) மந்திரம், கிரியை, பாவனே இவைகளே பூர்ணமாய் தெ
ரிந்தஆசார்யர் லக்ஷணமில்லாமலிருந்தாலும அவரைஒருக்காலும்
நீக்கக்கூடாது, அவர்ஸ்வயம்பு லிங்கம்போலாவர் (௧௧௨) பாரம்
பரிய க்ருமமாய் அர்ச்சித்துவரும் ஆசார்யரைபரார்தத்தில் நீக்கி
அந்நியாசாரியரை நியமித்தல்கூடாது, (௧௧௩) மோகத்தால் நியம
னம்செய்வாராகில் ஆசாரியசங்காதோஷமுண்டாகும். ஆசாரிய
சங்காதோஷத்தால் ராஜராஷ்டிரம் நாசத்தை அடையும் (௧௧௪) இ
தனுல் சர்வப்ரயத்நத்தினுலும் பூர்வாசார்யராலேயே பூஜித்தல்
வேண்டும். ஸமுத்திரத்தைத் தாண்டல் புத்தமதம் ஆர்ஹத
மதம்(௧௧௫) சாக்தம் பாஞ்சராத்திரம் ஸௌரம் காளாமுகம் நிர்
மூலம் பைரவம் பாசுபதம் (௧௧௬) காணபத்யம் சாம்பவம் கௌ
மாரம முதலியமதங்களில் ஆச்சார்யன் தீக்ஷிக்கப்படுவானுயின் ஆ
ச்சார்யபிரஷ்டத்வமுண்டாகும் (௧௧௭) கர்ஷணம் பிரதிஷ்டை தீ
க்ஷை உத்ஸவம் நித்யபூஜை முதலியவைகளில் ஆச்சார்யருய் நிய
மித்தல்கூடாது (௧௧௮) மோஹத்தால் ஆச்சார்யனுய் நியமிப்பா
னுகில் ராஜராஷ்டிரன்னுசத்தையடையும் திரும்பசிவதீக்ஷை ஆச்
சார்யாபிஷேகாதிகள்செய்து ஆச்சார்யருய் ஸங்கிரஹித்தல்கூடும்.
(௧௧௯) ஸமுத்திரத்தை தாண்டியவர்களோடு ஒரே பந்தியில்
சாப்பிடுவானுயின் தோஷமாகும் பஞ்சகவ்யத்தால் சுத்திகரித்தல்
வேண்டும். (௧௨௦) அகோராஸ்திரஜபம் நூறுஉருஜபித்தால் இந்த
தோஷம் பரிஹாரமாகும். பிராயச்சித்தமில்லாமல் இருப்பானுகில்
பூஜைமுதலியவற்றில் நீக்குதல்வேண்டும் (௧௨௧) வேதபாஹ்யம
தம் மிலேச்சர் சண்டாளர் இவர்களோடுசேர்ந்த ஆசார்யருக்கு
பிராயச்சித்தம் கிடையாது. (௧௨௨) பரம்பரையான ஆசார்யபுத்தி
ரனுக்கு உபநயனத்துக்குமுந்தியே ரிக்முதலியவேதங்களே அத்தி
யயனம் செய்யயோக்கியனாவன் (௧௨௩) ஜன்மாவினுலேயே பிரா
மணத்வசித்தி உண்டாயிருப்பதால் உபநயனம் உபசாரமாத்திரமா
ய் கொள்ளப்படும் உபநயனம் முக்கியமில்லாமையால் வேதாத்யய
னம் செய்யலாம் (௧௨௪) ஜன்மாவினுல்சூத்திரத்வமும்கர்மத்தால்
த்விஜத்வமும் உண்டாகின்றதுஜிகோடிகளுக்கு உபநயனம் செ
ய்தபின்னரே வேதாத்யயனம்செய்தல் வேண்டும்; (௧௨௫) பரம

குருவினுடைய அந்தியயனத்தைகேட்பாயாக. ஆதிசைவருடைய புத்திரருக்கு முதலில்உபநயனம் செய்வது (கஉசு) அபர சம்ஸ்காரமாகும். ஆகமத்தில்கூறியபடி சைவோபநயனம்செய்வது பரஸம்ஸ்காரமாகும் (கஉஎ) இந்தபிரகாரம இரண்டுவிதசம்ஸ்காரம்செய்தபின் சமயதீக்ஷைசெய்து(கஉஅ)சிவாகமங்களை உபதேசித்தல் வேண்டும் சமயதீக்ஷைஇல்லாவிடில்உபதேசமசெய்யக்கூடாது.செய்தால் இராஜ்யம்நாசத்தையடையும் (கஉகூ)விசேஷதீக்ஷைசெய்து ஆத்மார்த்தபூஜைசெய்தல்வேண்டும் விசேஷதீக்ஷிதர்கள்க்ஷணிகம் முதலியலிங்கங்களைகிரமமாய் பூஜித்தல்வேண்டும் (கஙo) விசேஷ தீக்ஷை பெற்றவர் பரார்த்தாலயத்தில் நித்யபூஜைசெய்தல் குற்றமாகாது நைமித்திகம் காமியம் இவ்விரணடையும் செய்தல்கூடாது (கஙக) நிர்வாணதீக்ஷை சிகாச்சேதம் விஷுவசோதனம் அஸ்திராபிஷேகம் ஆசார்யாபிஷேகம் (கஙஉ) ஆசார்யாபிஷேகம் செய்தபின் பரார்த்தாலயத்தில் நித்யம் நைமித்திகம் காம்யம் இந்த பூஜைகளுக்கு யோக்கியராவர் நிச்சயம் (கஙங) தன்னுடைய பத்னிக்கு இப்படிக்கே தீக்ஷைவிஷுவசோதன மிறுதியாக செய்தால் இந்தஸ்திரீகளுக்கு பரார்த்தத்தில் லிங்கத்தைத்தொடுதல் தோஷமாகாது. (கஙச) பூஜைசெய்தல்கூடாது சங்கடத்தால் பூஜகாள இல்லாவிடத்தில் பூஜிப்பது தோஷமாகாது (கஙரு) அந்நிய வர்ணத்தில்உண்டான ஸ்திரீகள் பரார்த்தத்தைத்தொடுதல் கூடாது. மோகத்தால் தொடுவாராயில் மஹாகும்பாபிஷேகம் செய்தல்வேண்டும் (கஙசு) தீக்ஷைஇறுதியில் ஆதிசைவர்களுக்கு சிவாகமங்களில் செவ்வையாகபாண்டித்யம் இருந்தால்பரார்த்தாலய (கஙஎ)பூஜைக்கு யோக்கியராவர். சிவாகமம்தெரியாவிடில் பூஜித்தலும் கூடாது. ஆசார்யருடையகுலத்திலுண்டான பிரமசாரிவிசேஷராவர். (கஙஅ) பிரம்மசாரிசுசியாயிருந்து தீக்ஷைபெற்று மந்திரம் சாஸ்திரம் இதுகளோடுகூடியவராயும் (கஙகூ) பராபரஸம்ஸ்காரம் பெற்றவராயும்பின்ஸமயதீக்ஷைபெற்றவராயும் (கசo) விசேஷதீக்ஷை பெற்று ஆத்மார்த்தசிவபூஜைசெய்பவராயுள்ளவர் பரார்த்தபூஜை புரிதல்தோஷமாகாது (கசக) தீக்ஷைஇல்லாத பிரம்மசாரிகளால் பரார்த்தம் பூஜித்தல்கூடாது. உத்ஸவம்முதலியதோடுகூடிய பரார்த்தாலயங்களில் (கசஉ) பூஜைமுதலிய கிரியைகளை பிரம்மசாரி செய்தல்கூடாது. ஆசார்யர் பத்நி இல்லாதிருப்பதும் பத்நிகர்ப்பவதியாயிருந்தாலும் (கசங) ரஜஸ்வலையாயிருந்தாலும் பூஜைசெய்தல்கூடாது. எட்டுமாதத்திற்குமேல் கர்பத்தில்பூஜைசெய்தலும் கூ

டாது. (கசச) ஒருமாதம்முதல் எட்டாவதுமாதம்வரை [illegible] பூஜைசெய்தல்தோஷமாகாது. ஆசார்யருக்குபுத்திரனில்லாவிடில் ஆசார்யருடைய குலத்திலுண்டானவரை (கசரு) ஸ்வீகரித்துக் கொண்டால் புத்திரத்வசித்தியுண்டாகும். ஐந்துமுகங்களிலிருந்து உண்டானபஞ்சகோத்திரங்களில் புத்திரனை ஸ்வீகிருதம் செய்யலாம் (கசசா) அந்நியகோத்திரத்திலுண்டான புத்திரனைஸ்வீகிருதம் செய்தல்கூடாது. மோகத்தால்செய்வாறுகில் புத்திரத்வ ஸித்திஉண்டாகாது (கசஎ) பரார்த்தபூஜைகாரியங்களில் இந்த புத்திரனைநீக்குதல்வேண்டும். மோஹத்தால்செய்வாறுகில் அந்த பூஜைநிஷ்பலமாவதோடு (கசஅ) ராஜ்பீக்ஷாபமும் கர்த்திருபோக்திருநாசமும் உண்டாகும் அர்சகர்புத்திரனில்லாதிருந்தால் ஆசார்யர்பிள்ளையாவது (கசகூ) அர்சகருடையபிள்ளையாவது ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம் ஆசாரியார்புத்திரரை ஸ்வீகரித்துக்கொண்டால் ஆசார்யத்வம்போய்விடும். (கரு௦) ஸ்தானீகன்புத்திரனல்லாது இருந்தால்ஆசார்யபுத்திரரையாவது அர்ச்சகபுத்திரரையாவது ஸ்தானீகபுததிரரையாவது (கருக) ஸ்வீகரித்துக்கொள்ளலாம். ஆசார்யபுத்திரரை ஸ்வீகரிப்பாறுகில் ஆசார்யத்வம் இப்புத்திரனுக்கு இல்லாதுஒழிந்துவிடும். அர்ச்சகபுத்திரனை ஸ்வீகரிப்பாறுயின் அர்சகத்வம்போய்விடும். ஸ்தானீகத்வம்ஸித்திக்கும் (கருஉ) பாசகருக்கு புத்திரனில்லாதிருந்தால் ஆசார்யபுத்திரனையாவது அர்சகபுத்திரனையாவது ஸ்தானீகபுத்திரனையாவது(கருங) பாசகபுத்திரனையாவது ஸ்வீகரித்துக்கொள்ளலாம். இந்தஸ்வீகிருதங்களுக்குஆசார்யத்வம் அர்சகத்வம்ஸ்தானீகத்வம் போய்விடும் (கருச) பாசகத்வம்தான்உண்டாகும் பரிசாறகருக்கு புத்திரனல்லாதிருந்தால் தன்னுடையகுலத்திலேயே ஸ்வீகாரம் செய்துகொள்ளல்வேண்டும். (கருரு) ஆசார்யாதிபுத்திரர்களை ஸ்வீகிருதம் செய்துகொண்டால் ஆசார்யத்வம்போய் பரிசாரகத்வந்தானுண்டாகும் ஆசார்யர் அர்சகபுத்திரனைஸ்வீகிருதம் செய்துகொள்ளல்கூடாது ஸ்தானீகபுத்திரனை அர்சகன்ஸ்வீகிருதம் செய்துகொள்ளல்கூடாது (கருசா) பாசகபுத்திரனை ஸ்தானீகன் ஸ்வீகிருதம்செய்துகொள்ளக்கூடாது. பரிசாரகபுத்திரனை பாசகன் ஸ்வீகிருதம் செய்துகொள்ளக்கூடாது (கருஎ) செய்துகொள்வாறுகில் தத்துபுத்திரனுகஆகமாட்டான். ஸ்தானீகன் பாசகன் பரிசாரகன் (கருஅ) இவர்கள் தனக்கு மேலிட்டவர்களுக்கு ஸ்வீகாரம்போனுல் புத்திரத்வசித்தியுண்டாகாது. பாசகர் பரிசாரகர் இவர்களும் தனக்கு

[illegible]ட்டவர்களுக்கு ஸ்வீகாரம் புகுதல் கூடாது (௧௫௯) புத்திர [illegible]ல்லாதிருப்பவன் தன் மரணத்திற்குமுன் ஸ்வீகாரத்தின்பொரு ட்டு அனுமதிகொடுத்து அவன் மரணமடைந்துவிட்டால்அவன்பா ர்யை பின் ஸ்வீகிருதஞ் செய்துகொள்ளலாம்(௧௬௦) இந்தஸ்வீகார புத்திரனுக்குபுத்திரத்வஸித்தியுண்டாய்பிதுருகாரியாதிக்ளைசெய்ய கர்த்தாவாவன் ஆச்சார்யர் பத்நிஹீனராயிருந்தால் அந்த ஆச்சார் யர் மந்திரசம்பூர்ணராயிருப்பின் (௧௬௧) நித்தியபூஜைசெய்யலாம், தோஷமில்லை பிராயஸ்சித்தம், உத்ஸவம் இவைகள் செய்தல்கூடா து, ஆச்சார்யருக்கு விவாகம் ஆச்சாரியசந்ததியிலேயே கன்னிகை கிரஹித்தல் (௧௬௨) விசேஷமாகும் இல்லாவிட்டால் அர்ச்சகர்கு லத்திலேயும் ஸ்தானீக பாசகபரிசாரக குலத்திலேயு உள்ள (௧௬௩) கன்னிகையை விவாகம்செய்துகொள்ளலாம் ஆச்சார்யகுலத்தின்க ன்னிகையை அர்ச்சகர்முதல் (௧௬௪) பரிசாரகமிறுதியாக விவாகம் செய்தல்கூடாவாம் இப்படிக்கே அர்ச்சகர் தமக்குக்கீழிட்டஸ்தானீ க பாசகபரிசாரககுலங்களிலுள்ள கன்னிகையை விவாகம்செய்து கொள்ளலாம் அர்ச்சககுலத்தின் கன்னிகையைஸ்தானீகர்(௧௬௫) பரிசாரகரிறுதியாக விவாகம்செய்துகொள்ளல்கூடாது ஸ்தானீகர் தமக்குக்கீழுட்டுள்ள பாசகபரிசாரக குலத்தின் கன்னிகையை வி வாகம்செய்துகொள்ளலாம் ஸ்தானீககுலத்தின்கன்னிகையை பாச காதிகள் விவாகம் (௧௬௬) செய்துகொள்ளல்குற்றமாகும் இப்ப டிக்கேபாசகபரிசாரகர்களுக்கும் சொல்லப்படுகின்றது, ஆச்சாரியர் முதல் பாசகர்வரையில் (௧௬௭) விவாகம் பிரம்மமுகத்திலுண்டான த்விஜ கன்னிகையை செய்துகொள்ளல் கூடாது, மோகத்தால் செய்வாராகில் ஆசார்ய அர்ச்சகஸ்தானீக பாசகபரிசாரகவம் போ ய்விடும்(௧௬௮) எல்லாஆலயங்களிலும் பூஜைமுதலியவற்றில் இவர் களை நீக்குதல்வேண்டும், மோகத்தால் செய்வாராயில் ராஜராஷ்டிர ம் நாசத்தையடையும் (௧௬௯) த்விஜகன்னிகையை நீக்கி திரும்ப தீக்ஷை ஆச்சார்யாபிஷேகம்செய்து கொள்வாராயின் ஆச்சார்யாதி களுக்கு யோக்கியராய் ஆலயபூஜனம் செய்யதக்கவராவார் (௧௭௦) க்ஷத்திரியர்முதலிய சத்சூத்ரிவரையிலுள்ள கன்னிகையை ஆச்சா ர்யாதிகள் விவாகம்செய்துகொள்ளல்கூடாது செய்வாராயின் பிரு ஷ்டராவார்கள் (௧௭௧) இதற்குத்தணிந்தஜாதிகளிலும்விவாகம்செ ய்துகொள்வது இதைக்காட்டிலும் மேலானதோஷமாகும் நான்கு [illegible]ங்களிலும் உண்டான கன்னிகையை த்விஜர்களுக்கு [illegible] ம்செய்துகொள்வது (௧௭௨) தோஷமாகாது இதற்கு [illegible]

தியில் த்விஜர்விவாகம் செய்துகொண்டால் த்விஜபிருஷ்டராவார்கள், ஸம்சயமில்லை இதனால்எல்லாப்பிரயத்னங்களினாலேயும் இதில்சொல்லியபடி விவாகம் செய்துகொள்ளல் வேண்டும் பரமேசுவாருடைய ஐந்து மூர்த்தாவில் நின்று ஐந்து ஜ்யோதிஸ் உண்டாயின. காசியபர்முதல் அகஸ்தியர் பர்யந்தம் ஜோதிஸ்ஸில் நின்று உண்டானார்கள் இவர்களை ஆச்சார்யரெனகூறப்படுகின்றது(௧௭௫) இப்படிக்கே பரமேசுவருடைய முகத்திலிருந்து இருபது ரிஷிகளுண்டானார்கள். இவர்களும் சிவசிருஷ்டி எனக்கூறப்படும் அர்ச்சககோத்திர (௧௭௬) வர்க்கிகளெனசொல்லப்படுவார்கள். கிரமமாய் இதினுடைய பேதத்தை கேட்பாயாக. நந்தகர், தக்ஷகர், விசுவாமித்திரர், சுனந்தனர் (௧௭௭) காலாயனர், கௌண்டில்யர், தனஞ்செயர், உத்பலர், வத்ஸலர், புலஸ்தியர், விபுலர், (௧௭௮) அதிதீர்க்கர், வக்த்ராங்கர், பார்க்கவர், ஸநாதனர், ஸநத்குமாரர், மேதாவி, மார்க்கண்டர், ரோமஹர்ஷி (௧௭௯) காலாயனர் அக்னி இவர்கள், அர்ச்சககோத்திரத்தின்வர்க்கிகளாவார்கள். ஸ்தானிககோத்திரர்களானரிஷிகள், பரமேசுரர் ஹிருதயத்தில் நின்று உண்டானார்கள். (௧௮௦) மஹத்அங்கிரஸர், ஸ்தூலர்,கர்த்திருபர், சபானுதகர், நாட்டியாயனர்,சாண்டல்யர், சங்குகர்ணர்,புராந்தகர்(௧௮௧) சங்கர், முக்கியர், சிகி, ஸநந்தர், ஆபஸ்தம்பர், இவர்கள் ஸ்தானிகவர்க்கிக்களென சொல்லப்படுகிறது. (௧௮௨) பரமேசுவருடைய நாபிதேசத்திலே, பாசகர்களுடையவர்கிகளுண்டானார்கள் திரிசங்கு, பராசரர், உசனர், ரஜர், (௧௮௩) சுமஹான், தேவலர், ஐங்கர், பிங்களர், வருணர், விசுவசிருட் விபாக்ரபாதர், ரோமர், அமிதாவாஜலர், (௧௮௪) கிருஷ்ணர், இவர்கள் பாசகவர்க்கிகளாவார்கள். கலவர் முத்கலர், வயவர், பல்யகர், (௧௮௫) வித்வச்சோபர், தபர், விஜயர், ரிஷ்யசிருங்கர், வஸிஷ்டர், பாதராயணர் பிருஹஸ்பதி (௧௮௬) பூதரர், சங்குகர்ணர், கார்முகி, கௌஸ்தர், விபாவஸு பாலாசர், இவர்கள் பரிசாரகவர்கிகளாவார்கள். (௧௮௭) இந்தஎல்லாரிஷிகளும், சிவசிருஷ்டியில் உண்டானவர்கள். பரமேசுருடையபஞ்ச மூர்த்தாவிலிருந்து உண்டானவர்கள், சிவப்பிருமணாவார்கள். (௧௮௮) இப்படி யுண்டானவர்கள் ஆதிசைவரெனகூறப்படுவார்கள். கேவலம் பிரம்மமுகத்தில் நின்று அந்நியரிஷிகளுண்டானார்கள். இவர்கள் ஸாமான்ய பிருமணர்கள் ஆவார்கள். (௧௮௯) ஸாத்விகம், ராஜஸம் தாமஸம், மென பிருமணர்கள் மூ

ன்று பேதமாகும் சிவசிருஷ்டியில்வந்தவர், ஸாத்விகரும், (கசுo) எல்லா லோகங்களுக்கும் ஸாத்விகபிருமணர் குருவென கூறப்படு வார் ராஜஸபிரம்மணர் விராட்ரூபத்தில் உண்டானவர், தாமஸப்பி ராமணர், பிரம்மஸிருஷ்டியிலுண்டானவர் (கசுக) விராட்விஷ்ணு வெனகூறப்படும். இவரால் சிருஷ்டிக்கப்பட்டவர் ராஜஸபிராமண ராவார் இந்தபிருமணர்களுக்கு சிவபிராமணர் விசேஷமாவார்கள் (கசுஉ) இந்த சிவப்பிராமணர் ஆதிசைவரெனச்சொல்லப்படுவார் இவர்கள் எல்லார்களுக்குங்குருவாவர். பிராமணர்கள் ஆதிசைவர் களினால் முக்திப்பிரதமாயும் சிவாகமங்களினால்சொல்லப்பட்டசிவ தீக்ஷை முதலியவற்றை செய்துகொள்வாராயின் (கசுங) இதனால் இவர்களை மஹாசைவரெனக்கூறப்படும். (கசுச) ஆத்மார்த்தலிங் கபூஜையில் இந்த மஹாசைவருக்கு தீக்ஷையால் யோக்யதை யுண் டாகும். பரார்த்தாலயங்களில் பூஜை செய்தல் கூடாது. செய்வாரா கில் குற்றமாய்முடியும் (கசுரு) கேவலப்பரிசாரகம் முதலியகாரி யங்களை செய்தல் தோஷமாகாது. ஆத்மார்த்தபூஜையும் (கசுசு) தீக்ஷையல்லாத பிராமணர்கள் செய்யக்கூடாது செய்வாராகில் நா சத்தை அடைவார் பரமேசுவரர்பதிஜீவர்கள், பசுக்கள் (கசுஎ) ப சு பதினென்னும் பாவபேதத்தால் பசுஸ்வரூபமான ஆத்மாவிற்கு ப திரூபமான சங்கரரை எப்பொழுதும் அறியமுடியாது (கசுஅ) இ ந்த பூஜைதீக்ஷாஹீனர்களால் செய்வது பலனற்றதாகும் இதனால் சிவதீக்ஷையாலே பசுத்வத்தை போக்கி (கசுகூ) பசுபாவநீங்கினால் ப திக்கு ஸஜாதித்வம் ஆத்மாவுக்குண்டாகும் ஸாஜாத்யத்தால் ஐக்கி யமும் விஜாதியத்தால் ஐக்கியமின்மையுமுண்டாகும் (உOO) வன த்திலுள்ள யானையானது சிம்ஹத்தைக்கண்டு எப்படிப்பயத்தைய டையுமோ தீக்ஷையல்லாதோர்சிவலிங்கபூஜையில் ஆவிர்பவித்துவிள ங்கசிவபெருமான் அஞ்சுவர் (உOக) சிவபூஜை முதலியகாரியங்களு க்கு சிவதீக்ஷைமுக்யமாகும் இதுக்ரியாவதி ஞானவதி, வியதா, ஸ்பர்சா, வாசகி (உOஉ) சாக்ஷுஷி, மானஸியென சிவதீக்ஷை எ ழுபேதங்களாகும் இவற்றுள் ஆதிசைவர்களுக்கு கிரியாவதி, ஞா னவதி, என இரண்டு தீக்ஷையும் (உOங) செய்யதக்கது. ஞானம், அந்தர்முகமாயிருத்தலால் இந்த தீக்ஷையை அடைந்தவர்கள் பா ஹ்யலிங்க பூஜாதிபரார்த்தாலய கைங்கர்யங்களுக்கு அர்ஹரார்கார் (உOச) இவர்கள் ஆச்சார்யத்வாதிகாரியங்களையும் செய்தல்கூடாது கிரியாவதிதீக்ஷைபெற்றோர் அந்தர்யாகமும் பாஹ்யக்கிரியைகளு

ம் (உ0௫) சொல்லப்படுவதால் இந்த தீக்ஷைபெற்ற சிவத்விஜர்கள்
ஆத்மார்த்தத்திலும் பரார்த்தத்திலும் பூஜிக்கயோக்கிராவர் (உ0சு)
த்விஜர்களுக்கு வியதாதீக்ஷையும் க்ஷத்திரியவைசியர்களுக்கு ஸ்ப
ர்ஸதீக்ஷையும் சத்சூத்திருக்கு வாசகிதீக்ஷையும் அநுலோமர்க
ளுக்கு சாக்ஷிதீக்ஷையும் (உ0எ) பிரதிலோமர்களுக்கு மானசிதீ
க்ஷையுமாய் இப்படிக்கி ஏழுபிரகாரமாய் பேதம் கூறியுள்ளது தீ
க்ஷையில்லாவிடத்தில் எல்லார்களுக்கும் சாக்ஷுஷி தீக்ஷைசெய்
து கிரஹித்துக்கொள்ளலாம் (க0அ) இந்த எழுவகை சைவபே
தத்தில் ஆதிசைவர்கள் ஆத்மார்த்தத்திலும் பரார்த்தத்திலும் பூ
ஜைமுதலியகாரியங்களைச்செய்ய யோக்கியராயிருப்பதால் இவர்க
ளால் (உ0கூ) அன்னியசைவர்கள் எப்பொழுதும் சிவதீக்ஷை அ
டைதல்வேண்டும், ஆதிசைவர்களால் மஹாசைவர்கள் தீக்ஷிக்கப்
பெற்று (உக0) ஆச்சார்யாபிஷேகம் செய்துகொண்டு இந்த ஆதி
சைவர்களிடத்தில் அநுமதிபெற்று தன்ஜாதிக்கும் தமக்கு கீழிட்
டஜாதிகளுக்கும் ஆச்சார்யராய் இருக்கலாம் (உகக) அநுசைவர்க
ளும்இவ்வாறே ஆதிசைவர்களிடத்தில்தீக்ஷைபெற்று அபிஷேகஸ்
தர்களாய் இவர்கள் அநுமதிபெற்றுதன்ஜாதிக்கும்தனக்குகீளிட்
டஜாதிகளுக்கும் ஆச்சார்யராய் இருக்கலாம். அந்நியசைவர்கள்
ஆதிசைவர்களால் தீக்ஷைபெற்று (உகஉ) தன் ஜாதிக்குமாத்திர
மேஆச்சார்யராயிருக்கலாம்இதர்சூத்தாழ்ந்தஜாதிகளுக்குஆச்சார
யத்வமில்லை (உகங) அநாதிசைவம், ஆதிசைவம், மஹாசைவம்,
அநுசைவம் (உகச) அந்நியசைவம். பாரசைவம், அவாந்தரசைவ
மென சைவம் ஏழுபேதம் சொல்லப்படும் இந்தலக்ஷணத்தை கே
ட்பாயாக (உகரு) பரமேசுவரர் அநாதிசைவரெனவும். சிவத்விஜர்
ஆதிசைவரெனவும், விப்ரர்மஹாசைவரெனவும், க்ஷத்திரியவைசிய
ர்கள்(உகசு)அநுசைவரெனவும் சூத்திரர்கள் அந்நியசைவரெனவு
ம், அநுலோமர் பாரசைவரெனவும் பிரதிலோமர் அவாந்தரசைவ
ரெனவும் (உகஎ) கூறப்படும் சூத்திரர், சத்சூத்திரர் அசத்சூத்தி
ரர் என இரண்டுபேதம் பாரம்பரியக்கிரமமாய் ஸுராமாம்ஸம் இ
வைகளை நீக்கி (உகஅ) சிவதீக்ஷை முதலியவற்றால் சுத்தராயிருப்
பவர் சத்சூத்ரியெனவும் சுரா மாம்ஸம் புஜிப்போர் அசத் சூத்ரி
யெனவும் கூறப்படும் (உகசு) எல்லார்களுக்கும் குருத்வமுடைய
வர் ஆதிசைவராவர். இதுவரை சிவசிருஷ்டிக்கிரமத்தை சொன்னே

ம், இதன்பின் விஷ்ணுசிருஷ்டியை கேட்பாயாக (௨௨0) விஷ்ணுவின்முகத்தினின்று உண்டானவர்கள் வைஷ்ணவபிராமணர்கள் ஆவர்கள் கேவலம் பிரம்மசிருஷ்டிக்கு விஷ்ணுசிருஷ்டி மிக்மேன்மை (௨௨௧) வைஷ்ணவம் மூன்று பேதமர்கும் மாத்தியம்எனவும், வைகானஸமெனவும், பாஞ்சராத்திரமெனவும் மூன்றுபிரகாரங்களாம் (௨௨௨) மத்தியத்தை நோக்க வைகானஸம்சிறந்ததும் வைகானஸத்தை நோக்க பாஞ்சராத்திரம்மேலானதும் இந்தபாஞ்சராத்திரம்வைஷ்ணவத்திற்கு முதன்மையெனகூறப்படும்.(௨௨௩) இந்த வைஷ்ணவபிராம்ணர்கள் ராஜசப்பிராம்மணர்கள் ஆவார்கள் நெற்றியில் சூலப்புண்டறம்போடுதல்வேண்டும். இதின் இரண்டுபக்கங்களிலும் நாலங்குலம் (௨௨௩) மத்தியில் ஆறு யுங்குலம் விஸ்தாரம் நாலுஅங்குலமும் புருவமத்தியம் முதல் (௨௨௪) புருவத்திற்குக்கீழ் சூலத்திற்கு ஆதாரரூபமாய் பீடாகிருதி கற்பித்து இதின் உயரம் இரண்டங்குலமாய் (௨௨௫) நாசிகையின் மூலாந்தம் அக்ரத்தைச்செய்து ஊர்த்வபுண்டறம்போடுதல்வேண்டும். புஜமூலத்தில் இரண்டு பார்சுவங்களிலும் சங்கு சக்கிர அடையாளங்களை கிரமமாய் (௨௨௭) தப்த முத்திரையோடு கூடியிருப்பது பாஞ்சராத்திரமெனக்கூறப்படும். பீடஹீனமான சூலபுண்டாரம் வைகாநஸர் ஆசரித்தல்வேண்டும் (௨௨௮) தப்தமுத்திரை வைகாநஸருக்குக்கிடையாது. விபூதியினாலும் மத்தியையில் குங்குமத்தினாலும் சூலபுண்டாரம்போடலாம்(௨௨௯) அல்லதுசுவேதமிருத்திகையாலும்சூலபுண்டாரம்போடுதல்வேண்டும் மாத்தியருக்கு மிருத்திகையினால் அரசிலைபோல்(௨௩0)புருவத்திற்குமேல் லலாடம்வரை அரசிலைநுனிஊர்த்வத்தில்கற்பித்து மத்தியில்கரியின்ரேகைகளை அடையாளம்செய்துகொள்வது மாத்யபுண்டிரங்களாம்(௨௩௧) இந்த ஊர்த்புண்டிரந்தரித்து விஷ்ணுமூர்த்தியை வைஷ்ணவர்கள்உபாஸித்தல் வேண்டும் இதுவரைவிஷ்ணுசிருஷ்டியைச்சொன்னோம்சக்தியின் சிருஷ்டியைக்கேட்பாயாக (௨௩௨) பரமேசுரருடையசக்தியானது சித்தெனவும் அசித்தெனவும் இரண்டுபிரகாரங்களாகும் சித்துசக்தியினுடையபுரூஸ்தானத்திலிருந்து உண்டானவர் (௨௩௩) சாக்தபிராமணர்களாவார்கள். இவர்கள்குங்குமத்தினால்திருபுண்டிரமும் ரக்தவஸ்திரத்தினாலும் ரக்தபுஷ்பத்தினாலும் அலங்காரம் செய்துகொண்டு (௨௩௪) பூரணாபிஷிக்தர்களாய் சக்தியை உபாஸித்தல்

வேண்டும், சித்தசித்பேதத்துள்ளசித்சக்தி இச்சைஞானம்கிரியை என மூன்றுபிரிவினதாகும் (உஉரு) இச்சாசக்தியின் பாதநூபுரசப்தத்தில் நின்றுருத்ரகணிகை உண்டானுள் கிரியாசக்தி நூபுரசப்தத்தினின்று (உருகூ) ருத்திரகன்னிகை உண்டானுள் ஞானசக்தியின் நூபுரசப்தத்தில் ருத்திரதாஸி யுண்டானுள் இந்த மூன்று பேர்களும் சுபகரமான லக்ஷணத்தோடு கூடியிருத்தல் வேண்டும் (உருஎ) இவர்கள் வண்டின் நிறம் போன்ற மயிரோடு கூடியவர்களாய் சிரஸு சமவிருத்தமாயும் அஷ்டமிசந்திர சமானமாய் நெற்றியில் சூர்ணகுந்தலத்தோடு கூடியவளாயும் (உருஅ) மன்மதன் வில்லைப்போல் புருவமுடையவளாயும் நீலோத்பலம்போன்றகண்ணையுடையவளாயும் சம்பகபுஷ்பம்போல் மூக்கையுடையவளாயும் கண்ணாடிபோல் கண்டஸ்தலத்தையுடையவளாயும் (உருகூ) கர்ணரந்திரமுடையவளாயும் பவழம் போன்ற அதரங்களை உடையவளாயும், முல்லைப்பூபோன்ற தந்தங்களையுடையவளாயும் சங்கம்போல் கழுத்தையுடையவளாயும் (௨௪0) கற்பகவல்லிக்குச்சமானமான புஜமும், செந்தாமரை புஷ்பத்திற்கு ச்சமானமான உள்ளங்கையும் கிளிமூக்குப்போல் மூக்கும், சமனுயுள்ள நகமும், சக்ரவாகம்போல் ஸ்தனமும் (உசக) மூன்றுவலைமுடையவயறும் பள்ளமானதொப்புளும், மனோஹரமாய் அக்கிநிகுண்டத்திர்குச்சமானமான ஜகனஸ்தலமும் (உசஉ) இல்லை யென்னும்படியான இடுப்பும், நிதம்பத்தால் சோதிக்கப்பட்டதாய் ரம்பாகிருதியாய் மகுடாகிருதியான முளந்தாளும் (உசங) சரபிம்பம்போல்ஜங்கைபிரகாசமுடையதும் துஜச்சக்கிரம்போல்இரண்டுபாதமுடைய இதுகளினுலேரஞ்சிதமானபதங்கள், புளகாங்கிதசரீரம் (உசச) மின்னலைகாட்டிலும் அதிகமான காந்தியை யுடையவளும் நல்லவாசனையோடு கூடிய சுவாசமுடையவளும் மயில்போன்ற சப்தத்தை யுடையவளும், ஸ்வச்சமான சித்தத்தையுடையவளும், சர்வாபரண பூஷிதியாய் (உசரு) சக்தியிடத்தில் பக்தியுடையவளாய் எல்லாலக்ஷணங்களோடும் கூடியவளாயிருத்தல் வேண்டும் (உசகூ) இவள் மஹாமண்டபம் முதல் கற்பாவரணம் பிராகாரம்வரை பெருக்குதலும், மெழுகுதலும், பஞ்சசூர்ணங்களினுலே (உசஎ) அலங்காரம்செய்து சுத்தமாயிருந்து தீபாராதனைகாலத்தில் சுத்தநிர்த்தம்செய்து முப்பத்தெட்டுகலைபேரடும் கூடிய (உசஅ) சக்தியோடுசேர்ந்த சத்யோஜாதமுதலி

ரும்பஞ்சக மந்திரயில் சித்சக்திமத்தான பூர்ணகும்ப ஈசான கலை யோடும் கூடிய (௨௪௬) தீபத்தைருத்ரகணிகையின் ஹஸ்தத்தை சிவஹஸ்தம் ஆக்கி இவள்கையில் இந்த தீபத்தைக்கொடுத்து அந்த க்ஷேத்திரத்தில் கூறியமார்க்கத்தால் (௨௫0) ஸ்தோத்ரகானங் களை செய்யும்படிசெய்து ஆச்சார்யர் பரான்முகார்க்கியத்தால் விஸர்ஜனம் செய்து இந்ததீபம் சக்திசத்தன்போல் அபிந்நாத்மகசக் திஸ்வரூபமாய் சொல்லப்படும் (௨௫௧) இது தீபாராதனையென்ப தாம். சக்திகலையாயிருப்பதால் கலை அருபத்தி நாலு, முப்பத்தெ ட்டு, பதினொன்ற மூன்று பேதங்களாகும். (௨௫௨) உபசாரங்களு ம் கலாபேதமெனச் சொல்லப்படும் (௨௫௩) தீபாராதனையின் முடி வில் எல்லா தீபங்களையும் பூர்ண கும்பத்தில் லயிப்பிக்கவேண்டும், இந்த பூர்ணகும்பம் எல்லாதீபங்களுக்கும் இருப்பிடமாகும்(௨௫௪) சக்திஸ்வரூபமான ருத்ரகணிகை இரண்டுகரங்களினுலே லிங்கலய ம் செய்தல்வேண்டும் இல்லாவிட்டால் பூஜைநஷ்டத்தையடையும் (௨௫௫) ராஜராஷ்டிரம், நாசத்தை யடையும், பூஜா லோபமும் உ ண்டாகும் (௨௫௬) இந்த லக்ஷணத்தோடும் கூடிய ருத்ரகணிகை யின் கரத்திலே நின்று ஆச்சார்யரால் தீபங்களை விஸர்ஜனம் செய் தல்வேண்டும் (௨௫௭) இதன்பின் சுத்த நிர்த்தனத்தை ருத்ரகணி கை செய்தல்வேண்டும், நிர்த்தனம், சுத்தம், மிச்ரம் கேவலமென மூன்றுபேதங்களாகும் (௨௫௮) சிவஞானஸ்ரூபமாய் இருக்கிறகா ரணமாயும் சிவலிங்கத்திற்கு முன்னுல் உமாமஹேஸ்வராதி(௨௫௯) பேதங்களோடுகூடிய அபிநயங்களோடுநிர்த்தனம்செய்வதுசுத்தநி ர்த்தமென்பதாம் இத்துடன் புராணங்களோடுகூடிய நிர்த்தனம் மிச்சிரமெனக்கூறப்படும்(௨௬0)இத்துடன்லோகவிருத்தாந்தமான நிர்த்தனம் கேவலமெனச்சொல்லப்படும்ருத்ரகணிகைக்குசுத்தநிர் த்தம் சொல்லப்பட்டது(௨௬௧)ருத்ரகன்னிகைக்கு மிச்ரநிர்த்தமும் ருத்ரதாஸிக்கு கேவலநிர்த்தமும் சொல்லப்படும் இதில் கூறியபடி யே நித்யபூஜை உத்ஸவம் இவ்விரண்டுகளில் அந்தந்தகாலத்திற்கு தக்கபடி ருத்ரகன்னிகை நித்தியபூஜையின் முடிவிலும் (௨௬௨) ச யனலயம் போகும்பொழுதும் லயாங்கமான பாதுகாராதனத்திலு ம் அதனதில் சொல்லிய பிரகாரத்தினுல் நிர்த்தம் கானம் இவைக ளைச்செய்தல்வேண்டும் (௨௬௩) பிராம்மிமுகூர்த்தத்தில் ஸ்நானம் செய்து சயனலயத்திலே விதிவத்தாய்கைங்கர்யம் செய்து அந்த

சயனாலயத்திலுள்ள தீபத்தில் (௨௬௪) இனி ஒருதீபம் கொளுத்தி சுத்த சித்தத்தோடு கூடியவளாய் பரிசாரகரிடம் பாகசாலையில் கொடுத்தல்வேண்டும் இந்த ருத்திரகன்னிகை சுவர்ணத்தால் சஞ்ஜை அதாவது காலில் கட்டிக்கொள்ளுதல் வேண்டும் (௨௬௫) அல்லாவிடில் வெள்ளியினலாவது இரண்டுகால்களிலும் கட்டிக்கொள்ளுதல்வேண்டும் அந்தந்ததீபத்திற்கு சமானமானதாளத்தோடு சுத்தமிருதங்கம் (௨௬௬) வாசித்து நிர்த்தனம்செய்து ருத்ரகன்னிகை வெண்சாமரைவீசுதல்வேண்டும் இவள் ஊர்தவமுகமான சொருக்கைப்போடுதலும் வேண்டும் (௨௬௮) இடுப்பில் பீதாம்பரமணிந்து மடிசாறுபாய்ச்சிக்கொண்டு விபூதியால் திருபுண்டிரமிட்டு ருத்ராக்ஷம் ஆபரணம் இவைகளால் அலங்கருத்துக்கொண்டு (௨௬௯) பட்டுரவிக்கை தரித்து மேலாக்கில்லாமல் இருத்தல் வேண்டும் இப்படிக்குள்ள ருத்ரகன்னிகை எழுவயாதானவளை ஆச்சார்யர் அழைத்து (௨௭0) பாசநிவர்த்தியின்பொருட்டு சிவசந்நிதியில் சமயத்தாலும் விசேஷத்தாலும் நிர்வாணத்தாலும் எதாக்கிரமமாய் (௨௭௧) உள்ளபாஸம்ஸ்காரமாகிய சிவதீக்ஷையால் பாசமோசனம்செய்து பஞ்சாக்ஷரமுபதேசித்து சுவர்ணத்தில் (௨௭௨) லிங்கஅடையாளத்தோடு கூடியதாயும், இரண்டங்குல அளவையுடையதாயும் இப்படிக்குள்ள தாலியைஸ்தாபித்து (௨௭௩) லிங்கத்தின் ஆதாரபீடத்தில்வைத்து சலாஸனம் பூஜித்து அதன்மேல் உபயாஸனபூஜைசெய்து அதன்மேல்ஸ்திராஸனம்பூஜித்து(௨௭௪) பரமேசுவரரை ஆவாஹனாதிகளால் அர்ச்சித்து நைவேத்தியதூபதீபங்களைக் கொடுத்து சகலவாத்தியங்களோடு (௨௭௫) ஆலயங்களையும் கிருமங்களையும் பிரதக்ஷணம்செய்து ஸந்நிதியில் மஹாமண்டபநடுவில் பத்மமண்டலம்போட்டு (௨௭௬) ருத்ரகன்னிகையை வடக்குமுகமாய் உட்காரவைத்து அவள் கழுத்தில் சுபதினத்தில் முன் பூஜித்துள்ளபொட்டைகட்டுதல்வேண்டும் (௨௭௭) இப்படிப் பொட்டுக்கட்டியஆசார்யரை தனக்கு பர்த்தாவாய் எப்பொழுதும் பாவித்து விசுவாஸம்வைத்து குருவின் ஆக்ஞையை தள்ளுதல் கூடாது (௨௭௮) இந்தப்பிரகாரம் ருத்ரகணிகை வயதிற்கு அதிகமானவளாயிருந்தால் பொட்டுக்கட்டுதல்கூடாது. மோகத்தால் கட்டுவாராயின் (௨௭௯) ரா பீடையும் ராஜ்யநாசமும் பஞ்சமும் மரணமும் உண்டாகும்; பிரதிதினத்திலும் பரமேசுவரனு

மாவாஹிப்பதெதுவோ அதை கேவலமெனவுங் கூறப்படும் (௭௫) சுத்தஞ்சிவாலயத்திற்செய்பத்க்கதும் மிச்சிரம் பிறருகார்யங்களில் செய்யத்தக்கதும் (௭௬) கேவலம் அந்தியேஷ்டியில் செய்யத்தக்கதுமாம். இதினால்நித்யம்நைமித்திகம் காம்யமிவைகளில் சுத்த புண்ணியாஹவாச்சனஞ்செய்தல்வேண்டும். (௭௭) இதற்குவிரோதமாகச்செய்வாருகில் இராஜ்யம்க்ஷோபத்தையடையும் இதினால்புண்ணியாஹவாச்சனம் விதியில்கூறியபடியே செய்தல்வேண்டும். (௭௮) எல்லாதிரவியங்களிலும் புண்ணியாகவாசனஜலத்தால் புரோக்ஷித்து சுத்தீகரித்து (௭௯) சாமான்யார்க்கியத்தால் புரோக்ஷித்து நிரீக்ஷணாதி ஐந்து சுத்திகளுஞ்செய்து தங்கத்தாம்பாளத்தின்பின் புரத்தில் (௮௦) கீழேபரத்தியுள்ளதான்யம் முதல் பத்மமண்டலம்வரை பூஜித்தல் வேண்டும் இந்த பூஜாவிதானம் மூன்றுபேதம் (௮௧) ஸசகதிகமெனவும் விசக்திகமெனவுங் கேவலமெனவும் மூன்றுபிரகாரம் தியானத்தோடு பூஜிப்பது ஸசக்திகமெனவும் தியானமல்லாது பூஜிப்பதுவிசக்திகமெனவும் (௮௨) ஆஸனம்மூர்த்தி மூலமல்லாமல் கேவலம் மூலத்தால்பூஜிப்பதுகேவலமெனக்கூறப்படும் ஆஸனமூர்த்திமூலதியானத்தோடு (௮௩) ஆவாஹனகாலத்தில் பூஜிபபதும் திரிவிய பூஜைக்கு தியானம்மூலம்இவைகளினால் பூஜிகதல் வேண்டும் (௮௪) அனுவர்த்தபிரதிஷ்டைமுதல் புனராவர்த்தனம் வரையில் (௮௫) ஸசக்திகமாகவே பூஜித்தல்வேண்டும் (௮௬) உத்ஸவம் முதல் பிராயச்சித்த மிறுதியாகவிசக்திகமாய் பூஜித்தல் வேண்டும் (௮௭) சிவதீக்ஷை அந்தியேஷ்டிமுதலியவைளில் நாமாந்தமாய் பூஜித்தல்வேண்டும் இனனங்கூறியபடிசெய்தல் வேண்டும். இதற்கு விரோதமாய்ச்செய்வாராகில் ராஜ்யநாசமுண்டாகும் (௮௮) நெல்லில் மாயாதத்வத்தை பூஜித்தலும் அரிசியில் கணேசனரையும் எள்ளில் லகுளீசுவரரையும் (௮௯) கோதுமையில் ஸ்ரீதேவியையும் உளுந்தில் விஷ்ணுவையும் கடலையில் வருணனையும் மூங்கலரிசியில் லக்ஷ்மியையும் (௯௦) மிருடானியை துவரையிலும் மொச்சையில் கிரகங்களையும் கடுகில் மாதாவையும் யவையில் நக்ஷத்திரத்தையும் (௯௧) கொள்ளில் அமிருதத்தையும் சிம்பத்தில் கணத்தையும் பாசிப்பயற்றில் சந்திரனையும் பூஜித்து நைவேத்யதூபதீபஞ்செய்து (௯௨) தனபாத்திரத்தின்கீழ்பிரதேசத்தில்ஆத்மதத்வத்தை பூஜித்தல்வேண்டும் நான்குசிரமுள்ளதும் நான்குகைகளுடையதும் சதுரச்சிராகிருதியாய்தாமரைப்பூவின் மேலிருப்பதாய்(௯௩) ஓட்டவிட்டதங்கம்போல் நிறமுள்ளதாய் ஆத்மதத்வத்தை

தியானித்து நைவேத்யாதிகள்செய்து(௯௪) ஆத்மதத்வாதிபரான பிரும்மாவை பூஜிக்க நான்குமுகமுமுன்னான்குகையும் பொற்கொண்டவர்ணமும் (௯௫) ஸிருக்குதண்டம் அக்ஷமாலைதர்ப்பை இவைகளை கய்யிலுடையவராய் ஹம்ஸத்தின்மேலிருப்பவராய்தியானித்து நைவேத்தியதூபதீபங்கொடுத்து (௯௬) மத்யதேசத்திலும்ஹாம் வித்யாதத்வாயநமவெனப்பூஜித்து நீலவர்ணமாயும் எண்கோணமாயும் எட்டுகைகளையுடையதாயும் (௯௭) சக்கிரம்பாணம் தாமரைப்பூ சின்முத்திரைசங்கம் வில்லுகுண்டிகைஅபயம் இவைகளைவலமிடக்கைகளிலுடையதாய் (௯௮) ஒருமுகமும்சாந்தமானமுகமுமாய் வித்யாதத்வத்தை தியானித்து நைவேத்தியதூபதீபங்கொடுத்து (௯௯) தத்வாதிபரான விஷ்ணுவைபூஜிக்க (௧௦௦) நீலவர்ணமும் நான்குகைகளும் சங்குசக்ரங்களை யோடுகூடியவராய்ஒருமுகம் இரண்டுபாதம் வரதஹஸ்தமுடையவராய் (௧௦௧) தியானித்து நைவேத்தியதூபதீபங்கொடுத்து தனபாத்திரத்தின் நுனியில் சிவதத்வத்தைப்பூஜிக்க (௧௦௨) ஸ்படிகவர்ணமாயும் விருத்தாகாரமாயும் எல்லாப்பொருள்களையும் தம்முள்ளடக்கியுள்ளதாயும் ஐந்து தலையோடுகூடியதாயும் ஜடையுடையதாயும் (௧௦௩) பத்துக்கை அபயம் பத்மம் அக்ஷமாலை சூலமங்குசம் இவைகளை வலக்கைகளிலுடையதாய் (௧௦௪) சக்தி மான் வரதம் ஸிருக்குகமண்டலம் இவைகளை இடக்கையிலுடையதாய் எல்லாலக்ஷணங்களோடுகூடியதாயும் எல்லா புஷ்பமாலைகளையணிந்ததாயுமுள்ள (௧௦௫) அழிவற்றசிவதத்வத்தை தியானித்து தத்வாதிபரைபூஜிக்க (௧௦௬) ஓம் ஹாம்ருத்திராயநம: என தத்வாதிபரை பூஜித்து மூன்று தலையும் ஆறுகைகளும் கருத்தகழுத்தும் அக்னிசிகையும் (௧௦௭) அபயம் அக்ஷமாலை சூலம்இவைகள்வலதுகைகளிலுடையதாயும் வரதம் மான்டங்கம் இவைகள்இடதுகைகளிலுடையதாயும் எல்லாலக்ஷணங்களோடுகூடியவராய் யஜ்ஞோபவீதந்தரித்தவராய் (௧௦௮) ஒவ்வொரு முகத்திலும்மூன்றுகண்களோடுகூடியதாய்வியாக்ரத்தோலுருத்திராக்கந்தரித்தவராய் தியானித்துநைவேத்தியதூபதீபங்கொடுத்து(௧௦௯)தனபாத்திரத்திற்குமேல்சலாஸனத்தைபூஜிக்கஆதாரசக்திமுதல்பத்மாஸனம்வரை பூஜிப்பது சலாஸனமும் (௧௧௦)விமலாஸனமுபயாஸனமும் சிவாஸனமஸ்திராஸனமுமாகும் சிவபெருமானுக்கன்யமான தேவர்களுக்கு அந்தந்த தேவதா நாமங்களால் ஆஸனங் கற்பித்தல் அதினதற்கு ஸ்திராஸனமாகும் (௧௧௧)

ஆஸனம் நிராதாரமெனவும் ஆதாரமெனவும் இரண்டு பிரிவாம்.
சித்சக்திமத்தாயுள்ளது நிராதாரமும் (௧௧௨) அனந்தாஸநமு
தல் விமலாஸநம்வரை ஆதாராஸநமெனவுங்கூறப்படும் நிராதாரா
ஸனம் சிதாகாசமும் ஆதாராஸனம் ஜடாகாசமுமாய்முடியப்பெரு
ம் (௧௧௩) இந்தாதனங்கள் ஆதேயம் இவைகள் பிரதிவிமுதல் ஆகா
சம்வரையுள்ளது பிரதிவி அநந்தாஸநமும் அப்புஸிம்மாஸநமும்
(௧௧௪) யோகாஸநமக்னியும் பத்மாஸநம்வாயுவும் விமலாஸநமாகா
சமுமாய்க்கூறப்படும் (௧௧௫) இதற்குமேலும் சிதாகாசமும் இதற்
குமேல் சிவாஸனமுமாயிருத்தலின் இந்த ஆஸநபஸ்திராஸ்னமென
வும் இதைச்சேர்த்து ஆஸநம் ஆறெனவுங்கூறப்படும். (௧௧௬) சிதா
காசமும் சிவபெருமானும் பிரிக்கமுடியாச்சக்தியுடையது இதினல்
இந்த திரிவ்யபூஜைக்கு சலாஸனம் பூஜித்தல்வேண்டும் (௧௧௭) தி
யானத்தோடு பூஜிப்பது விசேஷமாகும் தியானம் ஸமுஷ்டி வியஷ்
டி என இரண்டுபிரகாரமாம் (௧௧௮) எல்லா தேவர்களையும் பூஜை
முடிவில் சேர்ந்தாப்போல் தியானிப்பது ஸமுஷ்
டியும் ஒவ்வொரு தேவரையும் தனித்தனி தியானிப்பது வியஷ்டி
யுமாகும் (௧௧௯) பிரதிஷ்டை முதலிய கிரியாகாலங்களில் வியஷ்டி
அதாவது தனித்தனி தியானித்தலும் அன்யகாலங்களில் ஸமுஷ்
டியாய் தியானிப்பது தோஷமாகாது (௧௨௦) திருவ்யபாத்திரத்தி
ற்குமேல் ஆதாரசக்தியை பூஜித்து கீழுள்ள கூர்மைசிலைக்கு பால்
போன்ற வெளுப்புவர்ணமுடையதாய் (௧௨௧) பீஜாங்குரம்போல்
கிரீடமும் வரத அபய கைகளும் ஒருதலையும் மூன்றுகண்களும்
மற்ற நான்கு கைகளில் தாமரைப்பூ நீலோத்பலம் (௧௨௨) பாசம்
அங்குசம் இவைகளை தரித்த கிரியாசக்தி ரூபமான ஆதாரசக்தி
யை தியானிக்க. இதற்குமேல் கூர்மாசனத்தை பூஜித்து இதற்கு
நடுவில் பங்கஜத்தை பூஜிக்க (௧௨௩) பிருதிவிகந்தமாகவும் கால
தண்டாகவும் பாவித்து முள்ளுடன் கூடியதாய் க்லுப்தமாயாஸ்வ
ரூபமான மகா பத்மத்தை அநேகதளங்களோடு கூடியதாய் தியா
னித்து (௧௨௪) எட்டு தளங்களில் தாரிகாதி எட்டு சக்திகளை கிர
மமாய் பூஜிக்க இந்த சிதாகாச ஸ்வரூபமான சக்திகள் எல்லாத்தி
ற்கும் ஆதாரமான சக்திகளாகும் (௧௨௫) பஞ்சாஸனங்கள் இதன்
மேல்வைக்கப்பட்ட ஆதேயங்களாம் பஞ்சாஸனத்திற்கு மேலும்
சித்தாஸனம் பூஜித்து அதற்குமேல் சிவாஸனம் பூஜித்தலும்வேண்
டும் (௧௨௬) இதனால் தாரிகாதி சக்தி ஆஸனம் இதற்கு திக்குக்க
ளிலும் (௧௨௭) விதிக்குக்களிலும் பூஜிப்பது சித்ஸ்வரூபமென கூற

ப்படும் கேவலம் மூலத்தால் தாறிகாதி சக்திகளை பூஜித்தல்வேண்டும் (௧௨௮) கிழக்கில் தாறிகையும் அக்கினிதிக்கில் தீபிகையும் தெற்கில்உக்ரையையும் நிருதியில்ஜ்யோத்ஸனுத்சக்தியையும் (௧௨௯) மேற்கில் சேதனையையும், வாயுவில் பலோத்கடையையும், வடக்கில் தாத்ரியையும், ஈசானத்தில்வியவியையும்பூஜித்தல்வேண்டும் (௧௩௦) அனந்தாஸனத்தை இதற்குமேல் பூஜித்து (௧௩௧) அனந்தனை மிச்ரவர்ணமாயும் பதுதலையும் இரண்டுகை அஞ்சலியோடு கூடியதாய் மற்றஇரண்டுகைகள் சூலம் பரசுதறித்ததாய் (௧௩௨) மேற்குதிக்கில் தக்ஷகனை பார்த்திருப்பதாய் சிரசுக்குகீழ் புருஷாகிருதியாய் எல்லா ஆபரணங்களையும் அணிந்ததாய் தியானிக்க (௧௩௩) தக்ஷிணதிக்கில்வாசுகியை அந்ததியானத்தோடுபூஜிக்க வாசுகி சங்கவர்ணமாயும் ஏழுதலையும் (௧௩௪) நான்குகைகளுள் இரண்டுகை அஞ்சலியும் இரண்டுகையில்பத்மமும் இரண்டுநேத்திரமும் (௧௩௫) வடக்கிலுள்ள கார்கோடனைப்பார்த்திருப்பதாய் சிரஸுக்குகீழ்புருஷாகிருதியாய் எல்லா ஆபறணங்களையும்அணிந்திருப்பதாய் (௧௩௬) தியானித்து மேற்குதிக்கில் தக்ஷகனை பூஜிக்க தக்ஷகன் இந்திரநீலவர்ணமாயும் ஐந்துதலையும (௧௩௭) நான்குகையும் இரண்டு அஞ்சலியும் பாசாங்குசத்தோடுகூடியதாய் மூன்றுகண்களும் (௧௩௮) கிழக்குதிக்கிலிருக்கிற அனந்தனை பார்த்துக்கொண்டிருப்பதாய் சிரசுக்குக்கீழ் புருஷாகிருதியாய்தியானிக்க (௧௩௯) வடக்கில்கார்கோடகனை பூஜிக்க கார்கோடகன் புகைவர்ணமாயும் எட்டுதலையும் (௧௪௦) இரண்டுகை சிரஸுக்குமேல் அஞ்சலியும் இரண்டுகை கத்திசூலமுடையதாய் தெற்குதிக்கை நோக்கியிருப்பதாய் ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்களுடையதாய் (௧௪௧) வாசுகியை பார்த்துக்கொண்டிருப்பதாய் எல்லா ஆபறணங்களையும் அணிந்ததாய்தியானிக்க ஆக்னிதிக்கில் சங்கபாலனைபூஜிக்க (௧௪௨) சங்கபாலன்வெளுப்புவர்ணமாயும் ஐந்துசிரஸ்படத்துடன் கூடியதாய் நான்குகை இரண்டுகை அஞ்சலிஹஸ்தம் பாசம் உஜ்வலமிரண்டுகை (௧௪௩) வாயுதிக்கைநோக்கியிருப்பதாய் பத்மனைபார்த்துக்கொண்டிருப்பதாய் தியானிக்க இதன் பின் நிருதிதிக்கில் குளிகனை பூஜித்தல்வேண்டும (௧௪௪) குளிகன் ஸ்யாமளவர்ணம் நான்கு சிரஸும் அஞ்சலிஹஸ்தம் இரண்டுகையில் நீலோத்பலமும் (௧௪௫) ஈசானதிக்கைப்பார்த்துக் கொண்டிருப்பதாய் மஹாபத்மனைபார்க்குமுகமாய் தியானிக்க வாயுதிக்கில்பத்மனை பூஜிக்க (௧௪௬) பத்மன் ரக்தவர்ணமாயும் ஐந்து சிரஸும் நான்குகைகளும்

அஞ்சலி அக்ஷமாலை குண்டிகை இவைகளுடன் கூடியதாய் (௧௪௬) அக்னி திக்கிலிருக்கிற சங்கபாலனைப்பார்த்துக் கொண்டிருப்பதாய் தியானிக்க இதின்பின் ஈசான திக்கில் மஹாபத்மனை பூஜித்தல்வேண்டும் (௧௪௭) காக்காப்பொன்னிரமாயும் ஆயிறந்தலைநான்குகை ஹிருதயததிலஞ்சலி (௧௪௮) குடாரம்டங்கந்தரித்து நிருதியிலுள்ள குளிகனைபார்த்தமுகமாய் சிரஸிற்க்குக்கீழ் புருஷாகிருதியாய் (௧௪௯) தியானித்துஇதற்கு நடுவில் அனந்தாஸனாயநமஃ எனப் பூஜித்து அனந்தாஸனம் ஹரிதாளவர்ணமாய் (௧௫௦) அனந்தன் முதல்மஹாபத்மம்வரை விளங்காநின்றதிக்கு விதிக்குக்களோடு கூடியதாய் அமேயமான விஸ்தாரமுபாமுடையதாய் மாதத்வத்திற்கு மேலிருப்பதாய் (௧௫௧) சதுரசிரமாவது வீருத்தமாகயாவது உள்ளஸ்தானமாக தியானிக்க அனந்தாஸநத்திற்குமேல் சிம்ஹாஸநம் பூஜித்தல்வேண்டும் (௧௫௨) அக்னிதிக்குமுதல் ஈசானம்வரை அக்னிதிக்கில் தர்ம்மாய நமஃஎனப்பூஜித்து (௧௫௩) தர்ம்மம் வஜ்ரடபிரகாசமும் சிம்மமுகம் அஞ்சலிஹஸ்தம் பெரிஙகுற்றுப்பல் காளமுகம் தொங்குகிறமயிர் (௧௫௪) ஞானத்தைப்பார்த்தமுகம் உயரநிமிர்ந்துள்ளலால் இவ்வாருள்ளதாய் தியானித்து நிருதிதிக்கில் ஞானத்தைபூஜிக்க (௧௫௫) ஞானம் டவளவர்ணம் இரண்டுகைசிம்மமுகம் அஞ்சலிஹஸ்தம் தொங்குகிரமயிர் (௧௫௬) யெகுற்றுபல் கருளமுகம் உயர்ந்துதொங்குகிறவால் தர்மததை பார்த்தமுகம் இவ்வாறு ஞானஸ்வரூபத்தை பாவித்தல்வேண்டும் (௧௫௭) இதன் பின் வாயுதிக்கில் வைராக்யத்தை பூகித்தல்வேண்டும், வைராக்கியம்வைடூரியவர்ணமாயும்சிம்மமுகம் அஞ்சலி (௧௫௮) ஐஸ்வர்யத்தைபார்த்தமுகம்தொங்குகிறமயிர்யெகிற்றுப்பல் கருளமுகம் உயர்ந்தவால் இவ்வாறு தியானிக்க (௧௫௯) ஈசான திக்கில் ஐசுவர்யத்தை பூஜித்தல்வேண்டும் ஐசுவர்யம் முத்தின்வர்ணமுடையதாயும்சிமமமுகம் அஞ்சலிஹஸ்தம் (௧௬௦) வைராக்யத்தைப்பார்த்த முகம் தொங்குகிரமயிர் நீண்டபல் காளமுகம் உயர்ந்து தொங்குகிரவால் இவ்வாறு தியானித்து (௧௬௧) கிழக்குமுதல் வடக்குவரை கிழக்கில் அதர்ம்மத்தை பூஜிக்க (௧௬௨) அதர்ம்மமிந்திர நீலவர்ணம் சிம்மமுகம் அஞ்சலிஹஸ்தம் தொங்குகிரமயிர் காளமுகம்வால் (௧௬௩) தர்ம்மத்தைப்பார்த்தமுகம் இரண்டுபாதம் இவ்வாறுள்ளதாய்தியானித்து தக்ஷிண திக்கில் அஞ்ஞானத்தை பூஜித்தல்வேண்டும் (௧௬௪) அஞானம் புஷ்பராகவர்ணமாயும் சிம்

முகமாயும் அஞ்சலிஹஸ்தமாயும் தொங்குகிறமயிரோடு கூடியதாயும் (கசுரு) ஞானத்தைபார்த்தமுகமாயும் பயங்கரமான பல்வரிசையுடையதாயும் தியானிக்க மேற்குதிக்கில் அவைராக்யத்தை பூஜித்தல்வேண்டும(கசுசு) * அவைராக்யம் நீலவர்ணம்சிம்மமுகம் அஞ்சலிஹஸ்தம் தொங்குகிறமயிர் பயங்கரமானமுகம் வைராக்யத்தைபார்த்திருப்பதாய் தியானிக்க (கசுஎ) இதற்கு பின் வடக்குதிக்கில் அநைஸ்வர்யத்தை பூஜித்தல்வேண்டும் அநைஸ்வர்யம் கிருஷ்ணப்ரகவர்ணமாயும் சிம்மமுகமும் (கஎ0) சிரஸுக்குமேல் அஞ்சலிஹஸ்தமும் பயங்கரமான முகமும் பல்லும் ஐஸ்வர்யத்தைபார்த்தபார்வையும் எல்லா ஆபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டதாய் தியானித்தல்வேண்டும் (கஎக) தெற்குவடக்கு நடுவில் ராஜஸம்தாமஸம ஸாத்விகம் இவைகளை தியானத்தோடு பூஜித்தல்வேண்டும் (கஎஉ) ராஜஸம்பச்சவர்ணமாயும்இரண்டுதலையும் நான்குகைகளும் ஒவ்வொரு முகத்தில் மூன்றுகண்கள் உடையதாய் கரண்டமகுடத்தோடு கூடியதாய் (கஎங) அஞ்சலிஹஸ்தமுடையதாய் பாசம் அங்குசம் கையிலுடையதாய் பக்ஷிரூபமுகமும் சிரஸுக்குக்கீழ் புருஷாகிருதியாய் (கஎச) எல்லா ஆபரணங்களும்தரித்துள்ளதாய் பாம்புபோல் பார்வையுடையதாய் தியானித்தல்வேண்டும் வடக்குதிக்கில் தாமஸத்தை பூஜிக்க (கஎரு) தாமஸம்கிருஷ்ணவர்ணமாயும் இரண்டுதலையும் நான்குகையும் ஜடாசூடமும் மூர்த்தாவில் அஞ்சலிஅஸ்தமும் (கஎசு) பக்ஷியின் முகமும் ஒவ்வொரு முகத்தில் மூன்றுகண்களும் சத்தி தடி இவ்விரண்டையும் கையிலுடையதாய்லேலிகானபார்வையும்உடையதாய் (கஎஎ) தியானித்தல்வேண்டும் இவ்விரண்டுக்கும் நடுவில் சாத்விகத்தைபூஜிக்க சாத்விகம் வெண்மைவர்ணமாயும் பக்ஷிமுகம்போலும் (கஎஅ) அஞ்சலிஅஸ்தமாயும்நான்குகையும்வஜ்ஜிரம் சக்தி இவைகளை கையிலுடையதாய் பாம்பின் பார்வைபோல் பார்வையுடையதாய் சாத்விகத்தைபாவித்தல்வேண்டும் (கஎசு) இதற்குநடுவில்சிம்மாஸனத்தைபூஜிக்கசிம்மாஸனம்ரத்னவர்ணமாயும்வைடூரியம் முதலியவற்றால் விளங்கப்பெற்று (கஅ0) தர்மம் அதர்மம் ராஜஸம்முதலியவற்றால் சூழப்பெற்றுள்ளது,இதற்குமேல் யோகாஸனம்பூஜிக்க (கஅக) அதர்மத்துக்குமேல் கிழக்குதிக்கில் கிருதயுகத்தை பூஜிக்க கிருதயுகம் ரக்தவர்ணம் ஒருமுகம் இரண்டுகை (கஅஉ) அஞ்சலி அஸ்தம் பிரஸன்னமானமுகம் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டிருப்

பதாய்பத்மாஸனத்தின்மேல்இருப்பதாய்தியானிக்க(கஅங) தக்ஷி
ணதிக்கில் த்ரேதாயுகத்தை பூஜிக்க த்ரேதாயுகம் வெளுப்புநிற
மாயும் ஒருமுகமும் (கஅச)பிரஸன்னமாய்அஞ்சலிஅஸ்தத்தோடு
கூடியதாய் பத்மாஸனத்தின்மேலிருப்பதாய் ஒன்றையொன்றுபார்
த்துக்கொண்டிருப்பதாய் தியானித்தல்வேண்டும் (கஅரு) மேற்கு
திக்கில் த்வாபரயுகத்தைபூஜிக்க த்வாபரம்பலவர்ணமாயும் மூன்று
கண்களும் ஒருதலையும் (கஅசா) அஞ்சலிஹஸ்தமுடையதாய்ஒன்
றையொன்று பார்த்துக்கொண்டிருப்பதாய் தியானிக்க வடக்குதி
க்கில் கலியுகத்தை பூஜிக்கவேண்டும் (கஅஎ) கலி கறுப்புவர்ண
மாயும் உக்ரமாயும் மூன்றுகண்களும் ஒருதலையும் இரண்டுகைக
ளும் அஞ்சலிஅஸ்தமும் பத்மாஸனத்தின்மேலிருப்பதாய் தியா
னிக்க (கஅஅ) ஈசானதிக்குக்கும் கிழக்குதிக்குக்கும் நடுவில் அவ்
யக்தத்தைபூஜிக்க அவ்யக்தம் ஸ்படிகவர்ணமாயும் ஒருதலையும் அ
ஞ்சலிஅஸ்தமாய் (கஅகூ) பிரஸன்னமானமுகமும் காதிற் குண்ட
லமும் பாம்பின் யஞ்ஞோபவீதமும் ஜடாமகுடத்தோடுகூடியதா
ய் தியானிக்க (ககூ0) தெற்குதிக்கிற்கும் அக்னிதிக்கிற்கும்
நடுவில் நியதிநிஷ்கலத்தை பூஜித்தல்வேண்டும் நியதிநிஷ்கலம்
வெளுப்புவர்ணமாயும் ஒருசிரசு மூன்று கண்கள் (ககூக) அ
ஞ்சலி அஸ்தம் நாகயஞ்ஞோபவீதம் சுபாஸனத்திலிருக்கை இ
வ்வாறு நியதி நிஷ்கலத்தை நினைத்தல் வேண்டும் (ககூஉ)
நிருதிக்கும்மேற்கிற்கும்நடுவில் காலாயநம: என பூஜித்துகாலம்
மாதளம்பூவர்ணமாயும் இரண்டுகைஒருமுகம் (ககூங) பிரஸந்நமா
னமுகம் அஞ்சலிஹஸ்தமாய் உட்கார்ந்திருப்பதாய் மூன்றுகண்
ணுடையதாய் கட்டப்பட்டமயிருடையதாய் சுகமான ஆசனத்தி
லிருப்பதாய் தியானிக்க (ககூச) வாயுவிற்கும் வடக்கிற்கும் நடுவி
ல் கலாயெநம: எனப்பூஜித்து கலைபேதமுடையமைநிறம் போ
லும் மூன்றுகண் ஒருமுகம் (ககூரு) அஞ்சலிஹஸ்தம் சுபமானக
ல்பம்மனோஞ்யமாய்பிரஸன்னமானமுகம்பாம்புயஞ்ஞோபவீதம்எ
ல்லாஆபரணங்களோடு கூடியதாய்தியானிக்க (ககூசா) இதின்னடு
வில்யோகாஸனம் பூஜித்து யோகாஸனம் மனோஞ்ஞமாய் எண்
கோணமாய் (ககூஎ) யுகம்அவ்யக்தாதிகளாகி முக்யமானவைகளா
ல் சூழப்பெற்ற விசித்திரவர்ணமுடையதாய் தியானிக்க இதற்கு
மேல் பத்மாஸனபூஜைபுரிதல்வேண்டும் (ககூஅ) அதச்சதனாய ந
ம: என நிருதிதிக்கில்பூஜித்து அதச்சதனம் வெண்மையாயும்

பக்ஷிரூபத்தால்பிரகாசித்துவிளங்குவதாய்(கககூ)ஸ்திரீரூபமாயும் இரண்டுகாலுடையதாயும் ஒருதலைமூன்று கண்களோடுகூடியதாய்தியானிக்க ஈசானதிக்கில் ஊர்த்துவச்சதனாய நம: எனப்பூஜித்து (உ00) ஊர்த்துவச்சதனம்ரக்தவர்ணமாயும்ஒருமுகம்மூன்றுகண்பக்ஷியினுருவம்புருஷரூபமாய் பாவிக்க (உ0௧) இதற்குமேல் கந்தாயநம: எனபூஜிக்க கந்தம் மாணிக்கவர்ணமாயும் அமேயமானவிஸ்தாரமுடையதாயும் (உ0உ) பீஜம்முதலியவற்றிற்கு ஆதாரமுடையதாகவும்தியானிக்க. இதற்குமேல்பீஜாயநம:எனபூஜித்து (உ0௩) பீஜம் தங்கவர்ணமுடையதாகவும் கந்தத்திற்கு ஆதேயரூபமாயும் அங்குராம்முதலியவற்றிற்கு பீஜமாதாரமாயும்பாவிக்க. (உ0௪) இதற்குமேல் அங்குரத்தைபூஜித்து அங்குரஸ்வர்ணவர்ணமாயும் பீஜத்தின்மேலிருப்பதாயும் (உ0ரு) நாளம்முதலியவற்றிற்கு ஆதாரமாய் அங்குரத்தைதியானிக்க. இதற்குமேல்நாளத்தைபூஜித்து (உ0௬) நாளம்பச்சைவர்ணமாயும் உயரம்அகலம்ஸமமாயும் கண்டகம்முதலியவற்றிற்கு ஆதாரமுடையதாய் தியானிக்க (உ0௭) இதற்குமேல் கண்டகேப்யோ நம: எனபூத்துகண்டகம்ஸ்படிகவர்ணமாயும் தளமிதின்மேலிருப்பதாயும் (உ0அ) தளம் முதலியவற்றிற்கு இது ஆதாரமுடையதாய், தியானிக்கஇதற்குமேல் தளேப்யோநம: எனப்பூஜித்து (உ0௯) தளம்செகப்புவர்ணமாய்எட்டுதிக்கிலும் எட்டிதழோடுகூடியிருப்பதாய் கேஸரத்தோடுகூடியிருப்பதாய் நடுவில்கர்ணிகையுடையதாய் (உ௧0) கேஸரம்முதலியவற்றிற்குஆதாரரூபமாய்தியானிகக,இதறகுமேல்கேஸரேபயோநம; எனப்பூஜித்து (உ௧௧) கேஸரம்செகப்புவர்ணமாயும் தளத்தின்மேலிருப்பதாய் கர்ணிகைக்குஆதாரமாய்தியானிக்க (உ௧உ) இதற்குமேல்கர்ணிகாயைநம: எனபூஜித்து கர்ணிகைஸ்வர்ணமாயும் சக்தியாஸனத்தை தரித்திருப்பதாய் (உ௧௩) அனேகரத்னகாந்தியுடையதாய்தியானிக்க இதின்நடுவில பத்மாஸனாயநம: எனபூஜித்து (உ௧௪) கந்தம் பீஜம் அங்குரம் நாளம் கண்டகம் தளம் கேஸரம் இவைகளோடுகூடியதாய் கர்ணிகையாலலங்காரமுடையதாய் (உ௧ரு) உயரம்பதினைபிரம்பங்கு விஸ்தாரம் லக்ஷம்பங்குடையதாய் விசித்திரவர்ணமாய் தியானிக்க இவ்வாருசெவ்வையாகபாவிப்பது பத்மாஸனமென்பதாம் (உ௧௬) இதுவரை சலாஸனமெனக்கூரப்படும். கோஷ்டநடுவில் பிரணவம் கிழக்குமுகமாக எழுதி (உ௧௭)

நுணிநடுஇறுதி இவைகளில் மூன்று மூன் பாகஞ்செய்த திரவ்யத்
தைவைத்து நுணியில்மஹாதேவரை தியானத்தோடு பூஜிக்க (௨௧௮)
வெண்மைநிரமாகவும் ஒருதலைநான்குகைகள் மூன்றுகண் அக்ஷமாலை
பாசம் (௨௧௯) அஞ்சலி மகுடம் இவைகளோடு கூடியதாய் தியானி
த்து (௨௨0) ஆவாஹநஞ்செய்து நைவேத்தியஞ்செய்க நடுவில்
ஹரனை பூஜித்து (௨௨௧) ரத்னகாந்தியுடையவராய் ஒருமுகம் அக்ஷ
மாலை பாசம் அஞ்சலிஹஸ்தமுடையவராய் தியானித்து (௨௨௨)
நைவேத்ய தூபதீபங்கொடுத்து பிரணவாந்தத்தில் உருத்திரனை பூஜி
க்க (௨௨௩) உருத்திரனை பீதவர்ணமாயும் ஒருதலையும் பாசம் அக்ஷ
மாலை அஞ்சலிஹஸ்தமாய் (௨௨௪) தியானித்து ஆவாஹித்து நை
வேத்யதூபதீபங்கொடுத்து கிழக்குகோஷ்டத்தில் சங்கரனை பூஜிக்க
(௨௨௫) சங்கரன் ஸ்படிகவர்ணம் முக்கண் ஒருதலை அக்ஷமாலை பா
சம் (௨௨௬) அஞ்சலி புலித்தோலாஸனத்தின்மேலிருப்பவராய்
தியானித்து ஆவாஹனஞ்செய்து நைவேத்ய தூபதீபங்கொடுத்து
(௨௨௭) அக்னிகோஷ்டத்தில் நீலலோஹிதனை பூஜிக்க குங்குமவர்
ணம் ஒருமுகம் அக்ஷமாலைபாசம் (௨௨௮) அஞ்சலிஹஸ்தம் கரண்
டமகுடமுடையவராய் தியானித்து ஆவாஹித்து நைவேத்யதூபதீ
பங்கொடுத்து தெற்குகோஷ்டத்தில் ஈசனை பூஜிக்க (௨௨௯) ஒரு
முகம் மூன்றுகண் சங்கவர்ணம், அக்ஷமாலைபாசம் அஞ்சலிஹஸ்த
முடையவராய் தியானித்து (௨௩0) ஆவாஹித்து நைவேத்யதூபதீ
பங்கொடுத்து, நிருதிகோஷ்டத்தில் விஜயனை பூஜிக்க விஜயன் பு
கைவர்ணமாயும் ஒரு தலை மூன்றுகண் (௨௩௧) பாசம் அக்ஷமாலை
ஜடை அஞ்சலிஹஸ்தமுடையவராய் தியானித்து ஆவாஹித்து நை
வேத்யதூபதீபங்கொடுத்து மேற்குகோஷ்டத்தில் பீமனை பூஜிக்க
(௨௩௨) பீமன் வெண்மை நிரமாகவும் அஞ்சலிபாசம் அக்ஷமாலை
இவைகளோடு விபூதிஉருத்திராக்ஷமணிந்தவராய் (௨௩௩) தியானி
த்து நைவேத்யஞ்செய்து வாயுகோஷ்டத்தில் தேவதேவரை பூஜி
க்க தேவதேவர் பால்வர்ணமாயும் அஞ்சலி அக்ஷமாலைபாசம் (௨௩௪)
ஒருமுகம் மூன்றுகண் விபூதிஉருத்திராக்ஷாலங்கிருதராய் தியானி
த்து ஆவாஹித்து நைவேத்யதூபதீபங்கொடுத்து (௨௩௫) கபாலி
யை ஸௌம்யதேசத்தில் விதிப்படி பூஜித்து கபாலியை கிருஷ்ண
வர்ணமாயும் பாசம் அக்ஷமாலை உள்ளவரையும் (௨௩௬) ஒருமுக
ம் அஞ்சலிஹஸ்தம் கிரீடமகுட முடையவரையும் தியானித்து வி
சேஷமாக நைவேத்தியாதிகளை கொடுக்கவேணும் (௨௩௭) ஈசான

கோஷ்டத்திலீசானனை பூஜிக்க ஈசானம் இந்திர நீலவர்ணமாயும் ஒரு முகமும் அஞ்சலி (உ௲அ) பாசம் அக்ஷமாலை பஸ்மருத்திராக்கதாரியாய் தியானித்து ஆவாஹித்து நைவேத்ய தூபதீபங்கொடுத்து (உ௲௯) இந்தகோஷ்டத்திலேயே ஒன்பது ரத்னங்களை வைத்து வாமைமுதலிய ஒன்பது சக்திகளை பூஜித்து (உ௪௰) நைவேத்யதூபதீபங்கொடுத்து பூஜித்ததிரவியத்தை யாகத்தின்பொருட்டு இரண்டு பாகமும் (உ௪௧) அபிஷேகத்தின் பொருட்டொரு பாகமும் ஆச்சாரியரின் பொருட்டிரண்டு பாகமும் இருத்துக்களின் பொருட்டொருபாகமும் வேதாத்யயனத்தின் பொருட்டொருபாகமும் (உ௪௨) தானதக்ஷிணையின் பொருட்டொருபாகமும் உத்தம பிராம்மணபோஜனத்தின் பொருட்டொருபாகமும் பரிச்சாரக சில்பி (உ௪௩) மற்றுமெல்லா தாஸிதாஸர்களுக்கும் ஒரு பாகமும் யாகதிரவ்யம் ஒருபாகமும் இந்த பிரகாரம் திரவ்யவிநியோகஞ்செய்தல்வேண்டும் (உ௪௪) இவ்வாறு சிவார்ப்பணஞ்செய்யாதிருப்பாராயின் அவனுக்குச்சொந்த சொத்தாய் சிவபெருமானுக்குசொந்தமல்லாது போய்விடும். அவன்சொத்தால் சிவபுண்யஞ்செய்யப்புகுவாராயின் (உ௪௫) பரார்த்ததோஷமுண்டாய் சிவபுண்யம் நிஷ்பலத்தையடையும் இதினால்ஸர்வபிரயத்தினத்தினாலும்பிரதிஷ்டைக்கு முன் திரவ்யத்தை சிவார்ப்பணஞ்செய்தல் வேண்டும் (உ௪௬) இவ்வாறு கூரியகாமிகாகமம் பிரதிஷ்டாதந்திரக்கிரியாபாதம் தனபூஜை திரவ்யபாகவிதி என்கிற பெயரையுடைய ஏழாவதுபடலம் முற்றிற்றுபெற்றது ஸ்லோகம் (உ௪௪) ஆகஸ்லோகம்—௩௫௦௬.

திரவ்யஸம்ஸ்காரம் கூறப்படுகிறது

இதின்பின் திரவ்யஸம்ஸ்காரத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஸம்ஸ்காரமில்லாத யாதொரு திரவ்யமானது பூஜைமுதலியவைகளில் நீக்குதல்வேண்டும் (க) பிரதிஷ்டையின்பொருட்டு சேகரித்திருக்கும் எல்லா திரவ்யங்களையும் ஸம்ஸ்கரித்தல்வேண்டும் ஸர்வஸாதகர் ஆச்சார்யர் போதகர் (உ) ஸாதகர் மூர்த்தியின் இவர்களோடுகூட நல்ல முஹூர்த்தத்தில் ஸாமான்யவிசேஷமாகிய இரண்டு ஸந்திகளைச்செய்து புசிக்காது (௩) யஞ்யலதனங்களாலலங்கரித்துக்கொண்டு கைகால்களை அலம்பி சுத்திசெய்து ஆசமனஞ்செய்து (௪)மஹாமண்டபத்தில் ஈசானமந்திரத்தால் கூர்மாஸனத்திலாவது ஆஸனமாகவாவது வடக்குநோக்கி யுட்கார்

ந்து (ரு) அஸத்பாவத்தைப் போக்கத்தக்கஸகளீகாரணஞ்செய்தல் வேண்டும் ஸகளீகாரணஞ்செய்யாவிடில் அந்தகர்ம்மம் பயனற்றதாகும் (சு) ஆத்மாபசுரூபமாயிருத்தலால் கையும் பசுரூபமாகும் ஆத்மாஸதஸத்ரூபமும் சிவபெருமான்ஸத்ரூபமாயிருத்தலால்(எ) சிவபெருமானுக்கு ஸதஸத்ரூபமான ஆத்மாவிஜாதிகமாகும் விஜாதியால் ஐக்கமின்மையும் ஸஜாதியாலேய்க்கமுமுண்டாகும் (அ) நிமித்தமும்பாதானம் ஸமவாயமென இம்மூன்றும் எல்லாகார்யங்களுக்கும் காரணமெனக் கூறப்படும் (கூ) சிவகைங்கர்யமாகியகார்யங்களுக்கு ஆத்மாநிமித்தனும் உபாதானஞ்சரீரமும் கைகள் ஸமவாயகாரணங்களுமாகும் (க0) இந்த மூன்றுபேதங்களும் சிவாகாரமாய்கற்பித்தல் வேண்டும் அசிவமாயிருந்து செய்யுங்கார்யம் அமங்களமாய் முடியப்பெறும் (கக) ஆத்மாவை பூதசுத்தியால் சிவாகாரமாக்குதலும் அங்கன்யாஸத்தால் சரீரத்தைச் சிவாகாரமாக்குதலும் கரன்யாஸ்த்தால் கைகளேச் சிவாகாரமாக்குதலும் வேண்டும் (கஉ) இம்மூன்றும் சிவரூபமாகுதலால் ஆத்மாவுக்கு ஸதஸத்ரூபம் நீங்கி ஸத்ரூபமாகும். இவ்வாறு சிவத்வமடைந்து சிவபூஜை முதலியவைகளேச் செய்தல் எல்லாமங்களங்களேயுங் கொடுக்கும் (கங) இதினுல் ஸர்வபிரயத்தினங்களினாலும்ஸகளீகரணஞ்செய்தல் வேண்டும பசுபாவத்தைப் போக்கி பதிஞானமுண்டாதற்குக்காரணமான (கச) சிவாஸ்திரத்திலுண்டான சிவாக்னியில் பசுஸ்வரூபமான ஹஸ்தங்களே பொசிக்குதல்வேண்டும். சிவாஸ்திராயஹூம்பட் என கைத்தலத்தை (கரு) கீழும் மேலுங் கிரமமாய் இடது கை தொடங்கி மூன்று தடவை கட்டைவிரலேயும் அணி விரலேயுஞ் சேர்த்து (கசு) மற்றவிரல்களே நீட்டி கைகளே பொசிக்கியதாய் பாவித்தல்வேண்டும் சத்யோஜாதம் முதல் ஸத்யோஜாத ...

வெளஷடென புருவமத்யம்வரை அஞ்சலிசெய்க (கஎ) சந்திரமண்டலத்தில்அமிருதமிருப்பதாய்இந்த அமிருதத்தால்பொசிங்கிமிருதமானகைகள் திருப்பஉண்டானதாகப்பாவிக்க இவ்வாறு பசுபாவத்தை நீக்கல் பதிஸஜாதித்வமுண்டாகும்(கஅ) இனமுற்ற ஸத்பாவத்தைச் செய்து இந்தக்கையில் சுண்டிவிரல்முதல் நடுணிவிலுள்ள பர்வாக்களில் (அதாவது இரைகளில்) (ககூ) சிவாஸனம் சிவமூர்த்தி சிவமூலத்தை கட்டைவிரல் நுனியால் இரண்டுகைகளிலும் ஆவாஹித்து (உ0) ஈசானம் முதல் ஸத்யோஜாத பிருதிபமை

விரல்நுனிகளில் ஆவாஹித்தல்வேண்டும். கட்டைவிரல்நுனியில் தர்ச்சனிவிரல், (அதாவது ஆள்காட்டிவிரல்) நுனியில் ஈசானமூர்த்தாயநமஹ எனத்துடைத்து (௨௧) தர்ஜனிவிரல் முதல் கடைவிரலிறுதியாக கட்டைவிரல் நுனியால் துடைத்தல்வேண்டும். தர்ஜன்யக்கிரத்தில் தத்புருஷமந்திரத்தாலும் மத்யமாக்கிரத்தில் அகோரமந்திரத்தாலும் (௨௨) அனாமிகாக்கிரத்தில் வாமதேவமந்திரத்தாலும் கடைவிரலின் நுனியை ஸத்யோஜாத மந்திரத்தாலுன்யசித்து கடைவிரல் நடு இறையில் வித்யாதேஹத்தை கட்டைவிரல்நுனியில் நியஸித்து (௨௩) இந்த வித்யாதேஹம் ஞானமயமான சரீரமாய்ப்பாவித்து சிவமூலமந்திரத்தை நியஸித்து நேத்ரேப்யோநம: என (௨௪) நேத்திரமுத்திரைகொடுத்து இரண்டுஹஸ்தங்களிலும் சக்திவியாப்யமாயும் (௨௫) இந்தஸ்தானத்தில் சிவவ்வியாபகமாயும் எல்லா பர்வங்களிலும் சிவவியாபகம்பாவிக்க சுண்டிவிரல்முதல்கட்டைவிரல்வரை (௨௬) கட்டைவிரல்நுனியால் ஹிருதயமந்திரம் முதல் கவசமந்திரம்வரை தர்ச்சனிவிரல்வரை நியஸித்துதர்ச்சனிவிரல்நுனியால் கட்டைவிரலில் அஸ்திரமந்திரத்தை நியஸித்து (௨௭) கவசமந்திரத்தால் அவகுண்டனம்தர்ச்சனிவிரலைநீட்டிச்சுற்றிஅமிருதீகரணத்தின்பொருட்டு தேனுமுத்திரைகாட்டுக (௨௮) சிவாயவௌஷடு என பரமீகரணஞ்செய்தல்வேண்டும். சிரஸிற்குமேல் அஞ்சலிசெய்து ஹிருதயம்வரை இதைக்கொண்டுவருதல்(௨௯) பரமீகரணமாகும். இனியொருபிரகாரம் கையை அபயவரதஹஸ்தமாய்க் காட்டுவது பரமீகரணமென்பதாம் (௩௦) இனி அங்கன்யாஸம் கால்கட்டைவிரலிலிருந்து சிரஸுவரை சிவாஸ்திரமந்திரமுச்சரித்து மும்முறைதுடைத்தல்வேண்டும் (௩௧) புருவமத்யம்வரையில் சக்திமந்திரத்தால் அஞ்சலிசெய்துதஹனப்லாவனமமிருதாப்லாவனஞ்செய்து கட்டைவிரலையும் அணிவிரலையும்ஒன்றுசேர்த்து (௩௨) மற்றவிரல்களைநீட்டி ஹிருதயத்தில்சிவாஸனத்தையும் புருவமத்யயில்சிவமூர்த்தியையும் சிரஸில்சிவமூலத்தையும் நியஸித்து (௩௩) மூர்த்தாவில் ஈசான மந்திரத்தைக் கட்டைவிரலால் நியஸித்து முகத்தில் தத்புருஷ மந்திரத்தை தர்ஜனிவிரலால் நியஸித்து (௩௪) ஹிருதயத்தில் அகோரமந்திரத்தை மத்யமவிரலால் நியஸித்து அனாமிகையால்வாமதேவமந்திரத்தை குய்யத்தில்நியஸித்து (௩௫) பாதங்களில் ஸத்யோஜாதமந்திரங்களைகடைவிரலால் நியஸித்து கட்டைவிரல் அணிவிரல்இரண்டு

னையிலுங்கட்டி (௩௬) ஹிருதயத்தில் வித்யாதேஹ மாவாஹித்து நேத்திரமந்திரத்தால் நேத்திரத்தில் நேத்திரமுத்திரையால்நியஸி த்து (௩௭) சிவாயநமவென ஹிருதயத்தில்முன்போல் நியஸிக்க இதுமூலமந்திரமாகும் இதைநியஸிக்க சரீரம்ஆலயமாகும் (௩௮) கடைவிரல்முதல்தர்ஜனிவிரல் வரையில் ஹிருதயமந்திரத்தை ஹிருதயத்தில் கடைவிரலால் நியஸித்து சிரோமந்திரத்தைசிரஸில்அணிவிரலால் நியஸித்து (௩௯) சிகாமந்திரத்தை சிகையில்மத்யமவிரலால்நியஸித்து கவசமந்திரத்தால் தெற்குஸ்தனந்தொடங்கிவாமஸ்தனம்வரை கிரமமாய் (௪0) கழுத்தை வலக்கை தர்ச்சனிவிரலை நீட்டிச்சுற்றுதல்வேண்டும் அஸ்திராயநம: எனமும்முறைங்கொட்டி (௪௧) சிரசைச்சுற்றிலும் சோடிகாமுத்திரையால் திக்பந்தனஞ்செய்க சிரஸில் கவசமந்திரத்தால்அவகுண்டனஞ்செய்து (௪௨) வௌஷடந்த மூலமந்திரத்தால் பரமீகரணஞ்செய்க இதுவரை சகளீகரணம் சொன்னோம் ஸமான்யார்யக்கியம் கேட்பாயாக (௪௩) மேற்குநுனியாய் ஐந்து தர்ப்பையை பரத்தி இதற்குமேல் ஸாமான்யார்க்யபாத்திரத்தை அந்தந்த திருவ்யத்தோடு (௪௪) ஸாமான்யார்க்யம் தங்கம் அல்லது வெள்ளி அல்லது தாமிரம் இவைகளி லெதுவாவதொன்று வைத்து சந்தனம் அக்ஷதை புஷ்பம் (௪௫) தர்ப்பை நுனியவை அருகு முதலிய திருவ்யங்களை ஸாமான்யார்க்ய பாத்திரத்தில் போட்டு ஜலத்தை பூரித்து (௪௬) பிரணவத்தால் ஏழுதடவை பூஜித்து. யவை அரிசி, பாசிப்பயறு, கடலை, உளுந்து, கோதுமை, துவரை (௪௭) எள்ளு இவை முதலிய ஏழு தான்யங்களை கிரமமாய் ஆஸனரூபமாய் பரத்தி இதற்குமேல் பத்மமண்டலங்கற்பித்து (௪௮) மஞ்சள் தடவிய இரண்டு தேங்காய் யவை அரிசிபழம்(௪௯)வெல்லம் தாம்பூலம் தங்கம் வெள்ளி சந்தனம் புஷ்பம் அக்ஷதை பத்திரம் தர்பை பவித்திரம் (௫0) மஞ்சள் மாவிலை கூர்ச்சம் பட்டு தூபம் தீபம் முதலிய திருவ்யங்களை தங்கப்பாத்திரத்தில் வைத்து (௫௧) பத்மமண்டலத்தின்மேல் பாத்திரத்தை வைத்து ஸாமான்யார்க்ய ஜலத்தால் அஸ்திரமந்திரத்தால் ஏழுதடவை புரோக்ஷித்து (௫௨) நிரீக்ஷணாதி ஐந்து சுத்தி செய்து யவையில், விருஷபத்தையும் (௫௩) அரிசியில் மாதாவையும், பாசிப்பயரில் வருணனையும், உளுந்தில் அக்னியையும், கோதுமையில் சந்திரனையும், (௫௪) துவரையில் சோமனையும், எள்ளில் மாகேசுவரியையும், இந்த ஆஸனரூபமான ஏழு தான்யங்களையும்,

பூஜித்தல்வேண்டும், (௫௫) விருஷபம் வெள்ளியின்வர்ணம், நான்குபாதம் ஊர்த்துவமுகம் கொம்பு அருணவர்ணம் கிங்கிணியால் அலங்கரிக்கப்பட்டதாய்த் தியானிக்க, (௫௬) மாதா வெண்மைநிறம் ஒருதலை நான்குகை, கத்தரி, கோடாரி. சூலம், கபாலம், இவைகளோடு கூடியதாய் தியானிக்க, (௫௭) வருணன் இரத்தினகாந்தி நாகபாசம்தரித்து ஒருமுகம், இரண்டுகண், முதலையின்மேலிருப்பதாய் தியானிக்க, (௫௮) அக்னி ஏழுதலையும், அக்ஷமாலை, அக்கிஙுவாலைமயமாய் இரக்தவர்ண்ணமாய் சக்தியை கையில் உடையதாய் ஆட்டின்மேலேறியிருப்பதாய் தியானிக்க, (௫௯) இந்திரன் ஐராவதமென்னும் யானையில் ஏறியிருப்பவனாய் ஸ்வர்ண்ணவர்ணம், கிரீடம், ஆயிரம்கண், சக்கரம், வஜ்ரம், இவைகளை கையில் உடையவனாய் த்யானிக்க, (௬0) ஸோமன், ஸிம்ஹாஸனத்திலேறியிருப்பவனாய் நல்லமுகமாய் இரண்டு வல இடக்கைகளில் நீலோத்பலம் முடையவனும் தியானிக்க, (௬௧) மாஹேசுவரீ நீலவர்ண்ணம் ஒருமுகம் நான்குகை அபயவரதம் இரண்டுகைகளில் தாமரைப்பூ தரித்திருப்பதாய் தியானிக்க, (௬௨) பாத்திரத்தின் அடி, நடுநுனிகளில் ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம், இவைகளையும் இற்றிற்கு அதிபதிகளையும் (௬௩) அந்தந்த தியானத்தோடு பூஜித்து பாத்திரத்திற்குமேல் சலாஸனத்தை பூஜிக்க (௬௪) அரிசியில் நக்ஷத்திரத்தை தியானத்தோடு பூஜித்தல்வேண்டும் நக்ஷத்திரம் ஸ்படிகவர்ணம் இரண்டுகை ஒருதலை (௬௫) அஞ்சலிஹஸ்தம் விபூதி உருத்திராக்ஷாலங்கிரதமாய் தியானிக்க தேங்காயில் அமிருதத்தை பூஜிக்க (௬௬) அமிருதம் வஜ்ஜிரகாந்தி இரண்டுகை ஒருதலை அஞ்சலிஹஸ்தம் விபூதி உருத்திராக்ஷபூஷிதமாய் தியானிக்க (௬௭) பழங்களில் விஷ்ணுவை பூஜிக்க விஷ்ணு ஸ்படிகவர்ண்ணம் நான்கு கை (௬௮) வரதம், அபயம், சங்கு, சக்கிரம், தரித்தவராய் தியானிக்க, வெல்லத்தில் வசுவை பூஜிக்க (௬௯) வசு, அருணவர்ண்ணம் இரண்டுகை அஞ்சலிஹஸ்தம் ஒருமுகம் மூன்றுகண் ஜடாசூடம், உடையவராய் தியானிக்க (௭0) இவ்வாறு தியானித்து தாம்பூலத்தில் மஹாலக்ஷ்மியை பூஜிக்க வலதுகை இடதுகைகளில் வில்வப்பழத்தைத் தரித்திருப்பவளாய் (௭௧) ஸ்வர்ணவர்ணமுடையவளாய்மகதைசுவர்யத்தைக்கொடுக்கத்தக்கவளாய்த்யானிக்கமஞ்சளில் வலாசந்தரியைப்பூஜிக்க (௭௨) வ

ஸுந்தரை பச்சைவர்ணம் ஒருமுகம் இரண்டுநேத்ரம் அஞ்சலிஹஸ்தம் ஸர்வாபரணபூஷிதையாய்(௭௩) த்யானிக்க தங்கத்தில் தனலெக்ஷ்மியைப்பூஜிக்க தனலக்ஷ்மிபால்வர்ணம்தாமரைப்புஷ்பம் போன்ற நேத்ரங்கள் (௭௪) அஞ்சலிஹஸ்தம் ஒருதலை நல்லயௌவ்வனமுடையவளாய் த்யானிக்க வெள்ளியில் ம்ருடானியைப்பூஜிக்க(௭௫) ம்ருடானி ஸ்வர்னவர்னம் இரண்டுகைகள்மகுடம் ஸர்வாபரணபூஷிதையாய்த்யானிக்க (௭௬) மாவிலைக்கொத்தில் வைஷ்ணவியைப்பூஜிக்க வைஷ்ணவிச்யாமளவர்ணம் ஒருமுகம் இரண்டுகைகள் சங்குசக்ரம் ஸமஸ்த ஆபரணங்களையுமணிந்தவளாய் (௭௭) த்யானிக்க தர்ப்பைகளில் ப்ரும்ஹாவை பூஜிக்க ப்ரும்ஹா நான்குமுகம் பசுமைவர்ணம் நான்கு கைகள் (௭௮) ஸ்ருக்குதண்டம் குண்டிகை அக்ஷமாலைக்ரீடம் ஹம்ஸவாஹனத்திலேரியிருப்பவராய் த்யானிக்க பவித்திரத்தில் போகினியைப்பூஜிக்க (௭௯) போகினி பால் வர்ணம் ஒரு முகம் இரண்டு கைகள் தாமரைமலரின்மேலிருப்பவளாய் இரண்டு கை களிலும் தாமரை மலர் நல்ல யௌவனமுடையவளாய்(௮௦)த்யானிக்ககூர்ச்சத்தில்கங்கையைப் பூஜிக்க கங்கைவெண்மைநிறம் ப்ரஸன்னமுகம் மனோஞக்யமான துடைஜெகனஸ்தலம்(௮௧) ஒருமுகம் இரண்டுகைகள் எல்லாஆபரணங்களையுமணிந்தவளாய்த்யானித்து புஷ்பத்தில் ஸரஸ்வதியைப் பூஜிக்க (௮௨) ஸரஸ்வதி வெண்மைவர்ணம் வெள்ளைவஸ்திரம் வலதிடக்கைகளில் அக்ஷமாலை புஸ்தகம் ப்ரஸன்னமானமுகமுடையவளாய் (௮௩) த்யானிக்க தூபத்தில் அக்னியைப்பூஜிக்க அக்னிஎழுசிரம் அக்ஷமாலைகமண்டலம்(௮௪) ஜ்வாலை ரக்தவர்னம் சக்திஹஸ்தம் ஆட்டின்மேலிருப்பவராய் த்யானிக்கதீபத்தில் ஸூர்யனைப்பூஜிக்க(௮௫)வெண்டாமரை மலரின்மேலிருப்பவராய் ரக்தவர்ணமாய் மஹாதேஜஸ்ஸோடு கூடினவராய்வ்ருத்தமண்டலநடுவிலிருப்பவராய்(௮௬) வெண்டாமரை இரண்டுகையிலுடையவராய் ஒருமுகம்இரண்டு நேத்திரம் சிவப்புவஸ்திரம் தரித்திருப்பவராய்(௮௭)த்யானித்துமணியில் உருத்திரனைப்பூஜிக்க உருத்திரன் ஐந்து தலைபதினைந்துகண்பத்துக்கைசந்திரப்ரபைதரித்தவராய்(௮௮)வ்ருஷபவாஹனத்தின் மேலிருப்பவராய் சந்திரவர்ணமுடையவராய் த்யானித்து இவர்கள் யாவருக்கும் நிவேதன தூபதீபாராதனைகள்செய்து அக்ஷபரிசாரகனை அழைத்து தீக்ஷையில்லாதவனாயிருந்தா லுடனே சாக்ஷுஷதீக்ஷைசெய்து அவனது சிரத்தில் (௯௦) அர்க்யஜலத்தால்

அஸ்த்ரமந்திரமுச்சரித்து ப்ரோக்ஷித்து சலாஸனம் பூஜித்து சந்தனுக்ஷதைபுஷ்பங்களினலே(௯௧) அலங்கரித்து நெற்றியில் விபூதியாலடித்து பரிசாரகனதுசிரசில் பூஜித்தபாத்திரத்தை அசையாது (௯௨)மூலமந்திரத்தால் வைத்து வேதகோஷம் ந்ருத்தம் கீதம் மற்றுமுண்டான வாத்யகோஷத்தோடு மெள்ளமெள்ள (௯௩) ஆலயப்ரதக்ஷிணஞ்செய்து ஸ்தபநமண்டபத்தில் கூர்மாஸநத்திலாவது அல்லது ஸுகாஸநமாகவாவது (௯௪) உட்கார்ந்து முதலில்ஆச்சார்யானுக்ஞைசெய்தல்வேண்டும். அன்யர்களனுக்ஞைசெய்தல்கூடாது செய்தால்கர்த்தாநாசத்தையடைவன் (௯௫) அனுக்ஞையென்வகைப் பேதமுடைத்து இவற்றுள், ஸாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கமென மூன்றுபேதங்களாகும் (௯௬) ஆஸ்தானரூபமான பரமேசுவரர் ஆச்சார்யரை அதிஷ்ட்டித்து ஜகத்திற்கு எல்லா அனுக்ரஹத்தையுஞ் செய்கின்றனரெனச் செப்புவதால் (௯௭) ஆச்சார்யனுக்கு ஜெகத்குருத்வம் கூறப்படுகின்றது இதனல் ஆச்சார்யன் சிவ பெருமானுக்கு ப்ரத்யங்க சரீரமாயிருத்தல் பற்றிமுதலில் ஆச்சார்யானுக்ஞை, செய்தனுரித்தாயின (௯௮) விக்னேசர், தக்ஷிணமூர்த்தி, ஸுப்ரமண்யர், நந்திகேசர், சண்டிகேசர், இவ்வைந்து தேவர்களும் சிவபெருமானுக்கு உபாங்கமூர்த்தியெனக் கூறப்படும் (௯௯) ஸாங்கம், சிவசக்தியென, கூறுதலால் அனுக்ஞை, எண்வகைப்பேதங்களாயின வலதுகண், இடதுகண் நெற்றிக்கண், இந்த மூன்று கண்களாய் (௧௦௦) கணேச சுப்பிரமண்ய தக்ஷிணமூர்த்தி, இம்மூன்று மூர்த்திகளும் ஆகும், நந்திகேசர், மூக்காகவும் சண்டிகேசர், காதாகவும், கூறப்படும் (௧௦௧) இந்த பிரகாரமாய், அனுஞை எட்டுபேதங்களாகும், இவற்றுள் முதலில் ஆசாரிய அனுஞையும் இரண்டாவது விக்கினேசுவரர், (௧௦௨) மூன்றாவது தக்ஷிணமூர்த்தி நான்காவது, சுப்பிரமண்யர், ஐந்தாவது, சிவபெருமான், ஆறாவது, சக்தி (௧௦௩) எழாவது, நந்திகேஸ்வரர் எட்டாவது, சண்டிகேஸ்வரர், இவ்வாரு எட்டு மூர்த்திகளின், அனுஞைகள் புனராவர்த்தன,கும்பாபிஷேகத்தில் செய்யதக்கது(௧௦௪) இவ்வாரு செய்யாவிடில் கர்த்தாநாசத்தை அடைவன் சாங்கா அனுஞை உத்ஸவத்திலும் பரிவாரர்பிரதிஷ்டையில் (௧௦௫) உபாங்கா அனுஞையான அந்தந்ததேவதைகளின் அனுஞையும் தீக்ஷையில்பிரத்திங்க அனுஞையெனகூரப்படுகிரது (௧௦௬) எதில்முதலில், ஆசாரியரைத்யானித்து, அனுக்ஞைசெய்தல்வேண்டும், கோடிசங்

திரபிரகாசமாய் சிவஸ்வரூபராகிய சுவேதரென்னும் பெயர்கொண்ட (௧௦௭) மகாதேவரை சுபத்தைகொடுக்க முதன்மையான குருவை நான் நமஸ்க்கரிக்கிறேன், என பிரார்த்தித்துதேங்காய்முதலியவற்றல் அலங்கரிக்கபட்ட (௧௦௮) தங்கதாம்பாளத்தை எடுத்துக்கொண்டு எழுந்து ஈசானமந்திரத்தினல் அபிமந்திரித்து (௧௦௯) சர்வசாதகர் ஆசாரியர், சாதகர் போதர் இருத்துக்கள் இவர்கள் யாவரையும் சிவாகாரமாய் பாவித்து (௧௧௦) ஏசதசில் உள்ளவர்களே சிவாகமத்தில் கூறியவாருள்ள சிவதிரவியத்தை சொல்ப்பமாய் இருப்பினும் உள்ளபடியே இருப்பினும் (௧௧௧) பிரதிஷ்டிக்க யோக்கியதை உண்டாகுப்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென பிரார்த்தித்து சந்தனம் அக்ஷதை புஷ்ப்பம் தாம்பூலம் தெக்ஷிணை இவைகளினலே (௧௧௨) இவர்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி செய்து சங்கல்ப்பம் செய்து புண்யாஹவாசனத்தின்பொருட்டு (௧௧௩) விக்நேசபூஜைசெய்துபுண்யாஹவாசனம்செய்தல்வேண்டும் ஸ்நபனமண்டபத்தின் முதலில் புண்யாகவேதி போடுதல்வேண்டும் (௧௧௪) ஒருமுழ விஸ்த்தாரமும் இதில்பாதி உயரமும் மேலும் கீழும் பட்டிகையோடு கூடியதாய் வேதிகை கற்பித்தல்வேண்டும் (௧௧௫) ஒன்பதுபடி நெல்லும் இதில்பாதி அரிசியும் இதில்பாதி எள்ளும் பொரிதர்ப்பை புஷ்பங்களைப் பரத்தி (௧௧௬) இதின்மேல் எட்டிதழ்கர்ணிகையோடுகூடியபத்மமண்டலம் கர்ப்பித்து இதின்மேல் (௧௧௭) வடக்குநுணியாகவும் கிழக்குநுணியாகவும் தர்ப்பையைப் பரதி தங்கத்தால் செய்யப்பட்ட கும்பத்தை நூல்பட்டு முதலியவைகளால் அலங்கரித்து [௧௧௮) மாவிலை தேங்காய் ரத்னம் தங்கதாமரைப்பூ தங்க பிரதிமை (௧௧௯) சந்தனக்ஷதபுஷ்பங்களினல் அலங்கரித்து கர்ணிகைக்கு நடுவில் வருணகும்பத்தை வைத்து (௧௨௦) இதற்கு இடப்புறத்தில் ஹரிஷிணி என்னும் சக்திகும்பத்தை வைத்து (௧௨௧) இதற்குவெளியே விஷ்டறங்களைப் போட்டு இதற்கு வெளியே கூர்ச்சங்களை ஸ்தாபித்து இதற்கு வெளியே பரிஸ்தரணம் போடுதல்வேண்டும் (௧௨௨) எல்லாகும்பங்களுக்கும் அந்தகூர்ச்சம் லம்பகூர்ச்சம் விதிப்படி போடுதல்வேண்டும் (௧௨௩) மத்தியில் வருணனைச் சக்தீகமாய் பூஜித்தல்வேண்டும் சாமான்யார்க்கியம்வைத்து அந்த ஜலத்தினல் (௧௨௪ எல்லா திரவியங்களையும் புரோக்ஷித்து நிரிக்ஷணாதி பஞ்சசுத்தி செய்து நெல்லில் சந்திரனையும் (௧௨௫) ஹருஷிணியும் அரிசியில்

கஷத்திரத்தையும் எல்லா திருஷியங்களிலும் அமிர்தத்தையும் க லசத்தின் பின்புரத்தில் (கஉகு) பிர்மாவையும் நடுவில் விஷ்ணுவை யும் நுனியில் ருத்திரனையும் கும்பத்தில் சலாசனமும் (கஉஎ) இ தற்குமேல் வருணனை ஆசனமூர்த்திமூலத்தால் பூஜிக்க வருண ன் சந்திரவர்ணம் இரண்டுகைகள் அஞ்சலிஹஸ்தம் (கஉஅ) முத லையின்மேல்யிருப்பவராயும் விபூதிருத்திராக்ஷதாரணமுடையவரா ய் த்யானிக்க சிரசில் திவ்யதேகத்தையும் (கஉகூ) இருதயம் சிரசு, சிகை, கவசம் அஸ்த்தரம் நேத்திரம் இந்த ஆறுமந்திரங்களால் அந்தந்த முத்திரையோடு பூஜித்து (கந0) வருணன் சந்திரகாந்தி ஒருமுகம் இரண்டுகண்கள் வலம் இடக்கைகளில் நாகம் பாசம் (கநக) முதலையின்மேல் இருப்பவராய் விபூதிருத்திராக்ஷதாரண முடையவராய் த்யானித்து நெய்வேத்திய முதலியவைகளை செய் ய்து (கநஉ) இதற்கு இடதுபுரத்தில் ஹார்ஷணிசக்தியை பூஜிக்க ஹார்ஷணி பச்சவர்ணம் மனோக்கியமான துடை நிதம்பம் (கநந) ஒருமுகம் இரண்டுகைகள் பத்மம் நீலோத்பலம் இவைகளை கைக ளிலுடையதாய் த்யானித்து நெய்வேத்திய தூபதீபங்கொடுத்து (கநச) இந்தப்பிரகாரம் முதலாவர்ணத்தை பூஜிக்க இரண்டாமா வர்ணம் கும்பத்தைசுற்றிலும் (கநரு) கிழக்கே கங்கையை சசக் திகமாய் பூஜிக்க கங்கையை சம்பகவர்ணம் மனோக்யமான துடை (கநகு) வெந்தாமரை புஷ்பத்தின்மேல் யிருப்பவளாய் மேற்படி புஷ்பம் அணிந்தவளாய் த்யானித்து ஆக்னேயதிக்கில் யமுனையை பூஜிக்க (கநஎ) யமுனை வெளுப்புவர்ணம் இரண்டுகைகள் இரண்டு தாமரைப்பூ தரித்திருப்பவளாய் ஒருமுகம் இரண்டுகண்கள் எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பவளாய் (கநஅ) த்யானித்து தெற் க்குதிக்கில் கோதாவரியை பூஜிக்க கோதாவரி வெளுப்புவர்ணம் ஒருமுகம் இரண்டுகைகள் (கநகூ) பத்மாஸனம் வெண்தாமரைப் பூ மாலையுடையவளாய் த்யானித்து நிருதிதிக்கில் சரஸ்வதியை பூஜிக்க (கச0) சரஸ்வதி வெளுப்புவர்ணம் வெளுப்புவஸ்திரமணி ந்தவளாய் ஒருமுகம் இரண்டுகைகள் புஸ்தகம் அக்ஷமாலை தரித் திருப்பவளாய் (கசக) த்யானித்து மேர்க்குதிக்கில் நிர்மதையை பூஜிக்க நிர்மதை இந்திரநீலவர்ணம் ஒருமுகம் இரண்டுகைகள் (கசஉ) தாமரைப்பூ நீலோத்பலம் மகுடம் முதலியவற்றால் அலங் கரிக்கப்பட்டவளாய் த்யானித்து வாயுதிக்கில் சிந்துவை பூஜிக்க (கசந) சிந்து ஸ்படிகவர்ணம் புஷ்பம் நீலோத்பலம் ஒருமுகம் இர

ண்டுகண்கள் எல்லா ஆபரணங்களும் அணிந்தவளாய் (௧௪௪) த்யா னித்து வடக்குதிக்கில் காவேரியை பூஜிக்க காவேரி ஸ்வர்ணவர் ணம் ஒருதலை இரண்டுகைகள் (௧௪௫) அஞ்சலிஹஸ்தம் எல்லா ஆ பரணங்களும் அணிந்தவளாய் த்யானித்து ஈசானதிக்கில் குமாரி யை பூஜிக்க (௧௪௬) குமாரி ஸ்வர்ணவர்னம் ஒருமுகம் இரண்டுகை கள் அஞ்சலிஹஸ்தம் எல்லா ஆபரணங்களும் அணிந்தவளா த்யானி த்து (௧௪௭) இவர்கள் யாவர்க்கும் நெய்வேத்தியதூபதீபம்செய்து இருதியாவரணம்விஷ்டரத்தை சுற்றிலும்கிழக்கு திக்கில்(௧௪௮) சோமனையும் ஆக்னேயதிக்கில் உப்புசமுத்திரத்தையும் தெற்குதி க்கில் கருப்பஞ்சார் சமுத்திரத்தையும் நிருதிதிக்கில், சுராசமுத்தி ரத்தையும் (௧௪௯) மேற்குதிக்கில், நெய்சமுத்திரத்தையும் வாயு திக்கில் தயிர்சமுத்திரத்தையும், வடக்கில் பார்கடலையும் ஈசானத் தில் நல்ஜலமுள்ள சமுத்திரத்தையும் (௧௫௦) இவைகளுக்கு நெ ய்வேத்யதூபதிபாதிகளை செய்து, நான்காமாவர்னம் கூர்ச்சத்தை சுற்றிலும் (௧௫௧) இந்திரன்முதல் விஷ்ணு இருதியாகலோகபால ர்களை பூஜித்து ஐந்தாமாவர்னம் பரிஸ்த்தரணத்தை சுற்றிலும் (௧௫௨) வஜ்ரம்முதல் சக்கிரம்வரையில் பூஜித்து, நெய்வேத்தியதூ பதிபம்செய்து(௧௫௩) புஷ்பாஞ்சலிசெய்து தத்வாயாமிஎன்றும் மந்திரத்தால்ஸ்தோத்திரம்செய்து வருணயநமஹாஎனவும்(௧௫௪) அபாம்பதயே எனவும் சசாங்கதவளப்ரபா எனவும் நாகஹஸ்தா எனவும் பாசஹஸ்தா எனவும் (௧௫௫) ரத்நகாந்திபிரபா எனவும், மகரத்வஜாயெனவும், மகராரூடாஎனவும் (௧௫௬) பூஜித்து, நை வேத்தியாதிகள் செய்து கும்பத்தைச் சுற்றிலும் ஆசாரியர், சாத கர் (௧௫௭) ருத்ருக்களோடுகூட கூர்மாசனத்திலாவது அல்லது சுகாசனமாகவாவதுஉட்கார்ந்து நுனியுள்ள நூத்திஎட்டு(௧௫௮) அல்லது ஐம்பது அல்லது இருப்பத்தைந்துதர்பைநுனியால், கும் பத்தின்மேல், தொட்டு இருக்கும்படி ஆசாரியன்செய்து பவத்பி ரஸாதாத் (௧௫௯) புண்ணியாஹம்ஸயிஷ்யதெனை ஆசாரியன் கூற சுவாச்சியதாம் என போதகர் முதலினோர் ப்ரதிவசனம் கூற (௧௬௦) இந்தப்ரகாரம் வருணத்தோத்திரசெய்து தோத்திரமுடிவி ல் மூலமந்திரத்தை ஆயிரம் அல்லது, ஐநூறு, (௧௬௧) அல்லது இரு நூற்று ஐம்பதாவது செய்து பரான்முகார்க்யம் கொடுத்து வரு ணனைவிசர்ச்சனம் செய்து இந்தஜலத்தினால் எல்லா திரவியங்களின் சுத்தியின்பொருட்டு (௧௬௨) ப்ரோக்ஷித்து இவ்வாறு புண்ணியா

வாசனம் கூறியிருக்கின்றது, இதுவரை புண்ணியாஹவாசனவிதி·யை சொன்ேனும் இனி பூதசுத்தியை கேட்பாயாக, (க௬௩)

இவவாறு காமிகாகமம் ப்ரதிஷ்டாதந்த்ரம் கிரியாபாதம் திரவியசம்ஸ்காரமென பேர்கொண்டஎட்டாவதுபடலமமூற்றிகைபெற்றது,

சுலோகம் க௬௩. ஆக சுலோகம் ௯௬௭.

பூதசுத்திபடலம் கூரப்படுகின்றது.

இதின்பின் பூதசுத்தியை கூறப்படுகிரது ஆத்மஸம்ஸ்காரம் பூதசுத்தி என சொல்லப்படும் (க) ஆத்மாவுக்கு பஞ்சபூதங்கள் பின்னபின்னஸ்வரூபமாதலின் பிருதிவீ முதல் ஆகாசபர்யந்தம் ஜடபரிணமரூபமாகும் (உ) ஆத்மா தனது ஸ்வரூபமாகிய சித்ஸ்வரூபத்தை அரியாதபடி தன் வசப்படுத்தி பரிணமிக்கின்றது சிவாக்னியால் இந்த அசத்பாவத்தை பொசிக்கி சத்பாவம் செய்தல் அவசியமாதலின் முதலில்தகனபிலாவனம் செய்தல்வேண்டும்(௩) அமிர்தத்தால் திரும்ப உற்பத்திசெய்து சத்பாவமாதர்பொருட்டு அசத்பாவ நிவர்த்தியின்பொருட்டும் பூதசுத்தி கூறப்படுகிரது (௪) சிருஷ்டி ஸ்திதி சங்கார திரோபாவானுக்கிரகமென பூதசுத்தி ஐந்துபேதங்களாகும் இந்தஐந்துனுள் ஹடம் லம்பிகம்சிவராஜமென மூன்று பேதங்களாம். சிருஷ்டிமுதல் சம்ஹாரம்வரையில் ஹடயோகமும் திரோதானம் லம்பிகாயோகமும் சிவராஜம் அனுக்கிரகமுமாகும் (எ) சச்சூத்திரிகள் சிருஷ்டிகிரமத்தையும் வைசியர் ஸ்திதிகிரமத்தையும் க்ஷத்திரியர் சம்ஹாரகிரமத்தையும் பிர்ம்மசிருஷ்டாளான (அ) பிராமணர்கள் திரோதானகிரமத்தையும் சிவசிருஷ்டாளான பிராமணர்கள் அனுக்கிரககிரமத்தையும் இதில் சொல்லியபடி பூதசுத்தியை செய்தல்வேண்டும் (௯) இதற்கு விரோதமாய் செய்வாராகில் கர்த்தாகர்மம் இவ்விரண்டும் நாசத்தை அடையும் ரேசகபூரககும்பகம்செய்து (க0) ஹலாம்என்னும் பீஜத்தை ஐந்துமுறை உச்சரித்து நிவர்த்திகலாயை நமஹ என (கக) பூஜித்தல்வேண்டும் நிவர்த்திகலைபாதம் முதல் முழங்கால்வரை என்பதரிக முழங்தாள்முதல்தொப்புள்வரைபிரதிஷ்டாகலையை (கஉ) ஹ்ரீம் என்னும் பீஜத்தை நான்குமுறை உச்சரித்து பூஜிக்க நாபிமுதல் இருதயபர்யந்தம் ஹூம் என்னும் பீஜத்தை மூன்றுமுறை உச்சரித்து (க௩) வித்யாகலையை பூஜிக்க ஹிருதயம்முதல் நெற்றி

வரைபாவிக்கத்தக்கது. ஹௌமென்னும்பீஜத்தைமும்முறைஉச்சரித்தல்வேண்டும் (கச) சாந்திகலாயைநமஃஎனநெற்றிக்குமேல்ஹௌம் என்னும்பீஜத்தை ஒருமுறையுச்சரித்து (கரு) சாந்தியதீதகலாயை நமஃ எனபூஜித்து பிருதிவிமுதலாகாசபிருதியாக (கசா) கலாஸ்வரூபமாய்தியானித்து ஆகாசத்தினின்று வாயுவும்வாயுவினின்று அக்னியும் அக்னியினின்றுஜலமும் (கஎ) ஜலத்தினின்றுபிரதிவியுமிந்தஐந்துங்கலயிலயித்ததாய் ஆகாசத்தில்லயமாக்கி (கஅ) இதில் வியாபித்திருக்கும் ஜீவாத்மாவைகொணர்ந்து நாபிகுண்டாக்னியில் கொளுத்தி (ககூ) சுத்தஸ்படிகபிரகாசமாய் நிர்மலமாய்பாவித்து அமிருதத்தால் திரும்பஉண்டானதாய் பாவிக்க (உ0) பிரும்மா விஷ்ணு உருத்திரர் மஹேசர் ஸதாசிவர் இவர்கள்ரூபத்தை தியானிப்பது ஸிருஷ்டிக்கிரமபூதசுத்தியென்பதாம் (உக)அந்தியசைவர்கள் ஸிருஷ்டிக்கிரமபூத சுத்தியைச்செய்யத்தக்கது இஸிஸ்திதிக்கிரமத்தைச்சொல்லுகிறேன் கேட்பாயாக பாதம்முதல் முழந்தாள்வரையில் (உஉ) பிரதிவிஸ்தானமாகும் பிரணவத்தைஉச்சரித்து ஹலாமென்னும் பீஜத்தை ஐந்து முறையுச்சரித்து நிவிருதிகலாயை(உங)பிரதிவிதத்வாயநம: என பூஜித்து தத்வாதிபரை பூஜித்துதியானிக்க ஜானுமுதல்தொப்புள்வரையில்(உச)ஜலஸ்தானமாகும் ஓம் ஹ்ரீமெனநான்குமுறை யுச்சரித்துபிரதிஷ்டாகலாயை (உரு) அப்புதத்வாயநம:எனபூஜித்துதத்வாதிபரைதியானிக்கநாபிமுதல்ஹிருதயம்வரை(உசா)அக்னிஸ்தானமாகும் ஓம்ஹ்ரலாமென மும்முறையுச்சரித்து வித்யாகலாயை அக்னிதத்வாய நம: எனபூஜித்து(உஎ) தத்வாதிபரைபூஜிக்க ஹிருதயம் முதல் நெற்றிவரை வாயுதத்வமாகும் ஓம்ஹ்ரெலம்என இரண்டுதடவை யுச்சரித்து சாந்திகலாயைவாயுதத்வாயநம: எனபூஜித்து(உகூ)தத்வாதிபரையும் பூஜிக்க நெற்றிக்குமேல் ஆகாசஸ்தானம் ஓம்ஹளெளம் சாந்தியதீதகலாயைஆகாச (ங0) தத்வாயநம: என பீஜம் ஒருமுறையுச்சரித்து பூஜித்து தத்வாதிபரையும் பூஜிக்க நாபிஅக்னியில் (ஙக) ஜீவாத்மாவைபொசிக்கி திரும்பஅமிருதத்தால்நனைத்து உண்டானதாகப்பாவித்து தத்துவாதீதமான (ஙஉ) ஜீவனைமஹேசரூபமாய் மறைத்தலுக்கும் அனுக்கிரஹத்திற்குங்காரணமான ஷடி மூர்த்தியாய் தியானித்து விஷ்ணுபரிபாலிப்பவராய்பாவிக்க (ஙங) இதுஸ்திதிக்கிரமபூதசுத்தியாகும். இதைசைவர்கள் அனுஷ்டிக்கத்தக்கது. இனி சங்காரபூதசுத்தியைக் கேட்பாயாக (ஙச)

பாதம்முதல் முழந்தாள்வரை பச்சைவர்ணமாயும் சதுரசிராகிருதியாகவும் எட்டுதிக்கிலும் வஜ்ராயுத அடையாளமும் ஹ்லாமென்னு பீஜத்தை ஐந்துமுறையுச்சரித்து (௩௫) பாதம்முதல் முழந்தாள் வரை பிரதவிஸ்தானமாகவும கந்தம் ரஸம் ரூபம் ஸ்பர்சம் சப்தம் முதலிய ஐந்துகுணங்களையும் (௩௬) நிவிருத்திகலையி லிருப்பதாய் தியானித்து இதற்குஅதிபர் பிரும்மாவும் பிரும்மாதிபதிஸத்யோஜாதமாகப்பாவிக்க (௩௭) முழந்தாள்முதல் தொப்புள்வரைஜலஸ்தானமும் சந்திரபிரபை அடையாளமும் கோடிவெண்தாமரையினடையாளமும் ஹ்லீமென்னுபீஜத்தைநான்முறையுச்சரித்து(௩௮) ஜலாதிபதிவிஷ்ணுவும் இவருக்கதிபதிவாமதேவமுமாய்பாவித்து ஜலத்தின்தன்மாத்திரை நான்கான (௩௯) ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம்முதலிய நான்குகுணங்களையுன்னீக்கிவிஷ்ணுவையும் வாமதேவறையும்பாவிக்க (௪௦) தொப்புள்முதல் ஹிருதயம்வரை அக்னிஸ்தானம் திரகோணம் ரக்தவர்ணம். கோணங்களில் ஸ்வஸ்திக அடையாளம் ஹ்லூமென்னும்பீஜத்தை மும்முறைஉச்சரித்து (௪௧) வித்யாகலாயை ருத்ராயநம: எனப்பூஜித்துரூபம் ஸ்பர்சம் சப்தம் முதலியகுணங்களைநீக்கி (௪௨) இதற்குஅதிபந் ருத்திரறையும் மூர்த்தீசர் அகோரத்தையும்பாவிக்க (௪௩) ஹிருதயம்முதல் புருவமய்யம்வரை வாயுதத்வம் அருகோணம் புகைவர்ணம் ஹ்லைமென்னும்பீஜத்தை இரண்டுதடவையுச்சரித்து (௪௪) சாந்திகலாயைநம: எனபூஜிதது இதற்குஅதிபானமஹேசுவரறையும்மூர்த்திபரான தத்புருஷத்தையும் பூஜித்து தியானிக்க (௪௫) புருவமய்யம்முதல் விருத்தாகாரம் ஆகாசமண்டலம் ஸ்படிகஅடையாளம் ஹ்லளமென ஒருமுறையுச்சரித்து (௪௬) சாந்தியதீதகலை ஸதாசிவம் மூர்த்தீசுவரம் ஈசானம் இவர்களை பூஜித்த்து தியானிக்க (௪௭) பிரதிவிமுதலியஐந்துபூதங்களுள் ஆணவம், மாயை, கர்ம்மம், நிரோதி, பைந்தவமென ஐவகைபாசங்களிருக்கின்றது (௪௮) இந்தஐந்துபாசங்களால்ஆத்மா பந்தித்துள்ளவன். பதிபாவம்வரும்பொருட்டுஐந்துபாசமுடுச்சையும்அவிழ்த்தல்வேண்டும்(௪௯) இந்தஸம்ஸ்காரஞ்செய்வதால் பதிபாவமான ஸாஜாத்யமுண்டாகும். ஓம் ஸிலீம் பம் சும் ஹூம்பட் பாசுபதாஸ்திராயநம: (௫௦) எனவாவது அல்லது ஹூம்பட்டிறுதியாகவாவது மந்திரத்தையுச்சரித்து அங்குசமுத்திரையால் (௫௧) முழந்தாள்முடிச்சை அறுத்து ஷடி முத்திரயால் முழந்தாளை மூன்றுதடவை சுற்றுக (௫௨) இதுகிரந்திச்சேதனமாகும்

நாபிகிரந்தியை முன்சொன்ன அஸ்திரமந்திரத்தாலும் முத்திரையாலும்ச்சேதிக்க (ருடு) ஹிருதயகிரந்தியை முன்போல் பாசுபதாஸ்திரமந்திரத்தால்ச்சேதிக்க கழுத்தின்கிரந்தியையும் முன்போல்ச்சேதிக்க (ருச) பிரம்மரந்திரத்தின் கிரந்தியையுமிவ்வாருச்சேதிக்க இது ஐவகைகிரந்திச்சேதனமாகும். யமென்னும்பீஜத்தை பன்னிரண்டுதடவையுச்சரித்து (ருரு) வாயுவை கும்பகஞ்செய்து உள்ளும் புறம்புஞ்சரீரத்தைஉலரச்செய்துரம்மென்னும்பீஜத்தைஇருபத்தோருதடவையுச்சறித்து (ருசு) இது அக்னிபீஜமென்பதாம். இதினால் உள்ளும் புறம்பானசரீரங்களை தகித்து (ருஎ) வம்மென்னும் அமிருதபீஜத்தைஅருபத்துமூன்றுதடவையுச்சரித்து முன்பொசுக்கப்பட்டசரீரத்தை அமிருதத்தால் நனைத்து (ருஅ) திரும்பஉண்டானதாய்பாவித்து லம்என்னும் பீஜத்தை யுறுபத்துநான்குதடவை உச்சரித்து அபிமந்திரித்தபிண்டமாய்உறட்டி (ருகூ) ஹௌம்என்னும் பீஜத்தை முப்பத்துமூன்றுதடவையுச்சரித்து சிரசுமுதல்பாதம்வரையில் உள்ளகரசரணாதி அவயவங்களைபாவிக்க (சூo) இதுதகனுப்லாவன அமிர்தாப்ரலானசம்ஸ்காரம் என்பதாம். இந்தசம்ஸ்காரத்தை கிரமமாய்விதியோடு செய்தல்வேண்டும் (சூக) ஜீவபாவநிவர்த்தியின் பொருட்டு அக்கினிபீஜத்தை உச்சிரித்து மூலாதாரத்திலுள்ள அக்கினியை எழுப்பி ஆத்மாவை (சூஉ) பொசுக்கப்பட்ட நூல்போல் தியானித்து பிரம்மரந்திரத்தினின்றுவரும் வெண்தாமரை வர்ணமுடையதாய் வியாபகமாயும் யோகபீடத்தோடுகூடியதாயுள்ள கமலத்தை (சூ௩) ஓம் என்னும் மந்திரத்தால் கீழ்முகமாககற்பித்து வம்என்னும்அமிர்தபீஜத்தால் அமிர்தத்தைபெருக்கி(சூச)திரும்பஉண்டானதாய்டாவித்துஉற்பவமுத்திரைகொடுக்கஅகோரஹிருதத்தையும்கியானசக்தியையும்பாவித்து(சூரு)திவ்யதேகமானசத்பாவகல்பனம்செய்க.இந்தபிரகாரம் சம்ஹாரகிரமபூதசுத்தியைசொன்னும்.இனிநிரோதானகிரமத்தை கேட்பாயாக(சூசு)காலின்பெருவிரல்தொடங்கிஇடுப்புவரையில்இரண்டுருபமாகவும்இதற்குமேல் பிரம்மரந்தரம்வரையில் ஒருருபமாகவும்(சூஎ)ஹிருதயம்,கண்டம்,தாலு,ப்ருமத்பம்,பிரம்மரந்தரம் இந்தஐந்துஸ்தானங்களில்(சூஅ)இடைபிங்கலைநாடிகளோடுகூடியதாய் ஹிருதயம் முதலிய ஸ்தானங்களில் அதோமுகமாயிருக்கிற பத்மங்களோடு (சூகூ) கூடினதாய் உள்ளே துவாரத்தோடுகூடினதாகவும் உள்ளிலும் வெளியிலும் அமிருததாரையோடு கூடிய

தாய் மேலான ஆகாசரூபமான (எ0) சக்தியை ஸூஷும்ணாநாடியாக தியானித்து ஹிருதயகமலத்திற்கு நடுவே ஹூம்காரம் ஜ்வலிப்பதாய் (எக)பாவித்து வாயுவை பூரகம்செய்து பின்கும்பகம் செய்துஹூம்காரத்தில்சித்தத்தைவைத்து வாயுவை மேலெழுப்பி (எஉ) ஹூம் பட் என்னும் மந்திரத்தால் அதோமுகமான பத்மமுகுலங்களை சோடிகாமுத்திரையால் மேன்முகமாக்கி (எ௩) அவிழ்க்கப்பட்டமுடிக்சுக்களையுடையதாய் விரிந்ததாய்பாவித்து வாயுவையடக்கி வலதுமூக்கினால் ரேசகஞ்செய்து (எச) திரும்பபூறகவாயுவினாலே ஹிருதயபங்கஜத்தை அடைந்திருப்பவனாய் விளங்குகிற நக்ஷத்திராகாரமாய் (எரு) சாந்தபீஜமயனாய் ஹிருதயஸம்புடிதமான சைதன்யனை ஹூங்காரத்தினுடைய சிகையில்வைத்து பீஜவிக்ரகனாய் (எசு) ஹூம் காரசிகையிலிருப்பவனாய் புர்யஷ்டகஸ்வரூபனாயிருக்கிற புருஷனை சூக்ஷ்மரூபியாகவும் பிந்துபூதனாகவும் (எஎ) நிராமயனாகவும் பாவித்துதிரும்பகும்பகம்செய்து வாயுவைமேலே எழுப்பி ஸம்ஹாரமுத்திரையினால் (எஅ) பிரம்மாதிகாரணதியாககிரமத்தால்ஒருஉத்காதத்தால்(எகூ) ஒம்ஹூம் ஹாம் (அ0) ஹம் ஹாம் ஹூம் (அக) ஆத்மனேநம: எனதலையில்பூஜித்து ஆத்மாவைக்கொண்டு சென்றுபோக்கியகர்மபோகத்தின்பொருட்டு துவாதசாந்தத்திலே சிவனிடத்திலே யோசித்தல்வேண்டும் (அஉ) இவ்வாறு பீஜத்தைஉச்சரிப்பதால் சிவத்தில்லயமானவனாய்சூக்ஷ்மதேகசுத்தியின்பொருட்டுவே துவிதமாய் (அ௩) அதனதன்காரணங்களில் தத்துவங்களை பிந்துபர்யந்தம் ஒடுக்குதல்வேண்டும் (அச) கந்தத்தில் பிருதிவியையும் ரசத்தில் அப்புவையும் ரூபத்தில் அக்னியையும் ஸ்பர்சத்தில் வாயுவையும் சப்தத்தில் ஆகாசத்தையும் (அரு) இந்த தன்மாத்திறைகளை தாமச அஹங்காரத்திலும் வாக் பாத பாணி பாயு உபஸ்தம் (அசு) இவைகளைராஜஸஅஹங்காரத்திலும் சுரோத்திரம் துவக்சக்ஷூஜிக்வை கிராணம் மனம் இவைகளை சாத்விக அகங்காரத்திலும் ஒடுக்கி (அஎ) இந்த மூன்று அகங்காரங்களையும் புத்தியில் ஒடுக்கி புத்தியை குணத்திலொடுக்கி குணத்தை பிரகிருதியில் ஒடுக்கி (அஅ) பிரகிருதியை ராகத்திலொடுக்கி ராகத்தை வித்தையிலொடுக்கி வித்தையை கலையிலொடுக்கி கலையை மாயையிலொடுக்கி மாயையை சுத்தவித்தையிலொடுக்கி (அகூ) சுத்தவித்தையை மஹேசரிலொடுக்கி மஹேசரை சதாசிவத்திலொடுக்கி சதாசிவத்தை

சத்தியிலொடுக்கி சத்தியை சிவத்திலொடுக்குதல் வேண்டும் (௯௦) சிவபெருமானுக்கு மேலாயுள்ளவரும் சமமாயுள்ளவரும் இல்லை இவர் அப்ரமேயர் அனிர்தேசியர் ஆறுகுணங்களால் நிறையபெற்றுள்ளவர் (௯௧) இது சைவக்கிரமமாகும சாக்தம் குண்டலினிவரை லயஸ்தானமாகும். சைவம் சைவத்தாலும் சாக்தம் சாக்தத்தாலும் செய்யதகுந்தது. (௯௨) இதற்விரோதமாய்செய்வாராகில் கர்த்தா கர்மா இவ்விரண்டும்நாசத்தை அடையும். இதில் கூறியபடியே சூக்ஷ்மதேகசுத்தியை செய்க (௯௩) காரணத்தினின்று சூக்ஷ்மமுண்டாயின சூக்ஷ்மத்தினின்று ஸ்தூலமுண்டாயின இம்மூன்றும் ஒன்றைவிட்டொன்று பிரியாதுடைமையாதல் பற்றி இம்மூன்றும் ஒன்றேயென்பது திண்ணம் (௯௪) சூக்குமசுத்திசெய்தால் ஸ்தூலசுத்திவேண்டுவதில்லை மோஹத்தால்செய்வாராகில் சூக்குமசுத்திபயனற்றதுவாகும் (௯௫) சூக்குமம்தோஷமானால் ஸ்தூலமும் தோஷமாகும். ஸிருஷ்டி ஸ்திதி ஸங்காரம் இவைகளுக்கு ஸ்தூலதேகசுத்தியும் (௯௬) திரோதானத்திற்கு சூக்குமதேகசுத்தியும் அநுக்கிரஹத்திற்குஸ்வரூபஸாக்ஷாத்காரமும் இவ்வாறுள்ள பேதங்களால் பூதசுத்திசெய்தல்வேண்டும் (௯௭) இதுவரை திரோதானக்கிரமபூதசுத்தியைச்சொன்னோம். இனி அநுக்கிரகக்கிரமத்தைக்கேட்பாயாக தனதுதேகம்பிரதிவிமுதலியபஞ்சபூதங்கள்விரையாகவும் (௯௮) பிரும்மவிஷ்ணுக்களால் முளையுண்டானதாகவும் ராகம் த்வேஷம் தர்ம்மம் அதர்ம்மம்மோகங்கள்வேறாகவும் (௯௯) வித்தை அவித்தை அதிபதிகளாய்ரக்ஷிக்கிரதாகவும் கலைமுதலான தத்வங்கள் ஸாரமாகவும் அந்தமாத்திரைகளான இந்திரியங்கள் (௧௦௦) கிளைபககக்கிளைகளாகவும் விஷயந்துளிராகவும்பிரபஞ்சம்புஷ்பமாகவும்புத்திவியவஸாயிகள் (௧௦௧) ஸங்கல்பம் பலமாகவும் அதின்ரஸம்புஜிக்தற்குறியதாகவும் புருஷருகிறபக்ஷிபுஜிக்கிரதாகவும மேலுங்கீழுமான ஆலமரமாக தியானித்து (௧௦௨) பிங்கலையால்முற்பாதி பூரகவாயுவினால் பூரக(௧௦௩) கும்பகஞ்செய்து மூர்த்தாமுதல் பாதமவரை கட்டைவிரல் அணிவிரலைச்சேர்த்து மற்றவிரல்களைநீட்டி (௧௦௪) ஓம்ஹாம் ஆகாசவாயு அக்னி ஆபபிரதிவ்யாதி (௧௦௫) பஞ்சபூதபீஜாப்யாப்நமஃ எனபூஜித்து தலைமுதல் பாதவறையில் துடைத்தல் வேண்டும்(௧௦௬) கையை அஞ்சலிசெய்து ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்னியும் (௧௦௭) அக்னியினின்றுஜலமும் ஜலத்தினின்[illegible] ப்ருதி

விரும் பிரதிவிமுதல் ஆகாசமிறுதியாக ஒன்றுசேர்ந்து விரையாக வும்பாவித்து (௧௦௮) ஜாதிகுலம்முதலியவற்றிற்குஇடமாயுள்ளது இந்தஸ்தூலதேகமென தியானித்து பிரதிவிஸ்தானத்தில் பீஜமு த்திரை (௧௦௯) காட்டுக திரும்பபூரகமுற்பாதியால் கும்பகஞ்செ ய்து (௧௧௦) வலதுகைஅணிவிரலால் தொப்புளில் ஓம்ஹாம பிரும் மவிஷ்ணுப்யாம உத்பின்னாங்குராய நமஃ (௧௧௧) எனப் பூஜித்து அஞ்சலிசெய்து தியானிக்க (௧௧௨) இந்திரியங்களுக்குமபூதமா கவும் இதை யோனியாகிய க்ஷேத்திரத்தில்வைத்து பிரும்மா ஸி ருஷ்டிப்பதாயும் விஷ்ணுபரிபாலிப்பதாகவும் (௧௧௩) பின்னமற்ற மூலையாக பிரும்மவிஷ்ணுக்களை தியானிக்க ரேசகபிற்பாதிகும்ப கஞ்செய்து (௧௧௪) இரகைகட்டவிரலே பிரதவிஸ்தானத்தில் வைத் துஓம் ஹாம் ராகத்வேஷதர்ம்ம (௧௧௫) அதர்ம்மமோஹமூலாய நமஃ எனப்பூஜித்து அஞ்சலிசெய்துதியானிக்க (௧௧௬) ஓம் ஹாம் ஹௌம் மாயாஸ்தானபீஜமாகவும் கர்ம்மமூலமாகவும் தர்ம்மா தர்மத்தையும்பாவித்து (௧௧௭) ராகத்வேஷமோஹம் உபமூலமாக வும் இவ்வாறுமூலோபமூலங்களைபாவிக்க (௧௧௮) பூரகத்தின்பாதி கும்பஞ்செய்து ஹிருதயத்தில் ஓம்ஹாம் (௧௧௯) வித்யாவித்யாதி பபரிபாலிதாயநமஃஎன மத்யமவிரலால் நியஸிக்க (௧௨௦) அசுத்த மான அவித்தை மாயாகர்ப்பத்திலிருந்ததாய் வித்தைபரமெனவும் இந்தபறை பரிபாலிப்பதாகவும் (௧௨௧) பாவிக்கதிரும்பமுற்பாதி கும்பகஞ்செய்துஓம்ஹாம் (௧௨௨)கலாதிதத்வஸாரேப்யோநமஃ என கழுத்தில் தர்ச்சனிவிரலால் நியசித்துதியானிக்க (௧௨௩) நடக் கிறது நடக்கவேண்டியது நடக்கப்போகிறது இம்மூன்றுமுடையக லாதத்வம் விருக்ஷம் அசையாதிருத்தர்போட்டு ஸாரமாகபாவித்த ல்வேண்டும் (௧௨௪) கும்பகமுற்பாதிசெய்து ஓம் ஹாம் (௧௨௫) தன்மாத்ரேந்திரியசாகோபசாகாபநமஃ எனபுருவநடுவில் தர்ச்சனி விரலால்நியஸிக்க (௧௨௬) தன்மாத்ரேந்திரியம் ஞானங் கர்மமென இரண்டுபிரிவாகும். இதை சாகையாகவும் உபசாகையாகவும்தியா னிக்க (௧௨௭) கும்பகமுற்பாதிசெய்து ஓம் ஹாம் (௧௨௮) விஷ யாலோசனபல்லவாயநமஃ என தர்ச்சனிவிரலால் நெற்றியில் நியசி க்க (௧௨௯) பல்லவம்பிரதுரூபம் சப்தமுதலியவற்றிற்கு விஷயமா யுள்ளது ஸேர்ந்துளிரோடுகூடியதாய் தியானிக்க (௧௩௦) திரும்ப கும்பகமுற்பாதிசெய்து ஓம்ஹாம்புத்தயேநமஃ (௧௩௧) கட்டைவி ரலால் சிரசில்நியசித்த வியவஸாயத்தில் ஸங்கல்பித்த பல்மானது

புத்தியின் ஸ்வரூபமெனவும் (௧௩௨) இது ஆத்மாவுக்குதர்ம்மமாயுள்ளதெனவும் இதை சிரஸில் பாவிக்க திரும்பகும்பக முற்பாதி செய்து (௧௩௩) ஓம் ஹாம் புருஷாயநம: எனகட்டைவிரலால் சிரசில் நியசிக்க (௧௩௪) ஆத்மாபக்ஷிரூபமாகவும் புசிக்கத்தக்கதை புசித்தற்குறியது புருஷனென (௧௩௫) இவ்வாறு ஆலமரமாக தியானிக்க பூரகமுற்பாதிசெய்து ஓம் ஹ்லாம ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாமென ஐந்துமுறை மெள்ளவுச்சரித்து நெற்றியிலஞ்சலிசெய்து (௧௩௬) பத்திரம்புஷ்பமில்லாததாய் ஆலமறத்தை அசைவற்றதாய்பாவிக்க பூரகபிற்பாதி கும்பகஞ்செய்து (௧௩௭) ஓம் ஹ்லீம் ஹ்லீம் ஹ்லீம் ஹ்லீமென மந்த்ரோச்சாரமாய் நான்குமுறையுச்சரித்து முன்போல் அஞ்சலிசெய்து ஜலத்தால் நனைக்கப்பட்டதாய் எலை புஷ்பத்தோடு கூடியதாய் (௧௩௮) பாவிக்க கும்பகமுற்பாதி செய்து வித்யாகலாபீஜம் ஓம் ஹ்லூம் ஹ்லூம் ஹ்லூமென மந்த்ரோச்சாரணமாய் மும்முறையுச்சரிகது(௧௩௯)வலதுகால் கட்டைவிரலிலிருந்து உண்டாகும் காலாக்னியால் உலர்ந்தபத்திரம்முதலியபேதமற்று (௧௪௦) பொசிங்கியதாய் தியானித்து பாதத்தின்பெருவிரல்முதல் சிரசுவரை கையால் துடைத்தல்வேண்டும் (௧௪௧) பின்ரேசகபாரார்த்தஞ்செய்துகும்பகஞ்செய்துசாந்திகலாபீஜமிரண்டுதரம்(௧௪௨)உச்சரித்துமுன்பொசிக்கிய சாப்பலைபத்துத்திக்கிலும் காற்றினல் சோடிகாமுத்திரையாலும் (௧௪௩) அஞ்சலியாலும்சிரசைச்சுற்றிலும் பரந்ததாய் தியானித்து ரேசகபிர்பாதிசெய்து கும்பகஞ்செய்து (௧௪௪) ஓம் ஹ்லம்என ஒருமுறையுச்சரித்துசாந்தியதீதகலாயைநம:என திக்குக்களில் வியாபித்துள்ளபஸ்மத்தைஆகாசத்தில்சேர்த்து (௧௪௫) சுத்தஸ்படிகநிரமாய் நிர்மலமான ஆகாசம் தலையிலிருப்பதாய்தியானித்து சிரஸுக்குமேலஞ்சலிசெய்து (௧௪௬) யாவும் சூன்யமாய் பாவித்து இந்த ஆகாசத்துள்ளடங்கிய சிவாபின்னமான ஆத்மாவைசிவனிடத்தில்லயிப்பித்து (௧௪௭) பின்துநாதத்தைஅடைந்து எல்லாபாதைகளிலும்நின்றுநீங்கி ஓம் ஹாம்சிவாயவௌஷட்என(௧௪௮)சிகையினின்று அதோமுகமாயிருக்கும்பத்மத்தில் அமிருதம்பெருகிவருவதாய்தியானித்து இதினுல் உள்ளும்புரம்பும் (௧௪௯) நனைந்ததாய்பாவித்துஹிருதயக்மலத்தில் அகாரஉகார (௧௫௦) மகாரம்முதலிய ஓம்அம்உம்என சுத்தவித்யாத்மகஆஸம் (௧௫௧) மூர்த்திமூலத்தால் கட்டைவிரலையும் அநாமிகைவிரலையும் ஒன்றுசேர்த்துநியஸித்து ஆவாஹிக்க (௧௫௨) சுத்த

ஞோபவீதமுடையவளாய் தியானித்து ஆவாஹித்து ஸ்தாபனாதி முத்ரைகாட்டி (௧௨௪) ஒன்பது தர்பையினால் செய்த கூர்ச்சத்தை பூதேவி சிரசில்போட்டு சந்தன அக்ஷதபுஷ்பங்களாலும் (௧௨௫) தங்கமாங்கல்யங்களினாலும் அலங்கரித்து நைவேத்திய தூபதீபார்க்யம்கொடுத்து (௧௨௬) பூதேவிமூர்த்தாவக்த்ரம் முகம் ஹிருதயம் குய்யம் பாதம் இவைகளை நமோந்தமாக பூஜித்து ஹிருதயாதி ஆறு அங்கங்களையும் (௧௨௭) பூஜிக்கு பூதேவிக்கு வெளியே மஞ்சள்பொடியினால் விருத்தாகாரமாய் சுற்றிலும் போட்டு (௧௨௮) கிழக்குமுதல் ஈசானம்வரை எட்டு தளங்கள் கல்பித்து இந்திராதி லோகபாலர்களை (௧௨௯) அவரவர்கள் தியானத்தோடு பூஜித்து பூதேவியினுடைய கழுத்தில் ஸ்வர்ணமாங்கல்யத்தை அஸ்திரமந்திரத்தினால் கட்டி இவர்கள் யாவர்க்கும் நைவேத்திய தூபதீபார்க்யங்கொடுத்து (௧௩௧) ஏ லோகபாலர்களே நீங்கள் இய்யாகத்தின்பொருட்டு மிருத்திகையை எடுக்க எனக்கு உங்கள் அனுக்ஞை வேண்டுமென (௧௩௨) பிரார்த்தித்து பூதேவிக்கு தலைப்பக்கத்தில் நெல்லரிசிகளைப் பறப்பி பத்மமண்டலம் போட்டு (௧௩௩) பாசுபதாஸ்தரகும்பம் கர்ணிகாமத்யத்தில்வைத்தும் இதற்கு இடதுபக்கத்தில் அஸ்திரேஸ்வரீ கும்பத்தையும் ஸ்தாபித்து (௧௩௪) இதற்கு முன்னால் நெல்லரிசிகளைப் பரத்தி பத்மமண்டலம்போட்டு இதன்மேல் தங்கத்தால்செய்த மண்வெட்டி ஒன்று வைத்து (௧௩௫) சந்தனாக்ஷத புஷ்பவஸ்திர கூர்சாதிகளால் அலங்கரித்து அஸ்தர கும்பத்தை பூஜிக்க (௧௩௬) சாமான்யார்க்யஜலத்தால் பாசுபதாஸ்தரகும்பத்தை ப்ரோக்ஷித்து நிரீக்ஷணாதி ஐந்துசுத்திகள்செய்து (௧௩௭) சலாசனம் பூஜித்து இதற்குமேல் ஓம் ஹாம் பாசுபதாஸ்தர ஆஸநாய நமஃ ஓம் ஹாம் பாசுபதாஸ்தரமூர்த்யேன நமஃ ஓம் ஹாம் பாசுபதாஸ்தராய நமஃ என பூஜித்து (௧௩௮) பாசுபதாஸ்தரம் சந்திரவர்ணம் ஐந்து சிரஸ் வரம் அபயம் நாகம் சூலம் கத்தி டங்கம் (௧௩௯) டமருகம் பாசம் கபாலம் அக்னி இவைகளை வலமிடக்கைகளில் உடையதாய் (௧௪௦ உக்ரஜ்வாலையோடுகூடியதாய் விபூதி ருத்திராக்ஷம் அணிந்துள்ளதாய் தியானித்து ஆவாஹித்து நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்து (௧௪௧) இதற்கு இடதுபக்கத்தில் ஓம் ஹாம் பாசுபதாஸ்தரேஸ்வர்யைநமஃஎனப்பூஜித்து அந்தரேஸ்வரிவெண்மைநிறம் செந்தாமரைப்புஷ்பத்திற்கு சமானமான கண்கள்(௧௪௨)ஐந்துசிரஸ் பு

த்துகைபத்துகைகளிலும்தாமரைப்பூஎல்லா ஆபரணங்களும் அணிந்தவளாய் (௧௪௩) தியானித்து நைவேத்திய தூபதீபார்க்யம் கொடுத்து மண்வெட்டியின் தண்டனுனியில்மாவிலே(௧௪௪) சந்தனம் அக்ஷதை வஸ்திரபுஷ்பகூர்சாதிகளால் அலங்கரித்துகிழக்குமுகமாக வைத்து(௧௪௫) சாமான்யார்க்யஜலத்தால் ப்ரோக்ஷித்து நிரீக்ஷணாதி சுத்திசெய்துதைலபஞ்சாமர்தாதிகளாலே(௧௪௬) அபிஷேக திரவியங்களோடும் அபிஷேகித்து சுத்தஜலத்தால்அபிஷேகித்து பாசுபதாஸ்தரகும்பம்(௧௪௭)அஸ்திரேஸ்வரீகும்பஜலத்தால்அபிஷேகித்துசந்தனாக்ஷதவஸ்திரபுஷ்பகூர்சாதிகளால் அலங்கரித்து (௧௪௮) தண்டமூலத்தில் ஓம் ஹாம் பூதேவ்யை நமஃ எனப் பூஜித்து பூதேவி பச்சநிறம் ஒருமுகம் இரண்டுகண்கள் (௧௪௯) வராபயம் எல்லா ஆபரணங்களும் அணிந்தவளாய் தியானித்து தண்டநடுவில் ஓம் ஹாம் வருணாயநமஃ எனப் பூஜித்து (௧௫௦) வருணன் பால்நிறம் இரண்டு கைகள் ஒருமுகம் சுத்தி பாசம் எல்லா ஆபரணங்களும் அணிந்தவனாய் தியானித்து (௧௫௧) தண்டனுனியில் ஓம் ஹாம் அந்தரிக்ஷாய நமஃ எனப் பூஜிக்க அந்தரிக்ஷம் புகைநிறம் எல்லாத்திற்கும் ஆதாரமாயுள்ளது (௧௫௨) சப்தகுணமாயுள்ளது பார்க்கத்தகாதது பிரமேயமற்றதாய் தியானித்து இவர்கள் யாவர்க்கும் நைவேத்திய தூபதீபாதிகள் கொடுத்து (௧௫௩) மண்வெட்டியை ஓம் ஷாம் வீரவல்யை நமஃ எனப் பூஜித்து கையில் ஓம் யாம் மேருவே நமஃ எனப் பூஜித்து வளயத்தில் ஓம் ஹாம் வாசுகியே நமஃ எனப் பூஜித்து (௧௫௪) மண்வெட்டி வீரவல்லியாயாகவும் ஹஸ்தம் மேருவுக்குச் சமானமாகவும் வளயம் வாசுகியாகவும் எல்லா ஆபரணங்களும் அணிந்துள்ளதாய் (௧௫௫) தியானித்து நைவேத்திய தூபதீபம் கொடுத்து ஹே பூமியை தரித்துள்ளவளே எனக்கு சுபமாக மிருத்திகையை (௧௫௬) கிரஹிப்பதற்கு கர்மத்தின்பொருட்டு அனுஞை கொடுக்கவேண்டுமென பிரார்த்தித்து பள்ளம்தோண்டும் தோஷநிவர்த்தியின்பொருட்டு இதற்கு முன் (௧௫௭) நெல்லரிசிகளை பரப்பி எட்டுதள கமலம்போட்டு கர்ணிகையின் நடுவில் ஒரு கும்பம்வைத்து (௧௫௮) நான்கு கும்பங்களை நான்குமூலையிலும் வைத்து தெற்குவடக்கில் இரண்டுகும்பம் வைத்து (௧௫௯) சந்தனம் அக்ஷதை புஷ்பம் தங்கப்பூணல் தங்கத்தாமரைப்பூ வஸ்திரம் கூர்சம் முதலியவற்றால் அலங்கரித்து (௧௬௦) சாமான்யார்க்ய ஜலத்தால் கும்பங்களை ப்ரோக்ஷித்து நிரீக்ஷணாதி சுத்திகள்செய்து (௧௬௧) சலாஸனம் பூஜித்து மத்யகும்ப

த்தில் ஓம்ஹாம் சுத்தோதகார்ணவாயநம: எனப்பூஜித்து (௧௬௨) சுத்தார்ணவம் வெண்மைநிறம் நீலோத்பலம் தாமரைப்பூ வலமிடக் கைகளில் உடையதாய் வெள்ளை வஸ்திரம் தரித்ததாய் (௧௬௩) த்யானித்து ஈசானகும்பத்தில் ஓம்ஹாம் லவணார்ணவாயநம: எனப்பூஜித்து லவணார்ணவம் மேகநிறம் அக்ஷமாலை கண்டிகை (௧௬௪) ஜ்வாலாகேசம் இரண்டு குணங்களோடு கூடியதாய் த்யானித்து ஆக்னேயகும்பத்தில் ஓம்ஹாம் இக்ஷ்வார்ணவாயநம: (௧௬௫) இக்ஷு தாம்ப்ரநிறம் வலக்கை ஞானமுத்திரை இடக்கைகமண்டலம் எல்லா ஆபரணங்களும் அணிந்ததாய் த்யானித்து (௧௬௬) இதற்கு மேற்கு கும்பத்தில் ஓம் ஹாம் சுரார்ணவாயநம: எனப்பூஜித்து சுரார்ணவம் சியாமளாகாரம் சக்தி கேடயம் (௧௬௭) பத்மாஸனத்தில் இருப்பதாய் எல்லா ஆபரணங்களும் அணிந்ததாய் த்யானித்து நிருதிகும்பத்தில் ஓம் ஹாம் கிருதார்ணவாயநம: எனப்பூஜித்து (௧௬௮) கிருதார்ணவம் பசுமைநிறம் கண்டாநாகம் ஒருமுகம் இரண்டுகண்கள் எல்லா ஆபரணங்களும் அணிந்ததாய் (௧௬௯) த்யானித்து வாயு கும்பத்தில் ஓம் ஹாம் ததியர்ணவாயநம: எனப்பூஜித்து ததி வெண்மைநிறம் பத்மம் அக்ஷமாலை (௧௭௦) ஒருமுகம் இரண்டு கண்கள் ஜடாஜூடமுடையதாய் த்யானித்து இதற்கு கிழக்கு கும்பத்தில் ஓம்ஹாம் க்ஷீரார்ணவாயநம: எனப்பூஜித்து (௧௭௧) க்ஷீரார்ணவம் தங்கநிறம் கத்திசக்கரம் முடிந்ததலை பத்மாஸனத்திலிருப்பதாய் த்யானித்து (௧௭௨) இவர்கள்யாவருக்கும் நைவேத்யதூபதீபங்கள் கொடுத்து ஏசமுத்ராஜரே கெல்ஷிய தோஷத்தை சமனமடையும் பொருட்டு (௧௭௩) கிருபை புரிந்து கிரமமாய் உத்தாரணம் செய்தல் வேண்டுமென பிரார்த்தித்து இதற்குகிழக்கே நெல்லரிசிகளைப்பரப்பி எட்டுதலங்களோடுகூடிய பத்மமண்டலம் போட்டு (௧௭௪) நெல்லு அரிசி, கோதுமை, துவரை, எள்ளு, பாசிப்பயறு உளுந்து முதலிய தானியங்களை நிறைத்த கும்பம் ஒன்று எடுத்து (௧௭௫) பாலைப்பூரித்து சந்தனம் அக்ஷதை வஸ்திரம் மாவிலை புஷ்பம் கூர்சம் முதலியவைகளால் அலங்கரித்து (௧௭௬) கர்ணிகைக்கு நடுவே வைத்து சாமான்யார்க்யஜலத்தால் ப்ரோக்ஷித்து (௧௭௭) நிரீக்ஷணாதி சுத்திசெய்து சலாசனம் பூஜித்து சோமனை (௧௭௮) ஓம்ஹாம் ஸோமாசநாயநம: ஓம் ஹாம் சோமமூர்த்தியேநம: ஓம்ஹாம் ஸோமாயநம: இரண்டுகைகள் இ

ரண்டுகண்கள் எல்லாலோகங்களிலும் இருப்பவராய் (௧எ௯) இர ண்டு கையில் (௬௰) பக்கத்தில் விரைகளை உடையவராய் ஆகாச த்தில் திவ்யரூபத்தினால் எல்லா லோகங்களையும் பரிபாலிப்பவரா ய் (௧அ0) எல்லா ஆபரணங்களும் அணிந்தவராய்த்யானித்து நை வேத்யதூபதீபார்க்யம் கொடுத்து (௧அ௧) இதற்குமுன் அக்னிகா ர்யம் செய்க அக்னி கர்யத்திற்கு குண்டம் யோன்யாகிருதியாய் போடுதல்வேண்டும் பாலாக்கினிவரை அக்னியை சமஸ்காரம் செ ய்து பாலாக்னிஹிருதயத்தில் (௧அ௨) பூதேவியை மூலமந்திரத் தால் ஆவாஹித்து பூதேவி மூர்த்த முகம் ஹிருதயம் குக்யம்பா தம் (௧அ௩) சடங்கங்களினால்ஆயிரம் இதில் பாதி இதிலும் பாதி கணக்கினால் ஹோமம் செய்து (௧அ௪) இவ்வாறே எல்லாதிரவிய ங்களையும் ஹோமம் செய்து பூர்ணாகுதி ஓம் ஹாம் பூதேவி ஹிரு தயாய (௧அ௫) வௌஷட் என பூர்ணாகுதிசெய்க பாலாக்னிஞான் யாகத்தில் உன்னால் பரிசுத்தமான (௧அ௬) மண்ணை கிருஹிபபத ற்கு அநுஞ்ஞை தருதல்வேண்டுமென பிரார்த்தித்து பரிசாரகனை அழைத்து அவன்கையை சிவகாரமாக்கி (௧அஎ) மண்வேட்டியை அவன் கையில் கொடுத்து பூதேவியின் வயற்பிரதேசத்தில் மண் ணை ஐந்து தடவை (௧அஅ) அல்லது மூன்றுதடவை பிராஸாத ம ந்திரம் உச்சரித்து மண்வெட்டியால் கிரஹித்து தங்கம் முதலிய தாம்பாளத்தின் நடுவே ஹிருதயமந்திரத்தால் வைத்து (௧அ௯) ப ட்டினால் மூடி சந்தனாக்ஷதபுஷ்ப கூர்சம் முதலியவற்றால் அலங்க ரித்து ஆசாரியர் தர்ப்பாக்கிரத்தால் மிருத்திகா பாத்திரத்தை தொட்டுக்கொண்டு (௧௯0) மூலமந்திரம் ௧0அ அல்லது யதாசக்தி ஜபித்து பரிசாரகன் சிரஸில் (௧௯௧) பீதாம்பரம் முதலியவற்றால் அலங்கரித்து மிருத்திகாபாத்திரத்தைஅசையாமல் வைத்து௧௯௨ மிருத்திகை எடுத்த ஸ்தானத்தை அன்ய மிருத்திகையால் நிறை த்து முன் பூஜித்த தான்ய கும்பத்தில் உள்ள (௧௯௩) தான்யங்க ளை பூமியில் புதைத்துஏழுசமுத்ரகும்பங்களை அபிஷேகம்செய்து சந்தனாக்ஷதபுஷ்பங்களால்(௧௯௪)அலங்கரித்து பூமிதேவியைபிரா ர்த்திக்கவாராக ரூபம் எடுத்து விஷ்ணுவானவர் நூறுகைகளால் (௧௯௫) உயரக்கொணர்ந்த பூமியை தரித்து இருக்கிற ஏ லோகரூ பியே மிருத்திகையை என்னால் எடுத்த தோஷத்தை நீக்கி முன் போல் நீ செய்துகொள்ள (௧௯௬) வேண்டுமென பிரார்த்தித்து ப

ராங்முகஅர்க்யம் கொடுத்து (௧௯௭) விசர்ஜனம்செய்து யானையி லேனும் பல்லாக்கிலேனும் பாத்திரத்தைவைத்து (௧௯௮) இல்லா விட்டால் பரிசாரர்கள் சிரஸில் வைத்து வேதகோஷத்தோடும்மங் களவாத்யங்களோடும் நர்தனம்கீதம்வாத்யம்(௧௯௯) சந்த்ரப்ரபை சூர்யப்ரபை சாமரம்விசிரி பேரிதக்கயவாத்யங்களோடும் வீதி ஆ லயம்(உ00)இவைகளை ப்ரதக்ஷணம்செய்து யாகசாலையில் சென்று சுத்தமானபூமியில்வைத்துமைய்வேத்யாதிகள்செய்க(உ0௧)இந்தப் பிரகாரம் பூஜிப்பது உத்தமம் ஒன்பதுகண்டமாய் பிரித்து பூஜிப் பதைவிட்டு அதிபதியை மாத்திரம் பூஜிப்பதுமத்யமம் (உ0உ) பூ தேவியை மாத்திரம் பூஜிப்பது அதமம் (உ0௩) ஆவர்த்தம் அநா வர்த்தம் புநராவர்த்தம் முதலிய பிருதிஷ்டைகளில் உத்தமமாய் செய்தல் வேண்டும் (உ0௪) உத்சவத்தில் மத்யமமாய் செய்தல்வே ண்டும் தீக்ஷையில் அதமமாய் செய்தாலும்அந்தந்தகாலத்திற்கு த க்கவாறு மிருத்ஸங்காரஹணம் செய்க இதற்கு விரோதமாய் செய் வாராகில் ராஜ்யம் நாசத்தையடையும் (உ0௫) இதனால் சொன்ன படிசெய்க இதன்பின் க்ஷௌரகர்மத்தை சொல்லுகிறேன் கேட் பாயாக (உ0௬) இவ்வாறு காமிகாகமம் பிருதிஷ்டாதந்திரம் கிர் யாபாதம் மிருத்ஸங்காரஹணவிதியென்கிற உ௬-வது படலம் முற் றிற்று ௯லோகம் உ0௬. ஆக ௪0எ௬

ஆச்சார்யக்ஷௌரகர்மம் கூறப்படுகிறது

ரக்ஷாபந்தனத்திற்கு அங்கமாய் க்ஷௌரம்சொல்லப்பட்டது அங்குரார்ப்பணத்திற்குமுன் அந்ததினத்திலேயே க்ஷௌரம் செய்து கொள்ளல்வேண்டும் (௧)இதற்குமுதல் நாளும் மறுநாளிலும் செ ய்துகொண்டு ரக்ஷாபந்தனம் செய்துகொள்ளல் கூடாது மோகத் தால் செய்வாராகில் மழையில்லாது போய்விடும் (உ) தேவகார்ய த்திலும் பிதுருகார்யத்திலும் க்ஷௌரத்திற்கு காலமும், பக்ஷமும் தினம் முதலிய நல்லதைப் பார்க்கவேண்டுவதில்லை மேலே கூறிய மங்களகார்யங்களுக்கு எல்லாகாலங்களும் உத்தமமேயாகும் (௩) பிராதக்காலத்தில் க்ஷௌரமும் இராத்திரியில் அங்குரார்ப்பணமும் செய்தல்வேண்டும் அன்யதினத்தில் க்ஷௌரம் செய்துகொண்டு ரக்ஷாபந்தனம் செய்துகொள்ளல்கூடாது (௪) எந்த இடத்தில் ஆ லயம் இருக்கிறதோ அந்தஸ்தலத்தில் க்ஷௌரம் செய்துகொள்ள

ல்வேண்டும் அன்யகிராமத்தில் செய்துகொண்டு வருதல் கூடாது (௫) ரக்ஷைக்கு அங்கமான க்ஷௌரம் செய்துகொள்ளாவிட்டால் அந்த கர்மம் பயனற்றதாகும் ஆசார்யன் அர்ச்சகன் ஸ்தானீகன் பாசகன் (௬) பரிசாரகன், சாதகன், ருத்ருக்கள் இவர்கள் யாவரும் க்ஷௌரம் செய்துகொள்ளல்வேண்டும் போதகம் ஸர்வஸாதகம (௭) இவ்விருவரும் க்ஷௌரம் செய்து கொள்ளாவிட்டாலும் தோஷமில்லை நதிகரை, குளத்தக்கரை, சுத்தபிரதேசம் மநோக்யமான இடம் (௮) இவைகளில் பிரபைகல்பித்து அலங்கரித்து நெல்லு அரிசிகளைப் பறப்பி மனு சூத்ரகிரமத்தால் (௯) பதமாக்கி நடுவிலுள்ள ஒன்பது பதங்களை ஒன்றாக்கி அஷ்டதள பத்மம் போட்டு (௧0) வேதகோஷத்துடனும் மங்களவாக்குடனும் நிருத்தம் கீதம் வாத்யம், குடை சாமரம் சூர்யபிரபை சந்திர பிரபை (௧௧) மயில்தோகை விசிறி பனையோலை விசிறி பட்டுகர் முதலிய எல்லா சம்பரமங்களோடும் (௧௨) பூஜாத்ரவ்யங்களோடும் ஆசார்யர்களோடு கிராம பிரதக்ஷணம் ஆலயபிரதக்ஷணம் (௧௩) மகாவீதி உபவீதி இவைகளை பிரதக்ஷணம் செய்து முன் அலங்கரித்துள்ள பராபாஸ்தானத்தை யடைதல்வேண்டும் (௧௪) கூர்மாஸனத்திலேனும் சுகாஸனத்திலேனும் வடக்குநோக்கி உட்கார்ந்து சாமான்யார்க்ய ஜலத்தால் ப்ரோக்ஷித்து நிரீக்ஷணாதி (௧௫) ஐந்து சுத்திகள் செய்து சங்கல்பித்து விக்னேஸ்வரபூஜை செய்து புண்யாகவாசனம் செய்து (௧௬) அந்த ஜலத்தால் ப்ரோக்ஷித்து அங்கே போட்டுள்ள பத்மமண்டலத்தில் சலாஸனம் பூஜித்து (௧௭) அதன்மேல் ஓம் ஹாம் வ்ருஷபாஸனாய நம: ஓம் ஹாம் விருஷபமூர்த்தயே நம: ஓம் ஹாம் விருஷபாய நம: எனப் பூஜித்து ஒரு முகம் இரண்டுகண்கள் நான்குபாதங்கள் (௧௮) வெண்மைநிறம் வாலுடன்கூடியதாய் எல்லா ஆபரணங்களும் அணிந்ததாய் தியானித்து நைவேத்யதூபதீபார்க்யம் கொடுத்து (௧௯) மண்டலத்திற்கு மேல் கூர்மாஸனம் அல்லது சுகாசலத்திலேனும் வடக்குநோக்கி ஆசார்யர் உட்கார்ந்து (௨0) இதைச்சுற்றிலும் எல்லா ரித்விஜர்களும் உட்கார்ந்து ஆசாரியருக்கு இடப்புறத்தில் ஏழு தர்ப்பைகள் பரத்தி (௨௧) தங்கம் முதலியதால் செய்துள்ள கத்தியை அதன்மேல்வைத்து சாமான்யார்க்யஜலத்தால் ப்ரோக்ஷித்து (௨௨) நிரீக்ஷணாதிசுத்தி செய்து அஸ்த்ரமந்திரத்தால் பூஜித்து நைவேத்யதூபதீபம கொடுத்து (௨௩) எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்

நாநம் செய்து சுத்தமாயுள்ள ஆப்பட்டனை அழைத்து சந்தன புஷ்ப வஸ்திர பட்டுக்களால் (௨௪) அலங்கரிக்கப்பட்ட அம்ப ட்டனை நிரீக்ஷணாதி சுத்திசெய்து வாய்பேசாதிருக்குபடிம் (௨௫) சொல்லி விபூதிகொடுத்து உத்தோளனம் செய்து கொள்ள சொ ல்லி அவன்கையில் கத்தியைகொடுத்து க்ஷௌரம் செய்ய அனும தி கொடுத்தல் வேண்டும் (௨௬) குடுமியை க்ஷௌளம் செய்யாது விட்டுவிட்டு மற்றுள்ள சிரஸ், கன்னம் மீசை, தாடி, கழுத்து (௨௭ கைமூல முதல் முழங்கைவரையிலும் மணிக்கட்டுக்குகீழ் அஸ்தம் முழுதும் (௨௮) காது மார்பு பாதம்வரைக்ஷௌரம்செய்துகொள் ளல் வேண்டும் இதற்கு விரோதமாய் செய்துகொண்டால் ராஜா, ராஜ்யம் நசித்துவிடும் (௨௯) தசவிதஸ்நாநம் அல்லது ஷட்விதஸ் நாநம் விதிபத்தாய் செய்து சுத்தவஸ்திரத்தால்தலைதுவட்டி (௩0) பட்டு முதலியவை இடையிற் கட்டி ரத்னாதிகள் இழைத்த குண் டலம் தங்கப்பூணல் ருத்ராக்ஷம் விபூதி தாரணம் (௩௧) இவை மு தலியவற்றால் அலங்கரித்துக்கொண்டு பரமபரமென்னும் பேதமா யுள்ள சாமான்ய விசேஷசந்திகள் இரண்டையும் செய்து (௩௨) சந்தினாக்ஷதபுஷ்பமாலைகளால் அலங்கரித்து முன்சொன்ன வாத் யகோஷம் எடுபிடிகளோடு சர்வசாதகம் (௩௩) போதகமூர்த்தி யால் இவர்களை பல்லக்கிலேத்தி கிராம ப்ரதக்ஷின ஆலய பிரதக்ஷ ணங்களோடே ஆலயத்துள் பிரவேசித்தல் வேண்டும் இந்தபிரகா ரம் க்ஷௌரகர்மம் செய்து கொள்க இதன்பின் அங்குரா விதியைக் கேட்பாயாக (௩௫) இவ்வாறு காமிகாகமம் பிருதிஷ்டா தந்திரம் கிரியாபாதம் க்ஷௌரகர்மவிதியென்கிற ௨௭-வது படலம் முற்று கை பெற்றது சுலோகம் ௩௫. ஆக. ௪௧௧௪

அங்குரார்பணவிதிபடலம்.

இதன்பின் அங்குரார்பணவிதியைச் சொல்லுகிறேன் கேட் பாயாக. எல்லா காரியங்களிலும் மூலாகமமே பிரமாணமாகும் (௧) மூலாகமத்திற்கு விரோதமல்லாத உபாகமங்களை கிரஹித்தல்வே ண்டும் மூலாகமத்திற்கு உபாகமம் விரோதமாயிருந்தால் உபாகம த்தை தள்ளுபடி செய்தல் வேண்டும் மூலாகமத்தை தள்ளுப டிசெய்தல் கூடாது (௨) மூலாகமம் பூர்வமென்பதும் இதற்கு உத்தரமாயுள்ளது உபாகமம் என்பதாம் அங்குரம் முதலிய எல்லா காரியங்களையும் மூலாகமத்தினாலேயே செய்தல்வேண் டும் (௩) இந்த அங்குரத்தை ஆதிசைவர்களினாலேயே செய்தல்

வேண்டும். மஹாகும்பாபிஷேகத்திலும் சம்ப்ரோக்ஷணைகளிலும் தேவதாஸ்தாபனங்களிலும் (௪) தீர்த்தத்திலும் உத்ஸவத்திலும் தீக்ஷையிலும் கல்யாணத்திலும் முதலில் அங்குரார்ப்பணம்செய்தல் வேண்டும் (௫) ஒருஅங்குரம் செய்திருக்கும்போது இனி ஒருஅங்குரம் செய்தால் கர்மநாசம் உண்டாகும் ஒரு ஆலயத்தில் இரண்டுயாகசாலை வருமாயின் அங்குரம் ஒன்றேசெய்தல்வேண்டும் (௬). ஸ்வதந்திரசக்தியாயுள்ள ஆலயத்தில் தனியாய் வேறொரு அங்குரம் செய்தல் வேண்டும் கேவலம் சஹஜம் முதலிய சக்திகளுக்கு ஒரே அங்குரம் செய்தல் போதுமானது (௭) கிராமத்திலுள்ளசிவக்ஷேத்திரத்தில் பிரதிஷ்டையின் பொருட்டும் உத்ஸவத்தின்பொருட்டும் செய்துள்ள அங்குரத்தினுடைய நடுவில் இதற்கன்யமான தேவாலயங்களில் (௮) பிரதிஷ்டோத்ஸவகர்மங்களை ஒருக்காலும் செய்யக்கூடாது மோஹத்தால் செய்வாராகில்ராஜராஷ்டிரம் நாசத்தையடையும் (௯) அங்குரமத்தியில் பரிவாரங்களை பிரதிஷ்டிக்கவேண்டுமாயின் மிருத்ஸங்க்ரஹணம் வாஸ்துசாந்தி அங்குரார்பணம்(௧௦) இந்த மூன்றுகர்மங்களை விட்டுவிட்டு இதற்கன்யமான எல்லாகர்மங்களையும் செய்தல்வேண்டும் அங்குரமல்லாது செய்யும் கர்மம் பயனற்றதாகும் (௧௧) முன்னால் வாஸ்துசாந்தியால் பொசுக்கப்பட்ட பூப்ரதேசமானது அமிர்தத்தால் திருப்தியுண்டானதாக பாவிக்கப்படுவது அங்குரார்பணமென்பதாம் (௧௨)ஒன்பதுநாள் ஏழுநாள் ஐந்துநாள் மூன்றுநாள் இப்படிக்கில்லாவிடில் அன்றுபதினமே செய்தாலும் கிரியைக்குமுன் அங்குரார்பணம் செய்தல் வேண்டும்(௧௩) ஒன்பதுநாள் முதல் மூன்றுநாள் வரைசெய்யப்படும் அங்குரார்பணத்தில் ஆசார்யவபனம்செய்து கொள்ளுதல் கூடாது ரக்ஷாபந்தனத்திற்குமுன்னேயே அங்குரம்() செய்து அங்குரம் ரக்ஷை இவ்விரண்டும் ஒரேதினத்திலிருக்குமாயின் அங்குரார்பணத்திற்குமுன், ஆசார்யர் க்ஷௌரஞ்செய்து கொள்ளுதலும்கூடும் (௧௫) க்ஷௌரம் முதல் நாளில் செய்துகொண்டு ரக்ஷைமறுநாள்செய்து கொள்வாராயின் செய்யப்படும் சத்கார்யம் நிஷ்பலமாய் முடிந்துவிடும் ராஜ்யம் பஞ்சத்தால் பீடிக்கப்படும் (௧௬) எல்லா மங்களகாரியங்களிலும் இந்த மங்களாங்குரத்தைசெய்தல்வேண்டும் சூர்யாஸ்தமனத்திற்குப்பின் மூன்றேமுக்கால் நாழிகையளவில் (௧௭) அங்குரார்பணம் செய்தல் வேண்டும் அன்யகாலங்களில் செய்யக்கூடாது மோஹத்தால் செய்வாராயின் செய்யப்படும் கர்த்தாவும் கர்ம

மும் நாசத்தையடையும் (௧௮) இதனால் மத்யானத்தில் அங்குரம் செய்தல்கூடாது. செய்வாராயின் அசுபத்தையுண்டாக்கும், ஆலயத்தில் முதல்பிராகாரத்திற்கு கர்ப்பாவரணமெனவும் இரண்டாவது பிராகாரத்திற்கு அந்தர்மண்டலமெனவும் (௧௯) மூன்றாவது பிராகாரத்திற்கு மத்தியாஹாரமெனவும் நான்காவது பிராகாரத்திற்கு மர்யாதியெனவும் ஐந்தாம் பிராகாரத்திற்கு மகாமர்யையெனவும் பெயராம் இவ்வாருள்ள (௨௦) ஐந்து பிராகாரங்களோடு கூடிய ஆலயத்தில் இரண்டாவது பிராகாரத்திலாவது அல்லது மூன்றாவது பிராகாரத்திலாவது யாகசாலை போடுவது உத்தமம் (௨௧) நான்காவது பிராகாரத்தில் யாகசாலை போடுவது மத்யமம், ஐந்தாவது பிராகாரத்தில் யாகசாலைபோடுவது அதமம் இவ்வாறு சிவபெருமான் யாகத்தின்பொருட்டு யாகசாலை போடுதல்வேண்டும் (௨௨) யாகசாலைக்கு வெளியே யாகசாலையில் பாதி நான்குபுரங்களிலும் சுற்றிலும் ஒருசாலைபோட்டு இதற்கு வாயுதிக்கில் (௨௩) மூன்றுமுழம்விஸ்தாரம் இதற்குபாதிஉயரம் ஊர்தவபட்டி, அதோபட்டிகையோடுகூடிய ஒருவேதிபோட்டு (௨௪) எண்பத்திஎட்டுபடிநெல் உத்தமமும் இதிற்பாதி மத்யமும் இதிற்பாதி அதமமும் (௨௫) நெல்லைப்பரத்தி இந்த நெல்லிற்பாதி அரிசியும், அரிசியிற்பாதி எள்ளும், எள்ளிற்பாதி பொரியும், இவைகளோடு தர்ப்பை, புஷ்பங்களை பரத்தி (௨௬) கிழமேல் தென்வடலாக பன்னிரண்டு சூத்திரங்களைப்போட்டு நடுவிலுள்ள ஒன்பது பதங்களை ஒன்றாகச்செய்து இதற்குநடுவில் (௨௭) எட்டு தலங்களோடு கூடிய பத்மமண்டலம் போட்டு தங்கநூலினால் சுற்றப்பட்டதாயும் தங்கத்தாற்செய்த நீலோத்பதம் (௨௮) தங்கத்தால் அர்த்த சந்திராகிருதியான பிரதிமைகள் நவரத்னம் மாவிலை (௨௯) சந்தனம் புஷ்பம் வஸ்திரம் கூர்சாதிகளால் அலங்கரிக்கப்பட்ட சோமகும்பத்தை கர்ணிகைக்கு நடுவேவைத்து இந்த சோமகும்பத்திற்கு வலமிடப்புறங்களில் கிருத்திகை ரோகிணி கும்பங்களை வைத்து நாற்பத்தினான்கு பதங்களோடு கூடிய ஸ்தானத்தில் நான்கு மூலைபதங்களில் நான்கு கடிகைகளை வைத்து (௩௦) ஈசானகோண பதமுதல் ஏழாவது பதம்வரை எண்ணி இந்த ஏழாவதுபதத்தில் ஒருகடிகையும் ஆக்னேயமுதல் ஏழாவது பதத்தை எண்ணி, இதில் ஒரு கடிகையும் (௩௧) நைருதிமுதல்

ஏழாவதுபதத்தில் ஒருகடிகையும் வாயுதிக்குமுதல் ஏழாவது பதத்தில் ஒருகடிகையும் இந்தப்பிரகாரம் எட்டு கடிகைகளைவைத்து இதற்குள் முப்பத்திரண்டு பதங்களோடு கூடிய ஸ்தானத்தில் கோணங்களில் நான்குபாலிகைகளைவைத்து, ஈசானகோணமுதல் இதற்கு ஆறுவது கோணத்தில் ஒரு பாலிகையை வைத்து ஆக்னேயகோணமுதல் இதற்கு ஆறுவது பதத்தில் (௩௫) ஒரு பாலிகைவைத்து நைருதிமுதல் எண்ணி ஆறுவது பதத்தில் ஒரு பாலிகையைவைத்து(௩௬)வாயுமுதல் ஆறுவதுபதத்தில் ஒருபாலிகையைவைத்து (௩௭) இவ்வாறு எட்டு பாலிகைகளைவைத்து இருபத்திநாலு பதங்களோடு கூடிய ஸ்தானத்தில் நான்கு மூலைகளிலும் நான்கு சராவங்களை வைத்து இதற்கு (௩௮) ஐந்தாவது பதத்தில் ஒரு சராவம் வைத்து (௩௯) ஈசானமுதல் வாயுவரை ஐந்தாவது பதங்களில் ஒவ்வொரு சராவங்களைவைத்து கெடிகைக்கு வெளியே (௪0) சுற்றிலும் பரிஸ்தரணங்களை போடுதல்வேண்டும் இனி பாலிகாலக்ஷணத்தை கேட்பாயாக (௪௧) தங்கம் அல்லது வெள்ளி அல்லது தாம்பரம் அல்லதுமண்ணிலேயாவது பாலிகை கடிகை சராவங்களை செய்தல்வேண்டும் (௪௨) பாலிகையின் முகத்தின் விஸ்தாரம் எட்டு அங்குலமாயிருப்பது உத்தமம் ஆறு அங்குலம் மத்யமம் (௪௩) நாலு அங்குலம் அதமம் முகத்தின் அளவிற்கு பாதிபாதமிருத்தல்வேண்டும் (௪௪) முகத்தின் அளவை ஆறாக பங்கிட்டு ஆறில் ஒன்று உதட்டின் அளவு ஆகும் இதை மூன்றாக பங்கிட்டு மூன்றில் ஒன்று முகமுதல் பாதம்வரை த்வாரம் இருத்தல்வேண்டும் (௪௫) தண்டத்தின் உயரம் பதினாறு உத்தமம் பன்னிரண்டு மத்யமம் எட்டு அங்குலம் அதமம் ஆகும் (௪௬)ஐந்து அங்குலம் அல்லது மூன்றுஅங்குலம் தண்டத்தின் சுற்றளவாகும்ஊமத்தம் பூப்போல்பாலிகையின்முகம்இருத்தல்வேண்டும் விஸ்தாரத்தில்மூன்றிலொன்று நுணியும்நான்கு முகங்களிலும் இரண்டு உளுந்து அகலம்(௪௭) துவாரமும் வைத்தகடிகை கலசாகிருதியாய் செய்தல்வேண்டும் மற்றவை பாலிகையைப்போல் செய்தல் கலசம் பாலிகைக்குமேல் நாலு அங்குலம் (௪௮) உயரமாய் செய்தல் வேண்டும் சராவத்தின் விஸ்தாரம் பத்துஅங்குலமாகும் (௫0) இதன் அடி இதில் பாதியாகும் இதில் பாதி உயரம் மற்றவை பாலிகைபோல் செய்தல் வேண்டும் (௫௧) பாலிகை மண்வீரா

ட்டி முட்டைத்தோல் இவைகள் நிறைத்துஇருத்தல் வேண்டும் கெடிகையில் நான்னியக்கதிர்களை நிறைத்து (ருஉ) ஜலத்தையும் பூரித்திருத்தல்வேண்டும் சராவத்தில் ஜலத்தை பூரித்து சந்தண அக்ஷத (ருங) வஸ்தர கூர்சாதிகளால் அலங்கரித்து நான்கு வாச ற்படி, தோரணங்களோடும் அலங்கரித்து (ருச) தற்பமாலைகள் விதானங்களாலும் அலங்கரித்து, ஆசார்யன் கூர்மாஸனம் அல் லது சுகாஸனத்தில் வடக்குநோக்கி உட்கார்ந்து சங்கல்பம் விக் னேஸ்வரபூஜை (ருரு) புண்யாஹவாசனம் செய்து இந்த ஜலத்தா ல் ப்ரோக்ஷித்தல்வேண்டும் (ருசு) கிரியை ஆரம்பிக்கும்பொழுது கையில் பவித்திரம் தரித்தே செய்தல்வேண்டும் மூன்று தர்பைக ளினால் பவித்ரம் செய்தல்வேண்டும் (ருஎ) பவித்ரமில்லாமல் செய் யும் கர்மாக்கள் பலனற்றதாகும். எல்லா காரியங்களிலும் பவித்ர ம் தரித்து செய்வது சுபத்தைத்தரும் (ருஅ) தங்கத்தால் செய்த பவித்ரம் விசேஷமாகும் இது இருந்தால் தர்பையினால் செய்த ப வித்ரமும் வேண்டுவதல்ல (ருகூ) சாமான்யார்க்யம் கல்பித்து கும் பம் பாலிகை சராவம் கெடிகை இவைகளை இந்த அர்கியஜலத்தா ல் ப்ரோக்ஷித்து நிரீக்ஷணம் ப்ரோக்ஷணம், தாடனம் அப்புக்ஷ ணம், அவகுண்டனம் முதலியவற்றை செய்து தேனுமுத்திரை காட்டி (சு0) நிராதார ஆசனமின்றியில் ஆதாரசக்திமுதல் பத்மா ஸனம்வரை மத்யகும்பத்தில் பூஜித்து (சுக) சோமாஸனம் மூர்த் திமூலம் பூஜித்து ஸோமம் ஸிம்மாஸனத்திலிருப்பவராய் வெண் மைநிறம் சௌம்யமானமுகம் (சுஉ) இரண்டு கைகளிலும் நீலோ த்பலம் தரித்தவராய் கிருத்திகை, ரோகிணிகளோடு சேர்ந்திருப் பவராய் நக்ஷத்திராதிகளால் விளங்கப்பெற்றவராய் (சுங) எல்லா ஓஷதிகளையும் தரித்திருப்பவராய் பிரஸன்னமுகமுடையவராய் த்யானித்து ஆவாஹித்து ஸ்தாபனாதி முத்திரைகாட்டி (சுச) மூ ர்த்தாமுதல் பாதபர்யந்தமும் ஹ்ரதயாதி ஆறு அங்கங்களை த்யா னத்தோடு பூஜித்தல்வேண்டும் (சுரு) ஓம்ஹாம் ஸோமமூர்த்தாய நம: எனப் பூஜித்து ஸோமமூர்த்தா தங்கநிறம் இரண்டுகை அஞ் சலி (சுசு) சுகாஸனத்திலிருப்பவராய் எல்லா ஆபரணங்களுமணி ந்துள்ளவராய் த்யானித்து ஓம்ஹாம் ஸோமவக்த்ராய நம: எனப் பூஜித்து (சுஎ) ஸோமவக்த்ரம் பால்நிறம் ஒருமுகம் இரண்டுகண் கள் வலக்கை இடக்கைகளில் நீலோத்பலம் விபூதி ருத்ராக்ஷம்

அணிந்ததாய்(சுஅ) த்யானித்து ஓம்ஹாம்ஸோமஹிருதயாய நம: எனப் பூஜித்து ஸோமஹிருதயம் ரக்தநிறம் ஒருமுகம் இரண்டு கண்கள் (சுகூ) சிரசுக்குமேல் அஞ்சலி எல்லா ஆபரணங்களு மணிந்ததாய் த்யானித்து ஓம் ஹாம் ஸோமகுஹ்யாய நம: எனப் பூஜித்து (எ0) ஸோமகுஹ்யம் வண்டின்னிறம் இரண்டுகை அஞ்சலி ஒருதலை இரண்டுகண்கள் விபூதி ருத்ராக்ஷம் அணிந்ததாய் (எக) த்யானித்து ஓம்ஹாம் ஸோமபாதாப்யாம் நம: எனப் பூஜித்து ஸோமபாதம் சங்கின்னிறம் இரண்டுகைகள் ஒருதலை (எ௨) அஞ்சலி விபூதி ருத்ராக்ஷம் அணிந்ததாய் த்யானித்து ஓம்ஹாம் ஸோமவித்யாதேஹாய நம: எனப் பூஜித்து(எ௩)வித்யாதேஹம் சந்திரவர்ணம் ஒருமுகம் மூன்றுகண்கள் வராபயம் விபூதி ருத்ராக்ஷம் அணிந்ததாய் தியானித்து (எச) ஓம்ஹாம் ஸோமநேத்ரேப்யோ நம: எனப் பூஜித்து ஸோமநேத்திரங்கள் தங்கம் வெண்மை ஜ்யோதி இந்த ரூபங்களுடையதாய் (எரு) இரண்டுகைகள் ஒருமுகம் சக்தி சூலம் தரித்துள்ளதாய் த்யானித்து ஓம்ஹாம் ஸோமஹிருதயாய நம: எனப்பூஜித்து(எசு) சோமஹிருதயம் ரக்தவர்ணம் இரண்டுகண்கள் ஒருமுகம் பாசம் அங்குசம் எல்லாஆபரணங்களும் அணிந்ததாய்(எஎ) த்யானித்து ஓம் ஹாம் ஸோமசிரஸே நம: எனபூஜித்து ஸோமசிரஸ் ஸ்படிகநிறம்இரண்டுகண்கள்(எஅ) டங்கம் கட்வாங்கம் பிரஸன்னமுகமுடையதாய் த்யானித்து ஓம் ஹாம் ஸோமசிகாயை நம: எனப்பூஜித்து (எகூ) ஸோமசிகை குங்குமநிறம் இரண்டுகண்கள் அஞ்சலிஹஸ்தம் விபூதிருத்ராக்ஷ அலங்கிருதமாய் த்யானித்து(அ0) ஓம்ஹாம் ஸோமகவசாயை நம: எனப்பூஜித்து கவசம் வெண்மைநிறம் ஒருமுகம் இரண்டு கண்கள் (அக) இரண்டுகைகளிலும் நீலோத்பலம் எல்லா ஆபரணங்களும் அணிந்ததாய் த்யானித்து ஓம் ஹாம் ஸோமாஸ்த்ராய நம: எனப்பூஜித்து (அ௨) ஸோமாஸ்த்ரம் வண்டின்னிறம் இரண்டுகைகள் ஒருமுகம் ஞானமுத்ரை வரம் இரண்டுகண்கள் ரக்தவஸ்திரம்தரித்துள்ளதாய்(அ௩) த்யானித்து ஆவாஹித்துஸ்தாபநாதி முத்ரைகாட்டிநைவேத்யதூபதீபார்க்யம்கொடுத்தல்வேண்டும்(அச) கும்பத்திற்குமேல்ஓம்ஹாம்அமுருத்ரேஸ்வராஸநாயநம:(அரு)இவ்வாறுமூர்த்திமூலத்தையும்பூஜித்து அமிருதேஸ்வரம் வெண்மைநிறம் ஒருதலை இரண்டுகைகள் இரண்டுகைகளிலும் தாமரைப்பூ

ஜடாமகுடம் உடையவராய்த்யானித்து (௮௬) ஏ அமிர்தேஸ்வரா, முன் வாஸ்துசாந்தியின் பர்யக்னிகரணத்தால் பொசுக்கப்பட்ட பூமியை திரும்ப உன் அமிர்தகிரணத்தால் உற்பத்திசெய்ய வேண்டுமென (௮௭) த்யானித்து நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்து சந்திரகும்பத்திற்கு வலப்பக்கத்திலுள்ள கும்பத்தில் ஓம் ஹாம் கிருத்திகாயை நமஃ (௮௮) கிருத்திகை தங்கநிறம் ஒருமுகம் இரண்டுகண்கள் வலக்கையில் நீலோத்பலம் இடக்கை தொங்கவிட்டதாய் த்யானித்து (௮௯) பிரதானகும்பத்திற்கு வடக்கேயுள்ள கும்பத்தில் ஓம் ஹாம் ரோகிண்யை நமஃ எனப்பூஜித்து ரோகிணிபச்சைநிறம் இரண்டுகண்கள் ஒருமுகம் (௯௦) வலக்கையில் தாமரைப்பூ இடதுகை தொடைமேல் வைத்திருப்பதாய த்யானித்து இவர்கள் யாவருக்கும் நைவேத்திய தூபதீபார்க்யம் கொடுத்தல் வேண்டும் (௯௧) இதுவரை முதலாவரணபூஜையைக் கூறினேன் இனி இரண்டாம் ஆவரணபூஜையைக் கேட்பாயாக கிழக்குமுதல் ஈசான மிருதியாக உள்ள பாலிகைகளில் (௯௨) கிழக்கில் ஓம் ஹாம் சூர்யாய நமஃ எனப் பூஜித்து தாமரைப்பூவில் இருப்பவராய் ரத்னகாந்தி (௯௩) ரக்தநிறமான மிகுந்த தேஜஸோடும் கூடிய விர்த்தமண்டலநடுவில் வெண்மைநிறமாய் இரண்டுகைகளிலும் தாமரைப்பூ உடையவராய் (௯௪) ஒருமுகம் இரண்டுகண்கள் ரக்தவஸ்திரம் தரித்தவராய் த்யானித்து இந்தப் பாலிகையில் வஜ்ரம் மூலமந்திரத்தால் போட்டு நைவேத்ய தூபதீபம் கொடுத்தல்வேண்டும் (௯௫) ஆக்னேயகோணத்திலுள்ள பாலிகையில் ஓம் ஹாம் பௌமாய நமஃ எனப்பூஜித்து பௌமன் ஒருமுகம் இரண்டுகண்கள் அஞ்சலிஹஸ்தம் (௯௬) ரக்தநிறம் ரக்தவஸ்திரம் ரக்தமாலை அணிந்தவராய் த்யானித்து இதில் வைடூர்யம் மூலமந்திரம் உச்சரித்து போட்டு நைவேத்ய தூபதீபம் கொடுத்தல்வேண்டும் (௯௭ தெற்கேயுள்ள பாலிகையில் ஓம் ஹாம் புதாய நமஃ எனப் பூஜித்து புதன் ஒருமுகம் அபயவரதன் (௯௮) கோமேதக நிறம் ஜடாசூடம் யஞ்பசூத்ரமுடையவராய் த்யானித்து மூலமந்திரம் உச்சரித்து கோமேதகத்தை இதில் வைத்து நைவேத்யாதிகள் செய்தல் வேண்டும் (௯௯) நிருதிதிக்கில் உள்ளபாலிகையில் ஓம் ஹாம் சனீஸ்வராய நமஃ எனப்பூஜித்து சனீசுவரன் இந்திர நீலநிறம் தண்டம் பாசம், (௧௦௦) காக்கைவாகனத்தி லேறியிருப்பவராய்த்யானித்து மூலமந்திரம் உச்சரித்து இந்திரநீலத்தை இதில்வைத்து (௧௦௧).

நைவேத்யதூபதீபம்கொடுத்தல் வேண்டும். மேற்கேயுள்ளபாலிகையில் ஓம் ஹாம்பிருஹஸ்பதயேநம: எனப்பூஜித்து (க0உ) பிருஹஸ்பதிபுஷ்பராகநிறமபுஸ்தகம் அக்ஷமாலைஎல்லா ஆபரணங்களும் அணிந்துள்ளதாய்த்யானித்து (க0௩) புஷ்பராகத்தை இதில்வைத்து நைவேத்யாதிகள்செய்தல்வேண்டும். வாயுதிக்கில்உள்ளபாலிகையில் ஓம் ஹாம்ராஹவேநம: எனப்பூஜித்து (க0ச) ராகுமரகதநிறம் அஞ்சலிஹஸ்தம்ஒருமுகம் இரண்டுகண்கள் எல்லாஆபரணங்களுமணிந்தவருய்த்யானித்து (க0ரு) மூலமந்திரம்உச்சரித்துமரகதத்தை இதில்வைத்து நைவேத்யதூபதீபங்கொடுக்க. வடக்கிலுள்ளபாலிகையில் ஓம் ஹாம்பார்கவாயநம: எனப்பூஜித்து (க0சூ) பார்கவர்மாணிக்கநிறம், ஒருதலைஅஞ்சலிஹஸ்தம் இரண்டுகண்கள் வெள்ளவஸ்திரம்தரித்தவராய் விபூதிருத்ராக்ஷமணிந்தவராய் த்யானித்து (க0எ) மூலமந்திரம்உச்சரித்து மாணிக்கத்தை இதில் வைத்து நைவேத்யதூபதீபங்கொடுத்தல்வேண்டும் ஈசானதிக்கிலுள்ளபாலிகையில் ஓம் ஹாம்கேதவேநம: எனப்பூஜித்து (க0அ) கேதுபத்மராகவர்ணம் அஞ்சலிஹஸ்தம் ஒருமுகம் இரண்டுகண்கள் விபூதிருத்ராக்ஷஅலங்கிருதராய் த்யானித்து (க0கூ) மூலமந்திரம் உச்சரித்து இதில்பத்மராகத்தைவைத்து நைவேத்யதூபதீபம்செய்தல்வேண்டும் (கக0) இதுவரைத்விதீயாவரணத்தைச்சொன்னேம் இனித்ருதீயாவரணத்தைக்கேட்பாயாக கிழக்குமுதல் ஈசானம்வரையிலுள்ள கெடிகைகளில் (ககக) கிழக்கில்ஓம்ஹாம் சௌம்யசந்திராயநம: எனப்பூஜித்து சௌம்யசந்திரன்ஸ்படிகநிறம்ஒருதலை (ககஉ) பாசம்சூலம்எல்லாஆபரணங்களுமணிந்தவராய் த்யானித்து ஆக்னேயகோணகெடிகையில்ஓம் ஹாம்பிரபவசந்திராயநம: எனப்பூஜித்து (கக௩) பிரபவசந்திரன்வெண்மைநிறம் அஞ்சலிஹஸ்தம் ஒருமுகம்இரண்டுகண்கள் வெள்ளவஸ்திரம்தரித்தவராய் (ககச) த்யானித்து தெற்கேயுள்ளகெடிகையில் ஓம் ஹாம்தர்மசந்திராயநம: எனப்பூஜித்து தர்மசந்திரன்வண்டின்நிறம் இரண்டு கண்கள் ஒருமுகம் (ககரு) இரண்டுகால்கள் அஞ்சலிஹஸ்தம்எல்லா ஆபரணங்களும்அணிந்தவராய் த்யானித்து நிருதியிலுள்ளகெடிகையில்ஓம் ஹாம் ஜோதிசந்திராயநம: எனபூஜித்து (ககசூ) ஜோதிசந்திரன் தங்கநிறம்அஞ்சலிஹஸ்தம் ஒருமுகம்இரண்டுகண்கள் இரண்டுகால்விபூதிருத்ராக்ஷமணிந்தவராய்த்யானித்து (ககஎ) மேற்கேயுள்ள கெடிகையில் ஓம்ஹாம் விபவசந்திராயநம: எனப்பூஜி

த்து விபவசந்திரன் வண்டின் நிறம் ஒரு முகம் (௧௧௮) அஞ்சலிஹஸ்தம் எல்லா ஆபரணங்களு மணிந்தவருய் த்யானித்து வாயுதிக்கிலுள்ள கெடிகையில் ஓம் ஹாம் பிரசண்டசந்த்ராய நமஃ எனப் பூஜித்து (௧௧௯) பிரசண்டசந்திரன் ஸ்படிகநிறம் இரண்டுகண்கள் ஒருமுகம் அஞ்சலிஹஸ்தம் விபூதிதரித்தவராய் த்யானித்து (௧௨௦) வடக்கேயுள்ள கெடிகையில் ஓம் ஹாம் பிரசாதசந்திராய நமஃ எனப் பூஜித்து பிரசாதசந்திரன் தங்கநிறம் சுகமான இரண்டுகண்கள் (௧௨௧) அஞ்சலிஹஸ்தம் ஒருமுகம் எல்லா ஆபரணங்களும் அணிந்தவராய் த்யானித்து ஈசானதிக்கிலுள்ள கெடிகையில் ஓம்ஹாம் உக்ரசந்திராயநமஃ எனப் பூஜித்து (௧௨௨ உக்ரசந்திரன் அக்னிநிறம் ஒருமுகம் அஞ்சலிஹஸ்தம் இரண்டுகண்கள் இரண்டு பாதம் பிரஸன்னமுகமுடையவராய் த்யானித்து (௧௨௩) இவர்கள் யாவருக்கும் நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்தல்வேண்டும் இதுவரை திரிதியாவர்ணபூஜையைச் சொன்னேம் இனி நான்காம் ஆவரண பூஜையை கேட்பாயாக கிழக்கு முதல் ஈசானம் வரையிலுள்ள சராவங்களில் இந்த்ராதி லோகபாலர்களை அந்தந்தத்யானத்தோடு பூஜித்து (௧௨௫) நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்தல்வேண்டும் இனி ஐந்தாம் ஆவரண பூஜையை கேட்பாயாக (௧௨௬) பரிஸ்தரணங்களில் கிழக்குமுதல் ஈசானம்வரையில் வஜ்ராதிகளை தியானத்தோடு பூஜித்து (௧௨௭) நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்தல்வேண்டும் ஏ ஔஷதிநாதனுகிய ஏ சந்திரா உனது அமிர்தகிரணத்தால் (௧௨௮) பிரும்மாவின் நாசிகாஜ்வாலையால் முன் வாஸ்துசாந்தியால் தஹிக்கப்பட்ட பூமியை ஞானயாகாங்க ஹேதுவின்பொருட்டு திரும்ப உண்டாகும் (௧௨௯) பாவமுடைய பீஜாவாபனத்தை உமது ஆஞையால் செய்கிறேன் அநுக்ரஹம் புரிதல்வேண்டுமென (௧௩௦) பிரார்த்தித்து கும்பத்தில் புஷ்பாஞ்சலிசெய்க வேதிகைக்குக் கிழக்கே எண்கோண குண்டமொன்று போட்டு (௧௩௧) பாலாக்னிவரை ஸம்ஸ்கரித்து பாலாக்னி ஹிருதயகமலத்தில் ஸோமனை பஞ்சாவரணத்தோடு (௧௩௨) பூஜித்து ஏசந்திரஸ்வரூப பாலாக்னியே உனது அமிர்தசமுகத்தால் (௧௩௨) பிரும்மாவின் நாசிகாஜ்வாலையால் முன் பொசுக்கப்பட்ட பிரதேசமானது ஞானயாகாங்க ஹேதுவின்பொருட்டு திரும்ப உண்டான பாவமுடைய (௧௩௩) பீஜாவாபனத்தை உனது ஆஞையால் செய்கிறேன் அநுக்ரஹம் புரிதல்வேண்டுமென (௧௩௪)

பிரார்த்தித்து நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்தல்வேண்டும் அங்குரார்பணம் செய்யும் தினத்திற்கு முதலிலேயே அங்குராங்களை அதிவாசனம் செய்தல்வேண்டும் (௧௩௫) தங்கம் அல்லது வெள்ளி அல்லது தாம்ரம் அல்லது மண் இவ்வாறுள்ள உத்தம மத்யம அதம அதமாதம மென்னும் சராவ பாத்திரங்களில் பால்விட்டு (௧௩௬) எள்ளு, அடுகு, பாசிப்பயர், உளுந்து, கடலை, துவரை, கொள்ளு முதலிய ஏழு தான்யங்களை (௧௩௭) பாலில் முன்சொன்ன பாத்திரத்தில் அதிவாசனம் செய்தல்வேண்டும் மூன்று நாள் அல்லது ஒருநாள் அதிவாஸனம் செய்க (௧௩௮) அதிவாசனம் செய்யாவிடில் பஞ்சம் பிராணிநாசம் உண்டாகும் அதிவாசன பீஜங்களை வாகீஸ்வரியின் (௧௩௯) கர்ப்பநாடியில் சம்யோஜித்து மூலமந்திரத்தால் ஆயிரம் அல்லது இருநூறு இருபது அபிமந்திரித்து (௧௪௦) ஸ்தண்டிலம்போட்டு பத்மமண்டலத்திற்கு நடுவில் வைத்து நூற்றெட்டு அக்ரமுள்ள தர்ப்பைகளாலே பீஜபாத்திரத்தை தொட்டுக்கொண்டு (௧௪௧) முன்சொன்ன மூலமந்திரத்தினால் அபிமந்தரித்து நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்து (௧௪௨) வேதகோஷம் மங்களாசரணம் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் சங்கம், நிருத்தம், கானம், திராவிடவேதபாராயணம் (௧௪௩) வாத்யகோஷத்துடனும் பீஜாவாபனம் மூலமந்திரம் உச்சரித்து கிழக்குமுதல் ஈசானமிறுதியாகவுள்ள பாலிகைகளில் செய்தல்வேண்டும் (௧௪௪) தான்யக்கதிர்களை கெடிகைகளில்போட்டு அஸ்தரமந்த்ரமுச்சரித்து ஜலத்தை பூரித்தல்வேண்டும் (௧௪௫) ஹிருதயமந்திரத்தால் சராவத்தில் ஜலத்தை பூரித்தல்வேண்டும். இவ்வாறு செய்தபின் சர்க்கரைபொங்கல் பாயசம் (௧௪௬) வடை அதிரசம் முறுக்கு கற்கண்டு வெள்ளிரிக்காய், பெலாப்பழம், நீர்மோர்முதலியவற்றையும் (௧௪௭) நைவேத்தியதூபதீபார்க்யம் செய்தல் வேண்டும் ஓஷதிசூக்தத்தால்ஸ்தோத்ரம்செய்தல்வேண்டும் (௧௪௮) இவ்வாறுசெய்யப்படும் அங்குரார்பண உத்தமாங்குரார்பணமென்பதாம் இந்தஅங்குரார்பணம் ஆவிருத்தபிரதிஷ்டையிலும், அனாவிருத்தபிரதிஷ்டையிலும்புனராவர்த்தபிரதிஷ்டையிலும் செய்யவேண்டுமென்பதாம் (௧௪௯) மத்யமாங்குரார்பணம் உத்ஸவத்தில்செய்யத்தக்கதும் அதமாங்குரார்பணம் தீக்ஷைபிராயச்சித்தத்தில் செய்யத்தக்கதுமாகும் (௧௫௦) இனிமத்யமாங்குரார்பணத்தை கேட்பாயாக. வேதியில்நெல்லு அரிசிமுதலியவற்றைப்பரத்திகிழமேல்தென்வ

டலாக ஐந்தைந்துகோடிட்டு(௧௫௧)இதற்குநடுவேநான்குபதத்தை ஒன்ருகச்சேர்த்து எட்டிதழ்,கமலம்போட்டு (௧௫௨) கர்ணிகையின் நடுவில்ஸோமகும்பத்தையும்இதற்குவலமிடபுறங்களில்(௧௫௩) கிருத்திகாரோகிணிகும்பத்தையும் வைத்துஇதற்குவெளியேபன்னிரண்டுபாலிகையைஸ்தாபித்து வைகர்த்தனர்முதல் (௧௫௪) திவாகரன்வரை பூஜித்து அக்னிகார்யம்செய்து பீஜாவாபனம்செய்தல்வேண்டும் (௧௫௫) இனி அதமாங்குரார்பணத்தைகேட்பாயாக ஸ்தண்டிலத்தைப்பரத்தி எட்டிதழ் கமலமெழுதி (௧௫௬) கர்ணிகைக்குநடுவில் ஸோமகும்பத்தையும் இதற்கு இரண்டு பார்சுவத்திலும் (௧௫௭) கிருத்திகாரோகிணிகும்பங்களையும் தளாக்ரத்தில் எட்டுப்பாலிகைகளையும் வைத்து பூஜிப்பது அதமாங்குரார்பணமாகும் (௧௫௮) இதற்கு அக்னிகார்யம்வேண்டுவதில்லை பீஜாவாபனம்மட்டும் செய்தல்வேண்டும் இந்த அங்குரார்பணபூஜைபிரதிதினமும் யாகசாலைமுடியும்வரை இரண்டுகாலத்திலும் பூஜித்து வருதல்வேண்டும் (௧௫௯) பிராதக்காலத்தில் முதலில் சூரியனைப் பூஜித்து பின்சந்திரனைப்பூஜித்து யாகசாலைபூஜைபுரிதல்வேண்டும் சாயங்காலத்தில் முதலில் சந்திரனையும் பின் சூர்யனையும் பூஜித்து யாகசாலைபூஜைபுரிதல்வேண்டும் (௧௬௦) இந்தப்பாலிகை வைக்குமிடம் காத்து வெய்யில்அல்லாததும் மூஞ்சூறுஅல்லாததுமான இடங்களில்வைத்தல்வேண்டும் (௧௬௧) இதன்முளை கிருஷ்ணவர்ணமாயிருந்தால் ரோகமும் பஞ்சமுமுண்டாகும் மஞ்சள்நிறம் ரக்தவர்ணமாயிருந்தால் விசேஷபலனைத்தரும் (௧௬௨) புகைநிறமாயிருந்தால் சத்துருவால் பயமுண்டாகும் வெளுத்திருந்தால் சுபத்தைக் கொடுக்கும் குட்டையாயும் குருக்காயுமிருந்தால் அஸ்திரமந்திரம் உச்சரித்து (௧௬௩) இந்தமந்திரத்தால் தோஷநிவர்த்தியின்பொருட்டு ஹோமம் செய்தல்வேண்டும் இந்த அங்குரயாகசாலையில் அகண்டதீபம் வைத்தல்வேண்டும் (௧௬௪) அகண்டதீபத்தை பிரதிஷ்டித்து இது அணைந்துவிட்டால் ராஷ்டிரநாசம்உண்டாகும் இந்த தீபத்திற்குத்தைலம் பசுவின் நெய்உத்தமம்அல்லது எருமைநெய் (௧௬௫) ஆட்டுநெய் மத்யமம் இலுப்பநெய் அதமம் தேங்காய்நெய் எள்ளெண்ணெய் இவைகளும் போடலாம்(௧௬௬) இதற்கன்யமான விருக்ஷத்தின் விரையாலுண்டாகும் எண்ணெயாலும் பாஷாணம் கந்தகம் மண்ணெண்ணெய் மாம்சத்திலுண்டான நெய் (௧௬௭) சாருயம் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய் பாஷாணத்தால் உண்

டாகும் வெளிச்சம் ஒழிநல் உண்டாகும் தைலம் இவைகளால் விளக்கு போடுவாராயின் (௧௫௮) ஐஸ்வர்யம் குறைந்துவிடும், பிசாச பூதக்கூட்டங்கள் வாஸஸ்தானமாய் முடிந்துவிடும் (௧௫௯) இதனால் ஆத்மார்த்தபூஜையிலும் முக்தியைத் தருளும் பரார்த்த பூஜையிலும் இந்த தைலங்களை நீக்குதல்வேண்டும் (௧௭0) சாஸ்திரத்தில் கூறிய தைலங்களை சங்கிரஹித்து அகண்டதீபம் பிரதிஷ்டத்தில் வேண்டும் ஆரம்பமுதல் முடிவுவரை இந்த தீபம் அணையாது எரிந்துகொண்டிருத்தல்வேண்டும் (௧௭௧) இந்தப்பிரகாரம் அங்குரார்பணம் செய்தல்வேண்டும்.

இவ்வாறுகாமிகாகமம் பிரதிஷ்டாதந்திரம் அங்குரார்பணவிதியென்கிற இருபத்தாராம்படலம் முற்றிகைபெற்றது. ௬-௧௭௧ ஆ-௪0௪௪

ஆச்சார்யவரணம் கூறப்படுகிறது.

இதன்பின் ஆசார்யவரணத்தை கேட்பாயாக. சர்வசாதகம் போதகம் ரித்விஜம் (௧) ஆச்சார்யர் இவர்கள் யாவரும் ஆஸ்தான மண்டபத்தை யடைந்து நெல்லரிசி, எள்ளு, தான்யாதிகளை (௨) பரத்தி கிழமேல் தெண்வடலாக பத்து பத்து சூத்திரம்போட்டு நடுவில் ஒன்பது பதத்தை ஒன்றாகசேர்த்து (௩) பத்மமண்டலம் கல்பித்து இதற்கு வெளியே கிழக்குதிக்குக்கும் ஈசானதிக்கிற்கும் நடுவே கூர்மாஸனத்திலாவது அல்லது சுகாஸனத்திலாவது(௪ ஆசார்யர் உட்கார்ந்து இவரைச்சுற்றிலும் ரித்விஜர்களை உட்காரச்செய்து இவருக்கு முன்னால் சர்வசாதகர் கூர்மாசத்திலேனும் சுகாஸனத்திலேனும் உட்கார்ந்து (௫) இவருக்குமுன்னால் போதகர் சாதகரோடுகூட முன்கூரியபடி உட்கார்ந்து உட்காரும்முறை யாகசாலையில் ஹோமத்திற்கு கூறியவாறு திக்குநோக்கி உட்காருதலும் வேண்டும் (௬) ஆசார்யருக்கு முன்னே பஸ்மாலையம் பீதாம்பரம் பட்டு தங்க யக்ஞோபவீதம் (௭) நவரத்னங்களால் இழைக்கப்பெற்ற குண்டலம் மோதாம் தங்க அரைஞாள் கேயூரம் கடகம் பஸ்மாலையமும் நவரத்னங்களால் இழைக்கப்பெற்றது விசேஷமென்பதாம் நவரத்னகசிதமான பாதுகை ஒன்று உஷ்ணீஷம் உத்தரீயம் பவித்ரம் தர்ஜனி தங்கத்தாலும் ரத்னங்களாலும் இழைக்கப்பெற்ற ருத்ராக்ஷம் சிரோமாலை உரோமாலை பாகுமாலை யோகபட்டம் இவ்வாருள்ள பிரதிஷ்டாதி திரவியங்களை சேக

ரித்து (௧௧) தாம்பாளத்தின்மேல் வைத்து ஆசார்யருக்கு முன்னால் வைத்தல்வேண்டும் ஆசாரியார் சாமான்யார்க்யஜலத்தால் இந்த திரவியங்களைப்ரோக்ஷித்து (௧௨) நிரீக்ஷணாதிசுத்திகள் செய்து பத்மமண்டலத்திற்குமேல் ஆதாராதி சலாசனம்வரை பூஜித்து (௧௩) ஓம் ஹாம் விருஷபாயநம: எனப்பூஜித்து ரிஷபம் வெண்மை நிறம் நான்குகால் நிமிர்ந்த முகம் (௧௪) வெளுத்தகொம்புமூன்று கண்கள் மணிசலங்கைகளால் அலங்கரிக்கப்பட்டரிஷபத்தை பிரும்ம விஷ்ணு ருத்ர திருமூர்த்தி ஸ்வரூபமாய் (௧௫) த்யானித்து ஆவாஹித்து ஸ்தாபனாதி முத்திரை காட்டி நைவேத்யதூயதீப உபசாரங்கள்செய்தல்வேண்டும் (௧௬) இந்தத்திரவிய தாம்பாளத்தை பத்மமண்டலத்தின்மேல் வைத்துபதத்திற்குவெளியே(௧௭) கிழக்கு திக்கிலாகிலும் வடக்கு திக்கிலாகிலும் நெல்லரிசியைப்பரத்தி இதன்மேல் விருத்தாகாரமாக்கி எஜமானனை (௧௮) இதில் உட்காரச்செய்து சாமான்யார்க்யஜலத்தால் ப்ரோக்ஷித்து நீரீக்ஷணாதி சுத்திசெய்து(௧௯)சிவஹஸ்தம்கற்பித்து திரவியபாத்திரத்தை அவர்கையில் கொடுத்து ஆசார்யரின்பொருட்டு கொடுத்தல் வேண்டும் (௨௦) கொடுக்கும் பொழுது செய்யப்படும் த்யானமாவது ஹே குருவே எல்லாதத்வார்த்தஸ்வரூபமாயுள்ள சிவஞானத்தை கொடுக்கத்தக்கவரே இந்த சிவயாகத்தின் பொருட்டு கொடுக்கப்படும் திரவியங்களை ஏற்றுக்கொண்டு என்னைரக்ஷித்தருளவேண்டுமென (௨௧) பிரார்த்தித்து எல்லா திரவியங்களையும் ஆச்சார்யரின்பொருட்டு கொடுத்தல் வேண்டும் ஆச்சார்யர் எல்லாதிரவியங்களையும் அலங்கரித்துக்கொண்டு (௨௨) சிஷ்யன் ஆச்சார்யபூஜனம் செய்தல்வேண்டும் ஆதாராதிவிமலாசனம் வரைஆசார்யரைப் பூஜித்து சிவாசனமூர்த்திமூலத்தாலும் பூஜித்து (௨௩) ஈசானமந்திரத்தாலும் பூஜித்து மூர்த்திபர்களை தத்புருஷம் முதல் சத்யோஜாதமிருதியாக பூஜித்து (௨௪)வித்யாதேஹம் மூலம் நேத்திரமந்திரங்களால் ஆச்சார்யரைபூஜித்து ஹிருதயாதிஷடங்கங்களினால்மூர்த்திபர்களை பூஜித்து (௨௫) சர்வசாதகரையும் போதகரையும்சாதகரையும் சிவமந்திரத்தால் பூஜித்து இவர்கள் யாவருக்கும் (௨௬) நைவேத்ய தூபதீபார்க்யம் கொடுத்து ஹே குரோ சிவமாகவும் சிவாகமங்களில் கூறப்படுகின்றது யாதொருசிவமுண்டோஅதுவே குருவெனக்கூறப்படுகின்றது (௨௭) குருவாயிருப்பினும்ஞானம் பிரகாசித்து விளங்கவேண்டும் சிவம் பரத்தை யென்றும் அந்த வித்

தையேகுருவெனவும் (உ௮) சிவம் பரவித்தை குரு இவர்களை பூஜிப்பது எல்லாப் ஓம்ரேபலனைத்தருமெனவும் பிரார்த்தித்து நைவேத்யதூபதீபம் கொடுத்து (உ௯) சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தல் வேண்டும் நமஸ்கரித்தசிவபக்தன் நெற்றியில் விபூதியால் அடித்தல்வேண்டும் (௩௦) என்னால்சேகரிக்கப்பட்ட எல்லா சிவத்ரவியங்களையும் சிவாகமத்தில் கூறியவாறு (௩௧) மந்திரம் கிரியை பாவனை இவைகள் யாவும் சம்பூர்ணமாய் செய்து என்னை சிவபக்திதுறந்தறுய் அனுக்ரஹித்தல்வேண்டுமென ஆசார்யரை பிரார்த்தித்தல் வேண்டும் (௩௨) ஆசார்யம் அப்படிக்கே உண்டாகட்டுமென சிஷ்யனுக்கு அனுக்ரஹித்து மேவதகோஷமங்களவாசகிருத்த கீதவாத்யசஹிதமாய் ரக்ஷாயாக சாலையில் பிரவேசித்தல்வேண்டும் (௩௩) இவ்வாறு காமிகாகமம் பிரதிஷ்டாதந்த்ரம் கிரியாபாதம் ஆசார்யவரணவிதி யென்கிறமுப்பத்தொன்பதாம்படலம் முற்றுப்பெற்றது.

சுலோகம் ௪௦, ஆக ௪௩௨௫.

ரக்ஷாபந்தனம் கூறப்படுகிறது.

இதன்பின் ரக்ஷாபந்தனத்தை சொல்லுகிறேன்கேட்பாயாக கலாகர்ஷணத்திற்குமுன் ரக்ஷாபந்தனஞ்செய்தல் வேண்டும் (௧) பிராதக்காலத்தில் ரக்ஷாபந்தனமும் ராத்திரியில் கலார்ஷணமும் செய்க (உ) கலாகர்ஷணத்திற்கு முதநாளிலாவது அடுத்த நாளிலாவது ரக்ஷாபந்தனம் செய்தல் கூடாது (௩) மோகத்தால் செய்வாராகில் இந்த இராஜ்யம் ரோகத்தால் பீடிக்கப்படும் ரக்ஷாபந்தனமன்றியில் பிரதிஷ்டை செய்தல் கூடாது (௪) செய்வாராகில் கர்த்தா போக்தா இவ்விருவர்களும்நாசத்தையடைவார்கள் ரவ்வென்பது பிரகாசமும் க்ஷா என்பது நாசம் எனவும் (௫) எல்லா தோஷத்தையும் போக்கி சிவஞானப்பிரகாசத்தை உண்டாக்குவதால் ரக்ஷை யென இதற்கு திருநாமம் கூறப்படும் (௬) லோகத்திற்கு ஹிதத்தின் பொருட்டும் பிராணிகளுக்கு சுகத்தின்பொருட்டும் ராஜாவிற்கு ஜெயத்தின் பொருட்டும் தேசக்ஷேமத்தின் பொருட்டும் (௭) எல்லாமங்களகாரியங்களிலும் ரக்ஷை செய்துகொள்ளல்வேண்டும் ரக்ஷையின் பொருட்டு மண்டபம் யாகசாலைக்கு வெளியே (௮) ஈசானத்தில் மூன்று முழஅகலமுள்ளதாயும் இதிற்பாதி உயரமுடையதாயும் ஊர்த்வபட்டி அதோ பட்டிகை யோடுகூடியதாயும் (௯) உள்ளவேதியைபோட்டு இதற்குமுன்னல்

சதுரஸ்ரகுண்டம்போட்டு இப்படிக்கில்லாவிடில் ஸ்தண்டிலத்திலா வது இதுவும்சரிப்படாவிடில்(௧௦) அங்குரார்ப்பணத்திற்குள் ரக்ஷை செய்துகொள்க இனிவேதிகையின்மேல் நெல்லு அரிசிதான்யங்களை (௧௧)பரத்திபத்மமண்டலம்போட்டு கர்ணிகைக்குநடுவே நாகராஜ கும்பமும்(௧௨)இதற்குஇடப்புறத்தில் வர்தனீகும்பமும் ஸ்தாபித் துசுற்றிலுமுள்ளதளாக்ரங்களில் அஷ்டநாககும்பங்களைஸ்தாபிக்க அரிசி பரத்துவதற்கு முன் கோமயத்தால்மெழுகி (௧௩) மாப்பொ டிகளினாலே அலங்கரித்து இதற்குமேல் நெல் அரிசிகளைப் பரத்தி இதற்குமேல் கும்பஸ்தாபனம் செய்தல்வேண்டும் (௧௪) சர்வசா தகன் போதகன் சாதகன் ஆசார்யர் ரித்விசர் ஸ்தானீகர் யாசகர் (௧௫) பரிசாரகர் முதலியவர்களோடு கூட ஆசார்யர் நிருத்த கீத வாத்யத்தோடுகூட ரக்ஷாமண்டபத்தை யடைந்து (௧௬) கூர்மாஸ னத்திலேனும் அல்லது சுகாஸனத்திலேனும் வடக்கு நோக்கி உ ட்கார்ந்து ஆசார்யர்ஸகளீகரணம் செய்து சாமான்யார்க்யம்வைத் து (௧௭) அந்த அர்க்யஜலத்தால் அஸ்த்ரமந்த்ரமுச்சரித்து தன் சிரஸில் சர்வத்ரவியங்களிலும் ப்ரோக்ஷித்து மணியை மூலமந்திர ம் உச்சரித்து மும்முறை யடித்து சங்கல்பம் செய்து (௧௮) விக் னேஸ்வரபூஜை மஞ்சளிலேனும் திரப்பவித்திரதிலேனும் செய்து நைவேத்யதூபதீபார்க்யம்கொடுத்து (௧௯) பராமுகார்க்யத்தினு ல் விக்னேஸ்வரரை உத்வாசித்து சைவபுண்யாகவாசனம் செய்து இந்த ஜலத்தால் ப்ரோக்ஷித்து (௨௦) பஞ்சகவ்யம்வைத்து இதனு ல் புரோக்ஷித்து இதில் மிச்சமான பஞ்சகவ்யத்தை ஆசார்யன்மு தலினோர் சாப்பிட்டு (௨௧) பின்கும்பபூஜை செய்தல் வேண்டும் தங்கம் முதலிய நூலினால் சுற்றப்பட்டதாயும் அலம்பினதாயும் தூ பப்புகைகாட்டினதாயும் (௨௨) தங்கத்தாமரைப்பூ, நவரத்னம் அந் தகூர்சம் லம்பகூர்சம் மாந்துளிர் இவைகளோடு ஜலத்தால் நிர ப்பப்பட்டதான (௨௩) கும்பங்களை கர்ணிகாமத்யத்தில் வர்தனீ கும்பத்தோடு கடம் ஸ்தாபித்தல் வேண்டும் இதற்குவெளியேசு ற்றிலும் எட்டுகும்பங்களை ஸ்தாபித்து(௨௪) வேதிகைக்குகிழக்கில் ஸ்தண்டிலம்போட்டு அஷ்டதளபத்மமண்டலம் போட்டு இதற்கு மேல் யந்திரிகையைவைத்தல்வேண்டும் (௨௫) தங்கம் அல்லது வெள்ளி அல்லது தாம்பரம் அல்லது மரத்தாலேனும் யந்திரிகை ஒரு முழவிஸ்தாரமும் மூன்று காலோடும் உயரப்பலகாகிருதியாய் இரண்டு அங்குலகனம் (௨௭) நடுவில் பத்மாகாரமாய் யந்திரிகை

யை கற்பித்து இதற்குமேல் தங்கத் தாம்பாளம் வைத்து (உஅ) இதற்குமேல் தங்கநெல் வெள்ளி அரிசி இவைகளைப்பரத்திபத்மாகார மண்டலம்போட்டு (உகூ) தங்கத்தாமரைப்பூ பஸ்மாலையம் பழங்கள் வெல்லம் வெற்றிலைபாக்கு சந்தண அக்ஷதை (௩0) புஷ்பம் பவித்ரம் மஞ்சள் கூர்ச்சம் பட்டு இவ்வாறுள்ள திரவியங்களைசேகரித்தத்தங்கத்தாம்பாளத்தில் வைத்தல்வேண்டும் (௩க) தங்கம் வெள்ளி அல்லது பட்டுக்களினாலாவது செய்துள்ள ரக்ஷாசூத்ரத்தைவைத்துபிரதானகும்பத்தில்பூஜித்தல்வேண்டும் (௩உ) நிராதார ஆஸனத்தைப்பூஜிக்காது (௩௩) ஆதாராதிபத்மம்வரைபூஜித்து இதற்குமேல் ஓம் ஹாம் ஆதிசேஷாஸநாயநம: ஓம்ஹாம்ஆதிசேஷமூர்த்தயேநம; ஓம்ஹாம் ஆதிசேஷாயநம: எனப்பூஜித்து(௩ச) ஆதிசேஷன் பால் நிறம் நாகராஜஸ்வரூபம் ஆயிரம் முகம் இரண்டாயிரம்கண்கள் (௩ரு) எட்டுகைகள் சத்தி பாசம் கதை குடாரம் டங்கம் நாகம் அங்குசம் வஜ்ரம் இவைகளோடு கூடியதாய் (௩கூ) சிரஸுக்கு கீழ்புருஷாகிருதியாய் எல்லா ஆபரணங்களு மணிந்தவராய் த்யானித்து ஆவாஹித்து ஸ்தாபனாதிமுத்ரைகாட்டி (௩எ) நைவேத்யதூபதீபம் கொடுத்தல்வேண்டும் ஓம் ஹாம் நாகராஜமூர்த்தாயநம: எனப்பூஜித்து (௩அ) நாகராஜமூர்த்தா ஆயிரம் தலை சிரஸுக்குமேல் படத்தோடுகூடியதாயும் தலைக்குக்கீழ் புருஷாகிருதியாய் (௩கூ) த்யானித்து ஓம் ஹாம் நாகராஜவக்த்ராய எனப்பூஜித்து நாகராஜவக்த்ரம் நூறுதலை (ச0) படத்தோடுகூடியதாய் சிரஸிக்கு கீழ் புருஷாகிருதியாய் த்யானித்து ஓம்ஹாம் நாகராஜ ஹிருதயாயநம: எனப்பூஜித்து (சக) நாகராஜஹிருதயம் ஐம்பது முகம் கீழ்புருஷாகிருதியாய் எல்லா ஆபரணங்களும் அணிந்ததாய் த்யானித்து(ச௩)ஓம் ஹாம் நாகராஜகுஹ்யாயநம: எனப்பூஜித்து நாகராஜகுஹ்யம் இருபத்தைந்துமுகம் (சச) சிரஸ்பாம்பின் ஆகிருதி சிரஸுக்கு கீழ் புருஷாகிருதியாய்த்யானித்து ஓம் ஹாம்நாகராஜபாதாப்யாம்நம: எனப்பூஜித்து நாகராஜபாதம் இரண்டுமுகம் பாம்பின்படம் வண்டின்நிறம் குஞ்சிதம் தலைக்குக்கீழ் புருஷாகிருதியாய்த்யானித்து (சகூ) ஓம்ஹாம்நாகராஜவித்யாதேஹாயநம:வித்யாதேஹம்ஸ்படிகநிறம்மதுமின்மை (சஎ) ஒருமுகம் நான்குகைகள் வரதம் அபயம் சூலம் பாசம் வெள்ளைவஸ்திரம்தரித்ததாய் (சஅ) வெள்ளைமாலையணிந்தநாய் எல்லாஆபரணங்களும

ணிந்ததாய்தியானித்து ஓம் ஹாம் நேத்ரேப்யோநம: எனப்பூஜித்து பிங்களம் தூம்ரவர்ணம் ஹைமவர்ணம் இவைகளோடு நேத்திரங்கள் கூடியதாயும் பாம்பின் உருவம் மூன்று தலைகள் எல்லா அவயவங்களும் நல்லலக்ஷணத்தோடு கூடியதாய் த்யானித்து (௫௦) ஓம் ஹாம் ஹிருதயாயநம: எனப்பூஜித்து நாகராஜஹிருதயம் வண்டின்நிறம் ஒருதலை (௫௧) பாம்பின்படத்தோடு கூடியதாய் மூன்றுகண்கள் சுபமாயுள்ளதாய் த்யானித்து ஓம் ஹாம் சிரஸேநம: எனப்பூஜித்து (௫௨) நாகராஜசிரஸ் ஆயிரம் தலைபடத்தோடு கூடியதாய் சிரஸுக்கு கீழ் புருஷாகிருதியாய் எல்லா ஆபரணங்களுமணிந்ததாய் (௫௩) த்யானித்து ஓம் ஹாம் சிகாயைநம: எனப்பூஜித்து நாகராஜசிகை ரக்தவர்ணம் ஒருமுகம் (௫௪) பாம்பின் தலைதலைக்குகீழ் புருஷாகிருதியாய் த்யானித்து ஓம் ஹாம் நாகராஜகவசாயநம: எனப்பூஜித்து (௫௫) கவசம் கருப்புநிறம் இரண்டுகைகள் ஒருமுகம் அஞ்சலிஹஸ்தம் சர்பாகிருதியானசிரஸோடு கூடியதாய் தியானித்து (௫௬) ஓம் ஹாம் அஸ்த்ராயநம: எனப்பூஜித்து அஸ்திரம் ஜோதிஸ்வரூபமாய் உக்ரமானதாய் நான்குமுகங்கள் (௫௭) அஞ்சலிஹஸ்தம் எல்லா ஆபரணங்களுமணிந்ததாய் த்யானித்து இவர்கள் யாவருக்கும் நைவேத்யதூபதீபார்க்யம் கொடுத்து (௫௮) இதற்கு இடபக்கத்திலுள்ள வர்தனீகும்பத்தை பூஜிக்க ஓம் ஹாம் நாககன்னிகாஸனாயைநம: ஓம் ஹாம் நாககன்னிகாமூர்த்தயே நம: ஓம் ஹாம் நாககன்னிகாயைநம: (௫௯) நாககன்னிகை வெண்மைநிறம் ஊர்த்வகண்கள் இரண்டுகைகள் பாம்பின்முகம் திரிபங்கம் பத்மாஸனத்தின் மேல் இருப்பவளாய் சிவந்தகண்களையுடையவளாய் (௬௦) த்யானித்து நைவேத்யதூபதீபார்க்யம் கொடுத்து இதுவரை பிரதமாவரணபூஜையை சொன்னேம் இனி த்வதீயாவரணபூஜையை கேட்பாயாக (௬௧) இதற்கு வெளியே நான்குபக்கத்திலும் கிழக்குமுதல் ஈசான்யம் வரையில் அனந்தர் முதல் மஹாபத்மம் வரையில் (௬௨) எட்டுகும்பங்களிலும் பூஜித்தல் வேண்டும் கிழக்குகும்பத்தில் ஓம் ஹாம் அனந்தாயநம: எனப்பூஜித்து (௬௩) அனந்தம் மிச்ரவர்ணம் பத்துதலை அஞ்சலிஹஸ்தம் பாசு சூலம் விபூதி ருத்ராக்ஷமணிந்ததாய் (௬௪) த்யானித்து தெற்குதிக்கில் ஓம் ஹாம் வாசுகியேநம: எனப்பூஜித்து வாசுகி சங்கவர்ணம் ஏழுதலை (௬௫) அஞ்சலிஹஸ்தம் சூலம் பாசம் எல்லா ஆபரணங்களுமணிந்ததாய் த்யானித்து மேற்குதிக்கில் ஓம்

ஹாம்தக்ஷகாயநம: எனபூஜித்து (௬௬) தக்ஷகம்இந்திரநீலநிறம் ஐந்துமுகம்அஞ்சலிஹஸ்தம் பத்மமுடையவராய் (௬௭) த்யானித்து வடக்குதிக்கில்ஓம்ஹாம் கார்க்கோடகாயநம:எனப்பூஜித்துகார்க்கோடகம் புகைநிறம் எட்டுதலை(௬௮)வராபயக்கண்டைநாகம் டங்கம்சூலம்குடாரம்கேடகம்க்ஷுரிகைசக்தி அங்குசம்மிருகம்அக்னி (௬௯) கபாலம்அக்ஷமாலைவில்லுபாணம் இவைகளோடுகூடியதாய் தியானித்து அக்னேயகும்பத்தில் ஓம்ஹாம்சங்கபாலாயநம: என பூஜித்து (௭௦) சங்கபாலம்வெண்மைநிறம் ஐந்துமுகம்அஞ்சலிவில்லு, பாணம்கதைசக்தி பாசம் (௭௧) ஸ்ருக்ஸ்வமங்குசம், இவைகளோடுஎல்லாஆபரணங்களும் தரித்ததாய் த்யானித்துநிருதிகும்பத்தில் ஓம்ஹாம்குளிகாயநம:எனப்பூஜித்து (௭௨) குளிகம்சியாமளாகாரம் நான்குமுகம் சூலம் பரசு டங்கம் விசிரிஉலக்கை (௭௩) தோமரம்த்வஜம் சங்கம்இவைகள் எட்டுகையில்விளங்குவதாய் தியானித்து வாயுகும்பத்தில் ஓம்ஹாம்பத்மாயநம: எனப்பூஜித்து (௭௪) பத்மன்ரக்தவர்ணம்ஐந்துதலை இருபதுகைகள் இருபதுகைகளிலும் கத்தியையுடையதாய்தியானித்து (௭௫) ஈசானகும்பத்தில் ஓம்ஹாம்மகாபத்மாயநம:எனபூஜித்து மஹாபத்மன் காக்காய்பொன்னிறம் இருபதுதலைமுப்பத்திரண்டுகைகள் எல்லாகைகளிலும் சூலத்தை தரித்தவனாய் தியானித்து (௭௭) யாவர்களுக்கும் நைவேத்தியதூபதீபாதிகள்செய்க இதுவரைஇரண்டாமாவரணத்தைசொன்னோம் இனிமூன்றுமாவரணத்தைகேட்பாயாக (௭௮) தளங்களின் நுனியில்கிழக்குமுதல் ஈசானமிருதியாகஎட்டுதிக்குக்களில் கிழக்கில்ஓம்ஹாம்உரகாயநம:எனப்பூஜித்து (உரகம்தங்கநிறம் ஒருமுகம்இரண்டுகண்கள் பாம்பின்படம்எல்லாஆபரணங்களும்அணிந்ததாய் (௮௦) தியானித்துஅக்கினிதிக்கில் ஓம்ஹாம்போகினேநம: எனப்பூஜித்து போகினிரக்தவர்ணம் இரண்டுகைகள்அஞ்சலிஹஸ்தம் (௮௧) சர்பாகிருதியானதலை விபூதியும்அணிந்துள்ளதாய் தியானித்துதெற்குதிக்கில்ஓம்ஹாம்பன்னகாயநம: எனபூஜித்து (௮௨) பன்னகன்தாமரைப்பூநிறம் ஒருமுகம்பாம்பின்படம்அஞ்சலிஹஸ்தம்பெரியவாலோடு கூடியதாய்(௮௩)தியானித்துநிருதிதிக்கில் ஓம்ஹாம்புஜங்காயநம: என பூஜித்துபுஜங்கன்தாமரவர்ணம் இரண்டுகைகள் சங்குசக்ரம் (௮௪) தலை பாம்பின்தலைசிரஸிற்குகீழ்புருஷாகிருதியாய் தியானித்து மேற்குதிக்கில் ஓம்

ஹாம்காகாயநமஃ யெனபூஜித்து (௮௫) நாகம்பச்சைநிறம்பாம்பின்படம்எல்லா ஆபரணங்களும் எல்லாபுஷ்பங்களும் அணிந்ததாய (௮௬) தியானித்துவாயுதிக்கில் ஓம்ஹாம்நீலாயநமஃ யெனபூஜித்து நீலன்இந்திரநீலநிறம் பெரியபடத்தோடு கூடியதலை (௮௭) பெரியவால்இரண்டுகைகளிலும் தாமரைப்பூ உடையதாய்தியானித்து வடக்குதிக்கில் ஓம்ஹாம் காளகண்டாயநமஃ எனபூஜித்து (௮௮) காளகண்டன்வண்டின்நிறம் பாம்பின்படத்தால்விளங்குபவராய் சிரஸுக்குகீழ்புருஷாகிருதியாய் பாணங்களோடுகூடியவராய் தியானித்து (௮௯) ஈசானதிக்கில்ஓம்ஹாம் கிரீவாயநமஃஎன பூஜித்து கிரீவம்வெண்மைநிறம்பாம்பின்தலை (௯௦) இரண்டுகண்கள் அஞ்சலிஹஸ்தம் சிரஸிற்குகீழ்புருஷாகிருதியுடையவராய் தியானித்து இவர்கள்யாவருக்கும்நைவேத்ய தூபதீபாதிகளசெய்க (௯௧) இவ்வாறுமூன்றுமாவரணம் கூறினோம் இனிநான்காமாவரணத்தைகேட்பாயாக. வேதிகாக்ரத்தின்கிழக்குமுதல் ஈசானம் வரையிலும் (௯௨) ஈசானத்திறகுதெற்கிலும் நிருதிக்கிவடக்கிலும் இந்திரர்முதலானலோகபாலர்களை தியானத்தோடு பூஜித்து (௯௩) இவர்கள்யாவருக்கும் நைவேத்ய தூபதீபங்கொடுக்க இதுவரை நான்காம்ஆவரணம் சொன்னோம். இனிஐந்தாம்ஆவரணத்தைகேட்பாயாக (௯௪) வச்சிராதிபத்மபர்யந்தமான தசாயுதங்களைபட்டிகையைச்சுற்றிலும் பூஜித்துநைவேத்திய தூபதீபங்களைசெய்க (௯௫) தங்கத்தினலாதல் வெள்ளியினலாதல் தாம்பிரத்தினலாதல் அல்லது மரத்தினலாகிலும் யெந்திரிகை செய்தல்வேண்டும் யெந்திரிகையின்மேல்போடும்பலகை இருபதுஅங்குலம் இந்தஇருபதுஅங்குலம்அகலமாகும் (௯௬) இதற்குபன்னிரண்டு அங்குலஉயரம் மூன்றுகால்நாட்டல்வேண்டும் (௯௭) அறுகோணமாயாவது அல்லது விர்த்தாகிருதியாயாவது செய்தல்வேண்டும். பலகைக்குமேல்கர்ணிகையோடும் எட்டுதளங்களோடும்கூடிய தாமரைப்பூபோடுதல்வேண்டும் (௯௮) ரக்ஷாபந்தனதிரவியபாத்திரத்தை இதற்குமேல்வைத்தல்வேண்டும் யெந்திரிகைக்குகீழேயுள்ள கிழக்குதெற்குவடக்குதிக்குக்களில் இருக்கிற (௯௯) மூன்றுபாதங்களில்ராஜஸதாமஸ ஸாத்வீககுணங்களை தியானத்தோடுபூஜிக்க (௧௦௦) யெந்திரிகைக்குமேல்ஆத்மதத்வ வித்யாதத்வ சிவதத்வங்களை அதினதின் அதிபதியோடு தியானத்தோடும்பூஜிக்க (௧௦௧) யெந்திரிகையின்ஈசானதிக்கில்மஞ்சள் பொடியினல்விருத்தாகாரம்போட்டு எழுகுருக்களைபூஜித்து(௧௦௨

சிவஞானத்தைகொடுப்பவருமாயும் உள்ளமேஹேகுரோ சிவயாகத்தின்பொருட்டு ரக்ஷை செய்யப்படுவதை விக்னமன்றியில்நிறைவேற அநுக்கிரஹித்தல்வேண்டுமென (௧௦௩) பிரார்த்தித்துநைவேத்யதூபதீபங்கள்கொடுத்து ரக்ஷாபந்தனம் வைத்திருக்கும் பாத்திரத்தில் ஆதாரசக்திமுதல்பத்மாஸனப்வரையுள்ள (௧௦௪)சலாஸனத்தைபூஜித்து பாத்திரத்தில்ஓம் ஹாம் பிரகிருதிசத்துவாயநம:என பூஜித்து (௧௦௫) முன்னமேயேஅநுதியாய்ஸ்தாபித்துள்ளதும் பிரகிருதியெனபெயர் கொண்டதும் விகிருதிமுதலியதத்வங்களுக்கு ஆதாரரூபமாய் (௧௦௬) தியானித்து அரிசிகளில் ஓம்ஹாம்சப்தகோடிமஹாமந்திராயன நம: வெனபூஜித்து(௧௦௭) சப்தகோடிமஹாமந்திரம் எழுஅக்ஷரங்களும் அக்ஷரங்களுக்கு ஆதாரரூபமாய் இருத்தலால் சிதாகாசஸ்வரூபமாய் (௧௦௮) தியானித்துவிபூதிபாத்திரத்தில் ஓம்ஹாம் மாயாசக்தயேநம:வென பூஜித்து மாமைசாமளாகாரம் ஒருமுகம்வராபயம் (௧௦௯) கட்கம்சூலம் எல்லாஆபரணங்களும் அணிந்துள்ளவாளாய் தியானித்துவிபூதியில் ஓம்ஹாம்லெகுளிச்சுவராயநம: வெனபூஜித்து (௧௧௦) மும்மூன்றுகண்கள்மூன்றுதலை ஆறுகைகள்விபூதி உத்தூளனம் வலக்கையில்சின்முத்திரை (௧௧௧) இதற்கன்னியமானஇரண்டுகைகளில் பாவித்தை அபாவித்தைஇடக்கைமூன்றிலும் வரதம் ஜபமாலை கமண்டலம் (௧௧௨) தங்கநிறம்ஜடைபூணூல் இவைகளோடுகூடியலகுளிசனர்மந்தஹாஸமுடையவராய் எல்லாஆபரணங்களும் அணிந்தவராய்தியானித்து (௧௧௩) தங்கம்அல்லதுவெள்ளி அல்லதுபட்டுபருத்திபஞ்சிலாவது செய்யப்பட்டரக்ஷாசூஸ்திரத்தில் ஓம்ஹாம்நாகராஜாயநம: வெனபூஜித்து (௧௧௪) நாகராஜன்பசுவின்பால்நிறம் இரண்டாயிரங்கண்கள் வராபயம் டங்கம் கிருஷ்ணன் ஆபிரம்படத்தோடுகூடியவராய்(௧௧௫)தியானித்துரக்ஷாபந்தனவலயத்தில் ஓம் ஹாம் வாசுகையேநம: வெனபூஜித்து வாஸுகிசங்கின்நிறம் ஒருமுகம் பாம்பின்படத்தின்தலை (௧௧௬) நான்குகைகள் அஞ்சலிஹஸ்தம் சூலம் பாசம் இவைகளோடுகூடியவராய்தியானித்து ரக்ஷாபந்தனம் முடிச்சில் ஓம்ஹாம் அக்னயே நம:வெனபூஜித்து (௧௧௭) அக்கினி எழுநாக்கு அக்ஷமாலை கமண்டலம் சுவாலைமாலை ரெத்தவர்ணம் ஆட்டின்மேலிருப்பவராய்தியானித்து (௧௧௮) ரக்ஷாசூத்திரத்தில் ஓம்ஹாம் திரயம்பகாய நம:

யெனபூஜித்து திரயம்பகர் மூன்றுதலை ஒவ்வொருதலைகளிலும் மும்மூன்று கண்கள் (ககூ) ஆறுகைகள் வராபயம் பாசம் சூலம்கண்டையில்லு ஜடாமகுடமுடையவராயும் (கஉ0) விபூதிருத்திராக்ஷ எல்லா ஆபரணங்களும் அணிந்தவராய் தியானித்து இவர்கள்யாவருக்கும் நைவேத்தியதூபதீபார்கியங்கொடுத்து (கஉக) புஷ்பத்தை கையில் எடுத்து அஞ்சலிசெய்துகொண்டு நாகராஜாவே எல்லாகர்மங்களிலும் அசுத்தத்தை நிவர்த்தித்து (கஉஉ) சுத்திகரித்தற்பொருட்டு ரக்ஷாபந்தனம் செய்கிறேன் அனுக்கிரஹம்புரிந்து என்னைரக்ஷித்தல்வேண்டுமென பிரார்த்தித்து (கஉங) வேதிகைக்குமுன்னால் உள்ள சதுர்சகுண்டத்தில் பாலாக்னிவரை சம்ஸ்காரஞ்செய்து பாலாக்கினிஹிருதயத்தில் (கஉச) நாகராஜனை ஆவாகித்துபஞ்சாஸன பஞ்சாவரணம்பூஜித்து இந்தமந்திரத்தால் (கஉரு) எல்லா திரவியங்களையும நாகராஜமூலமந்திரம் ஆயிரம் அல்லது ஐந்நூறு அல்லது இருநூற்றைம்பது சங்கைகளால் ஓமம் செய்து (கஉசு) பூர்ணாகுதிசெய்து ரக்ஷாசூத்திரத்தை வாகீஸ்வரிகர்ப்பமுடியில் உண்டானதாய் பாவித்து (கஉஎ) நைவேத்தியதூபதீபங்கொடுத்து ஓம் ஹாம் சிவாயநம: யென மூலமந்திரம்உச்சரித்து (கஉஅ) விபூதியினால் ரக்ஷாசூத்திரத்தில் தடவி வேதகோஷம் மங்களவாக்கு நிர்த்தனம் வாத்யம் (கஉகூ) சங்ககோஷம் இவைகளோடுகூட அகோரமந்திரம் உச்சரித்து சர்வசாதகரக்ஷாசூத்திரத்தை யெடுத்து (கங0) ஆச்சாரியருடைய வலக்கையில் கட்டுதல்வேண்டும் ஆச்சார்யரால் மைத்துள்ள யாவர்களுக்கும் ரக்ஷாபந்தனம் செய்தல்வேண்டும் (கஙக) ரக்ஷாபந்தனத்தின் முடிவில் மூலமந்திரம் உச்சரித்து விபூதிவைத்தல்வேண்டும் சர்வசாதகர் போதகர் ருத்துவஜர் (கஙஉ) ஸ்தானீகர் அர்ச்சகர் பாசகர் பரிசாரகர் இவர்கள் யாவருக்கும் ஆச்சார்யனால் ரக்ஷாபந்தனஞ்செய்தல்வேண்டும் (கஙங) ரக்ஷை அன்றியில் யாகசாலையில் பிரவேசித்தல்கூடாது சர்வசாதகர் போதகர் (கஙச) இவர்கள் ரக்ஷை அன்றியில் இருந்தால் தோஷமாகாது இவர்களுக்குஆசௌச்சம் வரின் ரக்ஷை இல்லாதவரை நீக்கவேண்டிவரும் இதனால் ரக்ஷை இருந்தால்நிரகித்துக்கொள்ளலாம் (கஙரு) ரக்ஷையும்யாகசாலையுள்பிரவேசிப்பதற்கு ஆதிசைவர்களுக்கேசெய்தல் வேண்டும் அன்னியர்களுக்கு செய்தல் கூடாது நிர்த்தனஞ்செய்யும் தாசி

கள் வாத்தியம் வாசிப்பவர் இவர்கள் யாவரும் (௧௩௬) வாஸ்துசாந்தி செய்யும் சமயத்தில் வாத்தியபூஜையிலேயே செய்துகொள்ளல் வேண்டும் இப்படி செய்துகொண்டால் இவர்களை ஆசௌசம்பற்றாது இவர்கள் யாகசாலைக்குவெளியே (௧௩௭) நின்று நிர்த்தகீத வாத்தியங்களை வாசித்தல்வேண்டும் பராவித்தியாசொருபமான சிவாகமங்களை அத்தியயனம் செய்பவர் (௧௩௮) ரக்ஷையோடுகூடியிருந்தால் இவர்களை ஆசௌசம் பற்றாது ஆதிசைவகுலத்தில் உண்டானவர்களே சிவாகமபடனம்செய்தல்வேண்டும் (௧௩௯) யாகசாலையின் உள்ளேபிரவேசிப்பதற்கு யோக்கியர் ஆவார்கள் இவர்களுக்கு அன்னியமானபிராம்மணர்கள் பிரவேசித்தால் ராஜ்யம் நாசத்தைஅடையும் (௧௪௦) இந்ததோஷசமனத்தின்பொருட்டு அகோராஸ்திரமந்திரம் நூறு ஆகுதிசெய்தல்வேண்டும் ருக்கு ர்சாமம் அதர்வணம் முதலிய வேதங்களை யாகசாலையின் வாசற்படிக்கு வெளியேயிருந்து (௧௪௧) அத்யயனம் செய்தல் பொருட்டு இவர்களும் ரக்ஷாபந்தனம்செய்துகொள்ளல்வேண்டும் மஹாசைவர் முதலியபிராம்மணர்கள் ரக்ஷையோடுகூட (௧௪௨) அத்யயனம் செய்தல்விசேஷமாகும். இவர்களுக்கு ஆசௌசமும் கிடையாது ரக்ஷாஹீனர்களாயிருந்தால் பிரதிஷ்டாமத்தியில் ஆசௌசம்வந்தால் (௧௪௩) தள்ளுபடிசெய்யத்தக்கவர்களாவார்கள் இந்தஆசௌசத்தோடு வேதாத்யயனம்செய்தால்தோஷமாய்முடியும் திராவிடவேதமாகிய தேவாரதிருமுறைகளுக்கும் ரக்ஷையோடுகூடியிருந்தால் தோஷமாகாது (௧௪௪) ரக்ஷையின்றியில்இருக்குந்தருணத்தில் ஆசௌசம் வந்தால் இவ்வாறுள்ள யாவர்களையும்பிரதிஷ்டையில் நீக்குதல்வேண்டும் இதனால்ஸர்வபிரயத்தினங்களாலும்ரக்ஷாபந்தனம்செய்துகொள்ளவேண்டியது அவசியம் (௧௪௫) வேதாத்யயனம்செய்பவர்யாகசாலையின்வாசல்படிக்கு வெளியேயிருந்து அத்யயனம்செய்தல்வேண்டும். இவர்கள்வாசல்படிக்குஉள் செல்வாராயின் ராஜராஜ்யம் நாசத்தை யடையும் (௧௪௬) இத்தோஷபரிகாரமாய் ஸ்நபனம்சாந்திஹோமம்செய்தல் வேண்டும்இந்தபிரகாரம்ரக்ஷாபந்தனத்தைசெய்துகொண்டு (௪௭) இதன்பின்கும்பஸ்தாபனத்தைசெய்வாயாக இவ்வாறுகாமிகாகமம் பிரதிஷ்டாதந்திரம்கிரியாபாதம் ரக்ஷாபந்தனவிதியென்கிற முப்ப[illegible] படலம் முற்றுப்பெற்றது. சு. ௧௪௭ ஆக ௪௪௭௫.

கும்பஸ்தாபனம் கூறப்படுகின்றது

ள (௬௬௭) இந்த விர்த்தாக்னியை பிரதிஷ்டாதிகளில் தியா னிக்க பிரதிஷ்டை ஆவர்த்தமனுவர்த்தம் புனராவர்த்தம்முதலிய மூன்றிலும் (௬௬௮) விர்த்தசிவாக்னி வரை ஸம்ஸ்காரஞ்செய்து ஹோமஞ்செய்தல்வேண்டும் இதற்கு வேறான அக்னியில் பிரதிஷ் டைக்கு ஹோமஞ்செய்தல் கூடாது (௬௬௯) மோஹத்தால்செய் வாருகில் ருஜராஷ்டிரன்ஞசத்தை அடையும் வாஸ்துசாந்து முத ல்ரக்ஷாபந்தனம்வரைசெய்யப்படும் அக்னிகார்யத்தில் (௬௭௦) பா லாக்னிவரைஸம்ஸ்கரித்து ஹோமஞ்செய்தல்வேண்டும்தீக்ஷை உ த்ஸவம் பிராயச்சித்தம்முதலிய கார்யங்களில்செய்யப்படும் அக்னி கார்யத்திற்குயௌவ்வனக்னிவரை ஸம்ஸ்கரித்து ஹோமஞ் செய் தல் வேண்டுமெனவும் (௬௭௧)பிரதிஷ்டைநித்யாக்னி இவைகளுக் குவிர்த்தாக்னிஎனக்கூறப்படும் இவ்வாறுவிர்த்தாக்னிவரைஸம்ஸ் கரித்து (௬௭௨) முன்சொல்லியபடிதியானித்து ஆவாஹித்துமது பர்க்கம் நிவேதித்துவிர்த்தசிவாக்னி ஹிருதயபங்கயத்தில் சிவபெ ருமானை ஆஸனமூர்த்திமூலத்தால் பூஜித்து(௬௭௩) ஐந்தாவரணக் கிரமத்தாலும் பூஜித்து அக்னியாகிய ஈசுவரதேஜஸ்பரிசுத்த மா னது மிக மேலானது (௬௭௪) இதினால் உனது ஹிருதயபங்கயத் தில் சிவபெருமானைஆவாகிக்கிறேனென இவ்வாறுதியானித்து ஆ வாஹித்துநைவேத்யதூபதீபாதிகள்செய்து (௬௭௫) குண்டத்தை வாயாகப்பாவித்து நடுவிலுள்ள நாக்கில்விவாஹார்த்தமானஸம்ஸ் காரத்தை (௬௭௬) வௌஷடந்தமூலத்தால் பூர்ணாஹுதிசெய்தல் வேண்டும் நெய்யை ஸிருக்கிலேபூரித்து இதின்நடுவில் தங்கத்தா மரைப்பூ (௬௭௭) தங்கவில்வம் தேங்காய்மூடி எலுமிச்சம்பழம் வெற்றிலைபாக்கு பட்டு இவைகளை ஸிருக்கின் நுனியில் வைத்து (௬௭௮) ஸிருவத்தை இதின்மேல் கவிழ்த்துவைத்து இதின் நு னியில் புஷ்பம் நுனிதர்ப்பை இவைகளை வைத்து (௬௭௯) வல மிடக்கைகளால் சங்கைப்போல் பிடித்து செவ்வயாக நின்று ஸி ருக்கின் வலக்கரத்திலே திருஷ்டியைவைத்து (௬௮௦) எழுந்துநி ன்று நாபிக்கு குறுக்காய் ஸிருக்கைப்பிடித்து (௬௮௧) ஸிருக்கின் நுனியில் வைக்கப்பட்ட பார்வையோடு வௌஷட் முடிவான மூ லமந்திரத்தால் இடது ஸ்தனம்வரை தூக்கி (௬௮௨) விக்னமல் லாது யவப்பிரமாணதாரையாய் எல்லாநெய்யையும் அக்னியில்ஹோ மஞ்செய்க ஸத்யோஜாதாதி பிரும்மபஞ்சகத்தாலும் (௬௮௩) வௌஷடிறுதியாக அக்னியில் ஹோமஞ்செய்க திரும்ப மூலத்தா

லும் ஷடங்கமந்திரங்களாலும் வௌஷட் முடிவாக தனித்தனி ஹோமஞ்செய்வது (௩௮௪) விர்த்த சிவாக்னிக்கு முகாந்தமெனக் கூறப்படும் சிவபெருமானுக்கு வியாப்ய வியாபக ஹேதுவாயுள்ள (௩௮௫) பிருதிவீ முதல் யஜமானனிறுதியாக உள்ள எட்டு அங்கங்களாகும் சதுரச்ரகுண்டம் பிருதிவியும் அர்த்தசந்திரம் அப்புவும் ( ) திருகோணம் அக்னியும் ஷட்கோணம் வாயுவும் விர்த்தம் ஆகாசமும் பத்மம் ஸூர்யனும் (௩௮௭) எண்கோணஞ் சந்திரனும் யோனி யஜமானனும் இந்தப்பிரகாரம் பிரதிஷ்டையில் எட்டு குண்டங்களைக் கற்பித்தல்வேண்டும் (௩௮௮) ஐங்கோண எழுகோணம் ஒன்பதுகோணம் பத்துக்கோணம் பதினைந்துகோணம் பதினாறுகோணம் இவை முதலிய குண்டங்கள் போடுதல் கூடாது (௩௮௯) இவைகளை பிரதிஷ்டையில் நீக்கத்தக்கது மோஹத்தால் போடுவாராயின் ராஜராஷ்டிரங் கர்த்தா போக்தா இவைகள் நாசத்தை அடையும் (௩௯௦) மேலேசொன்ன ஐங்கோணம் முதலாகிய குண்டங்கள் க்ஷுத்ரகர்ம்ம பிரதிஷ்டைக்கு போடுதல்வேண்டும் ஆத்மார்த்த லிங்கப்பிரதிஷ்டையிலும் தீக்ஷை பிராயச்சித்தகர்மங்களில் (௩௯௧) விர்த்தாகாரமாகவாவது நாற்கோணமாயாவது போடுதல்வேண்டும். சதுரச்ரமாகப் போட்டுள்ள குண்டங்களிலும் பிரதானகுண்டம் விர்த்தமேயாகும் (௩௯௨) எல்லா குண்டங்களுக்கும் விர்த்தம் பிரதானமாகும் சிவாச்ரமியாயிருக்கிற ஆதிசைவருக்கு (௩௯௩) ஆத்மார்த்த விஷயமான தீக்ஷையிலும் நவகுண்டம் பிரதிஷ்டையில் கூறியவாறு யோன்யாதி குண்டங்கள் போடுதல்வேண்டும் (௩௯௪) மஹாசைவர் முதல் ஸச்சூத்திரி இறுதியாக ஆத்மார்த்த விஷயமான தீக்ஷையில் ஐந்து குண்டங்கள் போடுதல்வேண்டும (௩௯௫) வர்ணாச்ரம அதீதர்களாய் அதிதீவிர பரிபாகிகளான எல்லா ஆத்மாக்களுக்கும் நவகுண்டம் போட்டு தீக்ஷைசெய்யலாம் (௯௩௬) குருக்கள் சக்திநிபாதம் பார்த்து அந்தந்த பரிபாகத்திற்குத்தக்கவாறு தீக்ஷித்தல்வேண்டும் (௩௯௭) முக்திபதமுக்தி எனவும் ஸாயுஜ்யமுக்தி எனவு மிரண்டுவகைத்தாம் ஐந்துகுண்டம்போட்டு தீக்ஷிக்கப்படுபவர்கள் பதமுக்தியை அடைவார்கள் (௩௯௮) ஒன்பதுகுண்டம்போட்டு தீக்ஷிக்கப்படுபவர்கள் ஸாயுஜ்யமுக்தியை அடைவார்கள் சதுரச்ரகுண்டம் பிருதிவிஸ்வரூபமாயிருத்தலின் இது ஐந்து குணங்களோடு கூடியது பிருதிவிமுதல் ஆகாசமிறுதியாக ஐந்து குணத்தோடு கூடியது

(௩௯௯) ஆகாசத்திற்கு அதிபர் ஸதாசிவம் ஸதாசிவபதபிராப்தி பதமுக்தி எனக் கூறப்படும் (௪௦௦) நிரோதமுதல் சிவஸ்தானம்வரை (௪௦௧) ஆத்மாவுக்கு வியாபகமிருத்தலால் இது சிவபெருமானிடத்தைக்யமான ஸாயுஜ்யமுக்தி எனவும் பதமுக்தியைநோக்க ஸாயுஜ்யமுக்தி மிக மேலானதெனவுங் கூறப்படும் (௪௦௨) சிவபிராம்மணர்களுக்கு தீக்ஷையின்பொருட்டு சக்திநிபாதம் அதாவது பரிபாகம் பார்க்கவேண்டுவதில்லை இவர்களுக்கன்யமான மற்ற எல்லா ஆத்மகோடிகளுக்கும் சக்திநிபாத பரிபக்வம் பார்த்தே (௪௦௩) தீக்ஷைபுரிதல்வேண்டும் பார்க்காவிடில் தீக்ஷை பயனற்றதாகும் ஆதிசைவபிராம்மணர்கள் முன்னமேயே பரமேசுவரரால் தீக்ஷிக்கப்பட்டவராதலின் (௪௦௪) திரும்ப தீக்ஷை வேண்டுவதில்லையாயினும் இவர்களுக்கு உபச்சாரத்தால் தீக்ஷைகூறியுள்ளது இவர்கள்ஸ்வயமேஆச்சார்யரூபியாயிருத்தலால் தம்மிடமுள்ள சக்தியைபிரகாசப்படுத்தும் பொருட்டு (௪௦௫) திரும்பதீக்ஷை செய்துகொண்டால் ஆத்மார்த்தபரார்த்தபூஜைக்கு அதிகாரிவார் இந்தப்பிரகாரம் (௪௦௬) அந்தந்தகாலஉசிதப்படி குண்டங்களைக்கற்பித்துக்கொள்க பிரதிவீ முதலிய எட்டுக்குண்டங்களும் சிவாக்னிக்கு அங்கபூதமாயுள்ளது (௪௦௭) உன்மனாந்தத்திலுள்ள சிவஸ்வரூபசிவாக்னி அங்கி எனக்கூறப்படும் இந்தபாவனாத்மகமாகிய சிவாக்னி ஒன்பது பேதங்களாகும் (௪௦௮) நடுவில் விர்த்தசிவாக்னியும் இதைச்சுற்றிலுள்ள எட்டு திக்குக்களிலுமுள்ள அக்னியைபிரித்தல்வேண்டும் (௪௦௯) ஆச்சார்யர் உட்கார்ந்திருக்கிற பிரதான குண்டத்தைச்சுற்றிலும் மூர்த்திபர்கள் எட்டுகுண்டங்களிலும் உட்கார்ந்து குண்டங்களுக்கு பதினெட்டு ஸம்ஸ்காரங்களை (௪௧௦) செய்தல்வேண்டும் இதற்கு மேலான அக்ஷபாடகம்முதலிய ஸம்ஸ்காரம்செய்தல்கூடாது மோஹத்தால்செய்வாராகில் கர்த்தா போக்தாநாசமடைவர் (௪௧௧) இந்த அங்கஸ்வரூபமான குண்டங்களுக்கு ஸிருவஸம்ஸ்காரம் ஆஜ்யஸம்ஸ்காரம் இவைகள் செய்யக்கூடாது செய்தால் ராஜ்யன்னசத்தை அடையும் (௪௧௨) மற்றுமுள்ளஹோமதிரவ்யங்கள் யாவும் பிரதானகுண்டத்திலேயே ஸம்ஸ்கரித்தல்வேண்டும் பிரதானகுண்டத்திலிருக்கிற ஸாமான்யார்க்யஜலத்தால்அஸ்திரமந்திரமுச்சரித்து (௪௧௩) சுற்றிலுமுள்ள எட்டுகுண்டங்களையும் புரோக்ஷித்துமூர்த்திபர்கள் யாவரும் அந்தந்தகுண்டத்திலுட்காருதல் வேண்டும் (௪௧௪) கூர்மாஸனத்

திலேனும் ஸுகாஸனத்திலேனும் அந்தந்த குண்டத்திற்குத்தக்க வாறு உட்கார்ந்து அந்தந்த மந்திரங்களால் ஹோமஞ்செய்தல்வே ண்டும் (௪௧௫) சதுரச்ரகுண்டத்தில் வடக்குமுகமாயும் யோனிகு ண்டத்தில் வடக்கு முகமாயும் அர்த்தசந்திரகுண்டத்தில் வடக்கு முகமாயும் திருகோணகுண்டத்தில்வடக்குமுகமாயும் (௪௧௬) விர் த்தகுண்டத்தில் வடக்குமுகமாகவும் உட்கார்ந்து ஹோமஞ்செய்த ல்வேண்டும் அறுகோணகுண்டமுதல் பிரதானகுண்டம்வரை கிழ க்குமுகமாய்உட்கார்ந்து ஹோமஞ்செய்தல்வேண்டும் (௪௧௭) பிர திஷ்டாதிகளில் இவ்வாறேயிருத்தல்வேண்டும் இதற்கந்யதாவாயிரு ந்துஹோமஞ்செய்தால் கர்த்தாநாசத்தை அடைவார் தீக்ஷைமுதலி யவற்றில்சதுரச்ரமுதல் அர்த்த சந்திரன்வரை வடக்குமுகமாயும். திருகோணம்முதல்பிரதானகுண்டம்வரைகிழக்குமுகமாகவும் உட் காருதல்வேண்டும் சலிங்கமாகிய ஆதிசைவ ஆச்சார்ய (௪௧௯) லிங்கபிரதிஷ்டையில் சிவபெருமானுக்கு கூறியவாறே யோனிமுத லிய அங்கரூபமானகுண்டங்கள் (௪௨௦) போடுதல் குற்றமாகாது இவற்கன்யமானவர்களுக்கு போடுதல் குற்றமாம் அன்யர்களுக்கு தீக்ஷாகாலத்தில் (௪௨௧) விர்த்தகுண்டமாகிலுஞ் சதுரச்ரகுண்ட மாகிலும் போடுதல்வேண்டும் இந்தப்பிரகாரம் விதிவத்தாய்உட்கா ர்ந்து(௪௨௨) நவாக்னியைபிரத்து அந்தந்த குண்டத்தில் வைத்தல் வேண்டும் ஆச்சார்யன்சிவாக்னியைபூஜித்து (௪௨௩)நவாக்னிபாக த்தின்பொருட்டு ஈசானுதி பிரும்மபஞ்சகங்களாலும் ஹிருதயாதி ஷடங்கமந்திரங்களாலும் வித்யாதேஹம் நேத்திரம் (௪௨௪) மூல மந்திரங்களாலும் தியானத்தோடு பூஜித்து விர்த்த சிவாக்னிக்கு நடுவே ஈசானமூர்த்தாய நமஃ எனப் பூஜித்து (௪௨௫) கிழக்கில் தத்புருஷவக்த்ராய நமஃ எனவும் தெற்கில் அகோராய நமஃ என வும் வடக்கில் வாமதேவகுஹ்யாய நமஃ எனவும் மேற்கில் ஸத் யோஜாத மூர்த்தயே நமஃ எனப்பூஜித்து (௪௨௬) அக்னிகோண த்தில் ஹிருதயாயநமஃவெனப்பூஜித்து ஈசானதிக்கில் சிரஸேநமஃ எனப்பூஜித்து நிருதிகோணத்தில் சிகாயைநமஃ எனப்பூஜித்து வாயுகோணத்தில் கவச்சாயநமஃ எனப்பூஜித்து (௪௨௭) நேத்தி ரம் அஸ்திரம் வித்யாதேஹம் முதலியவைகளை நடுவில் பூஜித்து அனுதிபோதம் நித்பதிருப்தி (௪௨௮) ஸ்வதந்திரம் ஸர்வசக்தி ஸர்வஞ்யத்வம் ஸர்வகர்திருத்வம் முதலிய ஆறுகுணங்களும் அக் னியின் தர்ம்மஸ்வரூபமாய் நிறைந்துள்ளதாயும் (௪௨௯) சிவாக்

ணிஒன்பதுபேதமாய் பிரதிவீமுதல் ஈசானம்வரை வியாப்பியவி யாபகரூபத்தால் ஒன்பதாகப்பாவிக்க (௪௩௦) இந்தப்படிசிவாக்னி யை பிரித்தலும்பொருட்டு தியானித்து பிரதிவீஸ்வரூபமான சது ரச்ரகுண்டம் (௪௩௧) ஹிருதயம் நாபிகண்டம் யோனி மூன்றுமே கலை சிரஸாகிய அக்னி இவைகளெட்டும் ஒவ்வொரு குண்டத்தி ற்கு எட்டங்கத்தின்பொருட்டு கல்பிக்கப்படும்எட்டுஅங்கங்களாம் (௪௩௨) இந்த எட்டங்கமில்லாத குண்டங்களைநீக்குதல்வேண்டும் அக்னிசிகைஎனக் கூறப்படுவதால் அந்தந்தகாலத்தில்ஸ்தாபித்தல் வேண்டும் (௪௩௩) விர்த்தாக்னிக்குகிழக்கில் ஆஹவனீயாக்னயே நமஃ எனதியானத்தோடு ஆச்சார்யன்பூஜிக்க (௪௩௪) ஆஹவனீ யாக்னி ஒருமுகம் மூன்றுகண்கள் மேகலாரூபமான மூன்றுபாத ங்கள் அக்ஷமாலை திருசூலம் ஸ்ருவம் இவைகளை வலதுகைகளி லுடையதாய் (௪௩௫) அங்குசம் டமருகம் ஸ்ருவம் இவைகளை இடது கைகளிலுடையதாய் () ரக்த நிறம் சுகாஸனத்திலுட் கார்ந்திருப்பதாய் ரக்தவஸ்திரமணிந்திருப்பதாய் ஆஹவனீயாக் னியை தியானிக்க () இவ்வாறு தியானித்து ஆவாஹனஞ் செய்து பிரதிவீதத்வாயநமஃ எனப்பூஜித்து பிரதிவி சதுரச்ரமாக வும் எல்லாத்திற்கு ஆதாரபூதமாயும் (௪௩௬) ஜலம்முதலாகியவை கள் இதின்மேல் ஆதேயமாய் யிருப்பதாய் பதார்த்தபாவனை செ ய்க இவ்வாறு பிரதிவியைபாவித்து பிரதிவீதத்வதிபதியானவனை பூஜிக்க ஓம்ஹாம் பவாயநமஃ எனப்பூஜித்து (௪௩௭) பவம் ஸ்ப டிகநிறம் ஒருமுகம் நான்குகைகள் வராபயம் பாசம் சூலம்(௪௩௮) சிகாச்சூடம் மூன்றுகண்களுடையவராய் பிரதிவீதத்வாதிபதியா கியவவரை எல்லாலக்ஷணங்களோடுகூடியவராய் (௪௩௯) தியானி த்து ஆவாஹித்து தத்வேசியைப்பூஜிக்க ஓம்ஹாம் வாமாயைநமஃ எனப்பூஜித்து வாமை நீலநிறம் மூன்றுகண்களோடுகூடியது மகு டம் (௪௪௦) ஒருமுகம் நான்குகைகளோடுகூடியது அபயவரதம் டங்கம்சூலம் (௪௪௧) வெள்ளைப்புடவை முத்துமாலைகளாலலங்கரி க்கப்பட்டதாய் தியானித்து ஆவாஹித்து ஓம்ஹாம் க்ஷமாமூர்த் தயேநமஃ எனப்பூஜித்து (௪௪௨) நான்முகம் எட்டுகைகள் பீதா ம்பரம் வில் பாணம் வரம் பயமற்றகை சூலம் வஜ்ரம் (௪௪௩) க ண்டை பரசு ஜடாமகுடம் எல்லாஆபரணங்களும் எல்லாபுஷ்பங்க ளுமணிந்தவராய் (௪௪௪) கூர்மாஸனத்தின்மேல் சாந்தஸ்வரூபமா யிருப்பவராய் நதிகளால் சூழப்பெற்றிருப்பவராய் தியானித்து

மூர்த்யாதிபதியைப்பூஜிக்க க்ஷமாமூர்த்யதிபதயே ஓம் ஹாம் தத்புருஷாயநம: எனப்பூஜித்து (௪௪௫) தத்புருஷன் குங்குமநிறம் வரதம் பயமற்றகை கத்திபாசு ஜடாமகுடம் (௪௪௬) ரக்தவஸ்திரம் செந்தாமரைப்பூ நேத்திரமூலத்திற்குஸமமாய் ஸௌம்யமாமுள்ள கிழக்குமுகமாகிய தத்புருஷமுகத்தை தியானித்து (௪௪௭) மூர்த்தீசியாகிய தாரிகையைப்பூஜிக்க ஓம் ஹாம் தாரிகாயைநம: எனப்பூஜித்து தாரிகை சியாமவர்ணம் பரிசுத்தமான ஜகனப்பிரதேசம் (௪௪௮) ஒருமுகம் மூன்றுகண்கள் நான்குகைகள் வராபயம் மற்றிரண்டுகைகளில் தாமரைப்பூ (௪௪௯) எல்லா ஆபரணங்களும் எல்லா மாலைகளுமணிந்ததாய்த்யானித்து நைவேத்யதூபதீபங்கொடுத்து (௪௫௦) மூர்த்திபர்கள் சராவத்தினால் அக்னியைக்கிரஹித்து கிழக்குக்குண்டத்தின் நடுவில் வைத்து (௪௫௧) கீழ்மேகலையில் நான்குபக்கங்களிலும் கூர்ச்சங்களைப்போட்டு இதிலிந்திராதிலோகபாலர்களைப்பூஜித்து (௪௫௨) கீழ்மேகலைக்குக்கீழ் நான்பக்கங்களிலும் பரிஸ்தரணங்களைப்போட்டு வஜ்ராதிசக்ரவரைப்பூஜித்து (௪௫௩) அக்னியில் ஸமித்தைவைத்து ஜ்வாலையுண்டாகச்செய்து ஸ்ருவத்தால் மூர்த்திபர்கள் நெய்யையெடுத்து ஹோமஞ்செய்க (௪௫௪) ஆஹவநீயாக்னயே ஸ்வாஹா பிரதிஷ்டிதக்வாய ஸ்வாஹா பவாயஸ்வாஹா வாமாயை ஸ்வாஹா (௪௫௫) க்ஷமாமூர்த்தயே ஸ்வாஹா தத்புருஷவக்த்ராயஸ்வாஹா தாரிகாயைஸ்வாஹா எல்லாவற்றையும் ஹோமஞ்செய்தல்வேண்டும் (௪௫௬) ஸமித்து சருபொரிநெய்யவமுதலிய திரவ்யங்களை இந்த ஆறுமந்திரங்களால் ஹோமஞ்செய்தல்வேண்டும் (௪௫௭) கணக்கிட்டு ஹோமஞ்செய்யத்தக்கது இந்த ஆறு மந்திரங்களென்பதாம் மூலமந்திரம ஸங்கியாயந்திரத்திற்குமேலாய் வேறுபட்டது இந்தமூலமந்திரம் நூற்றெட்டுஹோமஞ்செய்தல்வேண்டும் (௪௫௮) இதற்கன்யமான பசுஸ்வரூபதேவதாமந்திரத்தால் ஹோமஞ்செய்வாராகில் கர்த்தா நாசத்தையடைவர். ஹோமஸங்கியாக்ரமத்தையும் பிரதிஷ்டையின் தினத்தையும் கேட்பாயாக (௪௫௯) பிரதிஷ்டைக்கு பதிமூன்றுநாள் பதினொருநாள் ஒன்பதுநாள் இம்மூன்றும் உத்தமதிரயங்களான தினங்களாம். ஏழுநாள்மத்யமம், ஐந்துநாள் அதமம் (௪௬௦) மூன்றுநாள் அதமாதமமுமாகும் பதிமூன்றுநாளில் செய்யப்படுங்கும்பாபிஷேகத்திற்கு இருபத்திநான்கு காலமும் (௪௬௧) பதினொருநாளிற்கு இருபதுகாலமும் ஒன்பதுநாளிற்கு பதினொருகாலமும் இவைகள்

உத்தமதிரயமான தினங்களின்காலங்களாம் (௪௬௨) ஏழுநாளிற்கு பன்னிரண்டுகாலமும் ஐந்துநாளிற்கு எட்டுக்காலமும் மூன்றுநாளைக்கு நான்குகாலங்களுமாய்யாகபூஜைசெய்தல்வேண்டும் (௪௬௩) நாளும் ஒத்தைப்படையாயிருத்தல்வேண்டும் இரட்டித்தநாள் கூடாது இரட்டித்தநாளில் கும்பாபிஷேகம் புரிவாராயின் ராஜ்யம் பஞ்சத்தால் பீடிக்கப்படும் (௪௬௪) மூன்றுநாளைக்குக்குறைந்தநாள் கும்பாபிஷேகத்திற்குகூடாது ஸ்நபனஞ் சாந்திஹோமம்முதலியவைகள்மாத்திரம் ஒருநாளில்செய்தல் தோஷமாகாது (௪௬௫) கலாகர்ஷம்முதல் கும்பாபிஷேகமிறுதியாக இரண்டுபக்ஷங்களில் செய்தல் கூடாது செய்தால் கர்த்தா நாசமாவார் (௪௬௬) தனபூஜை முதல் ரக்ஷாபந்தன மிறுதியாக உள்ள பூர்வாங்க கிரியைகள் இரண்டு பக்ஷங்களில் செய்தல் தோஷமாகாது பூர்வாங்க கிரியைகளைச் செய்யலாம் (௪௬௭) ஒருகோடி அரைக்கோடி இருபத்தைந்து லக்ஷம் இம்மூன்று ஸங்கியைகளை உத்தமமான மூன்று ஸங்கியையுடைய இருபத்துநான்காலம் இதற்கு கோடி ஸங்கியையும் இருபது காலத்திற்கு அரைக்கோடியும் பதினாறு காலத்திற்கு இருபத்தைந்துலக்ஷமும் ஹோமஞ் செய்தல்வேண்டும் (௪௬௮) இது உத்தமத்தில் கூறிய மூன்று பேதங்களாம் மத்யமம் பன்னிரண்டுலக்ஷமும் அதமம் ஆறுலக்ஷமும் அதமாதமகாலங்களில் மூன்று லக்ஷமும் ஹோமம் செய்தல்வேண்டும் (௪௬௯) இந்த ஹோமத்தின் எண்ணிக்கை நெய்யினால் ஹோமஞ்செய்யப்படுவது மாத்திரமே இதற்கன்யமான திரவ்யங்கள் ஹோமக்கணக்கில் சேர்த்தல் கூடாது (௪௭0) கோடிஸங்கியையோடு கூடிய ஹோமத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக இருபத்துநான்குகாலங்களில் கோடி ஆஹுதியைச் செய்தல்வேண்டும் (௪௭௧) தத்வதத்வேசுவரன் தத்வேசுவரி மூர்த்தி மூர்த்தீசுவரன் மூர்த்தீசுவரீ இந்த ஆறுமந்திரங்கள் கணக்கிடத்தக்கது, இந்த ஆறு மந்திரங்களால ஆயிரம் ஹோமஞ்செய்தால் ஆறாயிரம் ஹோமங்களாகும் (௪௭௨) இந்தப்பிரகாரமாய் ஒவ்வொரு குண்டத்திலும் ஏழாயிரத்து எழுநூற்றி பதினாறு (௪௭௩) ஒவ்வொரு காலத்திலும் செய்து பிரதானகுண்டத்தில் இந்தப் பிரதானகுண்ட மந்திரத்தால் பதினோராஹுதி செய்க (௪௭௪) இவ்வாறு இருபத்தினான்கு காலங்களில் ஹோமஞ்செய்ய கோடி ஆஹுதிகளாகும் கோடிக்குமேல் ஹோமசங்கியை கூடாது செய்தால் தோஷமாய்முடியும் (௪௭௫) இனி

அறைக்கோடிக்கணக்கோடு கூடிய இருபதுகாலத்தில் ஒன்பது குண்டங்களிலும் செய்யப்படும் ஹோமஸங்கியயைக் கேட்பாயாக (௪௭௭) நாலாயிரத்தி அறநூற்று இருபத்தொன்பது ஹோமம் ஒன்பது குண்டங்களிலுந் தனித்தனி ஒவ்வொரு காலங்களிலுஞ் செய்து பிரதாணத்தில் பதிமூன்று மந்திரங்கள் ஹோமஞ்செய்ய இருபதுகாலத்தில் (௪௭௮) அறைக்கோடி ஹோமங்களாகும் இனி கால்கோடியாகிய இருபத்தைந்துலக்ஷ ஹோமத்தைக்கேட்பாயாக பதினாறு காலங்களில் இருபத்தைந்துலக்ஷ ஹோமஞ் செய்தல்வேண்டும் இரண்டாயிரத்தி எண்ணூற்றிதொண்ணூற்றிமூன்றுஹோமம் ஒவ்வொருகாலத்திலும் செய்து ஹோமமுடிவில் (௪௭௯) பிரதானத்தில் எழுபத்துநான்கு ஹோமஞ்செய்து (௪௮௦) இவ்வாறு பதினாறுகாலத்தில் இருபத்தைந்துலக்ஷம்ஹோமஞ்செய்க (௪௮௧ பன்னிரண்டுகாலங்களில் மத்யமாகிய பன்னிரண்டுலக்ஷ ஹோமஞ்செய்க, ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்தொரு ஸங்கியை ஒவ்வொருகாலங்களிலும் (௪௮௨) ஒன்பது குண்டங்களில் தனித்தனி ஹோமஞ்செய்து (௪௮௩) பிரதானகுண்டத்தி தொண்ணூற்றுரு ஹோமமதிகஞ்செய்து இவ்வாறே பன்னிரண்டு காலங்களிலும் ஹோமஞ்செய்தால் பன்னிரண்டுலக்ஷம் ஹோமங்களாகும் (௪௮௪ எட்டுகாலத்தில் ஆறுலக்ஷஞ் செய்யவேண்டிய ஹோமவிதானத்தைக் கேட்பாயாக ஒன்பது குண்டங்களில் ஒவ்வொருகாலத்திலும் தனித்தனி (௪௮௫) ஆயிரத்தி முன்னூற்றி எண்பத்தெட்டு ஹோமஞ்செய்து பிரதானகுண்டத்தில் எழுபத்தி இரண்டு ஹோமமதிகஞ்செய்து (௪௮௬) இவ்வாறே எட்டுகாலத்திலுஞ் செய்தால் ஆறுலக்ஷம் மாஹுதிகளாகும் நாலுகாலத்திற்கு மூன்றுலக்ஷமாஹுதி செய்தல்வேண்டும் ஆயிரத்திமுன்னூற்றி எண்பத்தெட்டு ஆஹுதி ஒவ்வொரு குண்டங்களிலுந் தனித்தனி செய்து (௪௮௭) பிரதானகுண்டத்தில் முப்பத்தாறு அதிகமாய் ஹோமஞ்செய்து இவ்வாறே நான்குகாலங்களில் ஹோமஞ்செய்தால் மூன்றுலக்ஷ ஹோமங்களாகும் (௪௮௮) இவ்வாறு அந்தந்த காலத்திற்கு தக்கவாறு ஹோமஞ்செய்க குறைவாகவும் அதிகமாகவும் ஹோமஞ்செய்தல் கூடாவாம் (௪௮௯) செய்தால் இந்த தோஷத்தால் ஆன்மாக்களுக்கு பீடையுண்டாகும் (௪௯௦) முன் பூஜித்த விர்த்த சிவாக்னிக்கு தெற்கே தக்ஷிணக்னியை ஓம் ஹாம் தக்ஷிணக்னயே

நம: எனப் பூஜித்து இரண்டுமுகம் தங்கநிறம் மூன்று கால்கள் ஏழுகைகள் (௪௯௧) சக்தி அக்னி ஸ்ருவம் ஸ்ருக்கு இவைகள் வலக்கைகளிலுடையதாய் நெய்பாத்திரம் தோமரம் விசிறி இவைகள் இடதுகைகளிலுடையதாய் (௪௯௨) ஆட்டின்மேல் உட்கார்ந்திருப்பதாய் தக்ஷிணாக்னியை தியானித்து ஆவாஹித்து ஜலதத்வாய நம: எனப் பூஜித்து (௪௯௩) ஜலதத்வம் அர்த்தசந்திர வடிவினதாய் நான்குணங்களோடு கூடினதாயும் அக்னி முதலிய ஆறு பதார்த்தங்களுக்கு ஆதாரபூதமாய் பாவித்து (௪௯௪) ஜலதத்வாதிபதயே சர்வாய நம: எனப் பூஜித்து சர்வன் கிருஷ்ணவர்ணம் ஜடாமகுடம் (௪௯௫) ஒருமுகம் நான்குகைகள் அபயவரதம் சூலம் வஜ்ரம் குண்டலம் (௪௯௬) இவைகளோடு எல்லா ஆபரணங்களுமணிந்தவராய் எல்லா மாலைகளுமணிந்தவராய் தியானித்து தத்தேவியான ஜ்யேஷ்டையை பூஜிக்க ஓம் ஹாம் ஜ்யேஷ்டாயைநம: எனப் பூஜித்து (௪௯௭) ஜ்யேஷ்டை பச்சைநிறம் ஒருமுகம் நான்கு கைகள் வராபயம் கத்தி தடி (௪௯௮) பச்சைப்புடவை பச்சை புஷ்பம் எல்லா ஆபரணங்களும் முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவளாய் (௪௯௯) தியானித்தாவாஹித்து ஜலமூர்த்தியை பூஜிக்க ஓம் ஹாம் ஜலமூர்த்தயே நம: எனப் பூஜித்து ஜலமூர்த்தி வெண்மைநிறம் ஒருமுகம் நான்குகைகள் (௫௦௦) மூன்று கண்கள் எட்டுகைகள் கண்டை நாகம் கத்தி சூலம் தாமரைப்பூ வில் சக்தி இவைகளை கைகளிலுடையவராய் (௫௦௧) ஜடை யஜ்ஞோபவீதம் விபூதி ருத்திராக்ஷாலங்கிருதராய் தியானித்து ஆவாஹித்து ஜலமூர்த்தீசுவரரைப் பூஜிக்க (௫௦௨) ஓம் ஹாம் அகோரஹிருதயாய நம: எனப் பூஜித்து அகோரம் மைநிறம் அக்னி டிண்டிமம் (௫௦௩) வராபயம் எகுற்றுப்பல் பயங்கரமான முகம் நீலவஸ்திரம் நீலோத்பலந் தரித்தவராய் (௫௦௪) ஜ்வாலாகேசம் உக்கிரரூபம் வீராஸனத்திலிருப்பவராய் (௫௦௫) இவ்வாறு தியானித்து மூர்த்திசியாகியை ஓம் ஹாம் தீபிகாயை நம; எனப் பூஜித்து தீபிகை ரக்தவர்ணம் இரண்டுகைகள் மூன்றுகண்கள் (௫௦௬) எல்லா ஆபரணங்களுமணிந்தவளாய் எல்லா மாலைகளுமணிந்தவளாய் தியானித்து ஆவாஹித்து நைவேத்ய தூபதீபங்கொடுத்து இந்த அக்னியை மூர்த்திபன் சராவத்தால் கிரஹித்து தெற்குகுண்டத்தை முன்போல் ஸம்ஸ்காரஞ்செய்து அப்புஸ்வரூபமான (௫௦௭) அர்த்தசந்

திரகுண்ட நடுவில்தக்ஷிணாக்னியை வைத்து மூர்த்திபர்ஓம் ஹாம் தக்ஷிணாக்னயேஸ்வாஹா (௫௦௮) ஜலதத்வாயஸ்வாஹா சர்வாயஸ்வாஹா ஜ்யேஷ்டாயைஸ்வாஹா ஜலமூர்த்தயேஸ்வாஹா (௫௦௯) அகோரஹ்ருதயாயஸ்வாஹா தீபிகாயைஸ்வாஹா என நெய்யால் ஹோமஞ்செய்து (௫௧௦) சரு சமித் நெய் பொரி யவை முதலிய திருவ்யங்களால் அந்தந்தக்கணக்கன்படி ஹோமஞ் செய்க இதின்பின் விர்த்தசிவாக்னிக்கு வடக்கில் (௫௧௧) ஆச்சார்யர் ஓம்ஹாம் கேவலாக்னயேநமஃ எனப்பூஜித்து (௫௧௨) இரண்டுகண்கள் இரண்டுகைகள் வராபயம் வெள்ளைப்புடவை வெள்ளைமாலை எல்லாஆபரணங்களுமணிந்ததாய் தாமரைப்பூவில் உட்கார்ந்திருப்பதாய் கேவலாக்னியை பக்மகுண்டத்தில் பாவிக்க (௫௧௩) இவ்வாறு தியானித்து ஆவாஹித்து ஓம்ஹாம் காலதத்வாயநமஃ எனப்பூஜித்து காலதத்வம் பத்மாகாரம் ஸூர்யஸ்வரூபம் (௫௧௪) எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துவது இருட்டைப்போக்குவது இவ்வாறு தியானித்து ஆவாஹித்து தத்வாதிபரைப்பூஜிக்க (௫௧௫) உக்ராயநமஃஎனப்பூஜித்து உக்ரன் தங்கநிரம் ஜடாமகுடம் (௫௧௬) ஒருமுகம் ஸௌம்யமுகம் எட்டுக்கைகள் அபயவரதம் சூலம் பாசம் கத்தி(௫௧௭) ஸிருக்கு தடி குண்டிகை இவைகளைகைகளிலொடையவராய் பூணூல் விபூதி ருத்ராக்ஷம் (௫௧௮) எல்லாஆபரணங்களுமெல்லாமாலைகளுமணிந்தவராய் தியானித்து ஆவாஹித்து தத்வேசுவரியைப்பூஜிக்க (௫௨௦) ஓம்ஹாம் பலவிகரணயேநமஃ எனப்பூஜித்து பலவிகரணிவெண்மைநிரம் ஒருமுகம் நான்குகைகள் (௫௨௧) அபயவரதம் கதாபாசம் வெள்ளைப்பொட்டை கொஞ்சம் அசைவோடுகூடி யௌவ்வனப்பருவம் (௫௨௨) ஸமபங்கம் நல்லகால் எல்லாஆபரணங்களுமணிந்தவளாய் தியானித்து ஆவாஹித்து ஓம்ஹாம் அர்க்கமூர்த்தயேநமஃ எனப்பூஜித்து (௫௨௩) அர்க்கன் குதிரைகட்டிய ரதத்திமேலறியிருப்பவராய்கவச்சகுண்டலமுடையவராய் த்வஜத்தோடுகூடியவராய் மகுடம் பத்மஹஸ்தம் முதலியவைகளோடுகூடியவராய் வடக்கு குண்டத்தில் பாவிக்க (௫௨௪) மூர்த்திஅதிபர் ஓம்ஹாம் வாமதேவகுஹ்யாய நமஃ எனப்பூஜித்து (௫௨௫) மஹாதேவரான வாமதேவர் வரதாபயம் நாகம் மணிரக்தவர்ணம் ரக்தநேத்திரம் (௫௨௬) எல்லா ஆபரணங்களும் எல்லாமாலைகளுமணிந்தவராய் ருச்சிரஸனத்திலிருப்பவராய் உத்தரமூர்த்தீசுவரரைதியானித்து (௫௨௭) ஆவாஹித்

து மூர்த்திசுவரியைப்பூஜிக்க ஓம் ஹாம் பலோத்கடாயைநமஃ என ப்பூஜித்து (௫௨அ) பலோத்கடை பீதவர்ணம் இரண்டுகைகள் மூன்றுகண்கள் எல்லாஆபரணங்களையும் ரக்தபுஷ்பங்களுமணிந்த வளாய் (௫௨௯) தியானித்து ஆவாஹித்து மூர்த்திபர் இந்த அக் னியை சராவத்தால் கிரஹித்து (௫௩0) ஸூர்யாகாரமான பத்ம குண்டத்தை முன்போல் ஸம்ஸ்காரஞ்செய்து குண்டநடுவில்கேவ லாக்னியைவைத்து ஜ்வாலைசெய்து (௫௩க) ஓம் ஹாம் கேவலாக் னயேஸ்வாஹா காலதத்வாயஸ்வாஹா உக்ராயஸ்வாஹா (௫௩௨) பலவிகரணிஸ்வாஹா அர்க்கமூர்த்தயேஸ்வாஹா வாமதேவகுஹ் யாயஸ்வாஹா (௫௩௩) பலோத்கடாயைஸ்வாஹா வென ஸிருவத் தால் நெய்யை ஹோமஞ்செய்து சமுபொரி ஸமித்து நெய்(௫௩௪ யவைமுதலிய திருவ்யங்களை இந்த ஆறுமந்திரங்களால்ஹோமஞ் செய்க இதின் விர்த்தசிவாக்னிக்கு மேற்கில் ஆச்சார்யர் (௫௩௫) ஓம் ஹாம்கார்ஹபத்யாக்னயேநமஃஎனப்பூஜித்து ரக்தநிறம் ரக்தவ ஸ்திரம் வராபயம் (௫௩௬)ஸிருக்ஸிருவம் ஊருத்வஹஸ்தத்திலும் முத்துமாலை ஏழுநாக்கு ஒருமுகம் ஜடை (௫௩௭) குதிரைமேலே றிருப்பதாய் கார்ஹபத்யாக்னியைமேற்குகுண்டத்தில் தியானி த்து ஆவாஹித்து ஓம் ஹாம் ஆகாசதத்வாயநமஃ (௫௩அ) என பூஜித்து ஆகாசம் ஸ்படிகநிறம் விர்த்தாகாரம் சூர்யன்முதல் யஜ மானம்வரை ஆதாரமாய் பாவிக்க (௫௩௯) இவ்வாறு தியானித் து ஆவாகித்து ஓம் ஹாம் ருத்ராயநமஃ எனப்பூஜித்து ருத்திரன் புகைநிறம் ஜடாமகுடம் (௫௪0) ஊருத்வமுகம் மூன்றுகண்கள் எ ட்டுக்கைகள் வராபயம் சூலம் கமண்டலம் வலப்பக்கத்திலும் () டங்கம் குடாரம் சக்திவஜ்ரம இவைகள் இடக்கைகளிலும் விபூதி ருத்ராக்ஷபூஷிதராய் யஞோபவீதம் (௫௪௨) எல்லாஆபரணங்களு மணிந்தவராய் ருத்ரமூர்த்தியைப்பாவிக்க இவ்வாறு தியானித்து ஆவாஹித்து ஓம் ஹாம் கலவிகரண்யைநமஃஎனப்பூஜித்து(௫௪௩ கலவிகரணீ புகைநிறம் வராபயம் பரசு குடாரம் புகைநிறமுடைய புடைவையணிந்தவளாய்தியானித்தாவாஹித்து (௫௪௪) ஓம்ஹாம் ஆகாசமூர்த்தயேநமஃ எனப்பூஜித்து ௫௪௫) ஆகாசமூர்த்தி ஸ்ப டிகநிறம் விர்த்தத்தின்மேலிருப்பவராய் ஒருமுகம் மூன்றுகண்க ள் சூலண்டமருகம் (௫௪௬) டங்கம் கட்வாங்கம் எல்லா ஆபரண ங்களுமணிந்தவராய் தியானித்து ஆவாஹித்து ஓம்ஹாம்ஸத்யோ ஜாதமூர்த்தயேநமஃ எனப்பூஜித்து ௫௪௭) ஸத்யோஜாதம் பால்

உ

சிவமயம்.

காமிகாகமம்.

ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்

ஸம்ஸ்க்ருதமூலமும் தமிழ்உரையும்.

ஸஞ்சிகை நெ. **2.**

இஃது

திருசிரபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவார்சாரியரால்.

கும்பகோணம்

R. குருராஜாசாரியாரவர்களுடைய

ஸ்ரீ கோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரசுரம்செய்யப்பட்டது

அநல-௵ மார்கழி-மீ

1916.

Copy Right Registared.

2. ஆனந்த௵ மாசிமீ ௧-உயில் அனேகர் மஹாசிவராத்திரியனுஷ்டித்தும் ஷைமீ ௩௦-உயில் சிலமடாதிபரும் சிலவாலயங்களிலும் மஹாசிவராத்திரிகொண்டாடியுமிருக்கிறார்கள். எது சாஸ்திரீகமென்பதை விளக்குவாராக என்னுமற்றோ சங்கைக்கு விடைவருமாறு காமிகம்- [illegible] க்ருஷ்ணபக்ஷ சதுர்தஶ்யா[illegible] வேத் । [illegible] ஶிவம் [illegible] ஸ்யாத் । பூர்வேத்யு த்ரயோதஶீ ஸ்யாம் கேவலம் வா சதுர்தஶீ । [illegible] பூர்வேத்யுரேவ [illegible] । [illegible] த்ரயோதஶ்யாம் சதுர்தஶ்யாம் திதி[illegible] ஸ்யாத் । சதுர்தஶ்யா[illegible] । பூர்வேத்யுர்வா[illegible] சதுர்தஶ்யா[illegible] । த்ரயோதஶ்யாம் சதுர்தஶ்யா[illegible] திதி [illegible] । பூர்வேத்யுர்வா [illegible] பரித்யஜ்யைவ ஶிவராத்ரிகம் ஸ்யாத் । பூர்வேத்யுர்வா [illegible] । [illegible] சதுர்தஶீ திதி [illegible] । த்ரயோதஶ்யா [illegible] பரித்யஜேத் ।
என்னும் வாக்கியத்தால்

ஒருமாஸத்தில் இரண்டுகிருஷ்ணபக்ஷ சதுர்தசி வருமாயின் கடைசி திதியில் சிவராத்திரிசெய்தல் வேண்டும், ஆனால் இதில் கொஞ்சம் பேதமுளது. முதலில் திரயோதசிமிச்சிர சதுர்த்தசியும், பின்கேவலசதுர்த்தசியுமாயிருந்தால் பிந்தியதைத்தள்ளி முந்தியதைக் கொள்ளவேண்டுமெனவும், முன்னிலும் பின்னிலும் திரயோதசியும் சதுர்தசியுஞ்சேர்ந்திருக்குமாயின், சதுர்தசி அதிகமானதினத்தில் சிவராத்திரிசெய்தல்வேண்டுமெனவும், பூர்வத்தில் அஹோராத்திரஞ் சதுர்தசியாயிருந்து, அபரத்தில் திரயோதசியும் சதுர்த்தசியுங்கூடியிருக்குமாயின் முந்தியதை நீற்று பிந்தியதைக்கொள்ளத்தக்கதெனவும், பூர்வத்தில் உதயத்திற்குமேல்ஒரு நாழிகை திரயோதசியும், இதின் பின் சதுர்த்தசியும் கூடியிருக்க அபரத்தில் இதற்குமேல் திரயோதசி யிருக்குமாயின் அபரத்தை நீக்கி பூர்வத்தைக் கைக்கொள்ளவேண்டுமென கூறியிருத்தலால், ஆனந்த-௵ மாசி-மீ 1-உயில் சிவராத்திரியனுட்டித்தவர், சிவாகமவழித்தாய் நிலை நின்ற சைவருள்ச் சிறந்தோரென்பது தெற்

கிருத்திகா தீப நிர்ணயம்

அனல ஹூ' கார்த்திகைமீ ௨௪௮ திருக்கணிதபஞ்சாங்கத்தில் சதுர்தசி ௨௪ ௫௪ கிருத்திகை ௭ ௧௩ ஸ்ரீரங்கம்பஞ்சாங்கப்படி ௨௯தேதியில் சதுர்தசி ௨௮ ௨௩ கார்த்திகை ௨௧ ௫௧ ௨௯ மீ ௨௫தேதி திருக்கணிதம் பௌர்ணமை ௨௬ ௪௭ ரோகணி ௨௨ ௭ ஸ்ரீரங்கம் பஞ்சாங்கம் ௨௯தேதியில் பௌர்ணமை ௬௦ ௩௩ ரோகணி ௨௫ ௭ இவ்விரண்டுதினங்களில் எதில்கிருத்திகாதீபோத்ஸவம் செய்யவேண்டுமென நமது குருநாதருகிய ஸ்ரீமத் ஸத்யோஜாதசிவாச்சாரியார்யஸ்வாமிகளை அநேகர் கேட்டிருந்ததற்கு ஸ்ரீகாமிகாகமம் மேல்ருப்பரில் விடையளித்திருந்தார் இதைகவனியாது பஞ்சாங்கத்தில் ௨௯ மீ ௨௫ தேதியில் கிருத்திகாதீபம்போட்டிருப்பதை மாத்திரம் நம்பி நக்ஷத்திரதிநிர்ணய சிவாகமவாக்கியவிரோதமாய் ஸ்வாயம்வாதி சிலதேவாலயங்களில் கிருத்திகாதீபோத்ஸவம் கொண்டாடினதாய்கேழ்வைப்பட்டோம் இது சிவாகமிகாளுக்கும் சைவஸமயிகளுக்கும் ஆலயங்களுக்கும் குற்றமென்பதையீண்டெடுத்தாவிளக்குவோமாக. கிருத்திகாதீபத்திற்குபூர்வகாரணம்கிருத்திகாதீபலக்ஷணபடலத்தில்கவதுசுலோகந்துடங்கி-௪-வதுவரை க்ருத்திகாயாம் து கார்த்திக்யாம் வஹ்நிநக்ஷத்ர ஏவ வா। சதுர்தஶ்யாம் பௌர்ணமாஸ்யாம் கர்த்தவ்யம் க்ருத்திகாதீபகம் யதி॥ உத்தமம் ஸ்யாத் விஶேஷேண சதுர்தஶ்யாம் து ரோஹிணீ। மத்யமம் ஸ்யாத்விஶேஷேண பௌர்ணமீ ஸஹிதஞ்ச யா॥ அதமம் ஸ்யாத்விஶேஷேண தத்ர து ம்ருகஶீர்ஷயோகம்। அந்யஸ்மிந் ஸ்யாத் விஶேஷேண நிஷ்பலம் ச பவேத் ஸதா॥ என்னும்வாக்யத்தால் கிருத்திகாநக்ஷத்திரமும்பர்வமுஞ்சேர்ந்தால் இது அக்னிநக்ஷத்திரமெனவும் பர்வமும் கிருத்திகாநக்ஷத்திரமும் சேர்ந்ததினமெதுவோ அதுகிருத்திகாதீபத்திற்குஉத்தமமாகுமெனவும் பர்வமும் ரோகிணியும்சேருவது மத்யமமாகுமெனவும் பர்வமும் பறணியுஞ்சேருவது அதமமாகுமெனவும் அந்தபர்வம்மிருகசீர்ஷத்தோடுகூடியிருந்தால் அதமாதமமாகுமெனக்கூறியிருத்தலால் ௨௯ ௨௪தேதியில் பர்வமும் ரோகிணீநக்ஷத்திரமும் கூடிய மத்யம கிருத்திகாதீபமாயிருக்க பர்வமும் மிருகசீர்ஷமும் கூடிய அதமாதமதினத்தில் கிருத்திகாதீபம்செய்தல் குற்றமன்றோ காமிகாகமம் பிரதிஷ்டாதி உத்ஸவாந்தபடலத்தில் க்ருத்திகாதீபகஸ்யாபி க்ருத்திகாநக்ஷத்ரமுத்தமம்। மத்யமம் ரோஹிணீயோகம் பரணீயோகமதமம் பவேத்। ம்ருகஶீர்ஷநக்ஷத்ரயோகஸ்த்வதமாதமம் பவேத்। நக்ஷத்ரம் து ஸம்யுக்தம் தீபம் ஸர்வதோ பவேத்। ஶிவாலயே தேவஸ்ய ஸோபாநஸ்யாபி தயா। உத்ஸவே ...

ஜ்யேஷ்ட: ஸர்வஸ்வரோஸ்மி தே । தஸ்மின் க்ருத்திகாதீபம் கர்தவ்யம் ப்ரதோஷ ஸ்ரீகஸ்த்வ । உத்தமேஷ்டே ஜ்யேஷ்டே ஸர்வம்ஸம்யோஜயேத்ருதி । ஸமுத்ரேஷு சந்த்ரே ச தீபாரோஹணகம் ந ச । ஸோமேஹ நாமி க்ருதம் சேத்து ராஷ்ட்ரே க்ஷோபம் நஸம்ஶய: । தத்தோஷஶமனாயாத்ர ஸ்நபனம் ஶாந்திஹோமகம் । என்னும்வாக்யத்தால் கிருத்திகாதீபத்திற்கு கிருத்திகாநக்ஷத்திரம் உத்தமமெனவும் ரோகணீ மத்யமமெனவும் பரணி அதமமெனவும் மிருகசிர்ஷம் அதமாதமமெனவும் நக்ஷத்திரமும் பர்வமும் கூடியதினத்தில்தீபத்தைச்செய்யவேண்டுமெனவும் பர்வம் இரண்டுதினத்திலிருக்குமாயின் ஸாயங்காலவியாபகமாயும் உத்தமாதிபேதங்களானநக்ஷத்திரங்களோடுபர்வஞ்சேர்ந்திருக்குமாயின் அந்ததினத்தில் கிருத்திகாதீபம் செய்யவேண்டுமெனவும் உத்தமாதிநக்ஷத்திரபேதமாய் பர்வஞ்சேர்ந்திருக்க அதமஅதமாதி தினங்களில் தீபோத்ஸவஞ்செய்யக்கூடாதெனவும் மோகத்தால் செய்வாராகில் ராஷ்ட்ரம்க்ஷோபத்தையடையுமெனவும் இத்தோஷபரிகாரார்த்தம் ஸ்நபனம் சாந்திஹோமஞ்செய்தல்வேண்டுமெனவுங்கூறியிருத்தலால் கார்த்திகை மீ௳ உத்தமரோகிணியும் பர்வமும்சேர்ந்திருக்கும் மத்யமகிருத்திகாதீபகாலத்தைவிட்டு ௴ ௨௰ கெதி மிருகசிர்ஷமும் பர்வமும்சேர்ந்துள்ள அதமாதமகிருத்திகாதீபத்தை அநுஷ்டித்தவர் இத்தோஷபரிகாரார்த்தம் ஸ்நபனம் சாந்திஹோமம் செய்தல்வேண்டுமென்பது மூலாகமவாயிலாய் வெளிப்படுகின்றது இவற்றால்சிவாலயங்களுக்கும் சிவாகமிகளுக்கும் சைவர்களாகிய நம்மவர்களுக்கும் ௸ ௴ உத்தியிலேயே கிருத்திகாதீபமென பசுமரத்தாணிபறைந்தார்ப்போல் நாட்டப்பட்டது.   இங்ஙனம்,

பூதலூர் சுப்பிரமணியக்குருக்களென்கிர
அகோரசிவாச்சாரியார்

அட்வான்ஸ் அனுப்பியவர்களின் பெயர்.

ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளை அவர்கள் சித்தூர் வயா பாலக்காடு ரூ 16–0–0. மல்லிகார்ச்சுனக்குருக்களவர்கள் சிவாகமபாடசாலை தேவகோட்டை ரூ. 10–0–0. சைவசிகாமணிபண்டிதர் அவர்கள் சிவமலை, காங்கயம்போஸ்டு வயா திருப்பூர் ரூ 10–0–0 வையாபுரிக்குருக்களென்கிர ஸத்யோஜாதசிவாச்சாரியார் அவர்கள். ராமனுஜபுரம். ரூ 10–0–0 அட்வான்ஸிற்காக ரூ 2–0–0 மணியார்டர்செய்தவர்கள் முத்துக்குருக்கள் அவர்கள். திருவறங்குளம், புதுக்கோட்டை ரூ 2—0—0 ராஜாக்குருக்கள் அவர்கள். திருமுருகம்பூண்டி, ராமலிங்கக்குருக்கள் அவர்கள். புதுச்சேரி. 5-0-0

எடிடர்விலாஸம், ஸத்யோஜாதசிவாச்சாரியார்.
பக்தூர், ஹெட்டாபீஸ், திருச்சி

உ

சிவமயம்.

காமிகாகமம்.

பிரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்.

ஸம்ஸ்கிருதமூலமும் தமிழுரையும்.

ஸஞ்சிகை நெ. 3.

இஃது

திருசிரபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவாச்சாரியரால்.

கும்பகோணம்

R. குருராஜாசாரியாரவர்களுடைய

ஸ்ரீகோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரசுரஞ்செய்யப்பட்டது

அநல-ஸு தை-மீ

1917.

Copy Right Registared.

சிவமயம்.

பிரதோஷ நிர்ணயம்

अहोरात्रं त्रयोदश्यां प्रदोषस्तूत्तमो मतः । परविद्धात्र्यहव्याप्य प्रदोषस्तु विधीयते ॥ सूर्यास्तमनात्पूर्वं त्रिपादोनत्रिनाडिकः । प्रदोषकालकं प्रोक्तं तत्कालेऽर्चयेच्छिवम् ॥ सूर्यास्तमनात्पश्चात् पूर्वं तु यामिनीद्वये । परेद्युरस्तमयात्पूर्वं मध्यमस्तु प्रदोषकः ॥ सूर्यास्तमनात्पूर्वं शिवार्चनविधिक्रमः ॥ रात्रिं व्याप्य त्रयोदश्यां मध्यमः प्रदोषकः । सर्वदेव प्रकारेण प्रदोषव्रतमाचरेत् । दिवा त्रयोदशीकालं दृष्ट्वा त्रयोदशीके ॥ पूजयेत्प्रदोषकालं प्रातःकाले विनश्यति । तत्प्रदोषसमायुक्तं सर्वसंपत्प्रदायकम् ॥ दिवा त्रयोदशीकाले कृत्स्नं सकलकामदम् । पूजयेत्प्रदोषकाले प्रायश्चित्तं प्रदापयेत् ॥ अन्यकालेषु सर्वेषु पूजयेत्तु प्रदोषकः ॥ என்னும் காமிகாகமவாக்கியத்தால் அஹோராத்திரம் திரயோதசியாயிருப்பது உத்தமப்பிரதோஷமெனவும் ராத்திரி திரயோதசிவந்து மருநாள் அஸ்தமனபர்யந்தம் இருப்பது மத்தியமபிரதோஷமெனவும் இப்படிக்கல்லாமல் முதல்நாள் அஸ்தமனத்திற்குமேல்வந்து மறுநாள் இருபத்தாறுநாழிகையோடு த்ரயோதசியிருக்குமாயின் இது அதமப்பிரதோஷமென கூறப்படும், உத்தமப்பிரதோஷத்திற்கு அன்றையதினத்திலும் மத்தியமபிரதோஷம் மருநாளிலும் அதமபிரதோஷத்திற்கு அன்றையதினமே பூஜித்தல்வேண்டுமென கூறுகின்றது. சூர்யால்தமனத்திற்கு முன் மூன்றேமுக்கால்நாழிகை பிரதோஷகாலமாகும். இந்தகாலத்தில் பிரதோஷபூஜைபுறிதல்வேண்டும்: சூர்யால்தமனத்தின்பின் முதனாளில் திரயோதசியிருந்து மருநாள் இருபத்தேழ்நாழிகைவரை திரயோதசியிருக்குமாயின்

மருனாள் பிரதோஷமெனவும் சூர்யாஸ்தமனத்திற்குமுன் இரண்டு நாளிலும் திரயோதசியிருக்குமாயின் இராத்திரிவரை திரயோதசி வியாபித்துள்ள தினத்தில் செய்தல் விசேஷமெனவுங்கூறியிருக்கின்றது. இந்தப்பிரகாரம் பிரதோஷகாலத்தில் பூஜித்தல்வேண்டும். உத்தமபிரதோஷகாலத்தைவிட்டு மத்யமபிரதோஷகாலத்தில் செய்தால் ராஜராஷ்டிரம் நாசத்தையடையும். இத்தோஷபரிகாரம் ஸ்னபனஞ்சாந்திஹோமம் புரிதல்வேண்டும். இப்படிக்கே மத்யமபிரதோஷகாலமிருக்க அதமத்தில் செய்ததற்கும் இவ்விரண்டுமல்லாவிடில் அதமத்தில்செய்வது தோஷமாகாதென்பதாம்.

ஓர் கும்பாபிஷேகலிகிதவிஷயம்.

அனல ௵ தைமீ ௮௳ காளீசுவரன் எனகைச்சாத்திட்ட ஓர்கடிதத்தில் நாளது ௵ தைமீ ௨௧௳ இவ்விடம்நடக்கும் கும்பாபிஷேகத்திற்கு ௧௬௳ கடஸ்தாபனமானதால் ௪நாள் முன்னதாகவே வந்திருந்து நடத்திவைக்கக்கோருகிறேன் என கடிதம் ஒன்று கண்ணுற்றேன். ௧௬௳ கடஸ்தாபனமானால் ௨௧௳க்கு நாள் ௬ ஆகிறது ஒற்றபடைநாள் ௧, ௩, ௫, ௭, ௯, ௧௧ முதலியநாட்கள் கும்பாபிஷேகத்திற்கு குறித்தானவைகளென சிவாகமங்கள் வற்புறுத்திக்கூறும் ௨ ௪ ௬ ௮ ௧௦ முதலியஇரட்டித்த நாட்களில் கும்பாபிஷேகஞ்செய்யசிவாகமம் விதிக்கவில்லை. மேலுங்கும்பாபிஷேகம் விதிநிஷேதஸித்தாந்தங்களையுணர்ந்தோர் புறிதலிற்கையாதலின் மற்றும்பர்யாலோசித்துப்போக விருப்பங்கொண்டோம்.

அட்வான்ஸர்

சூர்யமூர்த்தி சுப்பி மணியக்குருக்கள் சிவாகமபாடசாலை உபன்யாஸகர் தேவகோட்டை. ரூ 10—0—0. சா. சொக்கலிங்கக்குருக்கள் பரமத்திவேலூர் வயா புகளூர் ரூபா. 10—0—0 கே பி. ராமனாதக்குருக்கள் என்கிற வாமதேவசிவாச்சாரியார் கொல்லங்கோடு வயா பாலக்காடு 10-0-0 சுப்பிரமணியக்குருக்கள் பவானி வயா ஈரோடு ரூபா 10—0—0 விசுவனாதக் குருக்கள் விஷ்ணம்பேட்டை திருக்காட்டுப்பள்ளிபோஸ்டு வயா பூதலூர் ரூ.10.

ருமணுதக்குருக்கள் கண்டனூர் ரூ 10-0-0 தைவசிகாமணிபண்டி தர் கடத்தூர்உமெலைப்பேட்டைத்தாலூகா கோயம்புத்தூர்ஜில்லா ரூ 5—0—0 வருஷசந்தா டி ஜீக்குருக்கள் ஜமீன் வள்ளக்கோட்டை ஈச்சூர்போஸ்ட் ஸ்ரீபெரும்பூதூர் டிவிஷன் 6—0—0 வேத முத்துக்குருக்கள் விருப்பூர் பெருங்களூர்போஸ்டு புதுக்கோட்டை ஸம்ஸ்தானம் 2—0—0 மாதாமாதம் புஸ்தகம்பெருபவர்க்கு தெரிவித்துக்கொள்வதாவது தங்களுக்கனுப்பும்ஸஞ்சிகை முதல்ஸஞ்சிகை. இரண்டுமாதம். ரூபா 1—0—0, வீபியிலனுப்புவோம் பெற்றுக்கொண்டால் மறுமாதஸஞ்சிகை புக்போஸ்டில்வந்துவிடும். இப்படிக்கே வந்துகொண்டிருக்கும். மற்ற விஷயங்களுக்கு ரிப்ளை மூலியமாய் பதில்கேட்க உடனுக்குடனனுப்பத்தடையிராது.

சிவராத்திரி நிர்ணயம்.

அனலஹு மாசிமீ அ தேதி த்வாதசி க உக திரயோதசி ருச கக ஷெடிமீ கூ ந்தேதி சதுர்த்தசி சகூ சக இவ்விரண்டு தினங்களில் மஹாசிவராத்திரி எந்ததினத்தில்கொள்ளல்வேண்டுமென்னசிலரெம்மை வினவியதால்விடையளிக்கவிருப்புற்றோம். அதியில் மஹாநிசிக்குமேல் திரயோதசி அதிகமிருத்தலால் இதில்சிவராத்திரிசெய்தல் கூடாவாம் ஷெடிமீ கூவ யில் இராத்திரிககூ க்கு மேல் அமாதோஷம்வருவதால் கூடுமோவெனின் [illegible] என்னுமவாக்கியத்தால் சதுர்த்தசி திரயோதசியோடு கூடியிருப்பினும அமாஸம்மந்தப்பட்டிருப்பினும் சதுர்த்தசிஇராத்திரியில் அதிக்கிரமித்திருக்கும்தினமே துவோ அதில்சிவராத்திரிசெய்தல்வேண்டுமெனக்கூறியிருப்பதால் ஷெடிமீ கூ தேதியிலேயே மஹாசிவராத்திரி அனுஷ்டித்தற்பாலது இதுவிஷயமாய் கார்த்திகை மார்கழிமீ த்திய ஸஞ்சிகை டைடல் பேஜில் சாஸ்திரமுகத்தால் காட்டிநிரூபித்திருக்கின்றேன். ஆங்குற்று நோக்கிஸந்தேகந்தெளிந்து கொள்வாருக.

இச்சஞ்சிகை. அருமையானசைவாலங்களையும் விதிவிலக்குக்களையும் நன்குபோதிக்கதற்குரியனவாயிருத்தலின் தனவந்தர்கள் இதைப்பிரித்தியடையக்கருதுவாருக. சுபம்.

எடிடர்விலாஸம். ஸத்யோஜாதசிவாச்சாரியார்,
தெம்ப்ளாசிஸ்:— புத்தூர், திருச்சி.

உ

சிவமயம்.

காமிகாகமம்.

பிரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்.

ஸம்ஸ்க்ருதமூலமும் தமிழுரையும்.

ஸஞ்சிகை நெ. **4.**

இஃது

திருசிராபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவாச்சாரியரால்.

கும்பகோணம்

R. நடராஜாச்சாரியாரவர்களுடைய

ஸ்ரீ கோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரகாசஞ்செய்யப்பட்டது

அநல - வரு மாசி-மீ

1917.

Copy Right Registared.

உ

சிவமயம்.

மஹா சிவராத்திரி சிர்தூக்கம்.

நித்யமங்களமூர்த்தியாகிய பசுபதி பரமேசுரரிடத்தில் அன்புதடித்துள்ள சைவசமயிகளாகியநம்மனோர் பலர்க்குந் தெரிவித்துக்கொள்வதாவது :—

சிவவிருதம் பலவற்றிலுஞ்சிறந்தது மஹாசிவராத்திரியென்பதாய் மெய்நூல்வற்ப்புருத்திக்கூறுதலின் இவ்விருதமான்யம் சிவாகமங்களினாலும் புராணேதிஹாஸங்களினாலும் நன்குகூறப்படும். இவ்வுண்மையிங்ஙனமிருக்க ஸ்மார்த்தசிவராத்திரியெனவும் ஆகமசிவராத்திரியெனவும் சிலர் இருகூறுக்கமுயல்கின்றார் ஸ்மார்த்தருக்கும் ஆகமிகாளுக்கும் விருதநிர்ணயம்செய்வது சிவாகமமேயாதலால் சிவாகமங்களிலிப்பேதம் மறந்துங்கூறியதில்லை. ஸ்மிருதிபதினென்கினுள் அணுவளவும் இவ்விருதம்கூறியதில்லை இவற்றால் ஸ்மார்த்தர்களும் சிவாகமத்திற்கூறியவாரே சிவராத்திரிவிருதம் அநுஷ்டித்தல்வேண்டுமென்பது தெளிவாய்ப்புலப்படுகின்றது. ஆன்னீககர்த்தாவாகிய வைத்யநாததீக்ஷிதரும் சிவராத்திரிநிர்ணயங் கூறியவிடத்தில் காமிகாதி சிவாகம வாக்கியங்கொண்டே நிர்ணயித்திருத்தலால் சிவாகமத்திற்குமாராய் ஸ்மார்த்தர்களுக்கு சிவாராத்திரியுண்டென்பதை யாவரொப்புவர். மாதம் சாந்திரமானம் ஸௌரமானமென இரண்டுபேதமுடையதாதலின் ஸ்மார்த்தர்கள் சாந்திரமானிகளெனசிலர்கூறிக்கொள்வதால் மாகசுத்தத்தால்தைமாதத்திலும் சிவராத்திரிவருமெனவாதிக்கும் வாதிசிலருளர். த்விஜா [illegible] என்னும் சிவபுராணவாக்கியத்தால்த்விஜர்களுக்குசாந்திரமானத்தில் விருதபலனைப்பெறினும் உபாகர்மம்பிதுருகாரியம் சிவராத்திரிவிருதம்இம்மூன்றையும் அனுஷ்டித்தல்கூடாதெனகூறியிருத்தலால் இப்பிரமாணத்திற்குவிரோதமாய்அனுஷ்டிக்கப்புகுவரேல் விருதபிரஷ்டராவரென்பதில் தடையில்லை. பிரமாணவிருத்தமாய்ஸ்மார்த்தர்களும்ஸத்காரியங்களை செய்யவிரும்பார் கேவலம்கர்மயவாதிகளுக்கு சாந்திரமானமெனகாமிகாதிகள்கூறுவதால் ஸ்மார்த்தருள்ளும் சிவபக்திமான் அநேகரிருப்போர் சாந்த்ரமானத்தைஇவர்கள் உட்கொள்ளவிரும்பார். கொ

ளுவரேல்யுகாதிப்பண்டிகையிலேயே இவருக்குவருஷம்பிறந்துவிடல்வேண்டும். பிதுருசிரார்த்தாதிகளும் சாந்திரமானத்தில் மாறுபட்டுநிற்கும். இரண்டுதிதிகளில் இரண்டுசிரார்த்தம் செய்யவேண்டிவரும் இவ்வாறுதெலுங்கர்களுக்கு அனுஷ்டானமேயன்றி திராவிடபிராமணர்கள் இங்ஙனமனுஷ்டிப்பதில்லை. இவர்களைசாந்திரமானியெனகூறுதல்குற்றமாம். இவர்களும்சௌரமானியென்பதே தீர்மானம் இவற்றால் மாதவித்தியாரண்யரும் இவர்களுக்குஏற்படக் காரணமில்லை இவ்வாறுள்ளஞாயர்பலவற்றாலும் ஸ்மார்த்தசிவராத்திரியென இவர்களை சிவாகமத்திற்கன்னியமாய் ஒதுக்கி ஆகமசிவராத்திரிதனக்கென வாதிக்கும்வாதமுடையார் விவாதம்சாலச்சிறிப்புடைத்தே சிற்சிலபஞ்சாங்கங்களிலும் ஆலயசிவராத்திரிமஹாசிவராத்திரியென இருகூறாய்வெளிப்படுத்தியிருக்கின்றது இதில் ஆலயத்தில்செய்யும் சிவராத்திரி மஹா சிவராத்திரியன்று ஆலயத்திற்கும் மஹாசிவராத்திரி என்றதற்கும் திதிநிர்ணயபேதங்களுளதோ உளதேல் எண்ணெடுத்துக்கூறவெளிவருவராக ஸ்மார்த்தர்களுக்கும் ஆகமிகாள் சிவாகமப்பிரமாணங்கூறி சிவராத்திரி நிர்ணயம் செய்யபுகுவரேல் அதை அவர்கள் மறுத்துக்கூறுவது வழக்கமின்றாதலின் அவர்க்கு போதிக்கும் பொதுசக்தியுடைய ஆகமிகாளின்றாதலின் அவர்மேரில் குறைகூறுதலெங்ஙனம் கூடும் இதனால் மஹாசிவராத்திரி ஆலயங்களில் அனுஷ்டிக்கும் தினத்திலேயே யாவருக்கும் சிவராத்திரி யனுஷ்டித்தல் வேண்டுமென்பதுட தீர்மானமாயின இது நிற்கசிவராத்திரி உத்தமம் மத்தியமம் அதமம் எனமூன்றுபேதம் சிவாகமங்களில் திரயோதசிமிச்சிரமாயுள்ளசதுர்தசி உத்தமமெனவும் அகோராத்திரம் சதுர்தசியாய் இருப்பது மத்தியமமெனவும் சதுர்தசி பர்வத்தோடுகூடியிருப்பது அதமமெனவும் கூறியதோடு திரயோதசி சக்திரூபமாயும் சதுர்தசி சிவரூபமாயும் இவ்விரண்டும் சேரும் காலம் மஹாநிசியெனவும், மஹாநிசிக்குமேல் இவ்விரண்டுமே சேருமாயின் மறுநாள் செய்யவேண்டுமென பிரமாணங்கள் வற்பொழுத்திக் கூறுதலால் இவ்வருடம் மாசிமாதம் அ-ம் தேதி இவ்விலக்கணவிருத்தமாயிருத்தலின் இதில் சிவராத்திரி அனுஷ்டித்தோர் அனுஷ்டானத்திற்கு பிராயச்சித்தமுமன்றே, சிவாகமங்களில் கூறியிருக்கின்றது.

சிவராத்திரி புராணம்.

அற்றமில்த்த ராத்திரிமுன் சதுர்தசி யோர்கலை கூடிலன்றுகொள்க
செற்றமிலச்சதுர்தசிநன்னிரவினிற்பின்னொருகலைதான் சேடித்துற்
றுன் மற்றைநாட்கொளல்வேண்டும்வைதிகரும்விரத்தர்களும் மதிக்
கும்பக்க முற்றதுதானிரண்டுபடிவிரவிலதிகக்திதிதானுசிதமாமே·

குறைவில்லாத நடுராத்திரியில் அதாவது கரு நாழிகைக்கு முன்சதுர்த்தசிஒருகலை கூடியிருக்கும்தினத்தில்சிவராத்திரிசெய்தல்வேண்டுமெனவும் இந்தசதுர்த்தசிமுற்குறித்தநாழிகைக்குப்பின்னொருகலைகழித்துவந்தால் மறுநாள்சிவராத்திரி செய்தல்வேண்டுமெனவும் இவ்வாறிரண்டுபட்டால் ராத்திரி சதுர்தசி அதிகமாய் இருக்கும்நாள்எதுவோ அதில்வைதீகர்களும்விரக்தர்களும் மஹாசிவராத்திரி அனுஷ்டித்தல் வேண்டுமென கூறியிருத்தலால் திரயோதசியொன்றுமாத்திரமே போதுமென்னும்வாதம் யாதாய்முடியுமோவறிந்திலம். மஹாசிவராத்திரிக்கு சதுர்த்தசிபிரதானமா? திரயோதசி பிரதானமா! இவ்விரண்டில்வியாப்பியமெது! வியாபகம்எது! இச்சிவருத்திரிஉண்டானதற்கு காரணமென்ன ராத்திரி நிசி மஹாநிசி காளராத்திரி பூதராத்திரியென ஐந்துபேதம் சிவாகமங்களில் கூறியபடியால் இவைகளுக்கு காலநிர்ணய நாழிகையெப்படி? இச்சிவராத்திரிகாலம் சாயங்காலததிலா அர்த்தஜாமத்திலா பள்ளியறைபூஜைக்குப்பின்னா அல்லதுமுன்னாவென்னும் ஆஸங்கைநிகழும் சாயங்காலத்திலென்பாருயின் பூஜாலோபம் வந்து

இன்னும்வரும்.

அட்வான்ஸர் வருஷசந்தாதார்களும்·

சதாசிவகுருக்கள். சாத்தங்குடி இலத்தூர்போஸ்டு (வயா) சீயாழி ரூ. 10—0—0 ராமனுதகுருக்கள் கண்டனூர்ரூ. 10-0.0 தியாகராஜக்குருக்கள் சோழச்சேரி முகுந்தனூர் போஸ்டு (வயா) குளிக்கரை. ரூ. 6—0—0. பட்டுசாமிக்குருக்கள் திருப்பனங்காடு மாமண்டூர் போஸ்டு (வயா) காஞ்சீபுறம் ரூ. 6—0—0

எடிடர் விலாஸம்:— சத்யோஜாத சிவாச்சாரியார்
புத்தூர்· திருச்சி·

உ

சிவமயம்.

காமிகாகமம்.

பிரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்

ஸம்ஸ்கிருதமூலமும் தமிழுரையும்.

ஸஞ்சிகை நெ. **5.**

இஃது

திருசிராபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவாச்சாரியரால்.

கும்பகோணம்

R. குருராஜாச்சாரியாரவர்களுடைய

ஸ்ரீ கோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரகாசஞ்செய்யப்பட்டது

பிங்கள-வரு சித்திரை-மீ

1917.

Copy Right Reserved.

சிவமயம்.

பஞ்சாங்கத்திலுற்ற ஸந்தேகம்.

பிங்கள வருஷ வாக்யபஞ்சாங்கமுகவுரை யொன்றுகண்ணுற்றோம். இவற்றுள் திதிரூபம் மநும் ஸ்ம்ருத்வா வாரரூபம் ஸ்வயம் ஹரி: । நக்ஷத்ரம் சக்ஷூரூபம் ச புத்தியோகம் ததைவ ச ॥ விஷ்ணுகரணம் சைவ வாமாங்கயோ தேவதா ॥ என்னும்சுலோகமொன்று வரைந்திருக்கின்றது. திதிரூபமாய் மநுவைகூறியபின் அதிதேவதையாகக்கூறுவது உசிதமோ மநுவே திதிரூபமாயிருக்க இதற்கு அதிதேவதை வேறொன்றையன்றோ கூறவேண்டிவரும். இந்தசுலோகம் வேதாகமங்களிலுள்ளதா ? அல்லதுபுராணத்திலுள்ளதா ? ஸ்மிருதி இதிஹாஸங்களிலுள்ளதா ? சில்பத்திலுள்ளதெனக்கூறுவரேல் சில்பம் ஜோதிடசாஸ்திரத்திற்கு விரோதமாய்கூறுமாயின் கணிதஞ்ஞர் இவற்றை அங்கீகரியார் ஜோதிடத்திலோ வஹ்நிர் விரிஞ்சோ கிரிஜா கணேச: பணீ விசாகோ தினக்ருந்மஹேச: । துர்காந்தகோ விஸ்வஹரி: ஸ்மரஸ்ச சர்வ: சசீ சேதி புராணத்ருஷ்டா: ॥ என்னும்வாக்யத்தால் பிரதமைக்குஅக்னி துவிதியைக்கு பிரும்மாவும், திருதியைக்கு பார்வதியும்சதுர்த்திக்குகணபதியும் பஞ்சமிக்குசர்ப்பமும்ஷஷ்டிக்குசுப்பிரமண்ணியரும்சப்தமிக்குசூரியனும், அஷ்டமிக்கு ஈசுவரனும், நவமிக்குஅஷ்டவசுக்களும், தசமிக்குநாகமும், ஏகாதசிக்குதர்ம்மமும், துவாதசிக்கு விஷ்ணுவும் திரயோதசிக்குமன்மதனும், சதுர்த்தசிக்குகலியும் பௌர்ணமைக்குசந்திரனும், அமாவாசிக்கு பிதுருதேவதைகளும் இந்த தேவகணங்கள் திதிக்களுக்கு அதிதேவதைகளாக கூறியிருக்க, மநுவை திதிரூபமாய் கூறுவதெப்படி ? திதிஒன்று ? பதினைந்தா ? திதிபதினைந்தாயிருக்க மநுஒருவரை அதிதேவதையாககூறுவது தகுதியோ பதினைந்துதிதிக்கும் ஒருவரே அதிதேவதையென்பாராயின் உலகத்திற்கே அந்தோணி .அதிதேவதையென்றால் யாவரொப்புவர் ? அதனதற்க்குறியசாஸ்திரத்தாலன்றோ நிரூபித்தலுசிதமாம். மற்றும் வாமதேவமுகத்தை கிருஷ்ணவர்ணமாயும் அகோரமுகத்தை ரக்தவர்ணமாயும் ஈசானமுகத்தை சியாமவர்ணமாயும் தியானசுலோகத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. இதுவேதாகமபுராணஇதிஹாஸாதிகளுக்குவிருத்தமென்பதை பின்விளக்கிக்காட்டுவோமாக. ஸத்யம் ஸ்வேதாபம் ச ஸுக்லம் ப்ராக்வக்த்ரம் ச ஸுக்லம் ப்ரோக்தம் | அகோரம் நீலம் ப்ரோக்தம் ... ॥ என்வ

றைந்த இந்தசுலோகமெங்கிலுள்ளது? ஆசார்யசப்தம்புனருக்திதோஷமுண்டாகாதற்கநதாது இரட்டித்ததற்குகாரணமியாதோ? ஆதிபிர்ம்மகுலோத்பவம்கூறுவதால் பிரம்மகுலம் ஆதியாயிருந்து அதிலின்று தோற்றியவரென பொருளாகின்றது அங்ஙனமன்றி பிர்ம்மகுலத்திற்கு முதன்மையாய் ஸ்தபதிமுதல்விசுவகர்மரிருதியாக உண்டானவரெனக்கூறுவரேல் இவற்குமுதன்மையாயிருந்து உண்டாக்கியவர்யாவர்? இவர்களை ஆசார்யரென எந்நூலில் கூறியிருக்கின்றது. சில்பத்தில் கூறியிருக்கின்றனரென்பரேல் சில்பத்தில்வல்லவர்களுக்கு சில்பாச்சார்யரெனவும் மௌம்வாசிப்பதில் வல்லவருக்கு வாக்யாசிரியரெனவும் சமயலில்வல்லவர்களுக்கு பாச்சகாச்சார்யரெனவும் நிர்த்தங்காப்பிப்பதில் வல்லவருக்கு நிருத்தநாச்சார்யரெனவும் இன்னல்வறையும் அவ்வநூல்களில் ஆச்சார்யரெனக் கூறியிருக்கின்றது இதினால் சில்பசாஸ்திரமேகதேசமாய் வைத்து அதிற்கூறும் பிரமாணங்களைமுதனூலாக்கி வியவஹரித்தல் கூடாது வேதாகமங்கள் முதனூல் புராணம்வழிநூல் ஸ்மிருதி இதிஹாஸங்கள்சார்புநூல் இம்மூன்றையும்விட்டுசில்பத்தில் நுழைந்துகாலங்கடத்துவதால் யாது பயன்—இவற்றுள்ளும் ஸ்மிருதி இதிஹாஸங்கள் புராணத்தைவிரோதித்தால் எங்ஙனமப்பிராமாண்ணியமாகும். புராணம்வேதாகமங்களை விரோதித்தாலிதுமெங்ஙனமப்பிராமாண்யமாகுமிவற்றால் சார்புநூல்வழிநூல்முதநூலிற்கு முரணற்றவியவஹாரத்தை விவேகிகள்கொள்வாராதலின் சில்பசாஸ்திர உத்பத்தியையும், மநுமயத்வஷ்டாசில்பி விசுவஞ்ஞர் முதலியஉத்பத்திகளையும் வேதாகமபுராண இதிஹாஸாதிபிரமாணங்களால் காட்டுவதிவர்கடமை மற்றவைபின் வரவிருக்கும் ஸத்யோஜாதசிவாச்சார்ய ஸ்வாமிகளின் சிஷ்யகோடியிலொருவராகிய அகோரசிவன்.

நடராஜா அபிஷேகத்திலுற்ற ஆசங்கை.

பிங்கள வருஷ சித்திரை மீ˚ ச உயில் திருவோணநக்ஷத்திரம் கச—ருள ஜூடீ மீ˚ ந.கஉ. திருவோணநக்ஷத்திரம் ந.நு—சநு இவ்விரண்டுதினத்தில் எதில்நடராஜா அபிஷேகஞ்செய்வதெனசிலர் ஸந்தேகமேற்கொண்டு நமது குருஸ்வாமியாருக்கு தெரிவித்திருந்த கடிதனைக்கி யாம்விடைதர யிரகேந்திரனும் ஸ்ரீசிதம்பரம் முதலியநடராஜ க்ஷேத்திரங்களிலெவ்வாறு செய்திருக்கின்றனரோ யாமறியோம். நடராஜாவுக்கு அபிஷேகம் ஆறுநாள் அஃதெங்கன

மெனின்- காமிகாகமம் [illegible]
[illegible]
[illegible] என்னும்வாக்யத்தால் நிருத்தமூர்த்தி அபிஷேகத்தைக்கேட்பாயாக. எனத்தொடங்கி- ஒருமாதத்திலிரண்டுநக்ஷத்திரம்வருமாயின்பிந்தியதில்செய்யவேண்டுமெனவும் பிந்தியதில் ஸங்கிரமணதோஷம்வந்தால்முந்தியநக்ஷத்திரத்தில்செய்தல்வேண்டுமெனவும் இவ்வாறன்றிதோஷநக்ஷத்திரத்தில் செய்வாராகில் கர்த்தாபோக்தா நாசமடைவாரெனவும்இந்ததோஷபரிஹாரார்த்தம் ஸ்நபனஞ்சாந்திஹோமஞ்செய்தல் வேண்டுமெனக்கூறியிருத்தலால் இவ்வருஷம் ஷடி மீ ௪ உயிலும் ௩௧ உயிலும் திருவோணம்வருவதால் ௩௧ உக்கு ஸங்கிரமணதோஷமிருப்பதால் ௪ தேதியில்செய்து ௩௧ உ செய்பவர்பிராயச்சித்தஞ்செய்துபூஜித்தருவேண்டுமென சாஸ்திரவாயிலாய்வெளியாகின்றது இவற்றால்திருவோண அபிஷேகம் ௪உ என்பதே தீர்மானம்[மற்றவைபின்வரும்.

இங்ஙனம் அகோரசிவம்.

உ

சிவமயம்.

காமிகாகமம்.

பிரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்.

ஸம்ஸ்கிருதமூலமும் தமிழ்உரையும்.

ஸஞ்சிகை நெ. **6.**

இஃது

திருச்சிராபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவாச்சாரியரால்

கும்பகோணம்

R. குருராஜாச்சாரியாரவர்களுடைய

ஸ்ரீ கோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரகாசஞ்செய்யப்பட்டது

பிங்கள-௵ வைகாசி-மீ

1917.

Copy Right Reserved.

சிவபக்தசிகாமணிகளாகிய யாவர்க்குந்தெரிவித்துக் கொள்வதாவது. நமது தேவஸ்தானங்களில் பிரதிஷ்டைமுதலிய பரதர்ம்மங்களை சிவாகமமே தலைமுறையிலுன்னோக்க மற்ற அசிவம் பாவநாத்மகமான நாட்டாரெனவுங்குருக்களய்யாவெனவும். கும்பாபிஷேகத்திற்கு திருமஞ்சாத்தித்திரியும் சிலரை ஸர்வஸாதகரெனவும் ஆச்சார்யரெனவும் போதகரெனவும் யல்படித்தாயமைத்து மேலான சிவபுண்யத்தை அவமாக்கி குருவித்தலையில் பனங்காயேற்றி பயனடையவிரும்புவர்போல் பரதர்ம்மபலனை அடையவிரும்பிநிற்கும் சிற்சிலர்க்கோர் அறிவிப்பு:- நீண்டகாலமாய் எமது குருமணியாகசாலைதிக்கு. அகலநீளம் பதம். வேதிகையினுயரம். குண்டாங்கம் கலாகர்ஷணம் ஆவாஹநம்முதலிய கிரியாநியமங்கள் இவைகள் யாவும். விதிவிலக்காய்ச்செய்து வருகின்றாரென பன்முறைவற்புருத்தி பத்திரிகையாலும் புத்தகத்தாலும் வெளிப்படுத்தியுமிதைபுற்றுநோக்கி சிவாபச்சாரம்புரியாது. விதிவிலக்குவித்தாந்தமறிந்த சிவாகமஞ்யர்களைத் தேடிவழிப்பட்டு தொண்டுபுரியவிரும்பாது சிவாபச்சாரபடுகுழிவீழ்ந்து தத்தளித்துள்ளார் சிலர் ஸ்வயம்புலிங்கக்ஷேத்திரங்களிலும்ஸான்னித்தியமல்லாதொழித்துவருகின்றார் அந்தோகொடிது கொடிது நித்யம், நைமித்திகம் காம்யாதிபூஜைகளுமிவ்வாறே அலக்கணுற்றழிகின்றன உத்ஸவங்களோ-சிறியோர் விளையாட்டாய் பைசாச்சநிபச்சூராவளியால் நம்பெருமான் உத்ஸவபிம்பத்திலாவிர்ப்பவித்தனுக்கிரஹிக்கத்தற்கஞ்சி இவ்வெளிச்சமல்லாவிடத்தில் பதுங்கிநிற்கின்றார் த்வாரபூஜை கர்ப்பாவரணபூஜைகாலபூஜை நித்யபலிநித்யாக்னிகார்யம் நித்யோத்ஸவம்முதலிய லயபோக அதிகாரங்கபூஜைகளும் நன்னடைபெறவில்லை இதற்குநாமென்செய்தற்கூடும்-சிவபெருமான் கண்விழித்தாலன்றி இவ்வஸத்கார்யன் னீக்கம்பெறா. அனலவுருவுன்னடந்த சிவராத்திரிவிஷயத்திற்கு சிவராத்திரநிர்ணயமே புஸ்தகம் ஒன்று வெளியிட்டிருக்கின்றது பிங்கள ௵ சித்திரை ௴ ௪ உயில் நடராஜா திருவோண நக்ஷத்திரத்தில் அபிஷேகசெய்யவேண்டுவதாயிருக்க ௸ ௴ 31௳ ஸங்கிரமணதோஷமுடைய திருவோணநக்ஷத்திரத்தில் சிலக்ஷேத்திரங்களில்அபிஷேகன்னடத்தியதாய் கேழ்வைப்படுகிறோம் இஙனஞ்செய்த க்ஷேத்திரங்களுக்கு சித்திரை ௳ டில்பேஜில் வெளியான பிராயச்சித்தத்தைச்செய்து பூஜைபுரிவாருக.

நவராத்திரி நிர்ணயம்.

இவ்வருஷம்புரட்டாசிமீ ௧௳யில் அமாவாசையொன்றும் ஷை௳ 30௳யில் அமாவாசையொன்றுமாய்வருவதால் நவராத்திரி எப்பொழுதெனகடத்தூர் சைவசிகாமணிபண்டிதர் ஆசங்கித்து கடிதமனுப்பினர் சிவப்பிராமணர் சைவர் ஸ்மார்த்தப்பிராமணர் இவ்விருவர்களும்ஸௌரமானியாதலால்கன்யாமாஸத்திலேயேநவராத்திரிசெய்தல்வேண்டும்ஸித்தாந்தப்பஞ்சாங்கமாகியசாந்திரமானிகளாகிய தெலுங்கர் முதலினோர்க்கும் ஐப்பசி 1௳யில்நவராத்திரியாரம்பம் இவர்களுக்கு ஸௌரமானிபோல் சித்திரைவருஷப்பிறப்பல்லாது பங்குனியிலேயேவருஷம் பிறந்துவிடுமாதலால் இவர்களுக்கு சாந்திராயண அனுஷ்டானம் என்பதுதிண்ணம் சில பஞ்சாங்கங்களில் முன்னும்பின்னும் நவராத்திரியெனஇரட்டித்து பரிசரித்திருப்பதால் புரட்டாசிமீ 2ம்௳யிலேயே நவராத்திரி ஆலயங்களுக்கு செய்தல்வேண்டும் கந்தசஷ்டியின் ஐப்பசிமீ 5ம்௳யில் அனுஷ்டித்தல்வேண்டும்ஷஷ்டிராத்திரிவேண்டுமாதலால் 5ம் தேதி அனுஷ்டித்தல் உசிதமாயிருக்கும்

அட்வான்ஸர்வருஷசந்தாவாக.

ஸபாபதிக்குருக்கள் முத்திரசநல்லூர் ரூ. 10—0—0 ஸேனாதிபதி சிவாச்சாரியார் விஜயாங்கம்வரசு ரூ. 10—0—0. முத்துஸாமிக் குருக்கள் பரியூர் கோபுசெட்டிபாளயம் ரூ. 10—0—0. கே எஸ். சுப்பிரமணியக்குருக்கள் காங்கயநல்லூர்(வயா)காள்பாடி. ரூ. 6—0—0. விசுவனாதபட்டர்முன்னீர்ப்பள்ளம் திருநெல்வேலி ரூ. 6—0—0. மலையப்பக்குருக்கள் பெருங்களூர் புதுக்கோட்டை ரூ6—0—0 டி. ராமாசார்லு,ஈப்பூர் அநந்தவரம்போஸ்டு,தெனாலி தாலூக்கா குண்டூர்ஜில்லா ரூ10—0—0.

ஆதிசைவகாங்க்ரஸ்.

ஸ்ரீ ஆதிசைவபரமாசார்யமூர்த்திகளுக்குத்தெரிவித்துக்கொள்வது:— கும்பகோணம் மஹாமகத்தில் நம்மவர்கள் யாவரும் ஒழுங்குசேர்ந்து ஜாதிசமயம் ஆசார அனுஷ்டானம் தேவாலய சீர்திருத்தம் நம்மவர் மேன்மைக்குவரவேண்டிய நல்வழி முதலியவைகளை பேசவேண்டியவைகளாய் இருப்பதால்ஒவ்வொருவரும் இதைநன்னடைப்பெற கருதுவாராக.

ஸத்யோஜாத சிவாச்சாரியார்.
காமிகாகமம் எடிடர்.
புத்தூர் திருச்சினாப்பள்ளி.

உ

சிவமயம்.

காமிகாகமம்.

பிரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்

ஸம்ஸ்கிருதமூலமும் தமிழுரையும்.

ஸஞ்சிகை நெ. 7.

இஃது

திருசிராபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவாச்சாரியரால்

கும்பகோணம்

R. குருராஜாச்சாரியாரவர்களுடைய

ஸ்ரீ கோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரசுரஞ்செய்யப்பட்டது

பிங்கள-௵ வைகாசி-மீ

1917

Copy Right Reserved.

சிவமயம்.

சிராவணத்தின் மேலெழுந்தவாசங்கை.

பிங்கள௵ ஆடி-மீ கக உ பவுர்ணமை கஉ-௵க திருவோணம் ௬௯-௬௦ இதில் எஜுர்ருபாகர்ம்மம் ருக்கு உபாகர்ம்மம் போடப்பட்டிருக்கின்றது. இது சாந்திரமானிக்கென்பது கணிதஞ்யர் அபிப்பிராயம் சாந்திரமானி ஆந்திராலாதலால் ஸ்மார்த்தப்பிராம்மணர் ஆதிசைவப்பிராம்மணர் வைணப்பிராம்மணர் இவர்கள் சிராவணம் எப்பொழுது செய்யவேண்டுமென்பதை யோஜித்தல் வேண்டும். இம்மூவர்களும் ஸௌரமானிகளே. சாந்திரமானிகளாயின் புகாதிபண்டிகையில் ஆந்திராள்போல் வருஷப்பிறப்புக்கொண்டாடாது சித்திரை மாதம் வருஷப்பிறப்புக்கொண்டாடல் யாது காரணம். ஆந்திராள் இரண்டு திதிவந்தால் இரண்டிலும் சிரார்த்தஞ் செய்வாராயின் இவர்கள் ஒன்றே செய்தால் இதைவிட்டதற்குங் காரணம்வேண்டும். சைவபுராணத்தில் த்விஜாதீநாம்வா ஙோமெநவு காநு வீஷஙஷிஷி। உவாகஉுஞவிதெ ஙு ஶிவராதிவ கஂவிநா ॥ என்னும் வாக்கியத்தால்த்விஜர்கள் சாந்திரமானத்தால் விருதபலனை யடைய விரும்பினும் உபாகர்ம்மம், சிராத்தம, சிவராத்திரி விருதம் இவைகளை சாந்திரமானத்தில் செய்யக்கூடாதெனக் கூறியிருப்பதால் மேற்குறித்த மூவர்களும் ஸௌரமானியேயாதலால் இவர்களுக்கு ஆடி மாதம் சிராவணம் வருதலெனங்கூடும். மீறி ஸ்மார்த்தர் செய்யப்புகினும் வைணவசிவப்பிராம்மணதிகளும் இவர்களோடொக்க பூணூல்த் தரிக்க விதியுளதோ. வைணவருஞ் செய்வாராகில் ஆதிசைவர்கள் ஸௌரமானியென சிவாகமங்களில் கூறுதலால் ஆடி ஆஷாடமாதமன்று சிராவணமாதத்திலன்றோ சிராவணம் புரிதல்வேண்டும். இவற்றை நோக்கியேயன்றோ போதாயனரும் ஶுாவணுாஂ ஊஊணஉுஶாவஞுாஂகிஹெஞ। எனக் கூறியிருக்கின்றார். சிராவணத்திற்கு சிரவணநக்ஷத்திரம் பிரதானமாதலின் இந்தவருஷம் ஆடிமாதப்பௌர்ணமையில் சிரவணநக்ஷத்திரங்கூடுவதால் அநனஞ்செய்யவேண்டுமெனக்கூறுவாராயின்

ஸாதாரண௵ ஆவணி௴ ௫௨ பௌர்ணமை ௪ ௮-௧௬ அவி ௫௯ ௪௭ இதில் யஜுருபாகர்ம்மம் போட்டதற்குக்காரணம்யாது. இதுவுமன்றி பரீதாபி௵ ஆவணி௴ ௧௨௨ பௌர்ணமை ௫௦-௧௨ அவிட்டநக்ஷத்திரம் ௨௬ ௫௫ இதில் சிராவணம்போட்டிருப்பது என்ன இதினால் நக்ஷத்திரம் பிரதானமென்பதுகூடாது ௨வாக ஶ்ரேஷ்டம் ருக்ஷம் வரிஷ்டம் து ஶ்ராவணம் பவேத் । ஶ்ரவிஷ்டா மத்யமம் ப்ரோக்தம் ஶதபிஷக்து கனீயஸ: ॥ ஸிம்ஹமாஸே பௌர்ணமாஸ்யாம் யத்ருக்ஷம் ஸஹிதம் பவேத் । உபாகர்ம ப்ரகுர்வீத அந்யமாஸம் விவர்ஜயேத் । என்னும் காமிகாகமவசனத்தால் உபாகர்ம்மத்திற்கு நக்ஷத்திரம் திருவோணம உத்தமமெனவும் அவிட்டம் மத்யமமெனவும் சதயம் அதமமெனவுங்கூறி ஆவணிமாதபௌர்ணமையில் எந்தநக்ஷத்திரஞ்சேர்ந்தாலும் உபாகர்ம்மம் செய்துகொள்ளவேண்டுமெனவும் அந்யமாஸந்தள்ளத்தக்கதெனவுங்கூறியிருப்பதால் இவ்வருஷம் ஆவணி௴ ௧௭௨ பௌ ௩௧-௧௦ சதயநக்ஷத்திரம் ௪௯ ௩௮ இதிலேயே சைவவைஷ்ணவஸ்மார்த்தபிராம்மணர்கள் யாவரும் உபாகர்ம்மம்செய்துகொள்ளல் சாஸ்திரீகமாகும் அன்றேல்விடையளிக்கவிரும்புவாராக.

திருப்பேரூர் மந்திராசலஸ்வாமிகள் சிவபதமடைந்தது.

திருப்பேரூரென்னும் மேலச்சிதம்பரத்தின் கண் ஆதிசைவபரமாச்சார்யமூர்த்திகளின் குலத்திலெழுந்தருளி ஸப்தஸப்ஸ்காரத்தால் ஆச்சார்யவடிவுற்று ஸ்தாவரஜங்கமவழிப்பாடும் ஜீவகாருண்யமிரக்கம் பொருமை ஈகை இவைகளோடுகூடிய நற்குணங்களோடும் நம்பெருமான்கோஷ்டீசுரரை அன்புமீதூரி இடைவிடாது பூஜித்து பிங்கள௵ சித்திரை௴ 28௳ நம்பெருமான்பாதபங்கயத்தில் ஐக்கியமுற்றனர். இவர் சிஷ்யர்பலர் உபதேசிக்கதேசிகனின்றியமையா கருவியானேமே என வியஸனிக்கின்றனர். இதுபரிதாபமே.

திராவிடச் சிசுவின் கூற்று.

திராவிடமென ஓர்குழந்தை தாமெவ்வாறுகூறினுங்குற்றமற்றதாய் முடியுமென தம்மனம்போனபடி வேதாகமநிந்தை சிவநிந்தை சிவாச்சார்யநிந்தை திராவிடவேதநிந்தை ஸித்தாந்தசாஸ்திரநிந்தை குருநிந்தை பிராம்மணநிந்தை தர்மநிந்தைமுதலியதும் புரிந்து நாஸ்திகப்படுகுழிவீழ்ந்து தத்தளிக்கும் இச்சிசுவுக்கு வுண்மை யுபகரித்துய்விப்பதைத்தவிரச் சிவபுண்ணியம் யாதுளது திராவிடவுட்கருத்தறியாது திராவிடத்தையே தூஷித்துத்திரியுமிச்சிசுவுக்கு திராடமென்பது தகுதியோ இதுவிஷயத்திற்கு மறுப்பு திருப்பேரூர் சைவப்பிரகாசமென்னும் பத்திரிகை வாயிலாய் வெளியிடவிருப்புற்றோமாதலா லீண்டு சுருக்கப்பட்டது.

அட்வான்ஸ்.

விசுவநாதகுருக்கள் மணலி ஆலத்தம்பாடி போஸ்டு ரூ 10-0-0.

சந்தாதாரருக்கோ ரறிவிப்பு

எம்மால்பிரசுரிக்கப்பட்ட ஸ்ரீகாமிகாகமம் பிரதிஷ்டாதி உத்ஸவாந்தபடலம் சைவஸமயிகளாகிய யாவற்கும் வேண்டர்பாலதே. இதில்வெளிப்படுவிஷயங்கள் படலத்துள்ளவாறு மேன்மேலும் வந்துகொண்டிருக்கும் தொடக்கம்முதல் கடைசிவரை புத்தகத்தைவரவழித்துப்பார்த்தாலன்றி பயன்படா. தக்காலம் நமக்குற்ற மாதசந்தாதாரர் அட்வான்ஸர் வருஷசந்தாதாரர்கள் இவர்களின் பேருதவியால் ஏழு மாதம்ஸஞ்சிகை நிர்விக்னமாய்முடியப் பெற்றது. இன்னும்மேன்மேலும் அறியவிஷயங்கள் வந்துகொண்டிருக்கும். இதில்வெளிப்பட்டுவரும் பிரதிஷ்டாவிதி விலக்குஸித்தாந்தங்களுக்கும் தர்க்காலம் நடைபெறும்விவேகிகளல்லாதசிலரால் செய்யப்படும் பிரதிஷ்டாகிரியைகளுக்கும் வித்யாஸமிருந்தால் விசாரித்துஉள்ளபடியே செய்யவற்புறுத்தல் சிவபுண்ணியமாகும்

சுபம்

தத்புருஷ சிவம்
சத்யோஜாதசிவாச்சாரியார்
காமிகாகம எடிடர்
புத்தூர் திருச்சி.

உ

சிவமயம்.

காமிகாகமம்.

பிரதிஷ்டாதி உத்ஸவாந்த

படலங்கள்

ஸம்ஸ்கிருதமூலமும் தமிழுரையும்.

ஸஞ்சிகை நெ **8.**

இஃது

திரிசிராபுரத்திற்கடுத்த

திருவானைக்காவிலிருக்கும்

ஸத்யோஜாதசிவாச்சாரியரால்

கும்பகோணம்

R. குருராஜாச்சாரியாரவர்களுடைய

ஸ்ரீகோபாலவிலாஸ முத்ராக்ஷரசாலையில்

பதிப்பித்து ப்ரசுரஞ்செய்யப்பட்டது

பிங்கள-ஹு ஆனி-மீ

1917

Copy Right Reserved.

சிவமயம்

திருநெல்வேலிஜில்லா மின்னீர்பள்ளம் பிரும்மஸ்ரீ விசுவநாதபட்டர் நமது ஸ்வாமிகளை வினவிதற்குவிடை

அதாவது சிவமண்டபாராதத்தில்பரிவாரகும்பம் ௨௮ போல் தேவிமண்டபாராதத்திலும் ௨௮ கும்பமா அல்லது ௩௨ கும்பமா அதின்பெயரும் இத்தனை ஸங்கியைதான் என்பதற்கு வாக்ய ஸஹிதம் தெறியவிரும்புகிறேன் என்பதொன்று ௨. நவராத்திரிகன்யாமாலத்தில்த்தான் நடத்தவேண்டு மென்பதற்கும் வாக்கியந் தெரிந்தால் இதின்படி நடத்த உத்தேசித்திருக்கிறேன். ௩. பிரதிஷ்டாதிகிரியைகள் இராத்திரிச்செய்யவேண்டிய கிரியைகள் எதுவெதுகள் மத்தியான செய்யவேண்டியகிரியைகள் எவைஎன்பது இம்மூன்றினுள் சக்திமண்டப பூஜாவிஷயமாயும் நவராத்திரிவிஷயமாயும் விடையளித்து கிரியாபேதங்களுக்கு ஆவணி மாதத்திய ஸஞ்சிகையில் விடைவெளிவரவிருக்கும்முதலில்சிவமண்டபபூஜைக்கே பரிவாரகும்பம் ௨௭,௨௮. என்பது சிலர்ஸந்தேகிக்கிரார்கள் மூலாகமங்களில் ஸப்தவிம்சதிகும்பந்தான் கூறுகின்றதேயொழிய அஷ்டவிம்சதிகூறியதில்லை அதாவது ௨௭ கும்பந்தான் விதியுள்ளது ௨௮ விதியில்லை நாம் பிரதிஷ்டிக்கும் சிவாலயத்திலுள்ளசக்தியோ சிவாபின்னஸ்வரூபமான சித்சக்தி இதற்கும் பரிவாரம் ௨௭ தான் ஆனால்பாலைதிருபுரைபுவனேசுவரிபராசக்திகேவலசக்தி முதலியசக்திபேதங்களுக்கு மூன்றுபேதமானமண்டபபூஜையிருக்கின்றது சிவசக்திமத்தான சிவாலயத்திற்கு பிரதமாவரணம்பராசக்தி ஆதிசக்தி இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்திகளைய்தும் ஹிருதயாதிஷ்டங்கங்களுமாம் த்விதீயாவரணம் தாரிகை தீபிகை உக்ரை ஜ்யொத்ஸ்னை செதநா பலோத்கடை தாத்ரீ விபவி எனஎண்வகைசக்திகளாம் திரிதீயாவரணம் வாமாதி ஸர்வபூததமனிவரையுள்ள எட்டு சக்திகளும் சதுர்த்தாவரணத்தில்க்ஷோபிணிமுதல் கேச்சரிவரையிலுள்ள சக்திகளையும் பீஜயொநிகாமனோன்மனிசக்திகளையும் பஞ்சமாவரணத்தில் சக்திஅஸ்திரங்களையு பூஜிக்கக்கூறியிருக்கின்றது இவற்றுள் திரிதீயாவரணம் ௧௮ கும்பங்கள் விக்னேசிக்ஷேத்ரேசி த்வாரபாலன் ௪ கும்பம் ஸப்தகுரு ஆக ௨௭ பரிவாரகும்பங்களாகும் பாலைதிருபுரைபுவனேசுவரி கௌரீ முதலிய பிரதிஷ்டாபேதங்களுக்கு பிரதமாவரணம் [illegible] கௌரீ

